
# 2009 அவ்யக்த முரளி



<u>பொருளடக்கம் - 11</u>

**18.01.2009** 40-ஆண்டு அவ்யக்த பாலனைக்கான மறுதளிப்பு (ரிடர்ன்) நான்கு விஷயங்கள்: சுப சிந்தனையாளர் ஆகுங்கள், சுப சிந்தனை செய்யுங்கள், சுப விருத்தி மூலம் சுப வாயுமண்டலம் உருவாக்குங்கள் மேலும் (0) ஜீரோ மற்றும் ஹீரோ நினைவில் (ஸ்மிருதி) இருங்கள்!

**05.02.2009** சேவை செய்யும் பொழுதும், டபுள் லைட் ஸ்திதி மூலம் ஃபரிஷ்தாவின் அனுபவத்தில் இருங்கள், அசரிரி ஆவதற்கான பயிற்சி செய்யுங்கள்!

**22.02.2009** பிறந்த நாளில் வேகமாய் வந்து முதல் பிரிவில் வரும் பரிசைப் பெறுவதற்காக ஒவ்வொரு சுவாசம், சங்கல்பம், சக்திவாய்ந்ததாய் இருக்க வேண்டும். பரந்த உள்ளமாகவும், உண்மையாகவும் இருந்தால் ஒவ்வொரு தேவையும் பூர்த்தியாகும்! (சிவ ஜெயந்தி)

**09.03.2009** ஹோலியின் விசேஷமான பரிசு ஃபரிஸ்தா ஆடையை தினமும் அவ்வப்போது அணிந்து கொண்டு பழைய சம்ஸ்காரங்களை நெருப்பில் எரிப்பதாகும்!

**24.03.2009** பாப்தாதா மூலமாக கிடைத்துள்ள பொக்கிஷங்களை தன்னுள் சேகரித்து காரியத்தில்

பயன்படுத்துங்கள், அனுபவத்தின் உரிமையுடையோர் ஆகுங்கள் **(Authority)!**

**07.04.2009** காரணம் என்ற வார்த்தையிலிருந்து விடுபட்டு நடத்தை மற்றும் முகத்தின் மூலமாக முக்தி (விடுதலைசேலை) தருபவராகி முக்தி வள்ளல் ஆகுங்கள், சேவைக்கான ஊக்கம் உற்சாகத்தோடு மட்டுமல்லாமல் சதா எல்லைக்கு அப்பாற்பட்ட வைராக்கிய உணர்வு உடையவர்களாகவும் இருங்கள்!

**25.10.2009** சர்வ பொக்கிஷங்களாலும், முழுமைப் பெற்ற தனது முகம் மற்றும் நடத்தை மூலமாக அலௌகீகத் தன்மையை சாட்சாத்காரம் செய்வியுங்கள்!

**15.11.2009** சுய ராஜ்யத்தின் ரிசல்ட்டை (முடிவு) சோதனை செய்து தன்னை மாற்றிக் கொள்க! மேலும் பரந்த ராஜ்யத்தின் அதிகாரி ஆகுக!

**30.11.2009** பாபா மற்றும் அனைவருக்கும் பிரியமானவர்களாக சந்துஷ்டமணியாகி பாதக சூழ்நிலைகளின் பிரபாவத்திலிருந்து விடுதலை ஆகுக!

**15.12.2009** பரிவாரத்துடன் அன்பாக இருப்பதற்கு ஞானம் நிறைந்தவராக மாறி தந்தைக்கு சமமாக பார்வையாளன் என்ற நிலையில் இருக்கவும்: பாபா, சுயம், நாடகம் மற்றும் பரிவாரம் இந்த நான்கிலும் நிச்சயபுத்தி உடையவராகி வெற்றியாளர் ஆக வேண்டும்!

**31.12.2009** அனைத்து ஆத்மாக்களுக்கும் இறை செய்தியைக் கொடுத்து, பொன்னுலகம் என்னும் பரிசைக் கொடுங்கள், பாப்சமான் ஆவதற்காக ஆத்மா அபிமானியாக இருக்கும் நிலையை இயற்கையான இயல்பாக்கிக் கொள்ளுங்கள்!

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂

# 18.01.2009 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# 40-ஆண்டு அவ்யக்த பாலனைக்கான மறுதளிப்பு (ரிடர்ன்) நான்கு விஷயங்கள்: சுப சிந்தனையாளர் ஆகுங்கள், சுப சிந்தனை செய்யுங்கள், சுப விருத்தி மூலம் சுப வாயுமண்டலம் உருவாக்குங்கள் மேலும் (0) ஜீரோ மற்றும் ஹீரோ நினைவில் (ஸ்மிருதி) இருங்கள்!

இன்று பாப்தாதா நாலாபுறமும் உள்ள தன்னுடைய சேவையில் துணையாக இருக்கின்ற குழந்தைகளை சந்திக்க வந்துள்ளார். ஆதி சேவையில் துணையாக இருந்தவர்கள், இத்துடன் இன்னும் அதிகமான சேவையிலும் துணைவர்களாகி மிக நன்றாக சேவையை விருத்தி செய்து கொண்டிருக்கிறார்கள். ஆதலால் பாப்தாதா தன்னுடைய துணைவர்களைப் பார்த்து குஷியடைகின்றார் மேலும் உள்ளத்தில் குழந்தைகளின் புகழ் பாடுகின்றார். ஆஹா, என்னுடைய உலகப் பரிவர்த்தனை சேவையில் துணைவர்களே, ஆஹா! இன்று அமிர்தவேளை முதல் நாலா புறமிருந்தும் சிநேகத்தின் மாலைகளை பாப்தாதாவுக்கு அணிவித்துக் கொண்டிருந்தனர். மூன்று விதமான மாலைகள் இருந்தன. ஒன்று பாப்சமான் ஆவதற்கான ஊக்கம் உற்சாகத்துடன் கூடியது. இரண்டாவது வெகு நாளாக காணாமல் போய் விட்ட, பந்தனத்தில் கட்டுண்டிருக்கின்ற கோபிகைகளினுடையது. இவர்களுடைய மாலைகள் ஜொலிக்கின்ற விலையுயர்ந்த கண்ணீர் மாலைகளாக இருந்தன. ஒவ்வொரு கண்ணீர்த்துளியும் முத்து சமானமாக ஜொலித்துக் கொண்டிருந்தன. மூன்றாவது மாலை சில குழந்தைகளினுடைய புகார் பற்றியதாக இருந்தது.

இன்று அமிர்தவேளை முதல் எல்லோரும் விசேஷமாக சிநேகத்தில் மூழ்கியிருப்பது தெரிந்தது. பாப்தாதா விராட ரூபம் போன்று (விஷ்வ ரூபம்) கைகளை விசாலமாக விரித்து, எல்லாக் குழந்தைகளையும் கைகளுக்குள்ளாக அரவணைத்துக் கொண்டார். கூற வேண்டுமானால் இன்றைய தினம் சிநேகத்தோடு கூட எல்லா சக்திகளையும் உயில் பத்திரமாகக் கொடுக்க வேண்டியதாகவும் இருந்தது. ஒரு குழந்தைக்கு கை மீது கை வைத்து உயில் அதிகாரத்தை (சக்திகளை) கொடுத்தார். உயில் எல்லா குழந்தைகளுக்கும் தான். சக்தி சேனை மற்றும் பாண்டவர்கள். அநேக குழந்தைகள், பாண்டவர்களையும், சக்திகளையும் கூட பாப்தாதா பார்த்தார். குப்த ரூபத்தில் அந்தர் முகியாகி, புருஷாரத்தத்தில் (முயற்சியில்), தீவிர கதியில் சென்று கொண்டிருக்கிறார்கள். வெளியில் தெரியாது ஆனால் நல்ல புருஷாரத்திகள். பாப்தாதா இன்று விசேஷமாக என்ன பார்த்தார் என்றால், சிநேகம் என்ற பாடத்தில் எல்லோருடைய முகங்களும் ஜொலித்துக் கொண்டிருந்தன. ஞானி ஆத்மாவாக இருக்கின்றார்கள் தான் எனினும் சிநேகம் என்ற பாடமும் அவசியமானது. ஏனெனில் சிநேகமுள்ளவராயிருக்கும்போது முயற்சி குறைவு. மேலும் ஆழமான அன்பு (முகப்பத்) அனுபவத்தில் சகஜமாக இருக்கிறார்கள். சிநேகத்தின் சக்தி எப்படிப்பட்ட மலை போன்ற பிரச்சனையாக இருந்தாலும், மலையையும் பஞ்சு போல ஆக்கி விடுகிறது. மலையையும் கூட தண்ணீரைப்போல இலகுவாக ஆக்கி விடுகிறது. சிநேகம் ஒரு குடை நிழலாக இருக்கிறது. குடை நிழலில் இருப்பதன் காரணமாக (பாபாவின் பாதுகாப்புக் குடை) அவர் சதா பாதுகாப்பாக இருக்கின்றார். சகஜமாக ஆகி விடுகிறது. சிநேகத்தின் மூலம் பரமாத்மாவாகிய பகவானையும் கூட தங்கள் நண்பன் ஆக்கி விடுகிறார்கள். இதன் காரணமாகவே குதா தோஸ்த் (கடவுளின் நண்பன்) என்ற பெயரில் ஞாபகார்த்தம் இருக்கிறது. கடவுளை நண்பராக்கிக் கொண்டு, எந்த ஒரு பிரச்சனையையும் நட்புறவு மூலம் எளிதாக்கி விடுகின்றனர். தந்தையை தனக்குத் துணையாக ஆக்கி விடுகிறார்கள். ஞானம் விதையாக இருக்கிறது ஆனால் அன்பு என்ற நீர் விதையில் பலனை உண்டாக்கி விடுகிறது. பிராப்தியின் பலன். இப்படிப்பட்ட தந்தையின் சிநேகமுள்ள குழந்தைகள் தந்தையை நினைவு செய்வதை கஷ்டமாக நினைப்பதில்லை ஆனால் மறப்பது கஷ்டம் என்று நினைக்கிறார்கள். சிநேகமுள்ளவர்கள் ஒருபோதும்

சிநேகத்தை மறக்க முடியாது. மேரா பாபா என்று சொன்னதுமே உள்ளத்தின் சிநேகத்தால் மற்றெல்லா பொக்கிஷங்களின் சாவி கிடைத்து விடுகிறது. ஆகையால் இருவரும் இப்படிப்பட்ட சிநேகமுள்ளவர்களின் முன்னே பாப்தாதாவும் கூட உடனே ஆஜராகி விடுகின்றார். (ஹூஜூர் ஹாஜிர்) நினைவு எல்லோருமே செய்கிறார்கள் ஆனால் சிலர் கொஞ்சம் கொஞ்சம் கஷ்டப்பட்டு செய்கிறார்கள். மேலும் சிலர் சதா சிநேகக் கடலில் லல்-லீன் (அன்பில் ஐக்கியமாதல்) மூழ்கி இருக்கிறார்கள். உலகத்தினர் இதை ஆத்மா, பரமாத்மாவுடன் ஐக்கியமாகி விடுகிறது எனக் கூறுகிறார்கள் ஆனால் ஆத்மா பரமாத்மாவின் அன்பில் லவ்லீன் ஆகி விடுகிறது லீன் ஆவதில்லை, லவ்லீன் ஆகிறது.

ஆதலால் இன்றைய தினம் ஆழமான அன்பில் மூழ்கியிருக்கும் தினமாகும். கடின முயற்சி என்பது இல்லாமல் அன்பில் மூழ்கியிருக்கும் ரூபத்தில் மாறி விடுகிறது. ஆதலால் பாப்தாதா எல்லா குழந்தைகளினுடைய ரிசல்ட்டையும் பார்த்தார். ஹோம் ஒர்க் (வீட்டுப்பாடம்) மெஜாரிட்டி (அதிகமானோர்) செய்திருக்கிறார்கள். பாப்சமான் ஆவதற்கான லக்ஷியம் அடிக்கடி ரிவைஸ் (திரும்பப்படித்தல்) கூட செய்திருக்கிறார்கள். உணரவும் செய்திருக்கிறார்கள். (ரியலைஸ்) 75-சதவிகிதம் குழந்தைகளினுடைய ரிசல்ட் நன்றாக இருந்தது. மேலும் பாப்சமான் ஆகியே தீர வேண்டும். எப்படிப்பட்ட புயல் வந்தாலும், கலியுக முடிவுக்கான நேரம் அல்லவா, புயல் வரத்தான் செய்யும். பரிவர்த்தனைக்கான நேரமுமாகும் என்றாலும் குழந்தைகளாகிய உங்களுக்கு புயல் என்பது என்ன? புயல் என்பது, புயல் அல்ல ஆனால் அது அன்பளிப்பாகும் (காணிக்கை) ஏனென்றால் பாப்தாதாவின் வரதான கை எல்லா புருஷாரத்தி குழந்தைகளின் தலைமீது இருக்கிறது. யாரெல்லாம் திட சங்கல்பம் அதாவது உறுதி எனும் சாவியை காரியத்தில் உபயோகித்தார்களோ அவர்களுடைய இப்போதையை ரிசல்ட் பிரமாணமாக வெற்றியும் அடைந்திருக்கிறார்கள் ஆனால் சதா காலத்திற்கும் புயலை பரிசுப்பொருளாக ஆக்கிக் கொள்ள வேண்டும். பிரச்சனைகளை சமாளித்து முன்னேறிச் சென்று கொண்டேயிருங்கள். ஆதலால் பாப்தாதா இப்போதைய ரிசல்ட்டில் குஷியடைந்திருக்கின்றார். யார், யோக தபஸ்யா செய்திருக்கிறார்களோ அதாவது ஆகியே தீர வேண்டும்

என்ற லக்ஷியம் உறுதியாக வைத்திருந்தார்களோ அவர்களுடைய ரிசல்ட் பாபாவுக்கு குஷி.

40-ஆண்டு அவ்யக்த பாலனை முடிந்து விட்டது. 40-ஆண்டில் முதலில் என்ன வருகிறது? பிந்து (ஜீரோ) ஆகவே ஜீரோ என்பது எதை நினைவு படுத்துகிறது? நான் ஹீரோ. உண்மையான ஹீரோ. மகான் ஹீரோவாக இருக்கிறேன். மேலும் ஹீரோ பார்ட்தாரி ஆகி ஒவ்வொரு காரியத்தையும் ஹீரோ வைப்போல செய்ய வேண்டும். ஆகவே, ஜீரோ, ஹீரோ இது சதா நினைவிலிருக்க வேண்டும் மற்றபடி நான்கு இருக்கிறதல்லவா? அதில் நான்கு விஷயங்கள் இயற்கையான நடைமுறை வாழ்க்கையில் செய்ய வேண்டும். உறுதியான முறையில் செய்ய வேண்டும். செய்வீர்களா? தயாராக இருக்கிறீர்களா? எப்படிப்பட்ட பேப்பர் (சோதனை) வந்தாலும் சரி. நான்கு விஷயங்களை தங்கள் வாழ்க்கையில் செய்யத்தான் வேண்டும். பக்கா? பக்கா? பின்னால் இருப்பவர்கள் பக்காவாக இருக்கிறீர்கள் அல்லவா? கச்சாவாக இருந்தால் மாயை சாப்பிட்டு விடும். ஆதலால் பக்காவாக இருத்தல் வேண்டும். முதல் விஷயம் சதா சுப சிந்தக் -யாரோ ஒருவருடைய பலவீனத்தைப் பார்த்தால், அல்லது கேட்டால், இரக்க மனம் உடையவராகி, சுப சிந்தனையாளராகி, அவருக்கு உதவி செய்யத்தான் வேண்டும். குறைகளைப் பார்க்கக்கூடாது ஆனால் உதவி செய்யத்தான் வேண்டும். இதற்குத்தான் சுப சிந்தக் என்று சொல்வது. பக்காவாக இருக்குமல்லவா? வழங்கும் வள்ளல். கருணை உள்ளத்துடன் உதவி செய்யுங்கள். இதிலிருந்து விலகியிருப்பதோ, வெறுப்பதோ கூடாது. மன்னிக்க வேண்டும். அந்நிய ஆதிக்கத்தின் வசத்தில் (பர்வஷ்) இருப்பவர்கள் மீது ஒருபோதும் வெறுப்பைக் காட்டக்கூடாது. உதவி செய்ய வேண்டும். ஆகவே சுப சிந்தக். இரண்டாவது சுப சிந்தனை. தற்சமயம் பாப்தாதா பார்க்கின்றார். மெஜாரிட்டி குழந்தைகளிடம் சில சமயம் வீண் சங்கல்பம் நிறைய வருகிறது. இதனால் தன்னுடைய சேமிப்பில் இருக்கின்ற சக்திகள் வீணாக குறைந்து விடுகிறது. ஆதலால் சுப சிந்தனையில் இருப்பதற்காக, ஏதாவதொரு ஸ்வமான் அதாவது தன்னுடைய ஏதாவதொரு டைட்டில், மனதிற்கு ஹோம் ஒர்க் மாதிரி கொடுத்து விடவேண்டும். மனதிற்கு அட்டவணை (டைம் டேபிள்) தயார் செய்யுங்கள். கர்மத்திற்கு டைம் டேபிள் (எதை, எப்படி, எப்போது,

எவ்வளவு நேரம் என்ற அட்டவணை) தயார் செய்து கொள்கிறீர்கள் அல்லவா? அது போல மனதிற்கும் கூட தயார் செய்யுங்கள். ஸ்வமான். அமிர்தவேளை சந்திப்புக்குப் பிறகு, மனதிற்கு (ஹோம் ஒர்க்) கொடுத்து விடுங்கள் ஆனால் ஏற்கனவே கூறியது போல 12-13 முறை எல்லோருக்கும் நேரம் கிடைக்கிறது. அப்போது ரியலைஸ் கூட செய்ய வேண்டும். (தெளிவாக அறிதல், உணருதல்) ரிவைஸ் கூட செய்ய வேண்டும். (திரும்பப்படித்தல், மனனம் செய்தல்) இப்படிச் செய்வதன் மூலம் மனம் சுறுசுறுப்பாக ஈடுபட்டிருப்பதால், வீணான சங்கல்பம் செய்து நேரம் வீணாகாமல் இருக்கும். கடின முயற்சி ஒன்றும் செய்ய வேண்டியதில்லை. ஒவ்வொரு கணமும் சங்கம யுகத்தில் மகிழ்ச்சியோடிருக்க வேண்டிய யுகமாகும். அதே மகிழ்ச்சியில் இருக்க வேண்டும். அடுத்தபடியாக உள்ளது சுபசிந்தனை. சோதிப்பது, மாற்டுவது மூன்றாவது, சுபவிருத்தி, அசுபவிருத்தி (நல்லெண்ணமற்ற உள்ளுணர்வு) வாயுமண்டலத்தில் அசுத்தத்தைப் பரப்புகிறது. ஆதலால் சுபமான உள்ளுணர்வுகள் (சுப விருத்தி). நான்காவதாக, ஒவ்வொருவரும் ஒரு பொறுப்பை ஏற்க வேண்டும். எனக்கு என்னுடைய வேலை முக்கியமாக இருக்கிறது. மற்றவரைப் பார்க்கக்கூடாது. எனது வேலை சுபமான வாயுமண்டலம் உருவாக்குவது. உதாரணமாக எப்போதாவது வாயுமண்டலத்தில் துர்நாற்றம் இருந்தால், என்ன செய்கிறீர்கள்? நறுமணத்தைப் பரப்புகிறீர்கள் அல்லவா? ஏன்? துர்நாற்றத்தை சகிக்க முடிவதில்லை. ஏதாவதொரு நறுமணம் கொடுக்கக்கூடிய பொருளை உபயோகிக்கிறீர்கள். இதுபோல சாதாரண வாயுமண்டலம் அல்லது அசுப வாயுமண்டலம் மாறத்தான் வேண்டும். சிறு வயதினராயினும், புதிதாக வந்திருப்பவராயினும், எல்லோருக்குமே பொறுப்பு இருக்கிறது. திட சங்கல்பம் செய்யுங்கள். நான் சுப வாயுமண்டலம் தயார் செய்தேயாக வேண்டும். இந்த உறுதிமொழி, பிரத்யக்ஷம் செய்யும். வாக்குறுதி கொடுக்கிறீர்கள். பாப்தாதாவுக்கு குஷியாக இருக்கிறது ஆனால் வாக்குறுதியில் சில சமயம் உறுதி இருப்பதில்லை. இதன் காரணமாக, எவ்வளவு வெற்றியடைய விரும்புகிறீர்களோ, எவ்வளவு விரும்புகிறீர்களோ, அவ்வளவு ஆவதில்லை. முழு உலகத்திற்கும், இயற்கைக்கும், ஆத்மாக்களுக்கும், ஆத்மாக்களில் பிராமண ஆத்மாக்களும் சேர்ந்தது தான். ஒவ்வொருவரும், தங்களுடைய சேவா கேந்திரத்தை இத்தகைய வாயுமண்டலம் உடையதாக, திட

சங்கல்பத்தோடு தயார் செய்யுங்கள். கொஞ்சம் தியாகம் செய்ய வேண்டியிருந்தாலும் செய்யுங்கள். தியாகம் செய்ய வேண்டுமானால், நான் செய்யட்டுமா என்பதல்ல. முறை சரியானதாக இருக்க வேண்டும். இதில் 'தோ, தோ, தோ' செய்ய வேண்டாம். நான் செய்யத்தான் வேண்டும். விஷ்வ பரிவர்த்தக் என்ற ஸ்வமான் இருக்கிறதல்லவா? எல்லோரும் விஷ்வ பரிவர்த்தக் தானே! கை உயர்த்துங்கள். நல்லது. விஷ்வ பரிவர்த்தக் ரொம்ப நல்லது. ஆகவே முதலில் பாப்தாதா பார்க்க விரும்புகின்றார். இப்போதும் இருக்கின்றார்கள். இனி மேலும் இருப்பார்கள் ஆனால் இந்த ஆண்டில் பாப்தாதா சிறிய சென்டர் ஆயினும் பெரிய சென்டர் ஆயினும் சேவா கேந்திரத்தை சுற்றி வந்தால், வாயுமண்டலம் எப்படி இருக்க வேண்டும்? எப்படி இன்றைய தினம் சிநேகம் நிறைந்ததாக, சக்தி நிறைந்ததாக இருக்கிறதோ, அப்படி ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள சென்டர் வாயுமண்டலம் சைத்தன்ய கோவிலாக இருக்க வேண்டும். எதிர்மறையை (நெகட்டிவ்) ஆக்கப்பூர்வமானதாக (பாஸிட்டிவ்) தயார் செய்வதில் முதலில் நான். முதலாவது நீங்கள் என்று சொல்லக்கூடாது. முதலாவது நான். ஏனென்றால் பாப்தாதா மற்றும் அட்வான்ஸ் பார்ட்டி மற்றும் இந்தக் காலத்தில் இயற்கையும் கூட எதிர்பார்த்து காத்துக் கொண்டிருக்கிறது. முயற்சி செய்பவர்கள் நீங்கள். நீங்கள் காத்திருக்க வேண்டியதில்லை. முயற்சி செய்ய வேண்டும்.

தற்சமயம் நாலாபுறமும் பயம் சூழ்ந்து கொண்டிருக்கிறது. எல்லோருடைய மனதிலும் ஒரே ஒரு சங்கல்பம் தான் உள்ளது. உலகிலுள்ள மெஜாரிட்டி மனிதர்களிடம் நாளை என்ன நடக்கும்? என்ற பயம் உள்ளது ஆனால் நாளை என்ன நடக்கும் என்பது உங்களுக்குத் தெரியும். ஆதலால் பரிவர்த்தனை செய்வதில் முதலில் நான் நிமித்தமாவேன். இந்த சங்கல்பம் யார் செய்கிறார்கள்? இதில் கை உயர்த்துங்கள். செய்ய வேண்டியதாயிருக்கும். மாற வேண்டியதாய் இருக்கும், பாதுகாப்பாளராக வேண்டியதாகவும் இருக்கும். கொஞ்சம் விட வேண்டியதாக இருக்கும். மேலும் அன்பைப் பெற வேண்டியதாயிருக்கும். மனதின் கையை உயர்த்தினீர்களா? அல்லது இந்தக் கையை மட்டும் உயர்த்தினீர்களா? யார் மனதின் கையை உயர்த்தினீர்கள்? ஏனெனில் மனம் மாட்டால், உலகம் மாடும். அப்படியானால், இந்த ஆண்டு சுலோகன் என்னவாக இருக்கும்? என்ன

சுலோகம் இருக்கும்? நோ பிராப்ளம் (பிரச்சனை எதுவும் இல்லை). வெற்றிக் கொடி உள்ளத்தில் பறக்கும். மேலும் எல்லோரும் குஷியின் டான்ஸ் சதா மனதில் ஆடுவார்கள். மனதின் டான்ஸ் என்பது குஷி. ஆகவே ஒவ்வொரு சமயத்திலும் குஷியின் டான்ஸ் ஆடுவீர்கள். மேலும் வள்ளலின் குழந்தைகளாயிருப்பதால், யார் வந்தாலும் அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஏதாவது ஒரு குணத்தை அன்பளிப்பாகக் கொடுப்பீர்கள். ஆகவே ஒரு வினாடியில் அந்த திட சங்கல்பம், வள்ளலின் சங்கல்பம் லிஃப்ட் ஆகி விடும். மேலும் ஒரு செகண்டில் பரந்தாம், சூட்சும வதனம், ஸ்தூல மதுபன் சாகார் வதனம், எங்கே வேண்டுமோ, அங்கே கடின முயற்சியின்றி ஒரு செகண்டில் சென்றடைந்து விடுவீர்கள். யார் எதிரில் வந்தாலும், அவர்களை வெறுங்கையோடு அனுப்பக்கூடாது. ஏதாவதொரு குணம், முகமலர்ச்சி, நடத்தை வாய்மொழியாக குணத்தின் அன்பளிப்பு இல்லாமல் சந்திக்கவே கூடாது.

ஆகவே இந்த ஆண்டின் ஒவ்வொரு மாத ரிசல்ட், தங்களிடமும் வைத்துக் கொள்ள வேண்டும். யக்ஞத்தில் டீச்சர் மூலமாக ஓ.கே. என்ற கார்டு அனுப்ப வேண்டும். நீண்ட கடிதம் எழுதக் கூடாது. ஓ.கே. என்ற கார்டு அனுப்ப வேண்டும். யாரும் நீண்ட கடிதம் அனுப்பக்கூடாது. உலகில் எந்த ஒரு கார்டு நடைமுறையில் இருக்கிறதோ, அது அல்ல. டீச்சர் மூலமாக வரதான கார்டு கிடைக்கிறதல்லவா, அதை அனுப்ப வேண்டும். குணத்தின் அன்பளிப்பு, சக்திகளின் அன்பளிப்பு எவ்வளவோ இருக்கிறது அல்லவா? லிஸ்ட் போட்டால் எவ்வளவு பெரிய லிஸ்ட் ஆக இருக்கும்? மேலும் எவ்வளவு கொடுக்கிறீர்களோ அதனால் குறைந்து விடாது, பெருகிக் கொண்டேயிருக்கும். கூறுகிறார்கள் அல்லவா, சூ மந்திரம் என்று. இந்த சிவமந்திரம் ஒருபோதும் எந்த குணமும் குறையவே குறையாது. இன்னும் அதிகமாகும். ஏனென்றால் பழமொழி இருக்கிறதல்லவா? தானம் கொடுத்தால் கிரஹணம் விலகிப் போகும் என்று. நல்லது.

இம்முறை முதன் முறையாக வந்திருப்பவர்கள் எழுந்து நில்லுங்கள். நல்லது. (மத்திய பிரதேசத்தின் ஆளுநர் எதிரில் அமர்ந்திருக்கின்றார்) இந்த சபையில் வந்திருக்கின்றீர்கள். நல்லது. பாப்தாதா உங்கள் எல்லோருக்கும், வரப் போகிறவர்களுக்கும் இந்த வரதானம்

அளிக்கின்றார். சதா பாபாவுக்கு குட்மார்னிங் மற்றும் குட் நைட் அவசியம் கூற வேண்டும். ஏனென்றால் முதன் முதலில் கண் திறந்த உடனேயே தந்தையைப் பார்த்தீர்களானால், முழு நாளும் நன்றாக இருக்கும். ஆதலால் முதன் முறையாக வந்திருக்கும். குழந்தைகளுக்கு பாப்தாதா நூறு மடங்கு அன்பு நினைவுகளையும், வாழ்த்துக்களையும் அளிக்கின்றார். நல்லது. இன்று சேவை வாய்ப்பு யாருக்கு?

**சேவை இந்தூர் ஜோன்:** நல்லது. அடையாளம் நன்றாக வைத்துள்ளீர்கள். (எல்லோருடைய கைகளிலும் தாமரை மலர் உள்ளது) நல்லது. இந்தூர் என்று சொல்கிறீர்கள் அல்லவா? இதற்கு என்ன அர்த்தம்? இன் டோர் அதாவது அந்தர்முகி எந்த ஒரு அடையாளம் வைத்திருக்கிறீர்களோ, இந்த அடையாளத்தின் அடிப்படையில் சதா தாமரை மலர் சமானமாக நியாரா மற்றும் தந்தையிடம் அன்பாக இருப்பது, அந்தர்முகி சதா சுகி. அந்தர் முகி சதா தந்தையின் உள்ளமாகிய ஆசனத்திற்கு அதிகாரிகள். அந்தர்முகி சதா எல்லோருக்கும் அன்பானவர்களாக இருப்பார்கள். நல்லது. ஏறக்குறைய நிறைய பேர் வந்திருக்கிறீர்கள். வாழ்த்துக்கள். யக்ஞ சேவையில் கோல்டன் சான்ஸ் கிடைப்பது மிகப் பெரிய புண்ணியக் கணக்கை சேமிப்பதாகும். ஒவ்வொரு அடியும், யக்ஞ சேவை செய்வதன் பொருள் தன்னுடைய புண்ணியத்தை சேமிப்பது ஆகவே இந்த 10-15 நாட்கள் ஒவ்வொரு அடியிலும் சேவை செய்ததால் எத்தனை நூறு மடங்கு ஆகியிருக்கும் இந்த சேவை மகான் சேவையாகும். மேலும் பாப்தாதா பார்த்தார். எந்த ஒரு ஜோன் இந்த கோல்டன் சான்ஸ் எடுத்துக் கொள்கிறதோ, அவர்கள் மிக மிக அன்போடு சேவை செய்கிறார்கள். ரிசல்ட் வெரிகுட் ஆக இருக்கிறது. ஆகவே உங்கள் எல்லோருடைய ரிசல்ட்டும் நன்றாக இருக்கிறது. மேலும் இன்னும் நன்றாகவே இருக்கும். இப்போது இந்த விஷயத்தை நினைவில் கொள்ள வேண்டும். நான் யார்? தாமரை (கமல்) தாமரை தண்ணீரில் இருந்தாலும் விலகியிருக்கிறது. இதுபோல எந்த ஒரு பிரச்சனை வந்தாலும் எந்த ஒரு வாயுமண்டலத்திலும் நியாரா மற்றும் பியாரா. ஏனெனில் நேரம் துக்கத்திற்கான நேரமாக இருக்கிறது. பயமுறுத்துகின்ற நேரமாக இருக்கிறது. சதா குஷியாக இருக்கிறீர்கள் அல்லவா? கை உயர்த்துங்கள். குஷியை விட்டு விடக்கூடாது குஷி இல்லையென்றால், வாழ்க்கையில் சாரமே இருக்காது. சாரமற்ற வாழ்க்கை நன்றாக

இருக்காது. ஆதலால் சதா குஷியாக இருக்க வேண்டும். குஷி நிறைய இருக்க வேண்டும். குஷியை மற்றவர்க்குக் கொடுக்கவும். தானும் குஷியாக இருக்கவும் வேண்டுமல்லவா? ஏனென்றால், தந்தைக்கு பிராமண குழந்தை ஆவது என்றால் குஷியாகவே சதா இருக்கும்படியாக ஆகி விடுவது. (குஷ் நசீப்) குஷியாக இருக்க வேண்டும் என்பது தலைவிதியாக நிச்சயிக்கப்பட்டிருப்பது (பிராப்தம்) (குஷ்கிஸ்மத்) தன்னுடைய குஷ் நசீப் டைட்டில் சதா நினைவில் இருக்க வேண்டும். ஏனென்றால் தந்தை கிடைத்து விட்டார் என்றால் சர்வ பிராப்திகளின் கஜானாவே கிடைத்து விட்டது. ஆகவே தான் பழமொழி உள்ளது, (பண்டாரா பர்பூர் ஸப் துக் தூர்) பொக்கிஷக்கிடங்கு நிறைந்திருந்தால், எல்லா துக்கமும் தூரமாகப் போய் விடும் என்பது. என்ன செய்வீர்கள்? குஷியாகவே இருப்பீர்கள் அல்லவா? நன்றாக சேவையும் செய்கிறீர்கள். சேவை செய்வது என்பது வரதானம் பிராப்தி செய்வது. ஆகவே சேவையில் வெற்றி மூர்த்திகள் தானே தலை அசைத்துக் காட்டுங்கள். டீச்சர்ஸ் வெற்றி மூர்த்திகள் தானே? சொல்லுங்கள். வெற்றி எங்களது பிறப்புரிமை. கூறுங்கள். வெற்றி எங்களது கழுத்து மாலை, நல்லது.

மெடிக்கல் விங்: நல்லது. மெடிக்கல் மற்றும் மெடிட்டேஷன். இந்த இரண்டு குரூப் உள்ளது. ஏனென்றால், டபுள் டாக்டர் தானே! மெடிட்டேஷன் (தியானம்) மூலமாக தந்தையை சந்திப்பது. மேலும் மருத்துவம் (மெடிக்கல்) மூலமாக துக்கத்தை நீக்குவது தற்காலிகமானது தான் ஆனால் செய்கிறீர்கள் அல்லவா? எப்படி தந்தை துக்க ஹர்த்தாவாக இருக்கின்றார் (துக்கத்தை நீக்குபவர்). அதுபோல் மருத்துவர்கள், மருத்துவம் செய்வதன் மூலமாக கொஞ்ச காலத்திற்கு துக்கத்தை நீக்குகிறார்கள் ஆனால் இப்போதோ நீங்கள் எல்லோரும் அவர்களுக்கு தியானம் கற்பித்து, புண்ணியம் சேமிக்கும் மெடிக்கல் டிபார்ட்மெண்ட்டில் இருக்கிறீர்கள். எல்லோரும் டபுள் சேவை செய்கிறீர்கள். யாரெல்லாம் டபுள் சேவை செய்கிறார்களோ, அவர்கள் கை உயர்த்துங்கள். டபுள் டாக்டர்கள். சிங்கிள் டாக்டர் நிறைய இருக்கிறார்கள் ஆனால் நீங்கள் டபுள் சேவாதாரி, டபுள் சேவை செய்பவர்கள் பாப்தாதாவுக்கு பிடித்தமானதாக இருக்கிறது. இந்த சேவை மூலமாகவும் அநேகர் குஷி அடைவார்கள். குஷ் நசீப் ஆவார்கள். பாப்தாதா பார்த்தார். பாம்பே ஹாஸ்பிடல் கூட பிரம்மா

குமாரிகள் மருத்துவமனை) நிறைய சேவைக்கு நிமித்தமாக இருக்கிறது. அபுவில் முதலிலேயே இருக்கிறது ஆனால் இடையில், நகரத்தில் இருப்பதன் காரணமாக நிறைய சேவை செய்வதற்கான சான்ஸ் இருக்கிறது. நன்றாக செய்து கொண்டிருக்கிறீர்கள். இன்னும் முன்னேறிக் கொண்டேயிருக்க வேண்டும். முன்னேறுவதற்கான சான்ஸ் மற்றும் வரதானம் இரண்டுமிருக்கிறது. நல்லது. இப்போது புது பிளான் ஏதாவது தயார் செய்திருக்கிறீர்களா? செய்திருக்கிறீர்களா? நல்லது. செய்து கொண்டேயிருங்கள். பரிவர்த்தனை உலகத்திற்கு செய்து கொண்டேயிருங்கள். பறந்து கொண்டேயிருங்கள். பறக்கும்படியும் செய்யுங்கள். நல்லது.

யூத்குகுப்: தற்கால கவர்ன்மெண்ட்டும் (அரசாங்கம்) இளைஞர்களைப் பற்றி, மிக ஆர்வம் உடையவர்களாக இருக்கிறார்கள். எண்ணம் இருக்கிறது. ஏனென்றால் இளைஞர்களிடம் உள்ள விசேஷம் என்னவென்றால், என்ன விரும்புகிறார்களோ, என்ன நினைக்கிறார்களோ, அதை செய்து காண்பிப்பார்கள். இளைஞர்களிடம் டபுள் சக்தி இருக்கிறது. ஒன்று சரீர பலம்; இரண்டாவது மனோபலம். இளைஞர்கள் கூட்டாக இணைந்து என்ன செய்ய விரும்புகிறார்களோ, அதைச் செய்து காட்டுவார்கள். பாண்டவ கவர்ன்மெண்ட்டும் பார்த்துக் கொண்டிருக்கிறது. நாலாபுறமும் உள்ள இளைஞர்கள் முக்கியமாக தங்களுடைய பள்ளித் தோழர்களுக்கான சேவை நல்ல முறையில் செய்து கொண்டிருக்கிறார்கள். பாப்தாதாவிடம் இளைஞர் குரூப் பற்றிய ரிப்போர்ட் வந்து கொண்டிருக்கிறது. இப்போது இன்னொன்றையும் சேர்த்துக் கொள்ளுங்கள். இந்த ஆண்டில் என்னென்ன பிராமண மரியாதைகள் இருக்கிறதோ, அந்த ஒவ்வொரு மரியாதையையும் பூரண ரீதியில், மனம், சொல், செயலில் மற்றும் சம்மந்தம், தொடர்பில் நான்கு விதமாகவும் பாலனை செய்பவர்களாக இருக்க வேண்டும். அப்படிப்பட்ட குரூப் தயார் செய்யுங்கள். இந்த ஆண்டில் எந்த ஒரு மரியாதைக்கும் பங்கம் ஏற்பட்டு விடக்கூடாது. அப்படிப்பட்ட குரூப் தயார் செய்யுங்கள். உங்களுக்குள் செய்யுங்கள். யார் முதலில் செய்கிறார்களோ, அவர்கள் அர்ஜுன். விருப்பம் தானே? யார் செய்யப் போகிறார்கள்? நீங்கள் செய்வீர்களா? கை உயர்த்துங்கள். செய்வீர்களா? எவ்வளவு பேர் இருக்கிறார்கள்? (400) உங்களுக்குள் குரூப், குரூப் ஆக பக்கா செய்யுங்கள். பிறகு கவர்ன்மெண்ட்டிடம் காட்டலாம். இவர்கள்

மரியாதை பூர்வமான புருஷோத்தமர்கள். கவர்ன்மெண்ட்டும் விரும்புகிறார்கள் ஆனால் செய்ய முடியவில்லை. நீங்கள் செய்து காண்பிக்க வேண்டும். உதாரணமாகி காட்டுங்கள். ஹோம் ஒர்க் கிடைத்து விட்டதல்லவா? பாப்தாதா இதைத்தான் விரும்புகின்றார். அதாவது நாலா புறமும் உள்ள பிராமண ஆத்மாக்கள் இந்த ஆண்டில் அற்புதம் செய்து (கமால்) காட்ட வேண்டும். வீணான சங்கல்பத்தின் தவறான நடவடிக்கைகளும் இருக்கக்கூடாது. சுத்த சங்கல்பம் நிறைய சேமிக்க வேண்டும். இதன் மூலம் வீணான சங்கல்பம் வருவதற்கு இடமே இருக்கக்கூடாது. இருக்கிறதல்லவா? பொக்கிஷம்! சுத்த சங்கல்பத்தின் சேமிப்பு இவ்வளவு சேர்ந்திருக்கிறதா? இருந்தால், கை உயர்த்துங்கள். சக்திகளும் இருக்கிறார்கள். நல்லது. சக்திகளும் முன்மாதிரியாக ஆகட்டும். பாண்டவர்களும் உதாரணமாக ஆகட்டும். நல்லது. பாப்தாதாவுக்கு குஷியாக இருக்கிறது.

**செக்யூரிட்டி விங்:** செக்யூரிட்டிக்காரர்கள் இருக்கிறீர்களே. நீங்களும் கூட டபுள் செக்யூரிட்டிகள் தானே! ஒன்று தகராறு செய்கிறவர்கள் இருக்கிறார்களே, அவர்களிடமிருந்து செக்யூரிட்டி (பாதுகாப்பு) செய்கிறீர்கள். இரண்டாவது யார் விரும்புகிறார்களோ, நாங்கள் சதா சுகமாக இருக்க வேண்டும். சாந்தியாக இருக்கவே வேண்டும் என்று அவர்களுக்கும் செக்யூரிட்டி கொடுங்கள். அவர்களுக்கு மன்மனாபவ மந்திரம் கொடுத்து சிவ மந்திரம் கொடுத்து குறைந்த பட்சம் குஷியாகவாவது இருக்க வேண்டும் என்று குஷியின் செக்யூரிட்டி, குஷியை இழந்து விடாமல் இருக்க செக்யூரிட்டியின் வழியைக் காட்டுங்கள். இப்படி டபுள் செக்யூரிட்டி செய்வீர்களானால், எவ்வளவு ஆசீர்வாதம் உங்களுக்குக் கிடைக்கும். துக்கமாயிருப்பவர்களை சுகவாசிகளாக்குவது, கவலையில் இருப்பவர்களை குஷிப்படுத்தினால் ஆசீர்வாதம் கிடைக்கும். இப்படி ஒவ்வொரு வீட்டுக்கும் சிறிய மந்திரம் கொடுங்கள். இதனால் குஷியை இழந்து விடாமல் இருப்பார்கள். ஒவ்வொரு வீட்டிலும் குஷியிருக்கும். எவ்வளவு நீங்கள் இந்த சேவை செய்வீர்களோ அப்போது டபுள் செக்யூரிட்டிகாரர்கள் ஆகி விடுவீர்கள். பரவச் செய்யுங்கள். ஒவ்வொரு இடத்திலும் இந்த பொறுப்பைக் கொடுங்கள். எல்லா இடங்களிலிருந்தும் வந்திருக்கிறீர்கள். முதலில் உங்கள் தேசத்தில் செக்யூரிட்டியின் காரியத்தைச் செய்யுங்கள்.

கிராமந்தோறும், பெரிய பெரிய நகரங்கள் குஷிமயமாகட்டும். ஆகவே செய்வீர்களா? செய்வீர்களா? நல்லது.

இப்போது எல்லோரும் நான்கு விஷயங்களைப் பற்றிக் கூறினேனல்லவா? ஐந்தாவதாக ஜீரோ மற்றும் ஹீரோ என்பது. ஆகவே இந்த விஷயங்களை மனனம் செய்து மக்ன அவஸ்தையில் இருக்கக்கூடிய பிராமண் ஸோ பரிஷ்தா ஆத்மாக்கள், தேவதைகள் ஆவது உங்கள் பிறப்புரிமை பரிஷ்தாக்களும், தேவதைகள் தான். ஆதலால் உண்மையான, சிநேகத்தின் அன்பில் ஐக்கியமாகக் கூடியவர்கள், லவ்லீன் ஆக இருப்பவர்கள் சதா திட சங்கல்பம் எனும் சாவியை மனதில், புத்தியில் நினைவில் வைத்திருக்கக் கூடியவர்கள். ஏனெனில் இந்த சாவிக்குப் பின்னால், மாயை நிறைய சுற்றிச் சுற்றி வருகிறது. ஆதலால் மனம் மற்றும் புத்தியில் சதா மிகக் கவனத்துடன் இருக்கக்கூடிய நாலாபுறமும் உள்ள குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

தாதிகளுடன்: (தாதி ஜானகியுடன்) சுற்றி வந்து விட்டீர்கள். ரொம்ப நல்லது, என்ன செய்து கொண்டிருக்கிறீர்களோ, அது மிகவும் நன்றாக இருக்கிறது. பாபாவுக்கு சித்திரம் நினைவுக்கு வந்தது. ஜகதம்பா, நடுவே நின்று கொண்டிருக்கின்றார். கொடியசைத்துக் கொண்டிருக்கின்றார். பின் பக்கம் எல்லா சக்திகளும் சேர்ந்து நின்று கொண்டிருக்கிறார்கள். இப்போது இந்த சித்தரத்தை பாப்தாதா உலகத்திற்கு காட்டவிரும்புகின்றார். எல்லா பிராமணர்களிலிருந்து சக்தி சேனையை தயார் செய்யுங்கள். இவர்கள் நிமித்தமாக இருக்க வேண்டும். சுற்றி வந்து வாயுமண்டலத்தை சக்திசாலியாக (பவர் ஃபுல்) ஆக்கட்டும். மேலும் திட சங்கல்பம் செய்யட்டும். நாங்கள் வாயுமண்டலத்தை சரி செய்ய வேண்டும். இப்படிப்பட்ட குரூப் தயார் செய்து காண்பியுங்கள். பாப்தாதாவுக்கு சித்திரம் நினைவுக்கு வந்தது என்றால் இது பிராக்டிக்கலாக நடக்க வேண்டும். நேரம் கிடைக்கவில்லை என்று சொல்லக்கூடாது. நேரமில்லை என்று யாரும் கூறமாட்டார்கள். நேரம் கிடைக்கும். சுபபாவனை இருக்குமானால், இப்படிப்பட்ட குரூப் பாப்தாதாவுக்கு தயார் செய்து கொடுக்க வேண்டும்.

பரதாதியுடன்: சேவை செய்து கொண்டிருக்கிறீர்கள். மனசா சேவை மூலம் சக்தியை நிறைய கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். சேவையில் பிஸியாக இருக்கிறீர்கள். கல்கத்தாகாரர்கள் மலர்களால் அலங்கரித்திருந்தார்கள். நன்றாக இருக்கிறது. தொடர்ந்து செய்கிறார்கள்.

டாக்டர் அசோக் மேத்தாஜி மற்றும் யோகினி சகோதரியுடன்: இருவரும் நல்ல தைரியம் வைத்திருக்கிறீர்கள். சரியான நேரத்தில் சேர்ப்பித்தீர்கள். (தாதி குல்ஜார் அவர்களை நேற்று பாம்பேயிலிருந்து மதுபன் அழைத்து வந்தார்கள்). இதற்கு வாழ்த்துக்கள். என்ன டியூட்டி கொடுக்கப்பட்டதோ அதை செய்து விட்டீர்கள்.

அவ்யக்த பாப்தாதாவுடன் மத்திய பிரதேசத்தின் ஆளுநர் மேதகு பலராம் ஜாக்கர் அவர்கள் சந்திக்கின்றார்: ரொம்ப நல்லது. பாருங்கள். இதுவும் கூட உங்கள் பாக்கியம். நீங்கள் அப்படிப்பட்ட சபையில் வந்து சேர்ந்திருக்கிறீர்கள். இப்போது பாப்தாதா இதைத் தான் கூறுகின்றார். இந்தக் குழுவில் தியானம் கற்பிக்கின்றார்கள் அல்லவா? அது 3-மணி நேரத்திற்கானதாகும். இதை அவசியம் செய்ய வேண்டும் பாருங்கள். 3-மணி நேரத்தை தனித்தனியாகப் பிரித்துக் கொடுக்க வேண்டும். அதிக வேலைப்பளு இருந்தால் ஓய்வு நாளில் கொடுங்கள். நல்லது, ஏனெனில் தந்தையிடம் வந்து விட்டீர்கள். ஆகையால் தந்தை அன்பளிப்பு அளிப்பாரல்லவா? ஆசீர்வாதம் இது தான். தியானம் செய்து சதா குஷியாக இருப்பீர்கள். குஷியை ஒருபோதும் இழந்து விடக்கூடாது. எப்போதாவது, ஏதாவது பிரச்சனை வந்தால் கூறுங்கள். பாபா, சிவபாபா. அந்த விஷயத்தை தந்தையிடம் கொடுத்து விடுங்கள். நீங்கள் குஷியாக இருங்கள்.

✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳

# 05.02.2009 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சேவை செய்யும் பொழுதும், டபுள் லைட் ஸ்திதி மூலம் ஃபரிஷ்தாவின் அனுபவத்தில் இருங்கள், அசரிரி ஆவதற்கான பயிற்சி செய்யுங்கள்!

இன்று பாப்தாதா நாலாபுறமும் உள்ள குழந்தைகளின் மூன்று ரூபத்தைப் பார்க்கின்றார். எப்படி தந்தையின் மூன்று ரூபத்தை அறிவீர்களோ, அதைப் போலவே குழந்தைகளிடமும் மூன்று ரூபத்தைப் பார்க்கின்றார். இது இந்த சங்கமயுகத்தின் லக்ஷியமாகவும், லக்ஷணமாகவும் இருக்கிறது. முதலாவது சொரூபம் பிராமணன். இரண்டாவது பரிஷ்தா, மூன்றாவது தேவதை. பிராமணனிலிருந்து பரிஷ்தா பரிஷ்தாவிலிருந்து தேவதா. தற்சமயம் விசேஷமாக எந்த ஒரு லக்ஷியம் எதிரில் இருக்கிறது? ஏனெனில் பரிஷ்தா ஆகாமல் தேவதை ஆக முடியாது. ஆதலால் தற்சமயம் சுய புருஷாரத்தத்தின் அடிப்படையில் இப்போதைய லக்ஷியம் இதுதான், பரிஷ்தா, சங்கமயுகத்தின் சம்பன்ன சொரூபம் பரிஷ்தாவிலிருந்து தேவதை ஆக வேண்டும். பரிஷ்தா என்பதன் உட்பொருளை அறிந்தவர்களாகவே இருக்கிறீர்கள். பரிஷ்தா என்றால் பழைய உலக சம்மந்தம் சம்ஸ்காரம், சங்கல்பம் மூலமாக லேசான அனுபவம் ஆக வேண்டும். பழைய சம்ஸ்காரம் அனைத்திலும் லேசான அனுபவம், வாழ்க்கையில் தன்னுடைய சம்ஸ்காரம் மற்றும் சுபாவம் மட்டும் லேசானதாக இருப்பதல்ல. பரிஷ்தா என்றால் எல்லோருடைய சமமந்தத்தில் வரும்போதும் எல்லோருடைய சுபாவம் சம்ஸ்காரத்திலும் இலேசான தன்மை. இந்த இலேசான தன்மை எப்படியிருக்கும்? இதன் அடையாளம் என்ன? இந்த பரிஷ்தா ஆத்மா எல்லோருக்கும் அன்பானவர்களாக இருப்பார்கள். சிலருக்கு மட்டும் அன்பானவர் அல்ல. எல்லோருக்கும் அன்பானவர். எப்படி சிவபாபா, பிரம்மாபாபாவை ஒவ்வொருவரும்

என்னுடையவர் என்று கூறுகின்றார்கள். என்னுடைய பாபா கூறுகின்றார் இப்படிப்பட்ட பரிஷ்தா அதாவது எல்லோருக்கும் பிரியமானவர்கள். சில குழந்தைகள் இப்படி நினைக்கிறார்கள். பிரம்மாபாபா பிரம்மாவாகவே இருந்தார் என்பது ஆனால் நீங்கள் எல்லோரும் உங்களைப் போன்ற பிராமண ஆத்மாக்களைப் பார்த்திருக்கின்றீர்கள் அல்லவா! உங்கள் எல்லோருக்கும் அன்பான தாதி இருந்தார். அவரிடம் எல்லோரும் அன்பை அனுபவம் செய்தார்கள். என்னுடைய தாதி என்றார்கள். எல்லா தரப்பினருடைய சுபாவம், சம்ஸ்காரம் மற்றும் இந்த பழைய உலகில் இருந்த போதிலும் நியாராவாகவும், அன்பானவராகவும் இருப்பதை அனுபவம் செய்த காரணத்தால் என்னுடைய தாதி என்றார்கள். ஆகவே காரணம் என்ன? சுயம் (நான்) சுபாவம், சம்ஸ்காரத்தில் இலேசானவராக இருந்தார் என்பதுதான். எல்லோருக்கும் என்னுடையவர் என்ற அனுபவம் செய்வித்தார். ஆதலால் உதாரணமானார். ஜகதம்பாவையும் கூட பார்த்திருக்கிறார்கள் ஆனால் அவரோ ஜகதம்பா என்றே நினைத்தனர், ஆனால் தாதி பிராமண பரிவாரத்தில் உங்களில் ஒருவராக துணையாக இருந்தார். அவருடைய வாய்மொழியிலிருந்து எப்போதும் புருஷாரத்தம் பற்றி பிறர் சொல்வதைக் கேட்டாலும், தானே விசாரித்தாலும், அவருடைய வாய் மொழியில் ஒரு வார்த்தைதான் இருந்தது. இப்போது கர்மாதீத் ஆக வேண்டும். கர்மாதீத்தின் ஆர்வத்தில் மற்றவர்களுக்கும் கூட அடிக்கடி இப்படி ஞாபகப்படுத்திக் கொண்டேயிருந்தார். ஆதலால் ஒவ்வொரு பிராமணனுடைய இப்போதைய லக்ஷியமும். லக்ஷணமும் விசேஷமாக இதுவாகத்தான் இருக்க வேண்டும். இருக்கிறது என்றாலும் நம்பர்வாராக இருக்கிறது. இப்போது பரிஷ்தா ஆகியே தீர வேண்டும் என்ற இதே ஆர்வம் இருக்கட்டும். பரிஷ்தா என்றால் இந்த தேகம், ஸ்தூல தேகத்திலிருந்து நியாரா பற்றற்று விலகிய நிலை எப்போதும் (சதா) ஒளியாலான தேகதாரி. பரிஷ்தா என்றால் கர்மேந்திரியங்களுக்கு ராஜா.

பாப்தாதா இதற்கு முன்பும் கூறியிருக்கின்றார். முழு படைப்பு எனும் சக்கரத்தில் ஒரே ஒரு பாப்தாதாதான் இப்படி பெருமையாகச் சொன்னார். என்னுடைய ஒவ்வொரு குழந்தையும் ராஜா குழந்தை என்று. சுய இராஜ்ய அதிகாரி. ஆகவே பரிஷ்தா என்றால் சுய இராஜ்ய அதிகாரி இப்படிப்பட்ட சுய இராஜ்ய அதிகாரி ஆத்மா ஒளி சொரூபமாக

இருப்பவர் யாராவது இப்படி ஒளியாலான டபுள் இலகுவான ஸ்திதியில் நிலைத்திருந்து, யாரையாவது சந்தித்தாரானால் அவருடைய நெற்றியில் ஆத்ம ஜோதியின் பிரகாசம் இங்குமங்கும் சென்று கொண்டிருந்தாலும் கூட காணப்படும். இப்போது இந்த தீவிர புருஷாரத்தத்தின் லக்ஷியம் மற்றும் லக்ஷணத்தை சதா எழுச்சியற்ற நிலையில் வைத்திருங்கள். எப்படி பிரம்மாபாபாவைப் பார்த்திருப்பீர்கள் யாராவது சந்தித்தால், திருஷ்டி வாங்கும்போதும், பேசிர் கொண்டிருக்கும் பொழுதும் என்ன தெரிந்தது? மேலும் கடைசியில் அனுபவமும் செய்தார்கள் பிரம்மாபாபா தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கும் பொழுதும் கூட இனிமையான அசரீரி ஸ்திதியில் நிலைத்து விடுவார். மற்றவர்களுக்கும் கூட எவ்வளவு சேவை சமாச்சாரங்கள் இருந்த பொழுதும் கூட ஒரு செகண்டில், அசரீரி நிலையின் அனுபவத்தை செய்வித்துக் கொண்டேயிருந்தார். மேலும் ஏதாவதொரு முரளியில் சோதித்துப் பாருங்கள். அடிக்கடி நான் அசரீரி ஆத்மா என்று ஆத்மா பற்றிய பாடத்தை ஒரு முரளியில் எத்தனை தடவை நினைவூட்டிக் கொண்டேயிருந்தார்! ஆகவே இப்போதைய நேரப்படி சிறு சிறு விஷயங்களையும் விஸ்தாரமாகப் பேசுவது. சுபாவ சம்ஸ்காரம் பற்றிய விஷயங்கள் அசரீரி அனுபவத்திலிருந்து தூரமாக்கி விடுகிறது. இப்போது பரிவர்த்தனை வேண்டும்.

பாப்தாதா பார்த்தார் சேவையில் ரிசல்ட் மிக நன்றாக ஆகிக் கொண்டிருக்கிறது. சேவைக்காக மெஜாரிட்டியினருக்கு ஊக்கம், உற்சாகம் இருக்கிறது. திட்டமும் (பிளான்) போட்டுக் கொண்டேயிருக்கிறார்கள் ஆனால் சேவையின் கூடவே, செய்தி கொடுப்பதும் கூட அவசியமாக இருக்கிறது. மேலும் பாப்தாதா இன்றைக்கும் கூட அநேகவிதமான வர்க்கத்தினருடைய வெவ்வேறு இடங்களில் நடந்து கொண்டிருக்கும் சேவையின் ரிசல்ட் பார்க்கும் பொழுது. அசரீரி நிலையின் வாயுமண்டலமானது, கடின முயற்சியைக் குறைத்து அதிக பிரபாவத்தை உண்டாக்குகிறது. கேட்கும்போது நன்றாகத்தான் இருக்கிறது என்றாலும் வாயுமண்டலத்தில் அசரீரி நிலையின் திருஷ்டியை அனுபவம் செய்வதால் அனுபவம். மறக்க முடியாததாக இருக்கிறது. ஆகவே பரிஷ்தா நிலையின் பிரபாவத்தை இப்போது சேவையில் விசேஷமாக சேர்த்துக் கொள்ளுங்கள். ஏதாவதொரு, சாந்தி, குஷி, சுகம், ஆத்மீக அன்பை அனுபவம்

செய்வியுங்கள். நடத்தையில் மிகுந்த அன்பு மற்றபடி மரியாதை செய்கிறீர்கள் அல்லவா! சம்மந்தம் மூலமாக பரிவாரத்தின் மூலமாக இதெல்லாம் அனுபவம் செய்து கொண்டு செல்கிறார்கள் ஆனால் அதீந்திரிய சுகத்தின் உணர்வு. சாந்தியின் ஆன்மீக நஷா இப்போது வாயுமண்டலம், வைப்ரேஷன் மூலமாக கவனத்தில் வைக்க வேண்டும். விசேஷ அனுபவம் செய்விக்க வேண்டும். ஏதாவதொரு அனுபவம் செய்வியுங்கள். எப்படி ஒழுங்கு முறையில் (சிஸ்டம்) பிரபாவமடைந்து செல்கின்றார்களோ அதேபோல பரிவாரத்திலும் அன்பாக இருப்பது பற்றிய சிஸ்டம் நடைமுறைப்படுத்தலாம். மேலும் இதுபோன்ற அன்பு வேறெங்கும் கிடைக்காது என்பது போன்ற ஏதாவது ஒரு சக்தி, ஏதாவது பிராப்தியை அனுபவம் செய்து செல்ல வேண்டும். இப்போது 70-72 ஆண்டுகள் முடியப் போகின்றது. இந்த சமயத்தின் ரிசல்ட் என்ன பார்த்தார்! முயற்சி செய்திருக்கிறார்கள் ஆனால் இதுவரையிலும் பிரம்மா குமாரிகள் சேவை செய்து கொண்டிருக்கிறார்கள். பிரம்மா குமாரிகளின் ஞானம் நன்றாக இருக்கிறது. கொடுப்பது யார்? நடத்துவது யார்? ஆதாரம் (பின்னணி) யார்? பாபா என்று நீங்கள் உச்சரிப்பதைக் கேட்டு, இவர்களுடைய பாபா என்று கூறவும் செய்கிறார்கள் ஆனால் எனக்கும் அவர்தான் பாபா என்று உணரும் அளவுக்கு பாபாவின் பிரத்யக்ஷம், இப்போது குப்த ரூபத்தில் (இரகசியமாக) தான் இருக்கிறது. பாபா, பாபா என்று கூறுகிறார்களே தவிர, மேரா பாபா. நான் பாபாவினுடையவன், பாபா என்னுடையவர், இது கோடியில் ஒருவராகத்தான் இருக்கின்றார்.

ஆகவே சங்கம யுகத்தின் லக்ஷியம் எது? ஆத்மாக்களாகிய நம் எல்லோருடைய தந்தை வந்து விட்டார். ஆஸ்தி தந்தையிடமிருந்துதான் கிடைக்குமல்லவா! இந்த பிரபாவம் பரிஷ்தா நிலையில் வாயுமண்டலத்தில் பரவும், அதாவது இவர்களது திருஷ்டி மூலம் ஒளி கிடைக்கிறது. இவர்களது திருஷ்டியில் ஆன்மீக ஒளி தெரிகிறது ஆகவே இப்போது தீவிர புருஷாரத்தத்தில் இந்த லக்ஷியம் வையுங்கள். நான் டபுள் லைட் பரிஷ்தா இங்குமங்கும் சென்று கொண்டிருக்கும் பொழுதும் பரிஷ்தா சொரூபத்தின் அனுபவத்தை அதிகப்படுத்துங்கள். அசரீரி அனுபவ நிலையை அதிகரியுங்கள். ஒரு செகண்டில் எந்த ஒரு சங்கல்பத்தையும் சமாப்தி செய்வதில், சம்ஸ்காரம் சுபாவத்தில் டபுள் லைட் (லைட்-ஒன்று ஒளி, இரண்டாவது

இலேசாக இருக்கும் அனுபவம்) சில குழந்தைகள் கூறுகின்றார்கள். நாங்கள் இலேசான அனுபவத்தில்தான் இருக்கிறோம் ஆனால் இதை மற்றவர்கள் புரிந்து கொள்வதில்லை. என்கின்றனர் ஆனால் எப்படி டபுள் லைட் பரிஷ்தா. டபுள் லைட் அவருடைய ஒளி மறைந்திருக்க முடியும்? சிறிய ஸ்தூல விளக்கு. டார்ச் லைட்டாக இருந்தாலும், தீக்குச்சியானாலும், எண்ணெய் மூலமாக எரியும் விளக்கு என்றாலும் எரிந்து கொண்டிருக்கும் ஒளி மறையாது ஆனால் இது ஆன்மீக. லைட் ஆதலால் தன்னுடைய வாயுமண்டலத்தின் மூலமாக இவர்கள் யார்? என்ற அனுபவம் செய்விக்க வேண்டும். ஜகதம்பாவாக இருந்தாலும், தாதியாக இருந்தாலும் சரி, எங்களை அறிந்து கொள்ளவில்லை என்று இவர்கள் ஒருபோதும் கூறவில்லை. தன்னுடைய வாயுமண்டலத்தின் மூலமாக, எல்லோருக்கும் அன்பானவர்களாக இருந்தார்கள். ஆகவேதான் தாதியின் உதாரணத்தைக் கூறுகின்றேன். ஏனென்றால், பிரம்மாபாபாவைப் பற்றிச் சொன்னால், பிரம்மாபாபாவில் சிவபாபா இருந்தார் என்று நினைக்கிறார்கள். சிவபாபாவைப் பற்றிச் சொன்னால், அவர் நிராகாரமாக இருக்கின்றார், நியாராவாக இருக்கின்றார். மேலும் அவர் நிராகார் ஆனால் நாமோ ஸ்தூல சரீரதாரிகளாக இருக்கிறோம். இவ்வளவு பெரிய கூட்டத்தில் இருப்பவர்கள், வேறுபட்ட சம்ஸ்காரம் உடையவர்களோடு இருப்பவர்கள் என்றார்கள் ஆனால் சம்ஸ்காரத்தோடு சரி செய்து கொண்டு நடப்பது என்றால் பரிஷ்தா ஆவதாகும். சம்ஸ்காரத்தைப் பார்த்து அநேக குழந்தைகள் மனமுடைந்து விடுவதும் உண்டு. பாபா மிக நல்லவர், பிரம்மாபாபாவும் மிகவும் நல்லவர். ஞானம் மிக நன்றாக இருக்கிறது. பிராப்திகளும் மிக நன்றாக இருக்கின்றன ஆனால் சம்ஸ்காரம், சுபாவத்தில் ஒத்துப்போவது என்பதன் பொருள் எல்லோருக்கும் அன்பானவராகி விடுவதாகும். சிலருக்கும் மட்டும் அன்பானவராக இருப்பதல்ல. ஏனென்றால், அநேக குழந்தைகள் கூறுகின்றனர். சிலரிடம் அன்பு விசேஷமாக இருப்பதைப் பார்த்து அப்படி ஆகி விடுகிறது. இவருடைய சொற்பொழிவு நன்றாக இருக்கிறது. சிலரிடமுள்ள இந்த விசேஷம் மிக நன்றாக இருக்கிறது. பேச்சு நன்றாக இருக்கிறது. இதெல்லாம் பரிஷ்தா ஆவதில் தடையாக (விக்னம்) ஆகி விடுகிறது. அன்பானவராக இருங்கள் ஆனால் நான் ஆத்மா, நியாராவாக இருக்கிறேன். இப்படி நியாராவாக இருந்து அன்பானவராக ஆக்குங்கள். விசேஷத்தின் காரணமாக அன்பாக இருப்பதல்ல. இவரிடமுள்ள இந்த குணம் நன்றாக

இருக்கிறதல்லவா? வேண்டுமானால் இதை தாரணை செய்யலாம் ஆனால் இதன் காரணமாக அன்புடையவராக இருந்தால், இது தவறு. பரிஷ்தா எல்லோருக்கும் அன்பானவர். ஒவ்வொருவரும் சொல்லட்டும். சிலர் என்னுடையவர். நம்மவர். இப்படி பரிஷ்தா அனுபவத்தில் தடை இரண்டு விஷயங்களில் வருகிறது. ஒன்று தேகபான் (தேக உணர்வு) இது இயற்கையாகவே இருக்கிறது. எல்லோருக்கும் இந்த அனுபவம் இருக்கிறது. 63-ஜென்மம் எடுத்ததன் காரணமாக இந்த தேக உணர்வு வெளிப்பட்டுக் கொண்டேயிருக்கிறது. இதற்கு அடுத்தது. தேக அபிமானம் (கர்வம்) தேகபான், தேக அபிமான் ஞானத்தில் எவ்வளவு முன்னேறிச் செல்கிறார்களோ, அப்போது தனக்கும் கூட சிற்சில சமயங்களில் தேக அபிமானம் எப்படி வருகிறது? ஏதாவது விசேஷம் இருக்கிறதல்லவா, அந்த விசேஷத்தின் காரணமாக அபிமானம் இருக்கிறது. நான் மட்டும் குறைந்தவளா? என்னுடைய சொற்பொழிவு எல்லோருக்கும் விருப்பமானது. என்னுடைய சேவை பிரபாவத்தை உண்டாக்கும். எதையும் மிக நன்றாக, திறமையாகச் செய்யக் கூடிய கலை என்னிடம் இருக்கிறது. நான் எடுக்கும் பாடப்பயிற்சி (கோர்ஸ்) மிக நன்றாக இருக்கும். இது போல ஏதாவது ஞானத்தில் முன்னேறுவதில் சேவையில் முன்னேறுவதில், இந்த அபிமானம் தனக்கும் வருகிறது. மேலும் மற்றவருடைய குணம், அல்லது கலை, அல்லது விசேஷத்தின் காரணமாகவும் அன்பு உண்டாகி விடுகிறது ஆனால் நினைவு யாரைப் பற்றியதாக இருக்கும்? தேக உணர்வுதான் நினைவுக்கு வருமல்லவா? இன்னார் மிகவும் புத்திசாலி, எனது அறை மிகவும் நன்றாக இருக்கும். இப்படிப்பட்ட அபிமானம் சேவையிலும், புருவாரத்தத்திலும் முன்னேறிச் செல்பவர்களுக்கு அபிமானத்தின் ரூபத்தில் வருகிறது. ஆதலால் இதையும் சோதிக்க வேண்டும். மேலும் அபிமானம் உடையவர்களுக்கு, அவமானம் இருக்கிறது. இதைச் சோதிப்பதற்கு ஒரு வழி இருக்கிறது (சாதனம்) அபிமானம் உடையவர்களுக்கு யார் மூலமாவது கொஞ்சம் அவமானம் நேர்ந்தாலும் அவருடைய எண்ணம், அவருடைய அபிப்ராயம், அவருடைய கலை, அவருடைய அணுகுமுறை ஆகிய விசேஷம் உள்ளவர்கள் அவமானத்தை மிக சீக்கிரமாகவே உணரக்கூடியர்களாக இருப்பர்கள். இதனைத் தொடர்ந்து இதனுடைய சூட்சுமமான அடையாளம் கோபம் வந்து விடும். ஆவேசமாகப் பேசுவார்கள். இது பரிஷ்தா ஆகவிடாது. ஆகவே தற்சமயத்தின் கணக்குப்படி பாப்தாதா

மீண்டும் ஜாடையாக நினைவுபடுத்துகிறார் தன்னுடைய சங்கம யுகத்தின் கடைசி சொரூபமான பரிஷ்தா நிலையை இப்போது வாழ்க்கையில் பிரத்யக்ஷம் செய்யுங்கள். நடைமுறைப்படுத்துங்கள். பரிஷ்தா ஆவதன் மூலம் அசரீரி ஆவது மிகவும் எளிதாகி விடும். தன்னை சோதியுங்கள். சூட்சும ரூபத்தில் ஏதாவது பற்றுதல் (ஈர்ப்பு) யாருடைய விசேஷத்தைப் பற்றி அல்லது தன்னுடைய மற்றும் வேறு யாருடைய அபிமானம் இல்லைதானே? அநேக குழந்தைகளுக்கு, ஏதாவது ஒரு சிறு விஷயத்தில் கூட (அவஸ்தா) நிலை மேலே கீழே ஆகி விடுகிறது. உள்ளத்தில் மகிழ்ச்சி, முக மலர்ச்சி, இதற்கு மாறாக கவலையில் ஆழ்ந்திருகின்ற. முகம் அல்லது ஏதோ சிந்தனையின் வசப்பட்டுள்ள முகம். இவ்வாறாக போகப் போக மனமுடைந்து போய் விடுவதுமுண்டு. மனம் மகிழ்ச்சியில் இருப்பதற்குப் பதிலாக மனமுடைந்து போவது ஆகவே புரிந்து கொண்டீர்களா? இப்போது தன்னுடைய சங்கம யுகத்தின் கடைசி ஸ்டேஜ் பரிஷ்தா நிலையின் சம்ஸ்காரத்தை எழுச்சியுறச் செய்யுங்கள். (எமர்ஜ்) எப்படி பிரம்மாபாபாவைப் பர்த்தீர்கள் அல்லவா? பாலோ பாதர் செய்ய வேண்டும். பேசிக் கொண்டிருக்கும் பொழுது, அநேக குழந்தைகளுக்கு அனுபவம். இருக்கிறது. பாபாவிடம் ஏதோ சொல்ல வந்திருப்பார்கள் ஆனால் சொல்ல வந்த விஷயத்தையே. மறந்து விடுவார்கள். சப்தத்தைக் கடந்த நிலையில் அனுபவத்தைப் பார்த்தார்கள். பாபாவிடம் இந்த சமாச்சாரம் சொல்ல வேண்டும், இந்த பிளான் பற்றி சொல்ல வேண்டும், இதைப் பற்றிக் கேட்சு வேண்டும் என்றெல்லாம் நினைத்துக் கொண்டு வந்திருப்பர்கள் ஆனால் எதிரில் வந்ததும் என்ன சொல்ல வேண்டுமோ, அது மறந்து போய் விடும். இதுதான் பரிஷ்தா அவஸ்தா. ஆகவே இன்று பாடத்தை பக்காவாகச் செய்து விட்டீர்களா? நான் யார்? பரிஷ்தா. எந்த ஒரு விஷயத்திலிருந்தும், எந்த ஒரு விசேஷத்திலிருந்தும், தன்னுடைய விசேஷத்திலிருந்தும், தேக அபிமானத்திலிருந்தும், கடந்த நிலையில், டபுள் லைட் பரிஷ்தா. ஏனெனில் பரிஷ்தா ஆகாமல் தேவதையின் உயர் பதவி கிடைக்காது. சத்யுகத்தில் வருவீர்கள். ஏனெனில் குழந்தை ஆகியிட்டீர்கள். ஆஸ்தியும் கிடைக்கும் ஆனால் சிரேஷ்ட பதவி இல்லை, வாக்குறுதி கொடுத்திருக்கிறீர்கள் அல்லவா? கூடவே இருப்பேன். கூடவே இராஜ்யம் செய்வேன். சிம்மாசனத்தில் அமரவில்லையானாலும் சரி. இராஜ்ய அதிகாரி ஆகலாமில்லையா? அங்கேயுள்ள இராஜ்ய சபையை

பார்த்திருக்கிறீர்கள் அல்லவா? யாரெல்லாம் இராஜ்ய சபை அதிகாரிகளாக இருக்கிறார்களோ, அவர்களுக்கு திலகம் மற்றும், கிரீடம், இராஜதிலகம். இராஜ்யத்தின் அடையாளம் கிரீடம். ஆகவே வெகு காலமாக சுய இராஜ்ய அதிகாரி அவ்வப்போது அல்ல. வெகு கால சுய இராஜ்ய அதிகாரி. சிம்மாசனத்தில் அமராவிட்டாலும் சரி ஆனால் ராயல் பேமிலி (இராஜ குடும்பம்) க்கு அதிகாரி ஆகி விடுகிறார்கள். நல்லது.

நல்லது. இன்று யார் முதன் முறையாக வந்திருக்கிறீர்களோ அவர்கள் எழுந்திருங்கள். நல்லது. முக்கால் பாகம் சபையில் இருந்தவர்கள் எழுந்து விட்டார்கள். நல்லது யாரெல்லாம் முதன் முறையாக வந்திருக்கிறீர்களோ, அவர்களுக்கெல்லாம் தந்தையிடமிருந்து, ஸ்தூலத்தில் சந்திப்பதற்கும் முதலாவது ஜென்மத்திற்கு வாழ்த்துக்கள். வந்திருக்கின்ற எல்லா குழந்தைகளுக்கும் பாப்தாதாவிடமிருந்து இதே வரதானம்தான். அதாவது வந்து விட்டீர்கள். டூ லேட்டின் சமயமாக இருக்கிறது ஆனால் புதிதாக வந்துள்ள குழந்தைகளுக்காக ஒரு விசேஷ வரதானம் உள்ளது. அதாவது ஒரு பொழுதும் நம்மால் எப்படி முன்னே செல்ல முடியும் என்ற சங்கல்பம் வரக்கூடாது. டூ லேட்டாக வரப் போகிறவர்களுக்கு இப்போதோ லேட்டாக வந்திருக்கிறீர்கள். டூ லேட்டாக வரவில்லை. மேலும் இப்போது உங்கள் எல்லோருக்கும் விசேஷமாக பாப்தாதா மற்றும் நிமித்தமாக ஆகியிருக்கின்ற பிராமண பரிவாரத்திலுள்ள சகோதர சகோதரிகளுக்கு விசேஷ சகயோகியின் பாவனை இருக்கிறது. அதாவது நீங்கள் கொஞ்ச நாட்களுக்கு ஒவ்வொரு செகண்டையும் பயனுள்ளதாக ஆக்க வேண்டும். ஏனெனில் கொஞ்ச நாட்களில் நிறைய அடைய வேண்டியதாயிருக்கிறது. ஒரு செகண்டைக் கூட வீணாகக் கழித்து விடக்கூடாது. கர்மயோகியாகி நடக்க வேண்டும். கர்மத்தை விடக்கூடாது ஆனால் கர்மத்தில் யோகத்தையும் சேர்த்துக் கொண்டு கர்மம் மற்றும் யோகம் என்ற இந்த இரண்டுக்கும் பேலன்ஸாக வைத்துக் கொள்ள வேண்டும். ஆதலால் பேலன்ஸ் வைத்திருப்பவர்களுக்கு ஆசீர்வாதங்கள் அதிகப்படியாக கிடைக்கிறது. ஆதலால் யாரெல்லாம் லேட்டாக வந்திருக்கிறீர்களோ, டூ லேட் இனி மேல்தான் போடப்படும். உங்களுக்கு வாய்ப்பு இருக்கிறது. கொஞ்ச நாட்களில் அதிக புருஷாரத்தம் செய்ய முடியும். பாப்தாதா

வரதானம் கொடுக்கின்றார். தைரியமுள்ள குழந்தைகளுக்கு பாப்தாதாவின் உதவி இருக்கவே இருக்கிறது.

சேவை வாய்ப்பு குஜராத்: நல்லது குஜராத்திலிருந்து யாரெல்லாம் முதன் முறையாக வந்திருக்கிறார்களோ, அவர்கள் எல்லாம் எழுந்திருங்கள். யார் தந்தையை முதன் முறையாக சந்திக்க வந்துள்ளார்களோ, (குஜராத்திலிருந்து) அவர்கள், கை உயர்த்துங்கள் (குஜராத்திலிருந்து 6-ஆயிரம் வந்திருக்கின்றார்கள்). நல்லதாகப் போய் விட்டது. வந்து விட்டார்கள் அல்லவா? தங்களுடைய மதுபன், பாப்தாதாவின் மதுபன் பார்த்தார்கள். இதற்கும் கூட வாழ்த்துக்கள். நல்லது. இப்போது எல்லா குஜராத்காரர்களும் எழுந்திருங்கள். பாப்தாதா ஆரம்பத்திலிருந்தே, குஜராத்தை, மதுபன்னுடைய ஒரு அறை என்றே கருதுகின்றார். எல்லோரையும் விட மிக அருகிலுள்ள சகயோகி, ஸ்நேகி மேலும் இப்போது, தற்சமயம் பாப்தாதா ரிசல்ட் பார்த்தார். பாப்தாதா ஹோம் ஒர்க் கொடுத்திருந்தாரல்லவா, ஒவ்வொரு ஜோனும் தங்களுக்குள் சந்தித்து, ஜோனை நிர்விக்னமாக ஆக்குவதற்கு புரோகிராம் செய்து மேலும் நிர்விக்னமாகச் செய்ய வேண்டும். ஆதலால் பாப்தாதா பார்த்தார். எல்லா ஜோன்களும், தங்கள் தங்களுடைய ரூபத்தில் செய்து கொண்டிருப்பீர்கள் ஆனால் குஜராத் ஒவ்வொரு மாதத்திலும் ரிகார்டு காண்பித்தார்கள். ஒவ்வொரு மாதத்திலும் தலைப்பு மற்றும் சமாச்சாரங்களின் கொடுக்கல், வாங்கல் இதன் மூலமாக எல்லோருக்கும் (சங்கட்டன்) ஆர்வம் உண்டாகிறது. தனித்தனியாக புருஷாரத்தம் செய்கிறார்கள் ஆனால் எல்லோரும் சேர்ந்து நியமப்படி. செய்ய வேண்டிய முறைப்படி புரோகிராம் செய்தால், இதில் கவனம் நன்றாக இருக்கிறது. நிர்விக்னமாக இருந்தது என்றாலும், இல்லாவிட்டாலும், அந்த ரிசல்ட் (நிர்விக்னம்) இப்போது வர வேண்டும். அதாவது இந்த புரோகிராம் செய்யும்போது எந்தெந்த விதத்தில் வித்தியாசம் இருந்தது? வகுப்பு நடந்தது இதற்கு வாழ்த்துக்கள். தலைப்பு தேர்ந்தெடுத்திருந்தார்கள். இதற்கும் வாழ்த்துக்கள். எனினும் நடைமுறைப்படுத்தும் பொழுது என்ன வித்தியாசம் இருந்தது. இந்த ரிசல்ட் இப்போது வர வேண்டும். மற்றபடி பாப்தாதா வாழ்த்துக்களை அளிக்கின்றார். ஹோம் ஒர்க்கை புத்தியில் வைத்து புருஷார்த்தம் செய்திருக்கிறீர்கள். ஆதலால் புருஷாரத்தத்திற்கு பாப்தாதா பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றார். இதே

போல சிறு சிறு குரூப் தயார் செய்யுங்கள். பார்த்தீர்களல்லவா. பாப்தாதா எப்படி வர்க்கத்தினருக்கான (பல்வேறு துறையைச் சேர்ந்தவர்களுக்காக) குரூப் தயார் செய்வித்தாரல்லவா, அவர்கள் தங்களுக்குள் முறைப்படி ஒருவர் பின் ஒருவராக சந்தித்துக் கொண்டேயிருக்கிறார்கள். மேலும் குரூப் சிறியதாக இருப்பதன் காரணமாக, தங்களுக்குள் அனுபவத்தை பகிர்ந்து கொள்ள முடிகிறது. மற்றபடி வர்க்கத்தைச் சார்ந்த பலரும் நிறைய வந்திருக்கிறார்கள். அவர்களுக்கும் கூட பாப்தாதா இதைத்தான் கூறுகின்றார். எப்படி சேவைக்கான பிளான் தயார் செய்கிறீர்களோ, ரிசல்ட்டில் பாப்தாதா பார்த்தார். மூன்று நான்கு வர்க்கத்தினுடைய ரிசல்ட் வந்திருக்கிறது ஆனால் எப்படி சேவைக்கான புரோகிராமில் யார் சகயோகி ஆகியிருக்கிறார்களோ. குறைந்தபேர் தான் சகயோகி ஆகியிருக்கிறார்கள். சிநேகியாகவும் ஆகியிருக்கிறார்கள். இதில் எப்படி ரிசல்ட் தேர்வு செய்கிறீர்களோ, அதே போலவே ஒவ்வொரு வர்க்கத்தைச்சார்ந்தவர்களுக்கும், தாரணைக்காக தங்களுடைய வர்க்கத்தை நிர்விக்னமாக வைத்துக் கொள்வதற்காக கவனம் கொடுக்க வேண்டும். சிலர் செய்கிறார்கள். தாரணைக்கான குறிப்புகளும் கொடுக்கிறார்கள் ஆனால் ரிசல்ட்டில் என்ன செய்யவில்லை, என்றால் விருத்தி ஆனதா, இல்லையா? பரிவர்த்தனை உண்டானதா, இல்லையா? இந்த விஷயம் ரிசல்ட்டில் வர வேண்டும் ரிசல்ட் எப்படி இருந்தது? பரிவர்த்தனையில் இது போன்ற உதாரணங்கள் காண்பிக்க வேண்டும். எப்படி சேவையில் கவனம் கொடுக்கிறீர்களோ? அது போல, சேவையில் விருத்தி அடைந்திருக்கிறதல்லவா? பாப்தாதாவுக்கு குஷியாக இருக்கிறது ஆனால் இப்போது தாரணையின் மீது கவனம் இன்னும் கொஞ்சம் அதிகம் வேண்டும். ஏனென்றால் கடைசியில் சேவை செய்ய விரும்பினாலும் செய்ய முடியாது. இப்போது என்ன செய்கிறீர்களோ, அதை செய்து விட்டீர்கள், அந்த சமயத்தில் பரிஷ்தா வாழ்க்கை, அல்லது அசரீரி ஆவதற்காக, ஒரு செகண்டில் (பிந்து) முற்றுப் புள்ளி வைப்ப பதற்கான வேலை மட்டுமே இருக்கும். மேலும் திடீரென நடப்பதாக இருக்கும். இதற்கான பயிற்சி சேவையிலும் கூட செய்திருக்கிறீர்கள் ஆனால் இதற்கான பயிற்சி குறைவாக இருக்கும். சேவை செய்வதிலேயே மூழ்கியிருப்பீர்கள். சேவையில் ஈடுபாடு வேண்டியதுதான் ஆனால் இரண்டுக்கும் பேலன்ஸ் வேண்டும். பாப்தாதா அடிக்கடி ஜாடையாகவும் நினைவுபடுத்துகின்றார். திடீரென

நடக்கும் என்று மேலும் இப்படிப்பட்ட சூழ்நிலையிலேதான் நடக்கும். ஆதலால் பாப்தாதா மீது யாரும் குறை சொல்ல கூடாது. நீங்கள் சொல்லவே இல்லையே. அடிக்கடி வித விதமாக ஜாடையாக ஞாபகப்படுத்திக் கொண்டேதான் இருக்கின்றார். சேவைக்கான பலன் கிடைக்கிறது. சேவைக்கான மார்க்குகள். ஏனென்றால் நான்கு பாடங்கள் உள்ளன. சேவைக்கான மார்க் கிடைக்கும் ஆனால் மற்ற மூன்று பாடங்கள்! ஒருவேளை, இவற்றில் ஒரு பாடத்தில் மார்க் வாங்கி விட்டீர்கள். மற்ற மூன்று பாடங்களில் மார்க் குறைவாக வங்கியிருந்தால் நம்பர் என்ன கிடைக்கும்? நான்கிலும் முதல் நம்பர் வர வேண்டும். இதில் பாப்தாதாவுக்கு, ஒவ்வொரு குழந்தையின் மீதும் சுப ஆசை இருக்கிறது. ஆகவே தந்தையின் ஆசையை நிறை வேற்றுகின்ற நட்சத்திரங்கள் யார்? கை உயர்த்துங்கள். தந்தையின் ஆசையை நிறைவேற்றுகின்ற நட்சத்திரங்களாக இருப்பீர்களேயானால் பாப்தாதாவுக்கு எல்லாவற்றையும் விட பெரிய ஆசை இதுதான். அதாவது நான்கு பாடங்களிலும் நம்பர் நன்றாக இருக்க வேண்டும். இல்லையென்றால் பாஸ்வித் ஆனரில் வரமாட்டீர்கள். மகாரதி என்று யாரைச் சொல்ல முடியும் என்றால், யார் நான்கு பாடங்களிலும் நல்ல நம்பர் வாங்குகிறார்களோ, அவர்கள்தான். சொல்வதற்கு மகாரதி மகாரதி என்பது நன்றாக இருக்கிறது ஆனால் ஒருவேளை நம்பர் வாங்கவில்லை என்றால், பாப்தாதாவின் நம்பிக்கை நட்சத்திரங்கள்தான். ஆசையை நிறைவேற்றக் கூடிய நட்சத்திரங்கள் அல்ல. அப்படியானால் என்னவாக ஆக வேண்டும்? நம்பிக்கை நட்சத்திரங்களா? ஆசையை நிறைவேற்றக்கூடிய நட்சத்திரங்கள். வெற்றி நட்சத்திரங்கள். ஆகவே குஜராத் நல்ல லக்ஷியம் வைத்திருக்கிறார்கள் ஆனால் ரிசல்ட் பாப்தாதாவுக்கு அனுப்ப வேண்டும். ஏனென்றால் உங்களைப் பார்த்து, மற்றவர்களுக்கும் கூட உற்சாகம் வரும். அதாவது இந்தக் குழுவில் இருந்தால் பலன் என்ன? பிளான் நன்றாக இருக்கிறது. மேலும் ரெகுலராக முறையாக செய்து கொண்டுயிருக்கிறீர்கள். இதற்காகவும் வாழ்த்துககள். சரிதான். வாழ்த்துக்களும் உண்டு. ஹோம் ஒர்க்கும் கூட உண்டு. இரண்டும் இருக்கிறது. நல்லது.

இந்த குருப்பில் 5-வர்க்கத்தினருடைய மீட்டிங் இருக்கிறது: (பிஸினஸ், மகளிர், சமூக சேவை, டிரான்ஸ்போர்ட் மற்றும் கிராம சேவை) நல்லது.

எல்லோரும் தங்களுடைய சின்னத்தை வைத்திருக்கிறீர்கள். இப்போது யார் எந்த ஒரு சின்னத்தை தயாரித்திருக்கிறார்களோ, அவர்களின் ஒவ்வொருவர் எதிரில் வரட்டும். போர்டு அல்லது அடையாளச் சின்னம். ஓரிருவர் வாருங்கள். எல்லோரும் எதிரில் வாருங்கள். இதுவும் நன்றாக இருக்கிறது. இப்போது இப்படியே திரும்பி நில்லுங்கள். நல்லது நன்றாகச் செய்திருக்கிறார்கள். இதுவும் கூட அதிகப்படியான ஆர்வம், உற்சாகம் தரக்கூடிய சாதனமாகும். இது வரையிலும் யாராவது விமானம் பார்க்காதிருந்தால், இப்போது விமானம் பார்த்து விட்டார்கள். (டிரான்ஸ்போர்ட்காரர்கள் பிளக்ஸில் விமானம் தயார் செய்திருக்கிறார்கள்) உங்களுடைய விமானத்தில் ஏறுகிறீர்கள் அல்லவா? இதிலோ, டிக்கட் செலவு செய்ய வேண்டியதில்லை மேலும் உங்களுடைய விமானம், மனம், மற்றும் புத்தியின் விமானம். ஒரு செகண்டில் எங்கெங்கெல்லாமே, மூன்று லோகங்களையும் சென்றடைய முடியும். நல்ல முயற்சி செய்திருக்கிறார்கள். நல்லது.

எல்லோருக்கும் குஷியாக இருக்கிறதல்லவா. எது நல்ல விங்? நல்லது. பிஸினஸ்காரர்கள் கை உயர்த்துங்கள். நல்லது இந்த பிஸினஸ்காரர்கள் மற்றும் டரான்ஸ்போர்ட், டிரான்ஸ்போர்ட் இரண்டு பேருமே கை உயர்த்தினீர்கள். இருவருமே உயர்த்துங்கள். நல்லது மகளிர் நல்லது இவர்களுடைய சின்னம் பற்றி கூறுகிறார்கள். பாபாவுக்கு இப்போது ஒரு விஷயம் பிராக்டிக்கலில் கொண்டு வருவதில் இன்னும் பாக்கியிருக்கிறது. அந்த குரூப்பை எங்குவேண்டுமானாலும் ஒன்று சேருங்கள். வேண்டுமானால் ஜோனில் கூட்டுங்கள். அல்லது இரண்டு, மூன்று ஜோன்கள், எது சமீபமாக இருக்குமோ அதில் யாரெல்லாம் வி.ஐ.பி மற்றும் சிநேகமுள்ளவர்களாக இருப்பவர்கள், வந்தார்கள், போனார்கள் என்பவர்கள் அல்ல, ஆனால் சிநேகி, தொடர்பில் இருந்து கொண்டிருப்பவர்கள் மேலும் சம்மந்தம் வைத்துக் கொண்டிருப்பவாகள், சம்மந்தம் என்றால் இதுதான் யார் தினமும் முரளி கேட்பதற்கு வராமலிருக்கலாம், போன் மூலமாக கேட்டுக் கொண்டிருக்கலாம், வரதானம், சுலோகன் கேட்பவர்கள் மேலும் முரளியில் கடைசியில் சாராம்சம் இருக்கிறதல்லவா, அதனை இங்குமங்கும் சென்று கொண்டிருந்தாலும் போன் மூலமாக கேட்பவர்கள், தொடர்பு வைத்துக் கொண்டு இருப்பவர்கள் ஆனால் 6-மாதங்களுக்குப் பிறகு அழைத்தால்

வந்து விட்டார் எனபவரல்ல. தொடர்பில் இருந்தால், சம்மந்தம் பக்காவாக ஆகும். தொடர்பு என்றால் பத்தி அதன் பக்கம் இழுக்க வேண்டும். எப்போது துறையினருக்கான சபை கூட்டப்படுமோ, அப்போது வருவார். ஒரு ஆண்டுக்குப் பிறகு என்றால் அதை சம்மந்தம் என்று கூற முடியாது. சமீபத் தொடர்பில் இருக்க வேண்டும். தன்னுடைய பிரசன்ட் மார்க்காவது போட்டிருக்க வேண்டும். போன் மூலமாகவாது தொடர்பு, நான் இருக்கிறேன். என்ற இந்த பிரசன்ட் மார்க்காவது போட வேண்டும். மேலும் முடிந்த அளவு எத்தனை ஜோன் சேர்க்க முடியுமோ அல்லது இரண்டு, மூன்று ஜோன்கள் சேர்ந்து, எது சமீபமாக இருக்குமோ வந்து போவதற்கு 6 மாதங்கள், 3-மாதங்களுக்கு ஒரு முறை கூட ஒன்றிரண்டில் முதலில் தங்களுடைய ஜோனில் செய்யுங்கள். இரண்டு, மூன்று ஜோன்கள் அருகருகே இருப்பவர்கள் சேர்ந்து செய்யுங்கள். பிறகு ஒரு முறை எல்லோரையும் சேர்த்து ஒரு இடத்தில் சபையை கூட்டுங்கள். இதன் மூலமாக ஒருவர்க்கொருவர் அறிமுகம் கிடைக்கும். யார் யாரெல்லாம். இதில் அனுபவம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று. உதாரணமாக, டாக்டர்கள் இருக்கிறார்கள். இப்போது பாருங்கள். இவ்வளவு பெரிய, பெரிய டாக்டர்கள் எல்லாம் அனுபவம் செய்து கொண்டிருக்கிறார்கள். பிரபாவம் உண்டாகிறதல்லவா! இதே போலவே எல்லா வர்க்கத்தினறும் ஒருவர் இன்னொருவரைப் பார்த்து பிரபாவம் உண்டாகும். இவர் கூட இருக்கின்றார். இவரும் கூட இருக்கின்றார் மேலும் ஒருவருக்கொருவருடைய அனுபவம் கேட்டால் பிரபாவம் உண்டாகும். இனி உங்களுக்கு அடுத்த வாய்ப்பு வருமல்லவா? அப்போது ரிசல்ட் சொல்ல வேண்டும். எத்தனை முறை இப்படி சபை கூட்டினீர்கள். எங்கெங்கே செய்தீர்கள். எவ்வளவு பேர் வந்தார்கள். அதனுடைய ரிசல்ட். இது சுலபம் தானே சுலபமா? கஷ்டமா? எல்லா வர்க்கத்தினரும் செய்வார்கள் அல்லவா? மற்றவர்களும் செய்வார்கள். நல்லது.

டபுள் விதேஷி சகோதர சகோதரிகள்: (80-நாடுகளிலிருந்து வந்திருக்கிறார்கள்): நல்லது. இந்த ஒரு புரோகிராம் செய்திருக்கிறார்கள் அல்லவா, மதுபனில் எல்லோருக்குமாக ஒரு சபை கூட்டுங்கள். இது பாப்தாதாவுக்கு விருப்பமானது. ஏனெனில் மதுபனில் வரும்போது பரிவாரம் எவ்வளவு பெரியதாக இருக்கிறது! சேவை நாலாபுறமும் எப்படி நடந்து கொண்டிருக்கிறது? பாரதவாசிகள்,

வெளிநாட்டினரின் சேவை மூலமாக லாபம் அடைவார்கள். நாமும் கூட செய்யலாம். மேலும் வெளிநாட்டினர் இந்தியாவில் நடக்கும் சமாச்சாரம் கேட்டு, தங்களுடைய இடத்தில் எங்கே முடியுமோ, அங்கே லாடம் அடைவார்கள். மேலும் வெளிநாட்டினர் வெளிநாட்டிலேயே சந்திக்க வேண்டும். கஷ்டமானது. மதுபனில் டபுள் லாபம் கிடைக்கும். பாப்தாவுடனான சந்திப்பும் நடந்து விடும். மேலும் பரிவாரத்தினருடன் சந்திப்பும் நடந்து விடும். ஆகவே இப்போது கொஞ்ச காலமாக முறைப்படி மதுபனில் மீட்டிங் அல்லது சிறுசிறு சந்திப்பு, இது பாப்தாதாவுக்கு விருப்பமானதாக இருந்தது. மேலும் திட்டமும் கூட நல்லதிலும் நல்லதாக செய்து கொண்டேயிருக்கிறீர்கள். இதற்கும் கூட ஒவ்வொரு ஆண்டும் விருத்தியாவதைப் பார்த்து பாப்தாதா நாலாபுறமும் உள்ள டபுள் ஃபாரினர்ஸ்களுக்கு பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றார். பாராட்டுக்கள். மேலும் இப்போது எவ்வளவு பேர் வந்து கொண்டிருக்கிறார்களோ, அவர்களில் ஒருவருக்கொருவருடைய அனுபவத்தைக் கேட்டால் அநேகருக்கு அனுபவம் மூலமாகவும் கூட சக்தி கிடைக்கும். உதாரணமாக யாராவது மனமுடைந்து போயிருந்தால், அவர்கள் மற்றவரது அனுபவத்தைக்கேட்டு இவர் எப்படி இவ்வளவு குஷியாக இருக்கிறார், இவருடைய முகம் வாடுவதே இல்லை, உள்ளம் குஷியாக விடுகிறது. ஆகவே ஓரிருவருடைய அனுபவத்தைக் கேட்டு ஆனந்தமடைந்து விடுவார்கள். ஓரிருவருடைய அனுபவம் ஒன்றும் குறைந்ததல்ல. ஒவ்வொருவருக்கும் டிராமாபடி ஏதாவதொரு விசேஷம் தந்தையிடமிருந்து கிடைத்திருக்கிறது. ஆகவே அந்த அனுபவத்தைக் கேட்கும்போது ஊக்கம் உண்டாகிறது. இவரால் செய்ய முடியுமென்றால் என்னால் ஏன் செய்ய முடியாது? ஒருபோதும் மனதைச் சுறுக்கிக் கொள்ளக்கூடாது. பெரிய உள்ளம். பெரிய பாபா. சின்ன பாபாவா என்ன? பெரியதிலும் பெரிய பாபா. ஆகவே குழந்தைகளின் உள்ளமும் சதா பெரியது தான். பாப்தாதாவின் சுலோகன்: பெரிய உள்ளம், உண்மையான உள்ளம், தூய்மையான உள்ளம் எனும் பொழுது ஒவ்வொரு விருப்பமும் நிறைவேறும். எந்த ஒரு குப்பை வந்தாலும் குப்பை உலகம் தானே! எப்போதாவது குப்பை பறந்து வரும் ஆனால் குப்பையை தன்னிடம் வைத்துக் கொள்ளக்கூடாது. வீட்டு அறையில் தூங்குகிறீர்கள், அறை குப்பையாக இருக்கிறது அதை சுத்தம் செய்யாவிட்டால் கொசு உற்பத்தியாகி விடும். இதனால் நோய்வாய் படலாம். ஆகவே இதுவும் கூட ஒருவேளை

மனதில் ஏதாவதொரு விஷயத்தை வைத்திருந்தீர்களானால், அதை நீக்கி விடாமல் இருந்தால் அது விருத்தியாகிக் கொண்டேயிருக்கும். பொழுதும் பாபா, மேரா பாபா என்று சொன்னால் உடனே பாபா ஆஜர், கட்டுப்பட்டிருக்கின்றார். குழந்தை, தந்தையின் குழந்தை, பகவானுடைய குழந்தை நினைக்கிறது. எனது பாபா என்று. இதற்கு பாபா ஆஜராகாமல் இருக்கிறார் என்பது சாத்தியமேயில்லை, உங்களிடம் தந்தையைக் கட்டிப்போடுவதற்கான கயிறு இருக்கிறது. என்ன அது? உள்ளபூர்வமான அன்பு அநேகருக்கு தந்தையிடம் அன்பு இருக்கிறது. இல்லை என்று யாரும் சொல்லமாட்டார்கள் ஆனால் இரண்டு விதமான அன்பாக இருக்கிறது. ஒன்று ஞானத்தின் ஆதாரத்தில், நான் ஆத்மா, சரீரமல்ல, ஆத்மாவின் தந்தை பரமாத்மாவே தான். மேலும் பரமாத்மா ஜோதியாக இருக்கிறாரே தவிர, வேறு யாரும் எல்லோருக்கும் பரமாத்மாவாக இருக்க. முடியாது. ஆகவே தந்தை தந்தைதான். ஜோதி சொரூபம் தான். சகயோகம் கொடுக்கின்றார் ஆனால் ஒவ்வொரு சமயமும் உள்ளன்பின் மூலம் என்னுடைய பாபா என்று தானாகவே வரட்டும். வேண்டிய சமயத்தில் பயன் படுத்திக் கொள்ளுங்கள். சிநேகபூர்வமாக நினைவு செய்யுங்கள். ஒன்று ஞானத்தின் ஆதாரத்திலான சிநேகம், இன்னொன்று உள்ளன்புடன் கூடிய சிநேகம். ஆகவே சோதியுங்கள் உள்ளபூர்வமாக அன்பு இருக்கிறதா? அன்பு இருப்பவர்கள் மறப்பது கடினம். பழக்க வழக்கத்திலுள்ள விஷயத்தைப் பாருங்கள், சர்க்கரை வியாதி உள்ளவர்களுக்கு இனிப்பு உசிதமல்ல, ஆனால் அவருக்கு இனிப்பு தான் பிரியமாக இருக்கிறது. ஆகவே இனிப்பு தான் நினைவுக்கு வருகிறது. மறந்து விடுகிறாரா? டாக்டரிடமிருந்து மருந்தும் சாப்பிடுவார், இனிப்பும் சாப்பிடுவார். ஆதலால் ஒரு பொருளின் மீது பிரியமிருக்கிறதென்றால், சொன்னாலும், கேட்கமாட்டார். இவரோ தந்தை. எல்லா பிராப்திகளையும் கொடுக்கக்கூடியவராக இருக்கின்றார். எல்லோரும் கேட்டுக் கொண்டிருக்கிறார்களா? ஃபாரினர்ஸ் நிமித்தமாக இருக்கிறார்கள் ஆனால் எல்லோரும் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். ஆகவே இப்போது சோதியுங்கள். உள்ளபூர்வமான அன்பு இருக்கிறதா? சதா காலத்திற்கும் நண்பனாக்கிக் கொண்டிருக்கிறீர்களா? நண்பன் எதற்காக ஆக்குகிறார்கள்? தந்தையையும் கூட நண்பனிடம் அதிகம் அன்பிருக்கிறது. ஆகவே குதா தோஸ்த் (கடவள் நண்பன்) ஆக்கிக் கொண்டு விட்டீர்களா? எந்த ஒரு விஷயம் வந்தாலும் சரி, பாபா நீங்கள்

பார்த்துக் கொள்ளுங்கள். சிறு குழந்தையாகி விடுங்கள். பெரியவர் ஆக வேண்டாம். பாபா பார்த்துக் கொள்வார். அன்பெனும் கயிறால் அசைய முடியாமல் அவ்வளவு இருக்கமாகக் கட்டி விடுங்கள். புரிந்ததா? எல்லோரும் புரிந்து கொண்டு விட்டார்கள் அல்லவா? அநேக முறை கூறுகின்றார்கள். பாபா இன்று பாபா மறந்து விட்டது. இதைக் கேட்டு பாப்தாதாவுக்கு ஆச்சரியமாயிருக்கிறது மறந்து விட்டது! 63 பிறவிகள் மறந்து விட்டது. இப்போதும் கூட மறந்து விட்டதா? ஒரு ஜன்மம். அதுவும் மிகச் சிறிய ஜன்மம். 21 முழுப்பிறப்பில் மறந்து விட்டீர்கள். இப்போதும் கூட மறதி இன்னும் மிச்சமாக இருக்கிறதா என்ன? ஆதலால் இப்போது மாயையின் சாதூர்யத்தை (திறமை) புரிந்து கொள்ளுங்கள். மாயைக்கு சில சமயம் மரியாதையும் கொடுக்கிறார்கள். சொல்கிறார்கள். நாங்கள் அந்த சமயத்தில் தயாராகி விடுவோம். இன்னும் நேரமிருக்கிறதல்லவா கொஞ்சம்! இப்போது டூலேட் போர்டு போடவில்லை தானே! நாங்கள் ஆகி விடுவோம். மாயையும் உதவி செய்து, மரியாதை கொடுத்து தேநீர் குடித்துக் கொண்டிருக்கிறது. தந்தையை ஃபாலோ செய்வதற்குப் பதிலாக மாயையை ஃபாலோ செய்கிறார்கள். புருஷாரத்திகள் தானே! சம்பூரணம் ஆகி விட்டோமா என்ன? இதெல்லாம் நடக்கத்தானே செய்யும். இது தான் மாயைக்கு ஃபாலோயர்(பின்பற்றி நடப்பவர்) ஆவது. ஆகவே இப்போது பாப்தாதா எப்போதாவது சுற்றிப்பார்க்க வந்தாரானால், சதா முகத்தைப் பார்த்தால், எப்படிப்பட்ட முகத்தைப் பார்க்க வேண்டும். சில சமயம் முகம் நன்றாக இருப்பதில்லை. ஏதோ யோசனையில் இருக்கிறார்கள். நிறைய சிந்தனை செய்கிறார்கள். என்ன செய்வது, இப்படிச் செய்யலாமா செய்யக்கூடாதா, பலன் கிடைக்குமா, சரியாக இருக்குமா? இப்படி அதிகமாக சிந்தனையில் மூழ்கியிருக்கிறார்கள். தந்தையை பின்பற்றுங்கள் (போலோ செய்யுங்கள்) பிரம்மாபாபா வந்து சேர்ந்து விட்டாரல்லவா? அதிகமாக ஏன் சிந்திக்கிறீர்கள். ஃபாலோ ஃபாதர் செய்தால் பொழுதும், வீணான எண்ணங்கள் வருகின்றன. அலை பாய்கிறது. இது ஃபாரினர்ஸ்களுக்கு மட்டும் கூறவில்லை. எல்லோருக்கும் கூறுகிறேன்.

<u>வெளிநாட்டின் டேவிட் சகோதரருடன்:</u> பாப்தாதா பார்த்தும் இருக்கின்றார், அறிந்து கொண்டுமிருக்கின்றார். குழந்தையிடம் மிகுந்த ஊக்கம், உற்சாகமிருக்கிறது. இனி ஊக்கம், உற்சாகத்தை

பிராக்டிக்கலாக கொண்டு வருவதில் சகயோகியாகி. சகயோகம் பெறவும் வேண்டும். சகயோகம் கொடுத்துக் கொண்டேயிருந்தால் முன்னேறிச் செல்ல முடியும். ஊக்கம், உற்சாகம் ஒருபோதும் தளர்ந்து விடக்கூடாது. விஷயங்கள் வரும் ஆனால் ஊக்கம், உற்சாகம் என்ற இறக்கைகளை தளர்த்தி விடக்கூடாது. பறந்து கொண்டே இருக்க வேண்டும். பறப்பதற்கு இறக்கைகள் இருக்கின்றன. ஊக்கம், உற்சாகம் கொஞ்சம் குறைந்து விட்டால் கூட உயரமாகப் பறக்க முடியாது. விஷயங்கள் போய் விடும் ஆனால் குஷி போய் விடக்கூடாது ஊக்கம், உற்சாகம் இழந்து விடக்கூடாது. மற்றபடி பாப்தாதா பார்த்தார். ஊக்கம், உற்சாகம் நன்றாக இருக்கிறது. இப்போது சதா நிலையாக வைத்துக் கொள்ளவேண்டும். உயரத்தாண்ட முடியுமா?

பிலிப்பைன்ஸின் சஹானி சகோதரியுடன்: இவரோ பழையவர். நல்லவர். சேவை செய்து கூடவே கொண்டு வந்திருக்கின்றார். நல்லவர்களாக இருக்கிறார்கள். கேட்டீர்கள் அல்லவா? ஊக்கம், உற்சாகத்தை ஒருபோதும் விட்டு விடக்கூடாது. பறந்து கொண்டேயிருக்க வேண்டும். எந்த ஒரு விஷயம் வந்தாலும் சரி, நீங்கள் பறந்து விடுங்கள். விஷயம் கீழே தங்கி விடும். நீங்கள் உயரே சென்று விடுவீர்கள். நல்லது.

நாலாபுறமும் உள்ள தில்குஷ், உண்மையான உள்ளம், சுத்தமான உள்ளம் உடையவர்களுக்கு ஒவ்வொரு சங்கல்பமும் நிறைவேறி விடும். இதன் பொருள் எந்த ஒரு சங்கல்பம் செய்தீர்களோ, அதில் வெற்றி கிடைத்து விடும். ஆகவே இப்படி மூன்று விசேஷங்கள். பெரிய மனம், சுத்தமான மனம், உண்மையான மனம் உடைய நாலாபுறமும் உள்ள குழந்தைகளை பாப்தாதா பார்த்து, நூறு மடங்கையும் விட அதிகமாக குஷியடைகின்றார். மேலும் தானாகவே பாட்டும் ஒலிக்கிறது. ஆஹா ஆஹா எனது குழந்தைகளே ஆஹா சதா தந்தையை துணைவராக்கிக் கொண்டு நடந்து கொண்டிருக்கின்ற. கையோடு கை சேர்த்து, பறந்து கொண்டிருப்பவர்கள், ஸ்ரீமத்தை ஒவ்வொரு அடியிலும் பிரம்மாபாபாவை பின்பற்றி நடக்கக்கூடிய மேலும் யோசிக்காமலேயே செய்வோமா, வேண்டாமா? சரியாக இருக்குமா? இருக்காதா? தெரியவில்லை, நன்றாக இருக்குமா, இருக்காதா? ஃபாலோ செய்யுங்கள். பிரம்மாபாபா என்ன செய்தார்?

எதை பிரம்மாபாபா செய்தாரோ அது சரி யோசிக்க வேண்டிய அவசியமில்லை. ஃபாலோ செய்வது சுலபம் தானே! யோசிப்பதற்கு என்ன அவசியம் இருக்கிறது. பிறகு தலை பரமாகி விடும், பிறகு சொல்வார்கள். இன்றைக்கு என்ன ஆகி விட்டது, ஒன்றுமே தெரியவில்லையே இப்படி தலை கனமாக ஆகி விடும். ஏனெனில் ஏதாவதொரு விஷயத்தைப் பற்றி யோசிக்க ஆரம்பித்து விடுகிறார்கள்.

ஆகவே எல்லா பக்கங்களிலுமுள்ள குழந்தைகளுக்கு பாப்தாதாவின் உள்ள பூர்வமான ஆசிகள் மற்றும் நூறு மடங்கு பாராட்டுகள். யார். சிவராத்திரியின்போது தங்களுடைய சேவையில் இருப்பீர்களோ, அவர்களுக்கு இப்போதே சிவராத்திரி தங்களுடைய பிறந்த நாளுக்கு ஆசிகள். மேலும் வாழ்த்துக்களை அளிக்கின்றேன். மற்றும் இனிமேலும் வரவிருக்கின்றவர்கள், யார் இமெயில் கடிதங்கள் அனுப்புகிறார்களோ அவர்களுக்கு ஒரு செகண்டைவிடவும் குறைந்த நேரத்தில் பாப்தாதாவிடம் வந்து சேர்ந்து விடுகிறது. அவர்களுக்கும் கூட பாப்தாதாவிடம் தாகமுள்ள ஆத்மாக்களுக்கு பந்தனத்தில் உள்ளவர்கள் அடி. உதையையும் கழுத்து மாலையாக ஆக்கிக் கொள்கிறார்கள். அப்படிப்பட்ட ஆத்மாக்களுக்கும் கூட அன்பு நினைவுகள். மேலும் புதிது புதிதாக சிநேகமுள்ள ஆத்மாக்கள் யாரெல்லாம் உருவாகிக் கொண்டிருக்கிறார்களோ ஆனால் குறைவாக, சிநேகி, சகயோகி, டபுள் ஆகியருக்க வேண்டும். ஆகவே நாலாபுறமும் உள்ள எல்லா இளைஞர்கள், முதியோர்கள், குழந்தைகள், மாதாக்கள், பாண்டவர்கள் ஆகிய அனைவருக்கும் அட்வான்சாக உங்களுடைய மற்றும் தந்தையினுடைய பிறந்த நாளுக்கு வாழ்த்துக்கள் நல்லது.
தாதிகளுடன்: எல்லோரும் நம்பர்-1 தானே ஆதலால் பாப்தாதா தைரியமுள்ள குழந்தைகளுக்கு தந்தையின் உதவி இருக்கவே இருக்கிறது. குஷி அடைகின்றார்.

**ரமேஷ் சகோதரருடன்:** (ரமேஷ் சகோதரருக்கு இன்று 75வது பிறந்த நாள்) பிறந்த நாள் வாழ்த்துக்கள். நல்லது. பிறந்தநாளில் ஏதாவது கொஞ்சம் பாப்தாதாவுக்கு அளிக்க வேண்டும். நீங்கள் என்ன நினைக்கிறீர்களோ, அது, நல்லது.

டபுள் விதேஷி மூத்த சகோதரிகளுடன்: பாருங்கள். டிராமாபடி யாரெல்லாம் நிமித்தமாகியிருக்கிறார்களோ அவர்கள் எல்லோரும் பாரதத்தைச் சேர்ந்தவர்கள். (ஜெயந்தி சகோதரியிடம்) இவருக்கும் கூட பாரதத்தில் தான் பிறப்பு. டைரக்ட்பிரம்மாபாபா மூலமாக பாரதத்தில் ஜன்மம் எடுத்தார். முதன் முதலில் சேவா கேந்திரத்திற்கு பாபா அனுப்பினார். ஆகவே எல்லோரும் பாருங்கள். ஏனென்றால் உங்களுடைய அஸ்திவாரம் பக்காவாக இருக்கிறதல்லவா? பாலனையும் எடுத்துக் கொண்டீர்கள் அல்லவா? சற்று தாமதமாக வந்திருக்கலாம், ஆனால் பாலனை டைரக்டாக எடுத்துக் கொண்டீர்கள். இது பாக்கியம். நீங்கள் (ஜெயந்தி சகோதரி) மற்றும் ரஜனி. ரஜனிக்கும் பாக்கியம் இருக்கிறது. ஃபோன் மூலமாகவும் முரளி கேட்டுக் கொண்டிருந்தார். (முரளி சகோதரர்) பார்ட் இருவரும் செய்தனர் ஆனால் இந்தப் பக்கம் சென்றால் மிகவும் உறுதியாக இருக்கிறது (காயத்ரி சகோதரியும் கூட நினைவை அனுப்பியிருக்கின்றார்)

(எல்லா மூத்த சகோதரிகளுடன்): நல்லது. சேர்ந்திருப்பது அழகாக இருக்கிறது. மேலும் எப்போது நீங்கள் எல்லோரும் வருகிறீர்களோ, அப்போது நன்றாக இருக்கிறது. அல்லவா? அநேக நன்மைகள் உண்டு தந்தையை சந்திப்பதில். தங்களுக்குள் அனுபவம் பகிர்ந்து கொள்வது. சேவையில் புதுமையைக் கொண்டு வருவது. இது மிக நன்றாக இருக்கிறது ஏனெனில் நீங்கள் தங்கள் தங்களுடைய இடங்களில் சேவை செய்கிறீர்கள் ஆனால் ஒருவர்க்கொருவர் அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ளும் பொழுது ஊக்கம் உண்டாகிறது. பாப்தாதாவுக்கு குஷியாக இருக்கிறது.

சரளா தீதியுடன்: நன்றாக இருக்கிறீர்கள் அல்லவா? நல்ல தைரியம் இருக்கிறது. முயற்சியும் செய்திருக்கிறீர்கள். பலன் கிடைக்கும். நல்லது.

டாக்டர் அசோக் மேத்தா மற்றும் ரதத்தினுடைய (தாதி குல்ஜார்) சேவையில் உடன் இருக்கின்ற அனைத்து சகோதரிகளுடன்: நல்லது. ரதத்தை தயார் செய்து விட்டீர்கள். இதற்கு வாழ்த்துக்கள். எல்லோரும் மனதார ஆசிகளை வழங்குகிறார்கள் உங்களுக்கு. நல்லது. மற்ற டாக்டர் களுக்கும் கூட சேவை நடந்து விடுகிறது. அவர்களும் கூட

அருகில் வந்து கொண்டிருக்கிறார்கள். மிகவும் நல்லது. இவர்கள் எல்லோரும் மிக நன்றாக சேவை செய்கிறார்கள். வாழ்த்துக்கள். நல்லது. வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள்.

விடைபெறும் நேரம்: தந்தையின் ஒவ்வொரு குழந்தையும் தந்தைக்கு மிக மிக அன்புடையவர்கள். ஆதலால் விதிபூர்வமாக மட்டுமே எல்லோரையும் அமர வைக்க முடியாது ஆனால் நீங்கள் எல்லோரும் மேடை மீது தான் இருக்கிறீர்கள். மேடையை விடவும் அருகில் உள்ளத்தில் அமர்ந்திருக்கிறீர்கள். கொஞ்சம் வைக்கத்தான் வேண்டியதிருக்கிறது. கொஞ்சம் ஆனால் ஒவ்வொருவரும் தந்தைக்கு அன்பானவர்கள் தான். ஒருவரைவிட இன்னொருவர் அன்பானவர். ஆகவே பாப்தாதாவின் பார்வை அருகில் உள்ளவர்களுக்கு மட்டும் செல்வதில்லை. கடைசி வரை செல்கிறது. ஒவ்வொரு வரும் புரிந்து கொள்ளட்டும். நாம் பாபாவுக்கு எதிரில் அமர்ந்திருக்கிறோம். பாப்தாதாவுக்கு நேர் எதிரில் அமர்வதற்கு திருஷ்டி கொடுத்துக் கொண்டிருக்கிறார். நல்லது.

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

# 22.02.2009 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பிறந்த நாளில் வேகமாய் வந்து முதல் பிரிவில் வரும் பரிசைப் பெறுவதற்காக ஒவ்வொரு சுவாசம், சங்கல்பம், சக்திவாய்ந்ததாய் இருக்க வேண்டும். பரந்த உள்ளமாகவும், உண்மையாகவும் இருந்தால் ஒவ்வொரு தேவையும் பூர்த்தியாகும்! (சிவ ஜெயந்தி)

இன்று '0' ஜீரோ உருவிலான பாபா தனது 'ஹீரோ' குழந்தைகளைச் சந்திக்க வந்தார். இன்றைய தினம் நீங்கள் அனைவரும் கூட பாபாவினுடன் கூடவே உங்களது பிறந்த நாளையும் கொண்டாட வந்துள்ளீர்கள், ஆக, பாப்தாதா அனைத்து குழந்தைகளுக்கும். எதிரில் இருந்தாலும் சரி. தூரத்தில் இருந்தாலும் சரி. நாலாபுறங்களிலும் உள்ள குழந்தைகளுக்கு அனைத்து சம்பந்தங்களினாலும் வாழ்த்துக்களைக் கூறுகிறார். அதிலும் கூட விசேடமாக 3-வாழ்த்துக்கள். பாபா, ஆசிரியர் மற்றும் சத்குருவின் ரூபத்தில் 3-வாழ்த்துக்கள் பாலனை (வளர்ப்பு) படிப்பு, மற்றும் வரதானங்களை நாலாபுறங்களிலுமுள்ள குழந்தைகளுக்கு விசேடமாய் தருகின்றார். அனைத்து குழந்தைகளுக்கும் வாழ்த்துக்கள்.! வாழ்த்துக்கள்!

இன்று இந்த விசேஷ பிறவியை பக்தர்களும் கொண்டாடுகின்றனர் ஆனால், குழந்தைகள் நீங்கள் அறிவீர்கள். இந்த பிறந்த நாள். தந்தை மற்றும் குழந்தைகளின் அழிவற்ற சினேகத்தின் பிறந்த நாளாகும். ஆரம்பத்திலிருந்து பாபாவும் குழந்தைகளும் கூடவே இருக்கின்றனர். கூடவே உலக மாற்ற சேவையிலும் கூட பாபா குழந்தைகளின் கூடவே

இருக்கின்றார். ஏனெனில் பாபா மற்றும் குழந்தைகளின் சினேகம் மிக மிக அதிகமாகும். இப்போதும் கூடவே இருக்கிறார். மேலும் நமது வீடு திரும்பிச் செல்ல வேண்டுமென்றாலும் கூடவே செல்ல வேண்டும். பாபா குழந்தை களில்லாமல் செல்ல முடியாது குழந்தைகளும் தந்தையில்லாமல் செல்ல முடியாது. ஏனெனில் உள்ளத்தின் சினேகம் அன்பு கூடவே இருக்கிறது வீட்டிற்குப் (பரந்தாமம்) பிறகு இராஜ்யத்தில் (சத்யுகம்) அப்போதும் கூட பிரம்மாபாபாவின் கூடவே இராஜ்யம் செய்வீர்கள். ஆக அனைத்து பிறவிகளிலும் இப்பிறவி அன்பானதும், பற்றற்றதும் ஆகும். இப்பிறவியின் மதிப்பானது முழு கல்பத்திலும், 84-பிறவிகளிலும் கூட கிடையாது. இம்மாதிரி சினேகமான், துணையானது விசேஷமாக இது வைரம் போன்ற பிறவியாகும். ஆக நீங்கள் அனைவரும் தங்களது பிறந்த நாளைக் கொண்டாட வந்துள்ளீர்களா? அல்லது பாபாவினுடையதைக் கொண்டாட வந்துள்ளீர்களா? பாபா குழந்தைகளினுடையதைக் கொண்டாட வந்துள்ளாரா? அல்லது குழந்தைகள் பாபாவினுடையதைக் கொண்டாட வந்துள்ளனரா? நாலாபுறங்களிலுமுள்ள பக்தர்களும், சிவஜெயந்தி, சிவராத்திரி எனக் கூறி கொண்டாடுகின்றனர். மிகவும் அன்போடு கொண்டாடுகின்றனர். பாப்தாதா பக்தர்களைப் பார்த்து அவர்களுக்கும் பக்தியின் பலனை கொடுக்கிறார் ஆனால் நீங்கள் கொண்டாடுவதிலும், அவர்கள் கொண்டாடுவதிலும் மிகுந்த வேறுபாடு உள்ளது. அவர்கள் இரவில் கொண்டாடுகின்றனர். நீங்கள் அமிர்த வேளையைக் கொண்டாடுகின்றீர்கள். அமிர்த வேளை மிக சிரேஷ்ட வேளை. அமிர்தவேளையில் பாப்தாதா ஒவ்வொரு குழந்தைக்கும் வரதானங்களினால் பையை நிரப்பி விடுகின்றார். எல்லோருடைய பையும் நிரம்பியுள்ளதல்லவா? தினமும் வரதானம் வரத்தின் வள்ளலான பாபாவிடமிருந்து கிடைக்கிறது தான்! எவ்வளவு வரதானம் நீங்கள் ஒவ்வொரு குழந்தைக்கும் பாப்தாதாவின் மூலம் கிடைத்துள்ளது. அந்த வரதானங்களின் மூலம் பை நிரம்பியுள்ளதல்லவா? ஆக அனைவரும் மிகவும் உற்சாகம் ஆர்வத்தோடு வந்து சேர்ந்துள்ளீர்கள். பாப்தாதாவும் குழந்தைகளைப் பார்த்து மிகவும் குஷி அடைகின்றார். பாடலும் பாடிக் கொண்டிருக்கிறார்..ஆஹா என் குழந்தைகளே குழந்தைகளும் கூறுகின்றனர் ஆஹா! பாபா ஆஹா மேலும் பாபா கூறுகிறார். ஆஹா! குழந்தைகளே, ஆஹா! ஏனெனில், யாரெல்லாம் பாபாவின்

குழந்தைகளாக ஆகியுள்ளனரோ. அவர்கள் அனைவரும் கோடியில் ஒரு ஆத்மாக்களே உலகில் இவ்வளவு கோடி ஆத்மாக்கள் உள்ளனர்? ஆனால் அவர்களிலும் அதிர்ஷ்டசாலியான, அன்பான குழந்தைகள் என்று பாபா கூறும் குழந்தைகளாகிய நீங்கள், அந்த கோடியில் ஒரு சில குழந்தைகள்! ஒவ்வொரு கல்பத்திலும் நாம் கோடியில் சில குழந்தைகள் என்ற போதை உள்ளது. மிக உயர் பதவியிலுள்ள ஆத்மாக்கள் தற்போதும் கூட உள்ளனர் ஆனால் பாபாவைப் புரிந்துள்ளளோர். பாபாவின் பிறந்த நாளைக் கொண்டாடுவோர் நாலா புறங்களிலும் உள்ள (பாபாவை) தெரிந்துள்ள குழந்தைகள் கோடியில் ஒரு சிலரே! ஆக. நாம் அந்த கோடியில் ஒரு சிலர் என்ற குஷி உள்ளது. இந்த போதை (நஷா) இருக்கிறதா? கை தூக்குங்கள். பார்ப்போம்! அழிவற்ற போதை உள்ளதல்லவா? அவ்வப்போதான போதை இல்லையே சதா இருக்கிறதா, சதாவாகவே இருக்கும் மாயா சோதனை (Test Paper) தரத்தான் செய்யும். அனுபவம் இருக்கிறதல்லவா? மாயாவுக்கும் பரமாத்ம குழந்தை களோடு அதிக அன்பு உள்ளது ஆனால், குழந்தைகள் அறிவர், மாயாவுக்கு பரமாத்ம குழந்தைகளோடு ஆதியிலிருந்து தற்போது வரை சம்பந்தம் உள்ளது. மாயா மற்றும் பரமாத்ம குழந்தை இருவருக்கிடையே தொடர்பு உள்ளது. மாயாவுடைய வேலை வருவது (தொல்லை தருவது) குழந்தைகள் உங்கள் வேலை என்ன? மாயாவை துாரத்திலிருந்தே விரட்டியடிக்க வேண்டும். வரவிடவே கூடாது, அல்லது வர விடுகிறீர்களா? அப்படி இல்லை, தூரத்திலேயே விரட்டியடியங்கள். வரவிட்டீர்கள் என்றால் பிறகு மீண்டும் வருவதற்கு அதன் வழக்கமாகி விடும். சரி அவர்களும் நம்மை வர விடுகிறார்கள் தானே. என்று மாறை எண்ணும் ஆனால் பாபா பார்க்கிறார். சில குழந்தைகள் மாயாவுக்கு நல்ல விருந்து கொடுகின்றனர். காபி, டீ கூட கொடுக்கின்றனர். என்ன விருந்து கொடுக்கின்றனர் தெரியுமா? மாயாவின் பிரபாவத்தில் வந்து, விடுகின்றனர். இன்னும் (Too Late) மிகவும் தாமதம் என்ற போர்டு விழவில்லை, இன்னும் காலம் இருக்கிறது. புருஷார்த்தம் செய்து கொண்டிருக்கிறோம். எப்படியாவது போய் சேர்ந்து விடுவோம் என எண்ணிக் கொண்டிருக்கின்றனர். மாயாவுக்குக் கூட தெரிகிறது, முதலில் நம்மை வரவிட்டனர். அடுத்து இவர்கள் நமக்குத் துணையாக இருக்கின்றனர். ஆக மாயாவைப் புரிந்து கொண்டவர்களில் கூட ஒரு சில குழந்தைகள். இது மாயாவின் வழியா? அல்லது பாபாவின் வழியா?

எனப் புரிந்து கொள்வதில் தவறு செய்துவிடுகின்றனர். சரியாகப் புரிந்து கொள்ளாத காரணத்தால் மாயாவின் பிரபாவத்தில் வந்து, அதன் பின் விரட்டுவது இதில் நேரத்தை வீணாக்காதீர்கள். ஏனெனில் சமயம் மிகக் குறைவாக உள்ளது. உங்களின் உறுதி மொழியாவது உலக மாற்றம் செய்வோராகி, உலக சேவதாரியாகி உலக ஆத்மாக்களுக்கு பாபாவினுடைய அறிமுகம் கொடுத்து முக்தியின் ஆஸ்தியைக் கொடுக்க வேண்டிய அந்த காரியம் இன்னும் முடியவில்லை, அந்த காரியத்தை முடிப்பதில் நேரத்தை செலவழிக்க வேண்டும். மாயாவை விரட்டுவதில் சமயத்தை செலவழித்தால், உலக மாற்றத்திற்காக நீங்கள் செய்துள்ள உறுதி மொழியை எப்போது பூர்த்தி செய்வீர்கள்? பாபாவினுடைய துணைகள்தானே! பிறந்தவுடனேயே உறுதியளித்துள்ளீர்கள். இப்போதும் கூடவே இருப்போம். கூடவே செல்வோம்.. எனவே இப்போது பாபாவிடமிருந்து கிடைத்துள்ள சக்திகளை, அந்த சக்திகளின் ஆதாரத்தில் மாயாவை தூரத்திலிருந்தே விரட்டிவிடுங்கள். இதில் நேரத்தை வீணடிக்காதீர்கள். 70-ஆண்டுகளாக புருஷார்த்தம் செய்கிறீர்கள். இப்போது மாயை வருவது, அதை விரட்டுவது இதற்கு நேரம் இல்லை. ஏனெனில் அறியவும் செய்கிறீர்கள். ஞானம் நிறைந்தவர்கள் தானே! நேரத்தை எதில் ஈடுபடுத்த வேண்டும். 2-பொக்கிஷங்களை மிக அதிகமாய்ச் சேமிக்க வேண்டும். எந்த 2-பொக்கிஷங்கள். 1 சங்கல்பம், 2 சமயம் இரண்டு கஜானாக்களும் சிறந்தது தான். மேலும் நீங்கள் அனைவரும் அறிவீர்கள். ஏனெனில் ஞானம் நிறைந்த தந்தையின், ஞானம் நிறைந்த குழந்தைகள் மாஸ்டர் ஞானம் நிறைந்தவர்கள் அல்லவா? முழுமையாகவார் ஒரு சிலரிடம் ஞானம் உள்ளது. நிறைந்த நிலையில் இல்லை, நீங்கள் யாராயிருக்கிறீர்கள்? ஞானம் நிறைந்தவர்கள் கையைத் தூக்குங்கள். வெறும் ஞானம் உள்ளவர்களா? அல்லது முழுமையாக நிறைந்தவர்களா? எல்லோரும் ஞானம் நிறைந்தவர்களா? கை தூக்கினீர்கள். நல்லது) ஆஹா. முழு ஞானமும் வந்து விட்டது மாயவை விரட்டுவதற்கு ஞானம் இருக்கிறதா? பின்னால் உள்ளவர்களுக்கு இருக்கிறதா? நல்லது கை கொடிகளை அசைக்கின்றனர். தாய் மார்களுக்கு உள்ளதா? தாய்மார்கள் ஞானம் நிறைந்திருக்கின்றனரா? இரட்டை வெளிநாட்டினரும் கை கொடிகளை அசைக்கின்றனர். நல்லது எவ்வளவு அழகான காட்சியாக உள்ளது. ஆக ஞானம் நிறைந்தவர் என்றால் மாயாவை தூரத்திலிருந்தே விரட்டி அடிப்

போர். அப்படி இருக்கிறீர்களா? ஏனெனில், பாப்தாதா ஏற்கனவே கூறியுள்ளார். பொக்கிஷத்தை சேமிப்பதற்கான வங்கி இந்த சங்கமயுகத்தில்தான் உள்ளது பிறகு முழு கல்பத்திலும் சேமிப்பதற்கான வங்கி கிடைக்காது. ஆக என்ன சேமித்தீர்களோ. அது காரியத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் ஆனால் சேமிப்பதற்கான வங்கி தற்போது சங்கமயுகத்தில்தான் திறக்கிறது. எனவே அனைவருக்கும் செய்தியாகக் கூறும்போது சொல்கிறீர்கள் இல்லையா? இப்போதில்லையே எப்போதுமில்லை. ஆக உங்களனைவருக்கும் நினைவு உள்ளதல்லவா? இப்போதில்லையேல் எப்போதுமில்லை. இது சதா நினைவிருக்கிறதா? ஏனெனில் சங்கமயுக பிறவி அனைத்திலும் சிறியது ஆனால் விலை மதிப்பற்ற பிறவியாகும். இந்த பிறவியின் மதிப்பு முழு கல்பத்திற்கும் தொடர்ந்து செல்கிறது. ஆக, எமது சேமிப்புக் கணக்கு எவ்வளவு என சோதிக்கிறீர்களா? எவ்வளவு விருப்பமோ அவ்வளவு சேமிப்பு ஆகிறதா? ஏனெனில், பாப்தாதா முன்னரேயே கூறியுள்ளார். இப்போது நடந்து செல்லும் காலம் முடிந்து போயிற்று. பறப்பதற்கான காலமாகும். புருஷார்த்தத்திற்கான நேரம் முடிந்து விட்டது ஆனால் இப்போது தீவிர புருஷார்த்தத்திற்கான நேரமாகும். அதுவும் குறைவாகவே உள்ளது. எனவே பாப்தாதா இரட்டை வெளிநாட்டினருக்கு டபுள் தீவிர புருஷார்த்தி என்னும் பட்டம் தந்துள்ளார். ஆக, டபுள் தீவிர புருஷார்த்திகளா? கை உயர்த்துங்கள். டபுள் தீவிர புருஷார்த்தியா? பாஸ்: நல்லது பாப்தாதா பிறந்த நாள் வாழ்த்துக்களுடன் ஆசீர்வாதங்களையும் தருகிறார். பலகோடி மடங்கு வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்!

பாப்தாதா பார்த்தார். OK (நான் நலமாயிருக்கிறேன்) என்னும் வீட்டுப் பாடம் கொடுத்திருந்தார். அனேக குழந்தைகள் கவனம் வைத்திருந்தனர். 100-மார்க் மிகவும் குறைவானவர்களே அடைந்திருந்தனர். 50-மார்க் காரர்கள் அதிகமாயிருந்தனர் ஆனால் பாப்தாதா விரும்புகிறார். சொல்லட்டுமா? பாபாவின் ஒவ்வொரு ஆத்மாவின் பொருட்டு, ஆசையின் தீபங்கள். ஆசைளைப் பூர்த்தி செய்யக் கூடிய மகாவீர் குழந்தைகளுக்கான ஆசை யாதெனில் சமயத்திற்குத் தகுந்தாற்போல் இப்போதிலிருந்தே பல காலம் தீவிர புருஷார்த்தத்தை சேமிக்கவில்லையெனில், பாப்தாதா 3-வார்த்தைகளை அவ்வப்போது ஞாபகமூட்டி வருகிறார். திடீரென

(அச்சானக்), இரண்டாவது சதா தயாராக இருத்தல் (எவரெடி) மூன்றாவது, பலகால கணக்கின் சேமிப்பு ஏனெனில் பாப்தாதா விரும்புகிறார். உங்களது ராஜ்யத்தில் தற்போது குஷிதானே! எப்படியெனில் பாபா வந்துள்ளார் என செய்தியை அளிக்கிறீர்கள். அவ்வாறே. நமது தெய்வீக இராஜ்யம், சுகம், சாந்தி நிறைந்த இராஜ்யம் வந்தே விட்டது என்ற இந்த மகிழ்ச்சியான செய்தியையும் கூறுகிறீர்கள். எல்லோருக்கும் இந்த செய்தியைக் கூறும்போது, உங்களது புருஷார்த்தத்தையும் தீவிரமாகவும், பலகாலம் சேமிப்பு செய்யக் கூடியவராகவும், நமது இராஜ்யத்தில் முதல் பிறவியிலிருந்து இறுதி வரை 21-பிறவிகள் முழு இராஜ்ய பாக்கியத்தின் உரிமையாளராகவும் ஆக வேண்டும். இந்த கணக்கை பலகாலமாய் நினைவில் வையுங்கள். மிகுந்த சந்தோஷம் என்பது புதிய வீட்டில் தான். இரண்டு மூன்று பிறவிகளுக்குப் பின் வந்தால் வீட்டிற்கு 2, 3 மாதங்கள் ஆகி இருந்தால் என்ன சொல்வீர்கள். புதிதென்று கூறுவீர்களா? அல்லது மூன்று மாதம் ஆகி விட்டது என்று கூறுவீர்களா? பாப்தாதாவின் ஒவ்வொரு செல்லமான குழந்தையும், அற்பத குழந்தைகள், இதய சிம்மாசனக் குழந்தை முதல் பிறவியிலிருந்தே பிரம்மாபாபாவின் கூடவே வரட்டும் என்பதே பாப்தாதா விரும்புகின்றார். இது பிடிக்கிறதா, நல்லது அப்படியானால் என்ன செய்ய வேண்டும். செய்பத்தான் வேண்டும் இல்லையா பிடித்திருக்கிறதுதான், பாபாவிற்கும் பிடித்துள்ளது ஆனால் என்ன செய்ய வேண்டும்? இப்போதிலி ருந்தே. கடந்தது கடந்ததாகவே இருக்கட்டும். பாப்தாதா மன்னித்து விடுவார். இப்போதிலிருந்தே பிறந்த நாளின் பரிசாக பாபாவுக்கு என்ன தருவீர்கள்? ஏதேனும் தருவீர்கள் தானே பாபாவின் பிறந்த நாளைக் கொண்டாட வந்துள்ளீர்கள். ஆக. பரிசு என்ன கொடுப்பீர்கள்? பாபாவின் ஆசை யாதெனில், ஒவ்வொரு குழந்தையும் இறுதியிலும் சடுதியாக வேகமாகச் செல்ல முடியும். முதன் முதலாக வந்திருப்போர் கை தூக்குங்கள்! நல்லது

ஆக, பாப்தாதா இறுதியில் வரக்கூடிய அனைத்து குழந்தைகளுக்கும் முதன் முறையாக வந்ததற்கு கோடி மடங்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறார் ஆனால், ஒரு பாக்கியத்தையும் கூறுகிறார். பாக்கியத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கான அவகாசம் (வாய்ப்பு உள்ளது. ஏனெனில், மிகவும் தாமதமாகி விட்டது என்ற பெயர்ப்பலகை இன்னும் போடப்படவில்லை. எவரேனும் கடைசியில் வந்தவர் மிக

வேக புருஷார்த்தம் செய்தால், இறுதியில் வேகமாய் வந்து முதலாவது பிரிவிலும் வர முடியும். முதலாவது நம்பர் அல்ல. அதுவோ' (பிரம்மா) பிரசித்தமாகி விட்டது ஆனால் முதல் பிரிவில் வர முடியும். பிடித்திருக்கிறதா? வாய்ப்பு உள்ளது. பாப்தாதா சீட் என்னவோ கொடுத்து விடுவார் ஆனால் ஏதேனும் செய்துதானே ஆக வேண்டும். ஒவ்வொரு சுவாசம். ஒவ்வொரு சங்கல்பம் மீது கவனம்!. ஒவ்வொரு சுவாசம். சங்கல்பம் சக்திவாய்ந்ததாய் இருக்க வேண்டும். வீணானவைகள் கூடாது ஏனெனில், உங்கள் அனைவரில் முதலில் வந்தவர் களானாலும் சரி. பின்னால் வந்தவர்களானாலும் சரி பட்டம் என்ன? சக்தி வாய்ந்த குழந்தைகள்! பலஹீனமான குழந்தைகள் அல்ல. பாப்தாதா அன்பு நினைவாக என்ன கூறுகிறார்? தினசரி அன்பு நினைவில் செல்லமான. அருமையான. இதய சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் குழந்தை எனவே பாபா இந்த பொன்னான வாய்ட்டைத் தருகிறார் ஆனால் எடுத்துக் கொள்ளக் கூடியோர் எடுத்துக் கொள்ளுங்கள். பாபா தருவார், கட்டுப்பட்டுள்ளார் இல்லையா? தீவிர புருஷார்த்தி யாரும் இருக்கிறீர்களா? வாய்ப்பு உள்ளது. மிகவும் தாமதமாகி விட்டது? என்னும் பெயர் பலகை போடப்பட்டு விட்டது. என்றால், அவ்வளவுதான் ஆனால் பாப்தாதாவிற்கு பிறந்த நாள் பரிசாக என்ன கொடுப்பீர்கள்? பிறந்த நாளைக் கொண்டாட வந்துள்ளீர்கள் இல்லையா? பாப்தாதா குழந்தைகளாகிய உங்களின் பிறந்த தினத்தில் விசேஷ பரிசு கொடுக்கிறார். உங்களது தீவிர புருஷார்த்தம் இன்றிலிருந்து இறுதிவரை 90-சதவீதமாக இருந்தால், 10-கூட்டிக் கொடுப்பார். சம்மதமா? இப்போது வீணானவைகள் ஏதுமில்லை, முடிந்து போயிற்று சத்தியுக தேவதைகள் வருகின்றனர் இல்லையா? அவர்களுக்கு இங்கு என்ன மொழி பேசுகின்றனர் எனத் தெரியாது புருஷார்த்தம் என்னும் வார்த்தையை கூறும். பொழுது புருஷார்த்தம் என்றால் என்ன என்று கேட்பர். ஏனெனில் (அங்கு) பிராப்தியை அனுபவம் செய்து கொண்டிருப்பேரில்லையா? அதுபோல தீவிர புருஷார்த்திகளான உங்களுக்கு, சொப்பனத்தில், சங்கல்பத்தில் நடைமுறை செயலில் வீணானவைகள் முடிந்து விட்டதா? (ஏனெனில், வீணானவை சங்கமபுதத்தைச் சார்ந்தவை அல்ல) அம்மாதிரி ஆக தைரியம் உள்ளதா? 10 பாபா ஊக்க மார்க்காக தருவார் சம்மதமா? கை தூக்குங்கள்! எவ்வளவு உறுதி ? 100 இல்லை 10 ஆம்? ஏனெனில், பாப்தாதாவிற்கு குழந்தைகள் இல்லாமல், குழந்தைகளின் துணை

இல்லாமல் நன்றாக இருப்பதில்லை. பாபா புரிந்துள்ளார். என்னுடைய தந்தை என்று கூட்டால் பாபாவும் கூறுகிறார். என்னுடைய குழந்தை, ஆக, பாபாவுக்குச் சமமாக ஆகித்தான் தீர வேண்டும். இப்போது மன உறுதி மிக அவசியம்! நீங்கள் புத்தகம் கூட அச்சிட்டுள்ளீர்கள் வெற்றியின் சாவி திட சங்கல்பம்: ஆக சங்கல்பத்தை சாதாரணமாக ஆக்காதீர்கள். யார் நீங்கள்? இங்குள்ள ஜனாதிபதியைப் போன்று நடந்து கொண்டால் நன்றாயிருக்குமா? நீங்களோ 3-பீடங்களில் அமர்ந்திருப்போர்! அனைத்திலும் மேலான சிம்மாசனம் பாப்தாதாவின் இதயமெனும் சிம்மாசனம். ஆக இதய சிம்மாசனக்காரர்கள் என்றால், முதல் பிறவியிலிருந்தே கூடவே துணையாய் ஆவார்கள்! சிம்மாசனத்தில் (சத்யுகத்தில்) ஒருவர் (நாராயணர்) வீற்றிருக்கலாம் ஆனால் ராயல் குடும்பத்தினர். இராஜ்ய அதிகாரிகளாக ஆக முடியுமில்லையா? ஆக, துணையாய் இருப்போர். வீடு வரைக்கும் கூடவே செல்வர் இல்லையா? பாப்தாதா எப்படியாகிலும் அழைத்துச் செல்வார்? வேறு வழியாக அழைத்துச் சென்றாலும் சரி நேராக அழைத்துச் சென்றாலும் சரி, கூட்டிச் செல்வார் இல்லையா? பிறகு வீட்டிலேயே அமர்ந்து விடுவீர்களா? பிரம்மாபாபா சென்றுவிடுவார். நீங்கள் அங்கேயே அமர்ந்து விடுவீர்களா? நன்றாயிருக்குமா? இராஜயோகிகள் தானே! என்ன பட்டம் கொடுக்கிறீர்கள்? தனக்கும், பிறருக்கும் என்ன கற்பிக்கிறீர்கள்? இராஜயோகா அல்லது பிரஜா யோகமா ராயல் பிரஜாவாக இருந்தாலும், பிரஜா யோகி அல்லதானே! இராஜயோகிகள்! ஆக அனைவருக்கும் பாபா குழந்தைகளாகிய உங்களுக்கு அளித்துள்ள பரிசு நினைவிருக்குமா? எதுவரை? இறுதி வரை. பாப்தாதா பார்த்தார். புருஷார்த்தம் நிறைய செய்கின்றனர். குழந்தைகள் மிக அதிகமாய் முயற்சி செய்து கொண்டிருப்பதைப் பார்க்கும் பொழுது, அவர்களின் கடின முயற்சியைப் பார்க்க பாபாவுக்கு நன்றாக இருப்பதில்லை. எனவே அன்பிலே இருந்தால் கஷ்டப்பட்டு உழைப்பது நீங்கி விடும். என்னுடைய பாபா என்றிருக்கும் பொழுது, வேறு என்னுடையவைகள் முடிந்து போகும். என்னுடைய பாபா என்கிறபோது அதில் அனேக என்னுடையவைகள் அழிந்து விடுகின்றன அல்லவா? ஒரு பொம்மை கொண்டுவருகிறீர்கள் அல்லவா? ஒன்றிலே மற்றொன்று. ஒன்றிலே ஒன்று அமைந்துள்ளது. அந்த ஒன்றிலேயே 10-12 கூட இணைந்து விடுகிறது. பொம்மையைக் காண்பிக்கிறீர்கள் என்றால், என்னுடைய பாபா என்று கூறுவோர்தானே? மகாரதிகளின்

பாபா அப்படி இல்லையே! என்னுடைய பாபா தானே என்னடைய பாபா என்று கூறும்போது எல்லைக்குட்பட்ட என்னுடையவைகளை உன்னுடையவைகளில் சேர்த்து விடுங்கள் எனது என்பதற்குப் பதிலாக உனது என்று கூறுங்கள். எவ்வளவு வித்தியாசம்! என்னுடையது (பாபா) உன்னுடையது எத்தனை வேறுபாடு (எ) மற்றும் (உ) ஒரு எழுத்தின் வித்தியாசம்தான். உறுதிதானே. என்னுடைய பாபா? உறுதியா? எவ்வளவு சதவீதம்? 100 சதவீதமா? அல்லது 101 ஆ? இம்மாதிரி ஒரு விரலை உயர்த்துங்கள். 101-என்று கூறுவோர் கை உயர்த்துங்கள். பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கிறார். TV'யிலும் பார்த்துக் கொண்டிருக்கிறார்.

இப்போது சிவராத்திரி -சிவ ஜெயந்தி கொண்டாடுகின்றீர்கள் என்றால். குறிப்பாக 3-விஷயங்களைக் கொண்டாடுகின்றனர். இதில் பாப்தாதாவின் அற்புதத்தைப் பாருங்கள் இந்த விதிகள். இந்த உற்சவங்கள் கொண்டாடுகின்றனர். உண்மையில் அவர்கள் பார்த்து (காப்பி அடித்தல்) பின்பற்றுகின்றனர். அவர்களுக்கும் கூட வாழ்த்துக்களைக் கூறுகின்றார். விசேஷமாய் 3-விஷயங்களை கொண்டாடுகின்றனர். ஒன்று, விரதம் இருக்கின்றனர் ஆனால் உங்களைப் பார்த்து (காப்பி) செய்துள்ளனர் அற்பகாலத்திற்காக! நீங்களும் கூட பாபாவினுடையவர்கள் ஆனதிலிருந்து 2-விரதங்களை தாரணை செய்துள்ளீர்கள். ஒன்று தூய்மை (பவித்ரதா) வெறும் பிரம்மச்சர்யம் மட்டுமல்ல, பிரம்மாச்சார்யம்! அனேக குழந்தைகள் என்ன செய்கின்றனர்? முக்கிய பெரிய விகாரங்களின் விரதங்களை என்னவோ கடைப் பிடிக்கின்றார்கள் ஆனால் சிறு சிறு விகாரங்களை விட்டு விடுகின்றனர் ஆனால் சிறியவைகள் மகான் பலியாக்கி விடும். சிறியவைகள் ஒன்றும் குறைந்தவை அல்ல! சரியான சமயத்தில் ஏமாற்டுபவை சிறியவை எப்படி எலி பார்ப்பதற்கு சிறிது ஆனால் கடிப்பதில் நம்பர்-1! ஊதி ஊதி கடித்து விடுகிறது. கடிப்பதே தெரியாது. ஆக சிறு சிறு விகாரங்கள், கோபத்தை சிலர் அவ்வாறு நினைக்கின்றனர், இது இருக்கக் கூடியது தான். கோபம் கொள்ளத்தான் வேண்டியுள்ளது. ஆக இவர்களை சம்பூர்ண ஆத்மா எனக் கூற முடியுமா? குழந்தை குட்டிகள், சிறியோர், பெரியோர் விரதத்தை தாரணை செய்துள்ளீர்கள். நாம் நிரந்தரமாக தூய்மையாய் இருப்போம். வாக்குறுதி கொடுத்துள்ளீர்கள் அல்லவா? ஒன்று பிரம்மச்சரிய விரதம்

மேற்கொண்டுள்ளீர்கள். உங்களது பட்டம் என்ன? சம்பூர்ண நிர்விகாரி… மரியாதா புருஷோத்தம் இந்த பட்டம் தானே உங்களுடையது அல்லது கொஞ்சம் கொஞ்சம் குறைவான நிர்விகாரி, மரியாதை அப்படியா? ஆக என்னுடைய பாபா என்று யார் நினைத்து கைத் தூக்கினீர்களோ. அப்படியானால் பாபா சமமாக ஆகித்தான் தீர வேண்டும் இல்லையா? ஒரு எழுத்தின் வித்தியாசம் பாருங்கள். எங்கு என்னுடையது வருகிறதோ அங்கு உன்னுடையது என்பதை நினைவு செய்யுங்கள். ஒரு வார்த்தையை நினைவு செய்வதன் மூலம் மூன்று ஆசனங்களில் இருப்போராக முடியும். ஆக, ஒரு விரதம் நிரந்தரமாக தூய்மை. மரியாதை புருஷார்த்தம் நிலையை நீங்கள் நிரந்தரமாய் தாரணை செய்தீர்கள் ஆனால் அவர்கள் ஒரு நாளுக்குத்தான் செய்கின்றனர். உங்களைப் பார்த்து (காப்பி) பின்பற்றியுள்ளனர் இல்லையா? ஆனால் மாவில் சிறிது உப்பு போன்றதாகும். இருந்தாலும் கொஞ்சம் இருக்கிறது தானே! புத்திவான் தானே! அடுத்து உணவில் விரதம் வைக்கின்றனர். நீங்கள் அனைவரும் கூட தூய்மையான உணவின் விரதம் மேற்கொண்டுள்ளீர்கள் உங்களைப் பார்த்து காப்பி செய்துள்ளனர் இல்லையா? நீங்களும் முழுமையாக பின்பற்றுகிறீர்கள்தானே! அல்லது சில சமயம் களைத்துப் போகும் பொழுது ஏதேனும் (வெளியில்) சாப்பிடலாமே என்று எண்ணுகிறீர்களா? அப்படி இல்லையே! களைத்துப் போகிறீர்கள். அல்லது கஷ்டப்படுகிறீர்கள். இளைஞர்கள் என்ன செய்கிறீர்கள்? யாரெல்லாம் குமார்களோ அவர்கள் அனைவரும் கைதூக்குங்கள். குமார்களா! நல்லது. அடுத்து, குமாரிகள் கை தூக்குங்கள். வெளி நாட்டினரில் குமாரிகளின் தலையில் சிறு பல்பு (ஒளி) அமைத்துள்ளனர். குமார்கள் முழுமையாக விரதத்தைக் காத்து வருகிறார்களா? அல்லது சில சமயம் களைத்துப் போகிறீர்களா? குமார்கள் வந்த நாளிலிருந்து இன்று வரை விதிப்பூர்வமாக உணவு விஷயத்தில் விரதத்தைக் காத்து வருவோர் கைதூக்குங்கள். பாஸாகி விட்டீர்கள்! வாழ்த்துக்கள். உங்களுக்கு கோடி மடங்கு வாழ்த்துக்கள். கொஞ்சம் அதிக முயற்சி தேவைப்படு கிறதுதான் ஆனால் பாபாவின் அன்பின் அடிப்படையில் இது கடின உழைப்பு அல்ல. அன்பு ஆக. உங்களிடமிருந்து காப்பி செய்துள்ளனர் இல்லையா? விரதம் ஒரு நாளைக்கு மேற்கொள்கின்றனர் ஆனால் நீங்கள் வாழ்க்கை முழுவதிற்கும் விரதம் மேற்கொள்கிறீர்கள். ஒரு வாழ்க்கையின் விரதம் என்பது தானாகவே தொடர்ந்து நடைபெறுகிறது. பிறகு

கஷ்டப்பட்டு முயற்சி செய்ய வேண்டிய அவசியமில்லை. ஒரு பிறவி, சிறியது. இதில் கடின முயற்சி நிச்சயம் இருக்கிறதுதான் தியாகம்! ஆனால் தியாகத்தின் பாக்கியம் உண்டாகிறது. மேலும் கூடவே என்ன செய்கின்றனர். கண் விழித்தல் நீங்கள் என்ன கண் விழிப்பு செய்துள்ளீர்கள். அவர்கள் தூக்கத்தை தியாகம் செய்கின்றனர். நீங்களும் கூட அஞ்ஞான தூக்கத்தின் தியாகம் செய்துள்ளீர்கள். அஞ்ஞான உறக்கத்தை தேவையற்ற சமயத்தில் வரும் உறக்கத்தை வரவிடமாட்டோம் என்று தியாகம் செய்தீர்கள். தூங்கியும் விழ மாட்டோம். இப்படி அல்ல! (தூங்கி விழுவதை செய்து காண்பித்தார்) இப்படி! இப்படி கூட விரதம் இருந்தீர்கள் அல்லவா? இவ்வாறு இருப்பதற்கு (தூங்கி விழும்) பழக்கம் அனேகருக்கு உள்ளது. பாப்தாதா கூறுகிறார். தியாகம் செய்துள்ளீர்கள். திட சங்கல்பம் செய்துள்ளீர்கள். பிறகு. திட சங்கல்பத்தை ஏன் தொய்வாக்கி விடுகிறீர்கள். ஸ்குரூவை முடுக்கத் தெரியவில்லையா? இதை முடுக்கும் ஸ்குரூ டிரைவர் உறுதி மொழி தற்போது என்ன காரியம் பாக்கியாக உள்ளதோ. என்ன காரியம் பாக்கி உள்ளது கூறுங்கள் பார்க்கலாம். பிரத்யக்ஷ்தா (வெளிப்படுத்துதல்) இதற்காகத்தானே முயற்சி செய்கிறீர்கள்? என்னுடைய பாபா வந்து விட்டார் இந்த கொடியை ஏன் ஏற்றுகிறீர்கள்? எந்த காரியம் ஆரம்பித்தாலும் கொடியேற்றுகிறீர்கள். இன்று கூட கொடியேற்றுவீர்கள் இல்லையா? யாருடைய கொடியை ஏற்றுவீர்கள்? பாப்தாதாவினுடைய சேவையின் பிறந்த நாள் கொடியேற்றுவீர்கள். கொடி ஏற்றும் பொழுது, கொடி அவிழ்ந்து விரியும் வரை ஏற்றுகிறீர்கள். அவ்வாறு அவிழ்ந்து பூக்கள் பொழியும் வரை கொடியேற்றம் முடிவதில்லை. ஆக, நீங்களும் என்ன (பிரத்யசுந்தா) வெளிப்பாட்டை விரும்புகிறீர்கள்? பாபாவின் வெளிப்பாடு ஆகட்டும். ஆக, எவ்வளவு கண் விழித்தீர்களோ, விரதம் மேற்கொண்டீர்களோ. அதற்கான சபதத்தை உறுதி செய்வீர்களோ அப்போது சீக்கிரம் சீக்கிரமாய் பிரத்யதா வெளிப்பாடு ஆகும். ஆக வெளிப்பாட்டை விரும்புகிறீர்கள்தானே ஆக சமயத்தை அருகாமையில் கொண்டுவருவோர் யார்? நீங்கள் அனைவரும் தானே சமயத்தை அருகாமையில் கொண்டு வரக்கூடிய நீங்கள் உண்மையான சேவாதாரி குழந்தைகள் உலக மாற்றம் செய்பு குழந்தைகள் ஆக, இந்த பிறந்த நாள் பரிசு சம்மதமா? கொடுப்பது பெறுவது (பரிசு) இரண்டையும் கூறினோம். கொடுப்பது மட்டுமல்ல. வாங்கவும் செய்ய வேண்டும். இரண்டையும் செய்யக் கூடியவர்கள் கை

உயர்த்துங்கள். நல்லது, மிக நல்லது. இந்த உங்களது படம் இதில் (TVயில்) வருகிறது. இதில் யாராவது கொஞ்சம் தோல்வி அடைந்தால் அவர்களுக்கு இந்த படத்தை அனுப்பி வைத்து விடுவோம். திரும்பவும் கை உயர்த்துங்கள். இங்கு போட்டோ எடுக்கப்படுகிறது. நல்லது வாழ்த்துக்கள். வாழ்த்துக்கள். வாழ்த்துக்கள்.

பாப்தாதாவின் அருகில், நாலாபுறங்களிலிருந்தும் பல கோடி மடங்கு வாழ்த்துக்கள் வந்து சேர்ந்துள்ளன. ஒவ்வொருவரும் உள்ளத்தால் சொல்கின்றனர். கடிதத்தில் எழுதுகின்றனர், ஈமெயில் செய்கின்றனர். எனது வாழ்த்து முதலில் (பாபாவுக்கு) போய் சேர வேண்டும் என நினைக்கின்றனர். ஆக பாப்தாதா கூறுகின்றார். பாப்தாதா அனைவரின் வாழ்த்துக்களை ஏற்றுக் கொண்டுள்ளார்; நம்பர் வரிசை தரவில்லை; அனைவரின் உள்ளத்து வாழ்த்துக்களையும் ஒட்டு மொத்தமாக ஏற்கு கொண்டார். பாருங்கள். தூரத்தில் உள்ளவர்களும் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். கரவொலி எழுப்பிக் கொண்டு இருக்கின்றார்கள். மேலும் நாலாபுறமும் உள்ளங்களில் வாழ்த்துக்கள் வாழ்த்துக்கள் என்ற பாடல் ஒலித்துக் கொண்டே இருக்கின்றது. இந்தப் பாடல் அல்ல கஷ்டமே இல்லாமல் மகிழ்ச்சி ஏற்பட்டால் உடனே ஸ்டார்ட் ஆகி விடுகிறது. மகிழ்ச்சி உள்ளத்தின் பாடலின் சாவி ஆகா பாபா. இனிமையான பாபா என்பது தான் சாவி இருக்கிறது தானே சாவி, அவ்லப்பொழுது சாவி அல்ல. சதா மகிழ்ச்சி பாப்தாதாவிற்கு எந்த குழந்தையினுடைய முகமோ, பேச்சோ, செயலோ சிறிதேனும் கவலையுடைய, சிந்திக்கக் கூடிய, வீண் எண்ணங்களுடைய குழப்பமுடையதாகப் பார்த்தால் நன்றாக இருப்பதில்லை. பகவானுடைய குழந்தைகள் மகிழ்ச்சியாக இல்லையெனில், யார் இருப்பார்கள்? தாங்கள் தான் அல்லவா. முகம் ஒருபோதும் கவலையுடையதாக இருக்கக் கூடாது. சுப சிந்தனை எப்பொழுதேனும் எந்த வகையான கவலை வருகிறது என்றாலும் பாபா துணையாக இணைந்தே இருக்கின்றார். கவலையை பாபாவிடம் கொடுத்து விடுங்கள். தாங்கள் சுப சிந்தனை யாளராக ஆகுங்கள். ஏனெனில் பாப்தாதா சதா புன்முறுவலுடன் இருக்கின்றார் அல்லவா, ஆனால் குழந்தைகள் வாடிய முகத்துடன். யாருடைய குழந்தைகள்? பகவானுடையவர்கள். முகம் ஒரு பொழுதும், மலையே எதிரில் வந்தாலும், மலையையும் தாங்கள் பஞ்சாக மாற்ற முடியும். பாபாவுடன்

தங்களை இணைத்துக் கொள்ளுங்கள். அப்பொழுது என்ன ஆகும்? மலையும் பஞ்சாகி விடும். ஏனெனில் சர்வசக்திவானை தன்னுடன் இணைத்துக் கொண்டீர்கள் அல்லவா. தாங்கள் பலவீனமாக இருக்கலாம் ஆனால் சர்வசக்திவான் உங்களுடன் இருக்கும்பொழுது தேவையான நேரத்தில் பயன்படுத்திக் கொள்ளுங்கள். பேச்சளவில் நிறுத்தி விடாதீர்கள். சதா மகிழ்ச்சியான முகம், மேலும் மகிழ்ச்சியான உள்ளம் தாங்கள் மகிழ்ச்சியானவர்கள் என பாப்தாதா சவால் விட வேண்டும். மகிழ்ச்சியான முகத்தைப் பார்க்க வேண்டுமெனில் பகவானுடைய சென்டர்களில் பாருங்கள். என சவால் விடட்டுமா? ஏன் (குழப்பமடைய) வாட வேண்டும் ஏதேனும் குறை இருந்தால் குழப்ப மடையுங்கள். என்ன குறை? மகிழ்ச்சி என்பது டானிக், உடல் நலத்திலோ, செல்வத்திலோ குறையே இருக்கட்டும் ஆனால் மகிழ்ச்சியைப் பற்றி என்ன கூறுகின்றீர்கள். மகிழ்ச்சியைப் போன்ற பொக்கிஷம் வேறு எதுவும் அல்ல ஆகவே செல்வமும் ஆகி விட்டது அல்லவா. உங்களிடம் செல்வம் உள்ளது. மகிழ்ச்சி இருக்கிறதா? கை உயர்த்துங்கள். மகிழ்ச்சி உள்ளது அல்லவா. ஆகவே செல்வம் இருக்கின்றது. மேலும் மகிழ்ச்சியைப் போன்ற சத்துணவு வேறு இல்லை. மகிழ்ச்சியைப் போன்ற டானிக் வேறு எதுவும் இல்லை. 36-வகை போஜனம் இருந்தாலும் மகிழ்ச்சி இல்லையேல் ஒன்றுமே இல்லை; மகிழ்ச்சி இருக்கின்றது எனில் காய்ந்த ரொட்டியும் 36-வகையினுடைய சுகத்தை அளிக்கும் பாபாவும் உறுதிமொழி அளித்திருக்கின்றார். உண்மையான உள்ளம், தூய உள்ளம், பரந்த உள்ளம். உடையவர்கள் இந்த 3-விசயங்களை நினைவில் கொண்டால். எந்த நேரம், உலகில் எந்தச் சூழ்நிலையிலும் பாபா ரொட்டியும். பருப்பும் கொடுப்பார். 24-வகை காய்கறி கொடுக்க மாட்டார். ரொட்டியும், பருப்பும் (ரசம் சோறு) கொடுப்பார், ரொட்டி பருப்பு சாப்பிட்டு பிரபுவின் குணத்தைப் பாடுங்கள். அனுபவம் செய்திருக்கின்றீர்கள் அல்லவா? ஆதியில் வந்த பழைய குழந்தைகள் அனுபவம் செய்திருக்கின்றீர்கள். எப்போதாவது பசியுடன் இருந்தீர்களா? வெல்லத்தை. டோர்ன் விட்டாவாக ஆக்கி பாப்தாதா தன் கைகளால் கொடுத்தார். தாங்கள் பாப்தாதாவின் கைகளால் ரொட்டி சாப்பிட்டு வயிறு நிறையப் பெற்றீர்கள். போர்ன் விட்டா தயாரிக்க வருகிறதா? அல்லது இல்லையா? எப்படிப்பட்ட சூழலிலும் வெல்லம், சப்ஜி (காய்கறி) பருப்பு இல்லையென்றாலும், இந்த போர்ன்விட்டா மிகுந்த சுகத்தை

கொடுத்திடும், கற்றுக் கொள்ளுங்கள் தயாரிப்பதற்கு அனைவரும் இங்கிருந்து கற்றுக் கொண்டு செல்லுங்கள். கடைசி நேரத்தில் இந்த போர்ன் விட்டா மிகவும் காரியத்தில் வரும் ஆனால் 4-விசயங்களை நினைவில் கொள்ள வேண்டும். ஒன்று விட்டாலும் கூட தேட வேண்டியிருக்கும். சகஜமாகக் கிடைக்காது ஆகவே 4-விசயங்களை சோதனையிடுங்கள் உண்மை- உடல், மனம், பொருள், சம்பந்தம், தொடர்பு உள்ளத்தின் உண்மை. பரந்த பெரிய உள்ளம் -உள்ளம் பெரியதாக இருக்கும்பொழுது எந்த ஆசை ஆனாலும் அவசியம் பூர்த்தியாகி விடும். செய்து பாருங்கள். பெரிய உள்ளம் இருக்குமிடத்தில் அனைத்து ஆசைகளும் பூர்த்தியாகி விடும். உள்ளம் சிறிதானால் அனைத்து படைப்புகளும் சிறிதாகி விடும். பாபா சமாதானம் எனில் என்ன குறை இருக்கும். ஆகவே முயற்சி செய்யுங்கள். பிறகு மீண்டும் வாழ்த்துக்களின் கரவொலியை எழுப்புங்கள்.

சேவையின் பொறுப்பு கர்நாடகா: (கர்நாடகத்திலிருந்து 8-ஆயிரம் பேர் வந்துள்ளனர்) நல்லது. டீச்சர்ஸ் கூட அதிகம்பேர் வந்துள்ளனர். அனைத்து டீச்சருக்கும் பாப்தாதா பிறந்த நாள் வாழ்த்துக்களைக் கொடுக்கின்றார். குறிப்பிட்டு ஏன் கொடுக்கின்றார்? ஏன்? ஏனெனில் யக்ஞய சேவை செய்வதற்கு தகுதி உடையவர் களை உருவாக்குகின்றீர்கள், யக்ஞ சேவை 10-தினங்களோ அல்லது 11-தினங்களோ ஆனால் விதிப்படி நியமப்படி, சட்டப்படி செய்திருக்கின்றார்கள். யக்ஞ சேவை 11-தினங்களாவது 11-ஜென்மங்களுக்கு பிராப்தியைக் கொடுக்கின்றது. ஆகவே யக்ஞ சேவையின் புண்ணியம் நிகழ் காலத்திலும் மகிழ்ச்சி ஏற்படுத்துகின்றது அல்லவா! இருக்கின்றது தானே! மகிழ்ச்சி. அதிகப்படியான மகிழ்ச்சி மதுபன் வருவது என்றாலே அதிகப்படியான மகிழ்ச்சி அடைவது, ஆகவே அப்படி தகுதியுடையவர்களை உருவாக்கி அழைத்து வந்திருக்கிறீர்கள். முயற்சி செய்ய வைத்திருக்கின்றீர்கள் ஆகவே டீச்சர்களுக்கு வாழ்த்துக்கள். பிறகு தாய்மார்கள். தாய்மார்கள் கையை உயர்த்துங்கள். இந்த மண்டலத்தைச் சார்ந்த தாய்மார்கள் அதிகமானோர் இருக்கின்றார்கள். தாய்மார்களுக்கு வாழ்த்துக்கள். ஏன்? ஏனெனில் தாய்மார்கள் மதுவனத்தைப் பராமரிக்கின்றார்கள்; ஆனால் சென்டர்களையும் பராமரிக்கின்றார்கள். எந்த சென்டரில் தாய்மார்கள் இருக்கின்றார்களோ அங்கு மடப்பள்ளியும் (சமையலறையும்),

உண்டியும் நிறைந்திருக்கும் என பாப்தாதா ஆதியிலிருந்து கூறுகிறார். நன்று. அவர்களுக்கு விசேஷமாக வாழ்த்துக்கள்! மேலும் பாண்டவர்கள், அதர் குமாரர்கள் கையை உயர்த்துங்கள். அதர்குமார்கள் உங்குளுக்கும் ஒரு விசேஷம் இருக்கின்றது எப்படி தாய் மார்களிடம் விசேஷத் தன்மை இருக்கின்றதோ அப்படி அதர் குமாரர்களிடத்தும் விசேஷத் தன்மை இருக்கின்றது. ஏன்? என்ன விசேஷ குணம்? ஏனெனில் இருவரும் வரும்போது ஒருவருக்கொருவர் துணையாக இருக்கின்றீர்கள் தடைகள் இருப்பதில்லை. ஒரே வழி இரு வழிகள் இருப்பின் மோதல்கள் ஏற்படும் ஆனால் இருவரும் ஒரே வழியில் இருக்கும்போது அதர் குமாரர்கள் சேவையில் மிகவும் முன்னேறி செல்கின்றார்கள். நேரம் ஒதுக்க முடியும். இளைஞர்கள் நேரம் ஒதுக்குகின்றார்கள் ஆனால் அதர் குமாரர்கள் இரு மடங்கு வேலை செய்கின்றார்கள். எந்த இரு வேலை செய்கின்றார்கள்? ஒன்று, உலக சேவை அதில் அதிக நேரம் கொடுக்க முடியும். இரண்டாவது, தனது செல்வத்தையும் எந்த அளவு முடியுமோ அந்த அளவு வெற்றிக்குரியதாக்க முடியும் ஏனெனில் இருவரும் ஒத்துப் போகின்றார்கள். அதர்குமாரர்கள் எவ்வளவு சேமிக்க முடியுமோ வெற்றிக்குரியதாக்க முடியுமோ அவ்வளவு ஈடுபடுத்த முடியும். என்ன காரணம்? எந்த தடையும் இல்லை. மனதின் தடை வேறு விசயம் ஆனால் சம்பந்தத்தில் தடை இல்லை. ஆகவே தங்களுக்கு யக்ஞத்தில் சிறப்பான பாகம் (பார்ட்) உள்ளது. அதர் குமார். குமாரிகளைப் பார்த்து முன்னேற்றம் வெகு வேகமாக ஏற்படுகிறது. நடை முறையில் பார்க்கின்றீர்கள் அல்லவா! அனைத்து வர்க்கத்தினரும் வருகின்றார்கள் குடும்பத்தில் இருக்கின்றவர்கள் அனைத்தையும் செய்து கொண்டே தனது பாக்கியத்தையும் உருவாக்க முடியும். முதலில் வீடு வாசலை விட்டு விடுகின்றார்கள் என்ற சுழல் இருந்தது, பயம் இருந்தது இப்பொழுது இரு வேலையும் செய்ய முடியும் என நினைக்கின்றார்கள் உதவி கிடைக்கின்றது. புரிந்ததா. நன்று.

**80-நாடுகளிலிருந்து 1200-இரட்டை வெளி நாட்டினர் வந்துள்ளனர்**: இரட்டை வெளிநாட்டினர் என்று சொல்லாதீர், இரட்டை தீவிர புருஷார்த்தி சரிதானே! இரட்டை வெளிநாட்டினர் என்பது பொதுவானது; அவர்கள் மிகவும் இரட்டை வெளிநாட்டினர் பாப்தாதாவிற்கு வெளிநாட்டினரைப் பார்த்து மிகுந்த குஷி ஏனெனில் வெளிநாட்டினர்

மதுபனின் அலங்காரம் ஆக இருக்கின்றனர். இந்தியாவின் பிற பல நாடுகளிலிருந்து வருகின்றனர். பிறகு வெளிநாட்டினர் குறைவாக ஏன் இருக்கின்றனர்? இதில் கூட இவர்கள் நன்கு ஓட்டப் பந்தயத்தில் இறங்கி உள்ளனர். 80-நாடுகளிலிருந்து வந்துள்ளனர். இதில் பெரும்பாலானோரை ஒரு விசயத்தில் பார்த்து மிகவும் மகிழ்ச்சி அடைகிறார். அதாவது யார் யார் வந்துள்ளனரோ அவர்கள் தற்போது ஒரே கலாச்சாரத்தை சார்ந்தவர் களாகி விட்டனர். அதாவது ஒரே பிராமண கலாச்சாரத்தினர்! கை தூக்குங்கள்! இப்போது வெளிநாட்டு கலாச்சாரத்தினர் அல்ல; அனைவரும் பிராமண கலாச்சாரத்தினர்! வித விதமான கலாச்சாரத்தைச் சார்ந்தவர்களாக வந்தார்கள் ஆனால் (சொந்த) கலாச்சாரத்தையும் கடந்து விட்டனர். இது ஒரு பெரிய சுவராக இருந்தது ஆனால் இந்த பெரிய சுவரையும் தாண்டி விட்டனர். இந்த பிராமண கலாச்சாரம் தனியானது என்று தோன்றவேயில்லை. இப்பொழுது எழுந்து பார்க்கட்டும்; டிவியில் அனைவரும் பிராமண கலாச்சாரத்தினராகவே தெரிகின்றனர். ஒரே கலாச்சாரம். இது நன்றாக இருக்கிறதல்லவா! எப்படி ஆரம்ப காலத்தில் ஒரு மரத்தின் வித விதமான கிளைகளாக வந்தார்கள்; கூடவே தம் தம் வீட்டிலிருந்து உறவினருடன் வந்து சேர்ந்தனர், இல்லையா! ஆனால் பாப்தாதா ஆரம்பத்திலேயே கூறினார். நீங்கள் வித விதமான மரங்களின் கிளைகளாக வந்துள்ளீர்கள் ஆனால் இங்கே ஒரே ஒரு சந்தன மரத்தில் ஒன்றாக இணைந்து விடுவீர்கள். ஒரே ஒரு சந்தன மரமாக ஆகி விடும். ஆதி காலத்தில் வந்த குழந்தைகள், ஆதி ரத்தினங்கள் ஒரு சந்தன மரமாக ஆனார்கள். எனவே தான் சந்தனத்தின் நறுமணம் பரவியது அது வெளிநாடு வரை சென்று அடைந்தது ஆகவேதானே நீங்களும் வந்துள்ளீர்கள்! ஆக, வெளிநாட்டினரும் வித விதமான கலாச்சாரத்திலிருந்து வந்து தற்போது ஒரே கலாச்சாரமாக ஆகி உள்ளீர்கள். பிடித்திருக்கிறது அல்லவா! அப்படியானால் கை தூக்குங்கள் சில சமயம் கஷ்டமாக தோன்றுவதில்லையே? வேலை முதலியவை செய்யும் பொழுது கலர் உடைகளை அணிகிறீர்கள் அது அனுமதிக்கப்பட்டதுதான். வெளி நாட்டினரின் ஒரு விசயம் பாப்தாதாவிற்கு மிகவும் நன்றாக இருக்கின்றது அது எது? யார் சேவைக்கு நிமித்தமாக இருக்கிறார் களோ. சென்டர்களை கவனித்து வருகிறார்களோ, அவர்களது விசேஷம்! உணவும் சமைத்து கொள்கிறார்கள். வகுப்பும் எடுக்கிறார்கள். இறை மாணவர்களையும்

கவனித்து கொள்கிறார்கள்; மேலும் வெளி உலக வேலையும் செய்து கொள்கிறார்கள்! பாரத தேசத்தில் குழந்தைகள் ஆரம்ப காலத்தில் அங்கே சென்ற பொழுது என்ன பார்த்தார்கள்? என்ன விசேஷம் என்றால் அங்கேயே வகுப்பு நடந்து முடிந்தவுடன் 7-நாட்களுக்கு மாவை பிசைந்து வைத்து விடுவர், ரொட்டியை செய்து வைத்து விடுவர், வகுப்பு முடிந்த உடன் பாலில் போட்டு உண்பதற்கு என்ன என்ன பொருட்கள் கிடைக்கிறதோ அவற்றைப் போட்டு சாப்பிட்டு விட்டு வேலைக்கு ஓடி விடுவர்! அனைத்து வேலை களையும் சுறு சுறுப்பாக செய்தனர்; மேலும் சேவையையும் விருத்தி செய்தனர். முதலில் ஒரே ஒரு லண்டன் மட்டும் இருந்தது. லண்டனைச் சேர்ந்தவர்கள் கை தூக்குங்கள் லண்டன் காரர்கள். அவர்களிலிருந்து அநேகர் உருவாகி விட்டனர். எனவேதான் பாப்தாதா இரட்டை புருஷார்த்தி எனும் பட்டத்தை கொடுத்துள்ளார் இந்த சேவை பிற மதத்தைச் சார்ந்தவர்களையும் தயார் செய்துள்ளது. கிறிஸ்துவர்கள் இருக்கவே இருக்கிறார்கள் ஆனால் முஸ்லீம் நாடுகளில் கூட மறைந்து கிடந்த குழந்தைகள் வெளிபட்டுள்ளனர். மேலும் முன்னேறிக் கொண்டு இருக்கின்றனர். வித்தியாசமான முறையில் சேவை செய்து கொண்டு இருக்கின்றனர். பாப்தாதா ஒரு குறிப்பிட்ட அவ்வாறு சேவை செய்யக் கூடிய) குழந்தையை நினைவு கூர்ந்தார் (வஜிஹா சகோதரி அநேக சென்டர்களை அந்நாடுகளில் (முஸ்லீம் நாடு) திறக்கிறார். மேலும் நைரோபி நாட்டினரும் நல்ல முறையில் செய்து கொண்டு இருக்கின்றனர். அவர்களும் (குழந்தைகளை) வெளியே கொண்டு வருகின்றனர். அப்படியானால் இந்த பட்டம் உங்களுக்கு பிடித்திருக்கிறது அல்லவா? இரட்டை புருஷார்த்திகள் தானே! நல்லது! நிமித்தமாக இருக்கக்கூடிய டீச்சர்ஸ்களும் மிகுந்த முயற்சி எடுத்துள்ளனர் எனவே, அனைத்து டீச்சர்களுக்கும் கூட விசேசமான வாழ்த்துக்களை வழங்குகிறார். இப்பொழுது செய்த முயற்சியின் பலனை அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர் ஏற்கனவே கூறியிருக்கின்றோம். பாப்தாதாவின் விஸ்வ கல்யாணகாரி என்னும் பட்டம் வெளி நாட்டு சேவையினால்தான் ஏற்பட்டது. ஆக பல்வேறு நாடுகளிலிருந்து வந்திருக்கக் கூடிய குழந்தைகளுக்கு அவர்களது தேசத்தைச் சார்ந்த பிராமண குடும்பத்தின் பிறருக்கும் பல கோடி மடங்கு பிறந்த நாள் வாழ்த்துக்கள். மேலும் விசேசமாக பாப்தாதா ஆஹா குழந்தாய் ஆஹா!

லவ்லீன் குழந்தாய் ஆஹா! லக்கி (அதிர்ஷ்டம் நிறைந்த குழந்தாய் ஆஹா, ஆஹா என்ற கீதத்தினை பாடி வாழ்த்துக்களை அளிக்கின்றார்.

வந்திருக்கக்கூடிய அனைத்து வர்க்கத்தினரும் எழுந்திருங்கள்; அனைத்து வர்கத்தினரும் தங்களுக்குள் மீட்டிங் செய்து கொண்டிருக்கின்றீர்கள் அல்லவா. தாராளமாக செய்யுங்கள். மீட்டிங் பண்ண வேண்டும். ஏனெனில் பாப்தாதா கூறியதை இப்பொழுது செய்யவில்லை. ஆகவே மீட்டிங் பண்ண வேண்டும். ஏதேனும் ஒரு இடத்தில் ஒன்றாக அழையுங்கள் என பாப்தாதா கூறிருக்கிறார். பல்வேறு பிரிவு, வர்க்கத்தின் தொடர்பில் உள்ளவர்கள் சினேகி, சகயோகியாக இருப்பவர்கள் யார் யார்? எத்தனை பேர் உருவாகியிருக்கின்றார்கள் என பார்ப்போமே! மற்றபடி நடத்துகிறீர்கள், நடத்திக் கொண்டேயிருங்கள். நல்லது.

நாலாபுறமும் இருக்கக்கூடிய பாப்தாதாவின் இதய சிம்மாசனதாரி குழந்தைகளுக்கு, நாலாபுறமும் உள்ள தீவிர புருஷார்த்தி குழந்தைகளுக்கு, நாலாபுறமும் உள்ள பாப்தாதா கொடுத்த பரிசை ஏற்றுக் கொள்ளக் கூடிய, மேலும் குழந்தைகள் பாப்தாதாவிற்கு சங்கல்பத்தின் மூலம் பரிசு கொடுத்துள்ளீர்கள். அந்த சங்கல்பத்தை திடமாக்கக் கூடிய திட புருஷார்த்திகளுக்கு, உறுதிமொழி செய்து (பாபாவை) பிரத்யட்சப்படுத்தக் கூடிய அனைத்து குழந்தைகளுக்கும் பாப்தாதாவின் அதிகப்படியான உள்ளத்தின் செல்லங்கள் மற்றும் அன்பு நினைவுகளை ஏற்றுக் கொள்ளுங்கள். மேலும் அனைத்துக் குழந்தைகளுக்கும் மீண்டும் மீண்டும் வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்!! வாழ்த்துக்கள்!!

தாதிகளிடம்: அனைவரும் தங்களுக்குள் தங்களுடைய சிந்தனைகளைப் பகிர்ந்து கொண்டீர்கள். சிந்தனைகள் விதவிதமாக இருக்கும் ஆனால் சிந்தனைகளைப் புரிந்து, மரியாதை கொடுத்து ஒருவருக்கொருவர் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும். தெளிவுபடுத்தாமல் உள்ளே வைத்துக் கொள்ளக் கூடாது. உள்ளே வைப்பதனால் குப்பையாகி விடுகிறது எந்தப் பொருளானாலும் வைத்ததை சுத்தம் செய்யாவிடில் என்ன ஆகும்? தாங்கள் நிமித்தமான குழந்தைகள். உங்களை பாப்தாதா செல்லக் குழந்தைகள் எனக் கூறுகிறார். பாண்டவர்களும்

இருக்கின்றீர்கள்; ஆனால் நிமித்தமானவர்கள் செல்லக் குழந்தைகள். செல்லக் குழந்தைகளின் கூட்டம் மிக வேகமாக அனைவருக்குள்ளும் ஊக்கம் உற்சாகத்தைக் கொண்டுவந்து விடுகிறது. அனைவரையும் நடனமாடச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் தாங்கள் அனைவரும் கொண்டுள்ளீர்கள். இதை பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கின்றார். பாப்தாதா கூறிய 4-விசயங்களை ஒவ்வொருக்குள்ளும் கொண்டு வர வேண்டும். 4-விசயங்கள் மெஜாரிட்டி குழந்தைகளுக்குள் வந்து விட்டால், இதோ நேரம் வந்தே விட்டது. தங்களை நிமித்தமானவர்கள், அனைவரும் 10-12 அல்ல, ஒருவர் எனப் புரிந்து கொள்ள வேண்டும். அப்படி உள்ளத்தில் எந்த மாதிரியான எண்ணமும் இல்லவே இல்லை என்பதை பாப்தாதா பார்க்கின்றார் ஆனால் இந்த எண்ணத்தை அதிகப்படுத்திக் கொண்டே செல்லுங்கள். மேலும் தங்களுக்கு அனைவரும் துணைவர்கள் நன்று (மோகினி சகோதரியும் முன்னி சகோதரியும் இந்தோர் ஜோன் சென்று வந்துள்ளனர்) எங்கு எந்த மகாரதி சென்று வந்தாலும் புத்துணர்வு ஏற்படுகிறது. மேலும் ஏற்பட்டுக் கொண்டே இருக்கும், நன்று.

(ஜானகி தாதியின் தலை மீது, பாப்தாதா கை வைக்கிறார்) பாப்தாதாவின் கை அனைவருக்கும் மேலும் வருகிறது. இவர் விஷேசமாக நிமித்தமாக இருக்கின்றார். இந்தக் குழு நிமித்தமாக இருக்கின்றது. ஆகவே விஷேசமானது. தலை ஒருபோதும் பாரமாவது இல்லை, பாபா இணைந்து இருக்கின்றார். (பகீரதனுடைய நெற்றியில் நாம் கங்கைகள் இருக்கின்றோம்). இந்த பாண்டவர்களும் கங்கைகள் தான் இருக்கின்றோம். ஆகவே தான் சேவை செய்கிறார்கள். நன்று.

(லார்சன்&டியூப்ரோ கம்பெனியின்) துணைத்தலைவர் -மகீஜா சகோதரர் மற்றும் அவரது குடும்பத்தாருடன் -நினைத்ததை முடிக்கும் தைரியம் தங்களிடம் இருப்பதை பாப்தாதா பார்க்கின்றார். தைரியம் உள்ள குழந்தைகளுக்கு தந்தையின் உதவி கிடைக்கிறது. தைரியம் வைத்துள்ளீர்கள் அல்லவா? முடிந்து விட்டது. அல்லவா? இப்பொழுது ஒவ்வொரு விசயத்திலும் தைரியத்தை இழக்காதீர்கள். என்ன செய்வது என்பதல்ல. செய்துதான் தீர வேண்டும். என்ன செய்வது என்று சொல்லும் பொழுது தடைகள் ஏற்படுகின்றன. செய்துதான் தீர வேண்டும் எனும் பொழுது அனைத்தும் அகன்று விடுகின்றன.

கொசுவை விரட்ட புகை போடும் பொழுது கொசு ஓடிவிடுகிறது. அது போல் மாயாவின் விசயங்கள் வரும் பொழுது தைரியம் என்ற தூடம் போடுங்கள். அப்பொழுது கொசு என்ன செய்யும். ஓடிவிடும். இவர் மனைவி தைரியசாலி சகயோகத்திற்கு உரியவர். உதவி உங்களுடையது, தைரியம் அவருடையது. முயற்சியில் முன்னேறுவீர்கள் என பாப்தாதா புரிந்திருக்கின்றார். இருவரும் ஒருவருக்கொருவர் துணையாக இருப்பவர்கள்; இந்த விசேசத்தன்மை இங்கு வரை கொண்டு வந்துள்ளது. நல்லவர்கள் நல்லது.

முன்னி சகோதரியின் சகோதரர் - அண்ணியிடம் - முன்னி சகோதரியின் அண்ணன், அண்ணி என்பது சரிதான், ஆனால் பாப்தாதா கூறுகிறார்: நீங்கள் அதிருஷ்டசாலிகள் அன்பாகவும் இருக்கின்றீர்கள். லக்கியாகவும் இருக்கின்றீர்கள். தங்களின் பாக்கியத்தை உருவாக்கி விட்டீர்கள். பாருங்கள். (குழந்தையைப் பார்த்து) இந்த முகம் எவ்வளவு நன்றாக இருக்கின்றது. போட்டோ எடுத்து அப்படியே வைக்க வேண்டும். நல்லது செய்தீர்கள். இவருக்கு உதவி செய்வோர் எனில், பாபாவின் காரியத்தில் உதவியாளர் ஆவதாகும். யக்ஞ சேவை செய்வது எவ்வளவு புண்ணியம் எத்தனை பேருக்கு புண்ணியம் ஏற்படுகிறது. மிகவும் அதிர்ஷ்டசாலிகள் மிக நல்லது.

டாக்டர் அசோக் மேத்தா அவர்களுடன்: பாப்தாதா பார்த்தார்; ஹாஸ்பிட்டலுக்கும் வருகை தந்தார். நிமித்தமான உங்களின் தைரியம் நன்றாக இருக்கிறது. ஆகவே தங்களுக்கு அழைப்பு வருகிறது. தைரியமாக உள்ளவர்களுக்கு தானாகவே உதவி கிடைக்கிறது. தங்களுக்கு அழைப்பு வருகிறது எனில் இது தைரியத்தின் அடையாளம். நன்று! (மனைவி-சிரின் சகோதரி, மகள் -சோனல் சகோதரி) தங்களது உள்ளத்தின் உறுதி இவரை செய்விக்கிறது விதவிதமாக இருக்கின்றீர்கள். குடும்பத்தை நடத்துகிறீர்கள். ஒருபோதும் முயற்சியில் தடை வருவதில்லை. இவர் தைரியசாலி, தைரியம் மிக இருக்கிறது. சிலருக்குத் தான் தைரியத்தால் ஆபர் வருகிறது. இது பாப்தாதாவிற்கு மிகவும் பிடித்திருக்கிறது. தானாகவே ஆபர் வருகிறது எனில் இது தைரியத்தின் பலன். மேலும் நீங்கள் துணையாக இருக்கின்றீர்கள் ஏதோ ஒன்று செய்து கொண்டே இருக்கின்றீர்கள் இவர் இதில் துணை புரிகிறார். குடும்பமே அதிரிஷ்டமுடையது.

(குல்ஜார் தாதிஜியின் சேவையில் நிமித்தமாக இருந்த சகோதரிகளை பாப்தாதா மேடைக்கு அழைக்கின்றார்) யாரெல்லாம் இரவில் கண்விழித்து சேவை செய்தீர்களோ, அவர்கள் அனைவருக்கும். வாழ்த்துக்கள், ரதத்தை தயார் செய்தீர்கள். அல்லவா! மிக நன்று. குப்தமாக இருக்கின்றீர்கள். கொஞ்சம் வெளிப்படுங்கள். துணை ஆகுங்கள்.

பாப்தாதா தன் கரங்களால் கொடி ஏற்றி வைக்கிறார்! இன்றைய பிறந்த நாளுக்கான வாழ்த்துக்களை பாப்தாதா ஏற்கனவே கொடுத்து விட்டார். இந்தக் கொடி எப்பொழுதும் உயரத்தில் இருக்கட்டும். அனைத்து மக்களின் உள்ளத்திலும் பறக்கட்டும் இது தான் தங்கள் அனைவரது உள்ளத்தின் எண்ணம். இப்பொழுது பாபா வந்து விட்டார். ஆஸ்தி அடைவதற்காக பாபாவிடம் வந்து விடுங்கள். இந்த செய்தியையே அனைவருக்கும் கொடுக்கின்றீர்கள். இந்த செய்தியை கொடுத்துக் கொண்டே கடைசியில் அந்த நாள் வந்து விடும். அனைவரும் நமது தந்தை வந்து விட்டார் எனக் கூறுவார்கள். தாங்கள் அனைவரும் தைரியமான பார்வை மூலம் முக்தியின் ஆஸ்தியைக் கொடுக்க வேண்டுமெனில் தங்கள் அனைவரது உள்ளத்திலும் கொடி பறக்க வேண்டும். அந்த நாளும் இதோ வந்தே விட்டது. ஓம் சாந்தி.

வெளிநாட்டு சகோதரிகளிடம்: பாப்தாதா தங்களின் கூட்டத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைகின்றார். (டாக்டர் நிர்மலா தீதி ஞான சரோவரில் மனோகர் தாதியின் ஸ்தானத்தில் நியமிக்கப்பட்டிருக்கிறார்) இவர் பொறுப்பு என்ற கிரீடத்தை அணிந்துள்ளார். தைரியம் வைத்துள்ளமைக்கு வாழ்த்துக்கள். (பாப்தாதா தலை மீது கை வைத்தார்) மிக நன்கு தைரியம் வைத்திருக்கின்றார். தங்களுக்குள் சந்திக்கும் வழக்கம் பாப்தாதாவிற்கு மிக நன்றாக இருக்கிறது. தங்களுடைய குழுவைப் பார்த்து காயத்திரி சகோதரியும் இணைந்திருக்கிறார் அல்லவா! இவரையும் பாப்தாதா நினைவு செய்தார். காயத்திரி சகோதரி தைரியத்தை நன்கு காண்பித்திருக்கிறார். லௌகீக குடும்பத்திற்கும். அக்கம்பக்கத்தில் கேட்பவர்களுக்கும் உதாரணத்தைக் காட்டியுள்ளீர்கள்- சமயத்தில் எப்படி உதவியாளர் ஆக முடியும். என்பதற்கு குழந்தையும் அங்கிள்-ஸ்டீவ் நாராயணன்) கூட மிக யோக யுக்தமாக இருக்கின்றார்.

மேலும் சக்திகளின் கதிர்கள் கொடுத்துக் கொண்டே அன்பு நினைவுகளும் கொடுக்கின்றார். முழு குடும்பத்திற்கும் அன்பு நினைவுகள். (முதல் முறையாக சிவ ஜெயந்தியின் பொழுது வரவில்லை) ஆகவே பாப்தாதா அவர்களை நினைவு செய்கிறார்.

மீட்டிங்-ன் ரூபம் மாறிக் கொண்டே இருக்கிறது மேலும் மேலும் நன்றாக ஆகிக் கொண்டே இருக்கின்றது. பாரதவாசிகளும் மிக்ஸ் ஆகிக் கொண்டிருக்கிறார்கள் இது மிக நன்று. தாங்கள் தைரியம் வைத்தீர்கள் ஆகவே உதவியாளர்கள் உருவாகிக் கொண்டேயிருக்கிறார்கள். மேலும் வருவார்கள் ஆகவே நடத்திச் செல்லுங்கள். பாப்தாதா குறிப்பாக நிமித்தமாக உள்ளவர்களுக்கு வாழ்த்துக்களைக் கொடுக்கின்றார். முன்னேறிக் கொண்டே இருங்கள். முன்னேறிக் கொண்டே இருப்பீர்கள். (லண்டன் மகேஷ் சகோதரர் நினைவு கொடுத்திருக்கின்றார்) சமயத்தில் டைரக்ஷன்படி (வழிகாட்டுதல்) வெற்றியடையச் செய்பவர்களுக்கு வெற்றி கிடைக்கிறது. பாலனை மிக நன்றாக அடைந்திருக்கிறீர்கள். ஆகவே பாலனைக்கு ரிட்டன் கொடுத்துக் கொண்டிருக்கிறார் டோலி அனுப்பி விடுங்கள்.

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵
✵✵✵✵✵

**09.03.2009 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்**

# ஹோலியின் விசேஷமான பரிசு ஃபரிஸ்தா ஆடையை தினமும் அவ்வப்போது அணிந்து கொண்டு பழைய சம்ஸ்காரங்களை நெருப்பில் எரிப்பதாகும்!

இன்று ஹோலியஸ்ட் (தூய்மையான) பாபா தன்னுடைய ஹோலி குழந்தைகளோடு ஹோலி பண்டிகையை கொண்டாட வந்துள்ளார். அனைத்துக் குழந்தைகளுமே தூய்மையான குழந்தைகள் தான். நீங்கள் அனைவரும் கூட ஹோலி கொண்டாட வந்துள்ளீர்கள். சற்று சிந்தித்துப்பாருங்கள், தூய்மையான ஆத்மாக்களான உங்கள் மீது எந்த வர்ணம் பூசப்பட்டது. அதனால் தூய்மை அடைந்து விட்டீர்கள். வர்ணங்கள் அநேகம் உள்ளது ஆனால் உங்கள் மீது எந்த வர்ணம் பூசப்பட்டுள்ளது? எல்லாவற்றையும் விட மிக சிரேஷ்டமான வர்ணம் எது, அதனால் நீங்கள் தூய்மை ஆகி விட்டீர்கள் எல்லாவற்றையும் விட மிக உயர்ந்த வர்ணம் பரமாத்மாவின் சங்கம் என்ற வர்ணம். எனவே பரமாத்மா சங்கம் என்ற வர்ணம் பூசப்பட்டதால் சசுஜமாகவே தூய்மை அடைந்து விட்டீர்கள், ஏனென்றால் பரமாத்மாவின் சங்கம் என்பது அழிவற்ற சங்கம் என்ற வர்ணம் ஆகும். மற்ற வர்ணங்கள் எல்லாம் சிறிது நேரத்திற்காக இருக்கும், ஆனால் பரமாத்மாவின் சங்கம் என்ற வர்ணம் பூசப்பட்டதால் சுலபமாகவே ஹோலியாக அதாவது பவித்திரமாக மாட்டீர்கள். ஆத்மாவின் வர்ணம் அபவித்திரமான நிலையிலிருந்து பவித்திரமான நிலையை அடைந்து விட்டது. ஏனென்றால் நீங்கள் அனைவரும் பரமாத்மாவை தன்னுடைய கம்பேனியன் (துணைவன்) ஆக்கி விட்டீர்கள், (கம்பெனி) நண்பனாகவும் ஆக்கி விட்டீர்கள். எனவே கம்பைண்ட் (இணைந்து விட்டீர்கள்) ஆகி விட்டீர்கள். இந்த கம்பைண்ட் சொரூபம் மிகவும் பிரியமானதுதானே! இந்த கம்பைண்ட் ரூபம் ஒரு பொழுதும் பிரிக்க முடியாது. அனுபவம்

உள்ளதா! சதா கம்பைண்ட் ஆக இருக்கிறீர்கள் தானே! தனிமை என்பதே இல்லைதானே! மாயா உங்களை தனிமைபடுத்த முயற்சி செய்யும் ஆனால் இணைந்தே இருப்பவர்களை ஒருபொழுதும் பிரிக்கவே முடியாது. ஏனென்றால் மாயை தனிமைபடுத்திய பிறகுதான் பழைய சம்ஸ்காரங்களை வெளிப்படுத்த செய்யும், பழைய சம்ஸ்காரங்களும் வெளிப்பட்டு விடும் அதனால் சுத்தமான சம்ஸ்காரங்கள் உள்ளடங்கி விடும். பழைய சம்ஸ்காரங்கள் என்பது சோம்பல்தனம் மற்றும் அலட்சியம், இது விதவிதமான ரூபங்களில் வெளிப்படும்பொழுது கம்பைண்ட் ரூபம் தனிமை ஆகி விடுகிறது. எனவே ஒவ்வொருவரும் தன்னைத்தானே சோதனை செய்து பாருங்கள் சதா இணைந்தே இருக்கிறோமா அல்லது எப்பொழுதாவது பிரிந்தும் விடுகிறோமா? மாயாவின் அநேக சொரூபங்களைப் பற்றி தெரிந்துள்ளீர்கள் தானே! அது புத்திசாலித்தனமாக தனது வர்ணத்தை பூசி விடுகிறது. தனிமையாவது என்றால் மாயாவின் வர்ணத்தில் கலந்து விடுவது ஆகும். இந்த சோம்பல்தனம் மற்றும் அலட்சியம் விதவிதமான ரூபங்களில் வருகின்றது அதனை தெரிந்து கொள்வதற்காக மாயை தன் பக்கம் கவர்ந்திழுத்து விடுகிறது. மேலும் அதற்கேற்ப குழந்தைகளும், இராவணனுடைய பொக்கிஷங்களான சோம்பல்தனம் மற்றும் கவனக் குறைவு, இது பாபாவின் பொக்கிஷம் அல்ல இராவணனுடைய பொக்கிஷங்கள், இருப்பினும் மிகவும் போதையுடன் சொல்கின்றார்.கள் நான் விரும்பவில்லை, நான் விரும்பவில்லை ஆனால் என்னுடைய சம்ஸ்காரம் இது. சம்ஸ்காரம் எனது என்று சொல்லவைக்கிறது. இது என்ன பரமாத்மாவின் பொக்கிஷமா? அல்லது இராவணனின் பொக்கிஷமா? இதனை எனது சம்ஸ்காரம் என்று சொல்வது சரியா, சிந்தித்துப் பாருங்கள்? எனது என்று மாற்றுவது, இது மாயாவின் புத்திசாலித்தனம். பாபாவின் பொக்கிஷம் பிடிக்குமா அல்லது இராவணனின் பொக்கிஷம் பிடிக்குமா? பொதுவாக குழந்தைகள் தன்னை விடுவித்துக் கொள்வதற்காக சொல்கிறார்கள் எனது சம்ஸ்காரம், நான் விரும்பவில்லை. சற்று சிந்தித்துப் பாருங்கள். இது எனதா! பாபா சொல்கிறார் இராவணனின் பொக்கிஷத்தை தனதாக்கிக் கொள்வதால் மெல்ல மெல்லமாக நல்ல சம்ஸ்காரங்கள் கூட அழிந்தே விடுகிறது. பரமாத்மாவினுடைய சங்கத்தால் ஏற்பட்ட வர்ணமும் கலைந்து போகிறது மேலும் மாயாவினுடைய வர்ணம் வெளிப்பட்டு விடுகின்றது. எனவே போக போக, தன்னைத் தானே சோதனை

செய்யுங்கள், எந்த வர்ணம் என் மீது படிந்துள்ளது? மக்களும் ஹோலி தினத்தில் என்ன செய்கிறார்கள்? முதலில் பழையவற்றை எரிக்கின்றார்கள் பிறகு வர்ணத்தைப் பூக்கின்றார்கள். கொண்டாடுகிறார்கள். எனவே உங்கள் மீதும் பாப்தாதாவினுடைய சங்கம் என்ற வர்ணம் பூசப்பட்டுள்ளது ஆனால் அதனுடையனேயே ஞானம் என்ற வர்ணம், சக்திகளின் வர்ணம், குணங்களின் வர்ணம் பூசப்பட்டுக் கொண்டேயிருக்கின்றது.

அனைவர் மீதும் இந்த ஆன்மீக வர்ணம் படிந்துள்ளதுதானே! படிந்துள்ளதா? ஆன்மீக வர்ணம் படிந்து விட்டது இது விலகாது தானே யார் மீது ஆன்மீக வர்ணம் படிந்து விட்டதோ. அழியாத வர்ணம் படிந்து விட்டதோ, அவர் மீது வேறு எந்த வர்ணமும் படிய முடியாது. இந்த வர்ணத்தால் எவ்வளவு ஹோலியாகி விட்டீர்கள்? முழு கல்பத்திலேயே உங்களைப் போல ஹோலி யாக பவித்திரமாக வேறு யாரும் மாற முடியாது. உங்களுடைய பவித்திரம் பிரபுவினுடைய சங்கத்தால் ஏற்பட்ட வர்ணம், பரமாத்மாவோடு கம்பைண்ட் ஆக இருப்பதற்கான அனுபவம் எல்லாவற்றைக் காட்டிலும் மிகவும் வித்தியாசமானது, மேலும் பிரியமானது. வேறு சிலரும் ஹோலியாக தூய்மையாக மாறுகின்றார்கள் அவர்களுடைய சரீரம் பவித்திரம் ஆவதில்லை, ஆத்மா பவித்திரமடைகின்றது ஆனால் நீங்கள் ஹோலியாகி விடுகின்றீர்கள் அதாவது தூய்மையடைகின்றீர்கள். இதில் உங்களுடைய ஆத்மா, சரீரம் இரண்டுமே தூய்மையடைந்து விடுகின்றது. மேலும் தூய்மையைத்தான் சுகம், சாந்தி, அன்பு, ஆனந்தத்தின் பிறப்பிடம் என்று சொல்லப்படுகின்றது. எங்குத் தூய்மை இருக்குமோ அங்கு சுகம், சாந்தியும் கூடவே இருக்கும், ஏனென்றால் எங்கே தாய் இருப்பானே அங்கே குழந்தைகளும் இருப்பார்கள். ஏனென்றால் தந்தை வந்து உங்களை அப்படிப்பட்ட தூய்மையாக மாற்டுகின்றார், அதனால் உங்களுடைய ஜட சித்திரம் கலியுகத்தின் கடைசி பிறவியிலும் கூட, நீங்களே தன்னுடைய சித்திரத்தை பார்க்கின்றீர்கள் எவ்வளவு விதிப் பூர்வமாக அந்த சித்திரங்களுக்கு பூஜை நடைபெறுகிறது, இதுதான் பவித்திரத்தாவின் விசேஷம். மேலும் எவ்வளவுதான் மகான் ஆத்மாக்கள், தர்ம ஆத்மாக்கள் தூய்மை அடைந்துள்ளார்கள் ஆனால் கோவில் எவருக்குமே அமைக்கப்படவில்லை. இப்படிப்பட்ட விதிப்பூர்வமான பூஜையும்

எவருக்குமே நடப்பதில்லை. கடைசிப் பிறவி வரையிலும் கூட உங்களுடைய சித்திரங்களும் ஆசீர்வாதங்களை வழங்கிக் கொண்டேயிருக்கின்றது. சிறிது நேரத்திற்க வது சுகம், சாந்தியை அனுபவம் செய்யவைக்கிறது. அப்படியென்றால் உங்களுடைய தூய்மைக்கும் உலகத்தாரின் தூய்மைக்கும் இடையே எவ்வளவு வித்தியாசம்! நீங்கள் கூட மனதை மகிழ்விப் பதற்காக சிறிது அதிகமாகவே ஹோலியை கொண்டாடுகிறீர்கள், ஆனால் பரமாத்மாவுடன் உண்மையான ஹோலி என்ற வர்ணம் பூசப்படுகிறது கம்பைண்ட் சொரூபத்தின் யதார்த்தமான ஹோலியை நீங்கள் கொண்டாடுகிறீர்கள். ஹோலியை உலக மக்களும் கூட வித விதமான முறையில் கொண்டாடுகிறார்கள். ஹோலி என்ற வார்த்தையின், ரகசியம் என்ன? அதுவும் உங்களுக்குத் தெரியும். நீங்களும் தெரிந்துள்ளீர்கள், நீங்களே கொண்டாடவும் செய்கிறீர்கள். ஹோலியென்றால் அர்த்தமே முடிந்து விட்டது. முடிந்தது முடிந்து விட்டது. எனவே நீங்கள் அனைவரும் பழைய வாழ்க்கை, பழைய விசயங்கள். பழைய சம்ஸ்காரங்களை, பழைய வீணான சங்கல்ப்பங்களையும் முடித்து விட்டீர்களா முடிந்ததை முடித்து விடுவதுதான் ஹோலி என்பதின் அர்த்தமாகும். இப்படி செய்து விட்டீர்களா? அல்லது இப்பொழுதும் கூட தவறுதலாக பழைய சம்ஸ்காரங்கள் வந்து விடுகின்றதா? எப்பொழுது நமது பிறவியே புதிதாகி விட்டதோ, அனைவரும் மறுபிறப்பு எடுத்துள்ளீர்கள்தானே மறு பிறவி எடுத்து விட்டீர்களா? கை உயர்த்துங்கள். நல்லது. புதிய பிறவி கிடைத்து விட்டது. அப்படி இருக்கும் பொழுது பழைய பிறவி நினைவு எப்படி வருகிறது? பழையது. பழையதாகி விட்டது. ஒருகால் முடிந்த விசயங்களோ அல்லது எண்ணங்களோ, சம்ஸ்காரமோ வெளிப்பட்டால் அதை என்னவென்று சொல்வது? ஹோலி கொண்டாடியதாகுமா? முடித்து விடவில்லை. பரமாத்மாவின் சங்கத்தின் வாணம். நன்றாக பூசப்படவில்லை. பரமாத்மா சங்கத்தின் வர்ணம் பூசப்படுவது என்றால் பழைய பிறவியை மறந்துப்போவது ஆகும். பழைய விசயங்களையும் மறந்து விடுவதாகும் ஏனென்றால் மறு பிறவி எடுத்து விட்டீர்கள் அல்லவா. எப்படி உடல் ரீதியாக ஒரு பிறவி வீட்டு மறு பிறவி எடுக்கும்பொழுது பழைய பிறவி நினைவில் வருகிறதா? அப்படியென்றால் நீங்கள் அனைவரும் இப்பொழுது பிராமண பிறவியை கையாளுபவர்கள் தானே. அப்படியானால் முந்தைய பிறவியின்

சம்ஸ்காரம் அதை சொல்கிறீர்கள். தவறுதலாக என்னுடைய சம்ஸ்காரம் என்று, உங்களுடையதா? பிராமண வாழ்வின் சம்ஸ்காரமா அது? சில சமயம் சோம்பல்தனம், சில சமயம் ராயலான அவட்சியம், அவட்சியத்தின் வித விதமான ராயல் ரூபங்கள். எப்பொழுதாவது இதைப் பற்றி வகுப்பு நடத்துங்கள். அலட்சியம் எத்தனை விதமானது. அது எத்தனை விதமான ராயல் ரூபங்களில் வருகிறது.

பிராமண வாழ்க்கையென்றாலே புதிய வாழ்க்கையாகும். இதில் பழையவை எதுவுமே இருக்க முடியாது. இன்று ஹோலி கொண்டாட வந்துள்ளீர்கள் அல்லவா! ஹோலி என்றால் முடிந்து விட்டது. எனவே இன்று ஹோலி கொண்டாடுவது என்றால் பழைய சம்ஸ்காரங்களை நெருப்பில் எரித்து விடு வதாகும். எரித்த பிறகே கொண்டாடப்படுகிறது. எனவே இப்பொழுது உங்களுடைய கொண்டாட்டம் என்பது சொரூபமாகும். எரித்து விட்டீர்கள், இப்பொழுது கொண்டாடுங்கள். பிரபுவினுடைய சங்கத்தால் ஏற்பட்ட வர்ணத்தைக் கொண்டாடுவதில் ஆனந்தம் அடைபவர்கள்தானே! கம்பைண்ட்டாக இருந்து அனுபவம் செய்பவர்கள்தானே ஏன்? ஹோலியஸ்ட் பாபா உங்களை ஹோலி ஆக்குவதற்காக, தூய்மையாக்குவதற்காக வர்ணத்தை பூசி விட்டார்.

இன்று என்ன ஹோலி கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள்? இன்று விசேஷமாக எந்த ஒரு பழைய சம்ஸ்காரமும் வரவிடாதீர்கள், இந்த ஹோலியை கொண்டாடுங்கள். அப்படி கொண்டாட முடியுமா? அல்லது அவ்வப்பொழுது வந்து விடுமா? இந்த ராயலான வார்த்தை நான் செய்ய விரும்பவில்லை, நான் செய்ய விரும்பவில்லை ஆனால் என்னுடைய சம்ஸ்காரம் இது. இந்த வார்த்தையை திட சங்கல்பம் என்ற விதி மூலமாக இன்றோடு அழித்து விடுங்கள். இப்படிப்பட்ட ஒரு ஹோலியை இன்று சதா காலத்திற்காகவும் கொண்டாடுவதற்கான தைரியம் வைத்துள்ளீர்களா? அல்லது அவ்வப்பொழுது கொண்டாடுவீர்களா? இன்றோடு பழைய சம்ஸ்காரங்களை முடித்து விட்டோம். முடிந்தது. முடிந்துபோனது புதிய பிறவி இது, அந்தப் பழைய பிறவி முடிந்தது யார் இப்படி நினைக்கின்றீர்களோ, அப்படிப்பட்ட தைரியம் வைத்துள்ளவர்கள் நீங்கள் பாபாவினுடைய இனிமையிலும் இனிமையான தேடிக் கண்டெடுக்கப்பட்ட குழந்தைகள் அல்லவா! எனவே இந்த சங்கல்பம் உறுதியாக, சங்கல்பம் மட்டுமல்ல,

உறுதியான சங்கல்பம் செய்ய தைரியம் உள்ளதா? கை உயர்த்துங்கள். பாருங்கள், அனைவருமே தைரியம் வைத்துள்ளீர்கள். போகட்டும் சிலர் இல்லாமலும் இருக்கின்றீர்கள், ஆனால் நீங்கள் அனைவரும் இதில் எனக்கு துணையாக இருக்கின்றீர்கள்தானே. பக்கா துணையா, இரு கை உயர்த்துங்கள். இவர்கள் அனைவரையும் போட்டோ பிடியுங்கள், நல்லது. இரட்டை அயல் நாட்டைச் சார்ந்தவர்களும் கூட கை உயர்த்துகின்றார்கள்.

எனவே பாப்தாதா உங்கள் அனைவருக்கும் பலப்பல மடங்கு வாழ்த்துக்களை வழங்கிக் கொண்டிருக்கின்றார், ஹோலி அன்று முடித்து விட்டதாக கொண்டாடியதற்காக, இப்பொழுது தவறுதலாகக் கூட தன்னுடைய வாயிலிருந்து இந்த வார்த்தை வந்து விடக் கூடாது. எனது சம்ஸ்காரம், இராவணனுடைய சம்ஸ்காரத்தை எனது என்று சொல்கின்றீர்கள், அதிசயமாக உள்ளது. இராவணனை எதிரி என்று சொல்லப்படுகின்றது, எதிரியுடைய கஜானாவை தன்னுடையதாக்கிக் கொள்வது என்பது இது ஆச்சரியமான விசயம். உங்களுக்குக் கூட ஆச்சரியமாக உள்ளதுதானே! என்ன சொல்கிறீர்கள்! தவறுதலாக சொல்லிவிட்டீர்கள்தானே. சொல்லிவிடுகிறீர்கள் பிறகு உள் மனம் வருந்தவும் செய்கின்றது. உணரவும் செய்கிறீர்கள். பாபாவோடும் பேசுகின்றீர்கள், மன்னிப்பும் பெறுகின்றீர்கள். பாபா நாளையிலிருந்து நான் செய்ய மாட்டேன் என்று சொல்லிவிட்டு மறுபடியும் செய்துவிடுகிறீர்கள். இப்பொழுது பாப்தாதா என்ன செய்வார்? பார்த்துக் கொண்டேயிருப்பாரா? இப்பொழுது இந்த வார்த்தைகளை ஹோலியில் எரித்து விடுங்கள். பாருங்கள் எரிப்பதிலும் கூட ஒரு நல்ல விசயம் சொல்கிறார்கள், அதாவது கோக்கியை (கோதுமையில் செய்யக்கூடிய ஒரு விதமான இனிப்பு) நூலில் கட்டி வேக வைப்பார்கள். அப்பொழுது கோக்கி வெந்து விடும் அதை எடுத்துப் பார்த்தால் கோக்கி நன்றாக. பக்குவமடைந்திருக்கும் ஆனால் நூல் எரிந்துப் போகாது. இது ஒரு அடையாளம்தான். நீங்கள் படித்த முதல் பாடம் ஆத்மா அழியாதது இந்த சரீரம் அழியக் கூடியது என்பதின் அடையாளமே அது. எனவே பாப்தாதா தன்னுடைய, இந்த விழாக்களையும் பண்டிகைகளையும், சாஸ்திரங்களையும் அமைத்த குழந்தைகளை, அவர்களும் பாபாவின் குழந்தைகள்தானே ஆனால் நீங்களோ தேடிக் கண்டெடுக்கப்பட்டவர்கள் ஆனால் பாப்தாதா பார்க்கின்றார் அந்தக் குழந்தைகளின் விந்தையான

காரியமும் குறைந்ததல்ல. மாவில் உப்புப் போல ஆனால் மிக அழகாக மனதை மகிழ்விக்கும் அளவிற்கு அமைத்துள்ளார்கள். ஒவ்வொரு பண்டிகைகளையும் பாருங்கள் நினைவார்த்தமாக செய்துள்ளார்கள், ஆனால் சூட்சுமமான பல விசயங்களுக்கும் ஸ்துலமான ரூபத்தைக் கொடுத்து விட்டார்கள். மிகவும் அதிகமாக விகாரியாவதிலிருந்துக் காப்பாற்ட்டார்கள். எனவே பாப்தாதா இப்படிப்பட்டப் பண்டிகைகள் உபகரணங்களை மற்றும் சாஸ்த்திரங்களை அமைத்த அந்தக் குழந்தை களுக்கும் அதற்கான பலனைத் தருகின்றார். அப்படியாவது பக்தியில் சிறிதளவாவது நினைவு செய்கிறார்கள், விகாரங்களிலிருந்து சிறிது நேரத்திற்காவது விலகியிருக்கிறார்கள்.

நீங்கள் இன்று என்ன ஹோலி கொண்டாடினீர்கள்? ஹோலியை எப்படிக் கொண்டாடினீர்கள்? முடிந்து விட்டது, எல்லோரும் சொல்லுங்கள் முடிந்து விட்டது. இப்படிச் செய்யுங்கள் முடிந்து விட்டது என்று (பாபா கையசைத்துக் காண்பிக்கின்றார்). உறுதிதானே? கொண்டாடினீர்களா? கொண்டாடினீர்களா? நல்லது. பிறகு நாளை மாயை வரும், ஏனென்றால் மாயாவும் கேட்டுக் கொண்டிருக்கின்றது ஆனால் நீங்கள் வா என்று கையசைத்து விடாதீர்கள் இப்படி செய்துவிடாதீர்கள். சந்தோஷமாக உள்ளதா, இதில் சந்தோஷம்தானே. சந்தோஷமாகவே இருந்தது.

பாபாவை நினைவில் வையுங்கள், பாபா நம் மீது எவ்வளவு ஆன்மீக வர்ணத்தைத் தெளித்துக் கொண்டிருக்கின்றார். அதனால் நீங்கள் தூய அன்னங்களாகவே மாடுகின்றீர்கள். தூய அன்னம் என்றால் நிர்ணய சக்தி உடைய தூய அன்னம். எந்த செயலும் செய்யுங்கள், ஆனால் ஒரு சீட்டில் அமர்ந்து விட்டு செய்யுங்கள். முதலில் அந்த சீட்டை (இருக்கை) அமைத்துக் கொள்ளுங்கள். பிறகு நிர்ணயம் செய்யுங்கள், அது என்ன சீட்டு என்றுத் தெரியுமா, அதுதான் திரிகால தரிசி என்ற சீட். முதலில் திரி காலதரிசி என்ற சீட்டில் அமர்ந்து மூன்று காலங்களையும் பாருங்கள், நிகழ்காலத்தை மட்டுமல்ல, ஆதி, மத்யம், அந்திமம் மூன்று காலங்களையும் பாருங்கள். மூன்று காலங்களிலும் லாபம் உள்ளதா, நஷ்டம் உள்ளதா? சில குழந்தைகள் மிகவும் புத்திசாலியாக இருக்கின்றார்கள். அந்த புத்திசாலித் தனம் என்னவென்று சொல்லட்டுமா? என்ன சொல்கிறார்கள். இப்படி வேலையைச் செய்து

முடிக்க வேண்டியிருந்தது. எனவே அந்த வேலைக்காக செய்து முடித்து விட்டேன். மற்றபடி எனக்குத் தெரியும், அப்படிச் செய்யக் கூடாது ஆனால் செய்து விட்டேன். சரி செய்து விட்டீர்கள் செய்த செயலுக்கான பலன் கிடைக்குமல்லவா. எனவே புத்திசாலித்தனமாக செய்ய வேண்டாம். பாபாவுக்கே மிகவும் புரியவைக்கிறார்கள். தவறு செய்துவிடுகிறார்கள் அல்லவா! பிறகு பாப்தாதாவிற்கே அப்படிப்பட்ட வார்த்தைகளை கூறி மகிழ்விக்கிறார்கள் பாபா நீங்கள் இரக்கம் மனம் உடையவர்தானே. நீங்கள் மன்னிக்கும் கடல் அல்லவா! பாபாவிற்கே நினைவூட்டுகின்றார்கள் நீங்கள் யார் என்று. நீங்கள் சொல்லியிருக்கின்றீர்களல்லவா எனக்கு சொல்லிவிட்டு முடித்து விடுங்கள் ஆனால் உணர்ந்து, பிறகு சொல்லிவிட்டு முடித்து விடுங்கள். ஒரு வார்த்தை உறுதியாக செய்கிறீர்கள், சொல்லி விடுகிறீர்கள் ஆனால் முதலில் திட சங்கல்பத்துடன் தன்னை மாற்றிக் கொண்டு பிறகு சொல்லுங்கள். அதிகம் தாஜா செய்கிறீர்கள், பாபா நீங்கள்தானே சொல்லியிருக்கிறீர்கள்! பாபா நீங்களே சொல்லி யிருக்கிறீர்கள்தானே, என்று நினைவூட்டுகின்றார்கள் மிகவும் புத்திசாலித்தனத்தை காண்பிக்கின்றார்கள். இனி புத்திசாலித்தனத்தை காண்பிக்க வேண்டாம். தைரியம் வையுங்கள். தைரியம் வைத்தேயாக வேண்டும். பார்க்கலாம், பார்க்கலாம் என்று சொல்ல வேண்டாம்.

பாப்தாதா நாள் முழுவதிலும் கே, கே (பார்க்கலாம், செய்யலாம்) என்றப் பாடலை அதிகமாகக் கேட்கின்றார். செய்வோம், காண்பிப்போம், மாறுவோம், ஆனால் என்ன வேகத்தில்? பார்த்துக் கொண்டேயிருப்பீர்களா பாபாவுடன் செல்பவர்களை. பாபாவிற்கு ஒவ்வொருக் குழந்தை மீதும் பன்மடங்கு அன்பு உள்ளது. பாபா தன் குழந்தை தன்னோடு இணைந்து வராமலிருப்பதை விரும்பு வதில்லை. வீடு திரும்ப வேண்டிய நேரம் வந்த பிறகு ஏன் வீட்டிற்கு வர மாட்டீர்களா? ஏனென்றால் வீட்டிற்கு சென்று, பிறகு ராஜ்யத்தில் வர வேண்டும். பாபாவுடன் வீட்டிற்கு செல்லவில்லையென்றால் ராஜ்யத்திலும் பிரம்மாபாபாவுடன் வர மாட்டீர்கள். பின்னால் வருவீர்கள். உங்களுடைய வாக்குறுதி என்ன? கூடவே செல்வோம், கூடவே வருவோம். இதிலும் கூட கே. கே சேர்ந்து விடுவோம். பாருங்கள் பாபா கண்டிப்பாக சென்றடைந்து விடுவார். எனவே இந்தப் பாஷையை இப்பொழுதே முடித்து விடுங்கள்.

இன்று பாப்தாதா வதனத்திலும் ஹோலி கொண்டாடினார், யாருடன்? நீங்கள் அனைவரும் இப்பொழுது கொண்டாடினீர்கள்தானே. அட்வான்ஸ் பார்ட்டியுடன் ஹோலி கொண்டாடினார். அட்வான்ஸ் பார்ட்டி இருக்கிறார்களல்லவா, பெயரே அட்வான்ஸ் பார்ட்டி. எனவே பாப்தாதாவும் (முன்னதாகவே) அட்வான்ஸ் ஹோலி கொண்டாடினார். தெரியுமா என்ன ஹோலி கொண்டாடினார்? அட்வான்ஸ் பார்ட்டியை சார்ந்த அனைவரும் புதியவர்கள் மற்றும் பழையவர்கள், இப்பொழுது சென்ற மகா ரதிகளையும் கூட நீங்கள் நினைவு செய்கிறீர்கள்தானே, அவர்களையும் எமர்ஜ் செய்தார். ஏனென்றால் இப்பொழுது சென்றவர்களும், சிறு வயதிலிருந்தே அதாவது அதிக காலமாக தன்னுடைய சேவைக்கான நடிப்பை நடித்து வந்தார்கள். நீங்களும் அந்த துணையாக இருந்தவர்களை நினைவு செய்கிறீர்கள் அல்லவா! இடத்தை நிரப்ப வேண்டி உள்ளது தானே. எனவே இன்று வதனத்தில் மம்மா மற்றும் தீதி, தாதி, திரி மூர்த்திகளையும் விசேஷமாக கூட்டத்தின் நடுவே பாபா நிற்க வைத்தார் மேலும் இன்னும் துணையாக அதிகம் இருந்தார்கள் ஆனால் இந்த மூவருடைய விசேஷ நடிப்பால் நிறுத்தி வைக்கப்பட்டது மேலும் அவர்களுக்கும் நினைவூட்டப்பட்டது, நினைவும் உள்ளது ஆனால் இவர்களுக்கு குப்தமான முறையில் சேவை செய்ய வேண்டியுள்ளது. அமிர்த வேளையில் இவர்களும் கூட எமர்ஜ் ஆகி விடுகிறார்கள். மேலும் சேவைக்கும் செல்கிறார்கள். சேவையானது விசேஷமான ஆத்மாக்களை விடுவதில்லை. வதனத்தில் அமிர்த வேளையில் இவர்கள் வந்தே ஆக வேண்டும். இது நிச்சயிக்கப்பட்டது, தன்னுடைய உண்மையான பிராமண வாழ்வில் எமர்ஜ் ஆவது மற்றும் ஏதேனும் ஒரு சேவையின் காரணமாக மனதாலோ, புத்தியாலோ ஆத்மாக்களின் மனம் மற்றும் புத்தியை வசீகரம் செய்கின்ற விசேஷமான சேவை செய்கின்றார்கள். எனவே பாப்தாதா இன்று திரி மூர்த்திகளிடமும் கேட்டார். நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கின்றீர்கள்?

பாபாவிற்குத் தெரியும், இருந்தாலும் கேட்பார் அல்லவா. அவர்களும் கூறினார்கள் நாங்கள் இரு விதமாக பிரேரணை தருகின்றோம், ஒன்று ஆர்பாட்டம் செய்கின்றவர்களுக்கும் மற்றொன்று புதிய சிருஷ்டியை படைப்பதில் நிமித்தமானவர்களுக்கும். ஏனென்றால் நாங்கள்

எதிர்ப்பார்த்துக் கொண்டிருக்கின்றோம். மம்மாவும் சொல்கின்றார்கள் நாங்கள் வெகு நேரமாக காத்து கொண்டிருக்கின்றோம். எனவே எங்களுடையத் தோழிகளை கேளுங்கள் இன்னும் எது வரையில் எதிர்ப்பார்த்து கொண்டிருப்பது கொஞ்சம் ஏற்பாடும் செய்யலாமல்லவா! எனவே மம்மா மற்றும் தாதி, தீதி தோழிகளோடு இனிமையானவர்கள். தோழர்களும் இருக்கிறார்கள். உடனிருப்பவர்கள் சகோதரர்கள். சகோதரிகளும் இருக்கிறார்கள் அவர்களுடைய கேள்வி எதிர்ப்பார்த்திருப்பது எங்களுடைய வேலை அட்வான்ஸ் ஸ்டேஜில் உள்ள உங்களுடைய நடிப்பு என்ன? நங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். உங்களுடைய வேலை ஏற்பாடுகளை செய்வது. எங்களுடைய வேலை எதிர்பார்ப்பது. எனவே எப்பொழுது தேதி நிச்சயிப்பீர்கள்? நீங்கள் பாபாவின் குழந்தைகள் அனைவரும் எப்பொழுது பாப்சமான் சம்பூர்ணம் அடைவீர்களோ அப்பொழுது ஏற்பாடும் நடக்கும். அப்பொழுது தீதியும் சொல்கிறார் என் தரப்பில் ஒரு கேள்வி எல்லோரிடமும் கேளுங்கள். தீதி என்ன சொன்னார்? உங்களுக்கே தெரியும், நீங்களே சொல்கிறீர்கள் எவரெடி அப்படியென்றால் சம்பன்னம் மற்றும் சம்பூர்ணம் ஆவதில் எவரெடியா? மேலும் தாதி என்ன கூறினார்? இன்று ஆன்மீக உரையாடல் நடந்துக் கொண்டிருந்தது தாதி கூறினார்கள் யார் வந்து என்னை சந்தித்தாலும், அனைவருமே சொல்வார்கள் என்னைப் பார்த்து தாதி நீங்கள் கர்மாதீத் நிலையை அடைந்து விட்டீர்கள். கர்மாதீத் ஆக வேண்டுமென்பதே உங்களுக்குள் ஆர்வம் இருந்துக் கொண்டேயிருக்கின்றது. நாங்களும் உங்களோடே வருவோம்தானே. எனவே இப்பொழுதும் கூட நான் என்னுடைய தோழிகளுக்கு சொல்கின்றேன் கர்மாதீத் நிலையை அடையத்தான் வேண்டும் எப்பொழுது? என்ற வார்த்தையை இப்பொழுது என்று, எப்பொழுது மாற்றுவீர்கள்? இதை பார்த்து பாபாவும் புண்முறுவல் செய்து கொண்டிருக்கின்றார். இன்று முதலில் இவர்களுடைய ஆன்மீக உரையாடல் நடந்து கொண்டிருந்தது, இன்னும் சிலர் இவர்களோடு இருந்தார்கள். மம்மா மிக நன்றாக கூறினார். தீதி நீங்கள் இன்னும் சற்று வேகமாக சொல்லுங்கள் மேலும் தாதிக்கும் கூறினார் தாதி நீங்கள் எல்லோருடனும் துணையாக இருந்தீர்கள். பாபாவினுடைய அவ்யக்த நிலைக்கு பிறகு நீங்கள் நடித்த நடிப்பு எங்கள் அனைவர் உள்ளங்களிலும் தாதிஜியைப் பற்றி இந்த விசயம் நினனவு வருகிறது, மேலும் அவர்களுக்கு யாரெல்லாம் துணையாக

இருந்தார்களோ, அவர்களும் கூறினார்கள் தாதி நீங்கள் உங்களுடைய விசயங்களை நினைவூட்டிச் செல்லுங்கள். பாபா அவ்யக்தமாக இருக்கின்றார். சிவ பாபா நிராகாரமாக இருக்கின்றார், அவர் அவ்யக்த பரிஸ்தாவாக இருக்கின்றார் ஆனால் தாதி சாகாரத்தில் இருந்தார். இப்பொழுது நீங்கள் எதை நினைத்தீர்களோ அதை செய்து காண்பியுங்கள். தாதி பொறுப்பேற்று செய்து காண்பியுங்கள். அர்த்தம் என்னவென்றால் அந்தளவிற்கு இன்று மனம் திறந்து ஆன்மீக உரையாடல் செய்து கொண்டிருந்தார்கள். கேட்டீர்களா. இப்பொழுது என்ன செய்ய வேண்டும்?

ஹோலி கொண்டாடி விட்டீர்களல்லவா! நேற்றைய விசயங்களும் போய் விட்டது, இனி அடுத்த ஜென்மத்திற்காக என்ன நினைக்க வேண்டும். எல்லோரும் உரையாடல் நடத்திக் கொண்டிருந்தார்களல்லவா. அப்பொழுதே பாப்தாதாவும் ஹோலி கொண்டாட ஆரம்பித்து விட்டார். அனைவருமே வென்னிற ஆடையிலிருந்தார்கள் மேலும் வதனத்தில் பரிஸ்தா ரூபத்திலிருந்தார்கள். உடனே பாப்தாதாவும் எதிர்ப்பாரா விதமாக ஹோலி கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள் என்று சொல்லவில்லை ஆனால் அனைவரும் பிறைச் சந்திரன் ரூபத்தில் அமர்ந்திருந்தார்கள். நிற்கவில்லை. அமர்ந்திருந்தார்கள், நான்கு, ஐந்து வரிசை இருந்தது மேலும் பெரியவர். சிறியவர் என்று நியமப்படி முன்னால் சிறியவரும் பின்னால் பெரியவரும் இருந்தனர். அப்பொழுது பாப்தாதா என்ன செய்தார்? எதிர்ப்பாரா விதமாக ஏழு வர்ணங்கள் அடங்கிய வைரம் தெரியுமல்லவா, அதனை தூள் செய்து அந்தத் தூளை அனைவர் மீதும் தூவப்பட்டது அப்படித் துவும் பொழுது ஒன்று பரிஸ்தா ஆடையில் மின்னிக் கொண்டிருந்தது மேலும் அதன் மீது ஏழு வர்ணங்கள் அடங்கிய பவுடர் தூவப்பட்டது அது விரிந்து விட்டது இப்பொழுது நீங்கள் எமர்ஜ் செய்துப் பாருங்கள் மினு மினுப்பான ஆடையோடு ஏழு வர்ணங்கள் அடங்கிய பவுடர் தூவியபொழுது அந்த ஆடை எவ்வளவு அழகாக இருக்குமென்று? சத்யுகத்திலும் கூட அப்படிப்பட்ட ஆடை கிடைக்காது அனைவரும் மினு மினுப்புடன் திகழ்ந்தார்கள் இந்த ஆடை மின்னியவுடன் தீதியும் போதையில் சென்றுவிட்டார். இங்கே இருக்கும்பொழுது எப்படி செல்வாரோ அப்படியே போதையில் சென்று அனைவருமே நடனம் ஆட ஆரம்பித்து விட்டார்கள். ஒருவரை ஒருவர்

கைப் பிடித்துக் கொண்டு நடனம் ஆடினார்கள் பிறகு பாபாவும் மதுபனில் நீங்கள் செய்கின்ற இனிப்பு மிட்டாயை எமர்ஜ் செய்தார். மதுபனிலிருந்து வரவில்லை அது, ஆனால் அங்கே அந்த மிட்டாய் (கேவர்) அனைவருக்கும் கொடுக்கப்பட்டது. இப்படி அனைவரும் மிகவும் ஆனந்தத்தோடு கொண்டாடினார்கள். நீங்களும் பரிஸ்தா ஆடையில், எப்படி வித விதமாக ஆடை மாற்றுகின்றீர்கள் அல்லவா? அப்படியே நாள் முழுவதும் இடை இடையில் பரிஸ்தா ஆடையை மாற்றி அணிந்து சோதனை செய்யுங்கள். பாப்தாதாவை எமர்ஜ் செய்யுங்கள் 5-நிமிடம், 10-நிமிடத்திற்காக எமர்ஜ் செய்யுங்கள் நான் பரிஸ்தா ரூபத்திலிருக்கிறேன், அடுத்து வேறு ஆடையை மாற்றிக் கொள்ளுங்கள், மின்னும் சாதாரண ஆடையிலிருந்து பரிஸ்தா ரூபத்தின் ஆடையை அணிந்துக்கொள்ளுங்கள் மேலும் பாப்தாதா சில சமயம் ஞானம், சில சமயம் சக்திகள், சில சமயம் குணங்கள் என்ற வர்ணங்களையும் தூவிக் கொண்டிருக்கின்றார். பரிஸ்தா ஆடையில் பரிஸ்தாவாக மாறி 5-10 நிமிடங்களுக்கு அனுபவம் செய்யுங்கள் பிறகு ஆடையை மாற்றிக் கொள்ளுங்கள். கர்ம யோகி அல்லவா. எனவே நாள் முழுவதும் எப்பொழுதெல்லாம் நேரம் கிடைக்குமோ அப்பொழுதெல்லாம் பரிஸ்தா ஆடையை அணிந்துக் கொள்ளுங்கள். பிறகு பாபா மூலமாக இந்த வர்ணங்களைத் தூவுவதாக அனுபவம் செய்யுங்கள், இப்போதிலிருந்தே இந்த பரிஸ்தா ஆடையை அணிந்த அனுபவத்தை பயிற்சி செய்வீர்கள்தானே. ஏனென்றால் ஆடையை அணிந்தவுடனேயே போதை அதிகரிக்கும், பரிஸ்தா ஆவதற்கான உதவியும் கிடைக்கும். எனவே ஹோலி நாளில் இந்த ஒரு பரிசை பாப்தாதா, நாலாபுறமும் உள்ள குழந்தைகளுக்கு வழங்குகிறார். ஆடை அணிந்து பயிற்சி செய்து கொண்டேயிருங்கள், மறந்து விடாதீர்கள் பரிஸ்தா ஆடை ஹோலி தினத்தின் பரிசு. எனவே இதனை இடையிடையே பயிற்சி செய்து கொண்டிருங்கள். சுலபம்தானே. ஆடை மாற்றத் தெரியுமா? தெரியுமா? எப்படி இந்த ஆடை மாற்றுகிறீர்களோ, தினமும் மாற்றுகிறீர்கள் தானே. அப்படியே பரிஸ்தா ஆடையும் மாற்றி பாருங்கள். எவ்வளவு பளபளப்பான, அழகான ஆடை இது. கேட்டீர்களா.

இன்று வதனத்தின் சமாச்சாரம் சொல்லப்பட்டது நீங்கள் அனைவரும் கூட நினைவு செய்கிறீர் களல்லவா அட்வான்ஸ் பார்ட்டியில் நம்முடைய அனைவருமே, ஏனென்றால் சிலர் வித விதமான

இடங்களிலிருந்தும் சென்றிருக்கிறார்கள். அப்படி சென்றவர்களை நினைவு செய்கின்றீர்கள்தானே. பாப்தாதாவும் அமிர்த வேளையில் விசேஷமாக அட்வான்ஸ் பார்ட்டி மூலமாக சேவை செய்விக்கிறார். ஏனென்றால் உலகம் முழுவதும் உறங்கிக் கொண்டிருக்கிறது அப்பொழுது இவர்கள் ஆடை மாற்றிக் கொண்டு வதனத்திற்கு வந்து விடுகின்றார்கள். கேட்டீர்களா. இப்பொழுது என்ன செய்வீர்கள்? இந்த பயிற்சி மறக்காதீர்கள். ஆடை மாற்றிக் கொள்ளுங்கள், நாள் முழுவதிலும் எத்தனை முறை பரிஸ்தா ஆடையில் அமர முடியுமோ 3- அல்லது 4-நிமிடம் அமருங்கள் கண்டிப்பாக அமருங்கள். கண்டிப்பாக ஆடை மாற்றுங்கள். இப்பொழுதிலிருந்தே சம்ஸ்காரங்களை உருவாக்குங்கள். பரிஸ்தா ஆகாமல் தேவதை ஆக முடியாது. நல்லது.

நல்லது. முதலில் அனைத்து பக்கங்களிலும் உள்ள குழந்தைகளையும் பாப்தாதா பார்க்கின்றார். தூரத்தில் அமர்ந்துக் கொண்டும் அயல் சாதனங்கள் மூலமாக பெரும்பான்மையான இடங்களில் சென்டரிலிருந்துக் கொண்டும் கூட பாப்தாதாவை பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். நீங்கள் டோலி சாப்பிடுகின்றீர்கள் அல்லவா? அப்பொழுது அவர்களும் டோலி வழங்குகின்றார்கள். இப்படி அனைவரையுமே பாப்தாதாவும் கூட பார்த்து கொண்டிருக்கின்றார், எப்படி அவர்களெல்லாம் துாரத்திலி ருந்து கொண்டே அருகாமையை அனுபவம் செய்து கொண்டிருக்கின்றார்கள். எனவே நாலாபுறமும் உள்ள குழந்தைகளுக்கு சதா பாப்சமான் சம்பன்னம் மற்றும் சம்பூர்ணம் ஆக வேண்டும், இந்த சங்கல்பத்தை தாரணை செய்து மேலும் திடத்தன்மை என்கின்ற சக்தியை சமயத்திற்கேற்ப சமயம் இந்த சங்கல்பத்திற்கு கொடுத்துக் கொண்டேயிருக்கிறார்கள், இப்படி சுப சங்கல்பங்களை தாரணை செய்கின்ற அனைத்து பக்கங்களிலுள்ளவர்கள், அதோடு மட்டுமல்லாமல் பாபாவின் ஆசைகளை பூர்த்தி செய்கின்ற ஆசைகளின் நட்சத்திரம், மேலும் தாதிஜியின் வார்த்தை கர்மாதீத் நிலையை அடைந்தே ஆக வேண்டும். நடந்தே ஆக வேண்டும், நடந்தே ஆக வேண்டும். மேலும் மம்மாவின் இந்த வார்த்தையை அதாவது எதை செய்ய வேண்டுமோ இன்றே செய்யுங்கள் நாளை என்று விட வேண்டாம், தீதி அவர்களின் இந்த வார்த்தை இப்பொழுது வீடு செல்ல வேண்டும் இது காதுகளில் ஒலித்து கொண்டேயிருக்க வேண்டும். அடிக்கடி இப்பொழுது வீடு செல்ல

வேண்டும். இது ரீங்காரம் இட்டு கொண்டேயிருக்க வேண்டும் கர்மாதீத் நிலையை அடைய வேண்டும், இப்பொழுது வீடு செல்ல வேண்டும். இந்த வார்த்தை அடிக்கடி நினைவில் கொண்டு வரக்கூடிய சக்திசாலியான ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் ஹோலி குழந்தைகளுக்கு ஹோலி நன்னாளில் வாழ்த்துக்கள், மேலும் அதோடு பாப்தாதா முதலிலேயே மதுபனுடைய கேவர் மிட்டாயை எல்லோருடைய வாயிலும் போட்டு விட்டார் சாப்பிடுங்கள். சாப்பிட்டீர்களா, அனைவருக்கும் பன்மடங்கு பாப்தாதாவுடைய மற்றும் அட்வான்ஸ் பார்ட்டியினுடைய அனைத்துக் குழந்தைகளுக்கும் பாபாவின் நமஸ்காரங்கள்.

உ.பி, பனாரஸ் மற்றும் மேற்கு நேப்பாளம் சேவை முறை: உ.பி.யோடு மோகினி சகோதரி எழுந்திரியுங்கள். நல்லது உ.பி.யில் என்ன விசேஷம் உள்ளது? ஆதியில் சென்டர் திறக்கப்பட்டது விசேஷம். பாப்தாதா, மம்மா முதன் முதலில் உபி சென்டரில் இருந்தார்கள். மேலும் உ.பி. யில் ஞான நதிகளின் விழாவும் நடந்தது மிகப் பெரிய நதியான கங்கா நதி, ஜமுனா டெல்லியில் மற்றும் உபி கங்கை நதி. கங்கை நதியின் மகிமை என்ன? பதீத பாவனி தூய்மையாக மாற்றக் கூடியது). எனவே உ.பி யைச் சார்ந்தவர்களுக்கு சதா இதே ஆர்வம் இருக்க வேண்டும் பதீத பாவனியாக மாறி பதீதமான (தூய்மையற்ற) ஆத்மாக்களுக்கு ஏதாவது அஞ்சலி கொடுத்துக் கொண்டேயிருக்க வேண்டும். இப்பொழுது உ.பி.யில் சென்டர் வளர்ந்து கொண்டே யிருக்கிறதல்லவா? அதிகமாகி உள்ளதா? ஆதியில் அழகிருந்தது சமர்ப்பணத் தம்பதியர்கள் உ.பி.யிலி ருந்து ஆரம்பமானார்கள். எனவே இப்பொழுதும் கூட உபி. யில் ஏதாவது புதிய காரியம் செய்து காண்பியுங்கள் இந்த கொண்டாட்டம், இந்த மாநாடு இது எல்லாம் நடப்பதுதான், நடந்துக் கொண்டே யிருக்கும் ஆனால் ஏதாவது புதியதாக செய்து காண்பியுங்கள். அனைத்து மண்டலமும் நினைக்கிறது ஏதாவது புதியதாக செய்து காண்பிக்க வேண்டும். டெல்லியை சார்ந்தவர்களும் நினைக்கிறீர்கள்தானே நல்லது ஏதாவது செய்து கொண்டேயிருங்கள். பிராமண உலகத்தில் ஏதாவது விழிப்புணர்வுக்காக பிரசுரிக்கப்பட்டுக் கொண்டேயிருக்க வேண்டும், உங்களுடைய செய்தித் தாளும் இருக்கிறதுதானே. எனவே ஏதாவது புதிய செய்தி செய்தி தாள்களில் வர வேண்டும். மற்றபடி யக்ஞ சேவையில் உ.பி.யும் குறைந்தது அல்ல. நல்ல கூட்டம் வந்துள்ளது.

பாப்தாதா குஷி அடைகிறார். டீச்சரும் அதிகம் இருக்கிறார்கள் ஆனால் எப்படிப்பட்ட ஆசிரியர்கள்? பாப்தாதாவை தெரிந்துள்ளீர்களா, அப்படியே ஆசிரியர்களும் தன்னுடைய முகம் மற்றும் நடத்தை மூலமாக அனைவருக்கும் தன்னுடைய எதிர்காலத்தைக் காண்பிக்க வேண்டும். இப்போதைய எதிர்காலம் என்ன? பரிஸ்தா. நாளைய எதிர்காலம் தேவதா. எனவே ஒவ்வொரு டீச்சரும் இப்போதைய எதிர்காலம் பரிஸ்தாவாக, தேவதை என்பது நாளைதான் ஆவீர்கள் ஆனால் இறுதி நேரத்தின் சொரூபம் பரிஸ்தா என்பது, அந்த தோற்றம், அதாவது நடத்தை மற்றும் முகத்தில் தெளிவாக தென்பட வேண்டும் ஆரம்பத்தில் நீங்கள் சேவைக்குச் சென்றபொழுது, 14-வருடங்கள் தபஸ்யா மற்றும் பாப்தாதா, தாயின் பாலனை அனைத்தும் பெற்றீர்கள், அப்பொழுது ஆரம்பத்தில் முதலில் சேவைக்கு சென்றபொழுது சேவாதாரி ஆத்மாக்களான உங்கள் மூலம் மாணவர்களுக்கு சில சமயம் ஒலி கிரீடம், சில சமயம் மின்னுகின்ற நெற்றியில் பிந்து நட்சத்திரம் தென்பட்டது. மேலும் கண்டறியும் சக்தி உங்களிடம் மிகவும் தீவிரமாக இருந்தது அசுர சுபாவமுடையவர்கள் யார் வந்தாலும், ஏனென்றால் குமாரிகள் என்ற பெயர் இருந்தது அல்லவா, ஆனால் அவர்களுடைய நடத்தை அப்படி இல்லை, அந்தளவிற்கு சக்தியாக இருந்தார்கள். எதிரே வந்தவர்கள் அவர்களாகவே காலில் விழுந்து கூறினார்கள் நாங்கள் என்னவோ நினைத்தோம், ஆனால் நீங்கள் யார் என்றுப் புரிந்து கொண்டோம்! இது தூய்மையின் அதிசயமாக இருந்தது. அதுவே பிரத்யட்சமாக நடத்தையிலும் கணவிலும் கூட இருந்தது. (தூய்மையின்மை) அபவித்திரம் என்பது கனவிலும் கூட. இருக்கவில்லை. இப்பொழுது மீண்டும் தன்னுடைய சேவையின் துணையாக இருப்பவர்களிடமும் இந்த லைட் மற்றும் மைட் திடமாக கொண்டு வர வேண்டும். அவ்வளவு சுலபம் இல்லை. நினைக்கிறார்கள் அனைவருமே டீச்சர் என்றால் நிமித்தமானவர்கள் பாபாவின் பக்கமும், மேலும் பாப்தாதாவிற்கும் ஆசிரியர்கள், சிறியவர், பெரியவர் யாராயினும் அவர்களுக்காக மனதில் அதிகமான அன்பு உள்ளது. ஏனென்றால் பாபாவின் காரியத்தில் சக யோகியாக இருக்கின்றார்கள். நிமித்தமாக இருக்கின்றார்கள், சக யோகியாக இருக்கின்றார்கள். நாலாபுறமும் உள்ள அனைத்து மாணவர்களுக்கு முன்பாகவும் சாகார ரூபத்தில் ஆசிரியர்கள் நீங்கள்தான் இருக்கின்றீர்கள், அவ்யக்த ரூபத்தில் பாப்தாதா இருக்கின்றார். மேலும் அட்வான்ஸ் பார்ட்டியும்,

உங்களுக்கு சக்தி கொடுத்துக் கொண்டேயிருக்கின்றார்கள், அமிர்த வேளையில் வதனத்தில் வரும்பொழுது தன் தோழியர்களையும் நினைவு செய்கின்றார்கள். சென்டர்களையும் நினைவு செய்கின்றார்கள். எனவே நம்பர்-1 உ.பி. வர வேண்டும், ஆகிக் கொண்டேயிருக்கின்றீர்கள். விந்தை செய்வீர்கள், செய்தே ஆக வேண்டும்.

ஸ்பார்க் மற்றும் அயல் மற்றும் இஞ்சினியர் துறையை சார்ந்தவர்களுக்கான மீட்டிங்: நல்லது. மீட்டிங் நீங்கள் எல்லோருமே நன்றாக செய்து கொண்டேயிருக்கின்றீர்கள். மேலும், நன்றாக ஊக்கம் உற்சாகத்தோடு செய்கின்றீர்கள். இதை பாப்தாதாவும் பார்க்கின்றார் மேலும் கேட்டுக் கொண்டும் இருக்கின்றார். தாரணைக்கான திட்டங்களும் தீட்டிக் கொண்டேயிருக்கின்றீர்கள். பாப்தாதாவும் செய்திகளைக் கேட்டார். அனைவரும் தன்னுடைய சுய முன்னேற்றத்திற்காகவும் மற்றும் சேவைக்கான திட்டங்களும் புதுப் புது விதமாக செய்து கொண்டேயிருக்கின்றீர்கள். இப்பொழுது இதே லட்சியத்தை வையுங்கள். இப்பொழுது உலக மக்களுக்கு ஆறுதல் தர வேண்டியது அவசியமாக உள்ளது. பாவம் அவர்கள் சூழ்நிலைகளைப் பார்த்து பயந்து கொண்டிருக்கின்றார்கள். பயமே எங்கும் நிரம்பியுள்ளது. எனவே அனைவருக்கும் இந்த சமயத்தில் உண்மையில் உங்களைப் பொறுத்தவரையில் உலகத்தில் உள்ள அனைத்து ஆத்மாக்களுமே உங்களுடையவர்கள், ஆனால் முக்கியமாக நீங்கள் தன்னுடைய துறையைச் சார்ந்தவர்களுக்கு ஆறுதல் வழங்குங்கள் நீங்கள் இந்த தியானம் பயிற்சி செய்தால் உங்களுடைய இந்த பயம் டென்ஷன் எல்லாம் அழிந்து விடும். முதலில் ஞானம் கொடுக்காதீர்கள், முதலில் தியானம் செய்யக் கற்றுக் கொடுங்கள். அதற்கு அழைப்பு விடுங்கள். டென்ஷன் ஃப்ரி லைப் (மன உளைச்சலிலிருந்து விடுபட்ட வாழ்க்கை) இதற்கான அனுபவம் செய்யும் நிகழ்ச்சிகளை அதிகம் செய்யுங்கள். செய்கிறீர்கள் ஆனால் இப்பொழுது அதிகமாக செய்யுங்கள். அவர்களுக்கும் ஆத்மீக சக்தியை அனுபவம் செய்ய வையுங்கள். சொற்பொழிவு மட்டுமல்ல ஆனால் அனுபவம் செய்ய வையுங்கள், குழு சிறியதோ, பெரியதோ எதுவாக வேண்டு மாயினும் இருக்கலாம். அனுபவம் அடைந்தவர்கள் ஒருபொழுதும் இருந்து விட முடியாது. மேலும் அனுபவம் என்கின்ற அதாரிட்டி நம்பர்-1 ஆகும். அனுபவமுடையவர்கள் வேறு யாருடைய வார்த்தைகளிலும் வசமாகி

ஏமாந்து விட மாட்டார்கள். இன்னல்களில் பயந்து போக மாட்டார்கள் ஏனென்றால் மெடிடேஷன் மூலமாக சக்தி அனுபவம் ஆகியுள்ளது. எனவே மெடிடேஷனுக்கான ஆர்வத்தை அதிகமாக அனுபவம் செய்ய வையுங்கள். மற்ற நிகழ்ச்சிகளெல்லாம் நடத்திக் கொண்டுத் தானிருக்கின்றீர்கள் அவையெல்லாம் நடந்துக் கொண்டேயிருக்கும் மேலும் நடத்துங்கள் ஆனால் இதில் விசேஷமாக கவனம் கொடுங்கள். யார் வந்தாலும் கோர்ஸ் கொடுக்கின்றீர்கள், ஆனால் கோர்ஸ்சின் இடையே அனுபவம் செய்தார்களா அல்லது ஞானம் மட்டும் எடுத்தார்களா? அனுபவம் கண்டிப்பாக செய்ய வையுங்கள். எந்த விஷயமாக இருந்தாலும், ஞானம் என்ற முறையில் பரமாத்மா ஞானம் கொடுத்தாலும் இதை அனுபவம் செய்ய வையுங்கள். யோகத்தின் மூலமாக தன்னுள் சக்திகளை அனுபவம் செய்யட்டும், தைரியம் வரட்டும் எந்த விசயத்திற்கும் இன்னல்களுக்கு தீர்வு காணும் வகையில் தைரியம் வரட்டும். மேலும் தாரணை செய்வதற்கான தைரியம் வரட்டும், இல்லையென்றால் தாரணை என்று கேட்ட உடனேயே பயந்து விடுகிறார்கள். முதலில் பிராப்தி என்னவென்று சொல்லுங்கள். லாடம் என்னென்ன கிடைக்கின்றது. இதைப் பற்றித் தெரிந்து கொண்டால் ஈர்க்கப்பட்டு அனைவருமே செய்ய ஆரம்பித்து விடுவார்கள். பரமாத்மா பற்றி அறிமுகம் கொடுக்கும் பொழுது கூட முதலில் பிராப்திகள் என்னவென்று சொல்லுங்கள். அதனுடைய ஆதாரத்தில் கவர்ந்திழுக்கப்படுவார்கள். என்ன கிடைக்கும், என்னவாக மாறுவார், எப்படி இன்னல்கள் தானாகவே சகஜமாகி விடும், இப்படிப்பட்ட அனுபவ விசயங்களே சொல்லுங்கள். மற்றபடி ஒருவருக்கொருவர் நீங்கள் சந்திக்கின்றீர்கள். பாப்தாதாவிடமும் அதைப் பற்றி செய்திகள் வருகின்றது. பாப்தாதாவும் குஷி அடைகின்றார். இப்படியும் குழுவாக சந்திப்பது ஒரு விழாவாகிறது, பிராமணர்களுக்கும் ஒரு புத்துணர்ச்சி கிடைக்கின்றது. ஒருவருக்கொருவர் சந்திக்கும்பொழுது ஏதாவது அறிவுரைகளும் கொடுக்கின்றீர்கள். இப்படி இரண்டு துறையை சார்ந்தவர்களும் நன்றாகச் செய்து கொண்டிருக்கின்றீர்கள் இனியும் செய்து கொண்டேயிருப்பீர்கள். இதில் பாப்தாதாவிற்கும் குஷி இருக்கிறது, நல்லது.

**இரட்டை அயல்நாட்டைச் சார்ந்த சகோதர, சகோதரிகளும் 80-தேசங்களிலிருந்து வந்துள்ளார்கள்**: இந்த முறை இரட்டை

அயல்நாட்டை சார்ந்தவர்கள் வித விதமான நிகழ்ச்சிகளை செய்துள்ளார்.கள் தம்பதியர்களுக்காக, ஆசிரியர்களுக்காக தம்பதியர்களாக வந்துள்ளவர்கள் கை உயர்த்துங்கள். பாப்தாதாவும் பார்க்கின்றார், தம்பதியர்கள் மிக நன்றாக தயாராகியுள்ளார்கள் ஆனால் பாபாவினுடைய ஆசையை பூர்த்தி செய்யவில்லை. என்ன ஆசை? ஏதேனும் மகா மண்டலேசுவரர்களை பாதங்களில் தலை வணங்கச் செய்யுங்கள். ஏனென்றால் நீங்கள் சுலபமாக அவர்களை தோல்வி பெறச் செய்ய முடியும். நீங்கள் முடியாது என்று சொல்வதை நாங்கள் சகஜமாக செய்து காண்பிக்கின்றோம். தன்னுடைய அனுபவத்தின் அதாரிட்டி மூலமாக அவர்களை தலை வணங்கச் செய்ய முடியும். அப்பொழுதுதான் கீதையின் பகவான் யார் என்பது கூட ஊர்ஜிதமாகும். தம்பதியர்களிடையே இவ்வளவு சக்தி உள்ளது எனும்பொழுது அவர்கள் சாந்தமடைந்து விடுவார்கள் பிறகு அனைத்து விசயங்களையுமே ஏற்றுக் கொள்ள இசைவார்கள். எனவே பாப்தாதாவிற்கு நன்றாக இருக்கின்றது. தம்பதிகள் மிகவும் விந்தைகள் செய்து காண்பிக்க முடியும், ஏன்? இப்பொழுதும் செய்துள்ளீர்கள், நீங்கள் தம்பதியராக சென்றுக் கொண்டிருக்கும்பொழுது பழையவர்களாகவும் மாட்டீர்கள் இதை பார்த்து, கேட்டு எவ்வளவு கூட்டம் அதிகரித்துள்ளது. ஒரு வேலை செய்துள்ளீர்கள், ஊக்கம் உற்சாகத்தை மக்களிடையே அதிகரித்து விட்டீர்கள் நாமும் செய்ய முடியும் என்று, எதையும் விட்டு விட வேண்டுமென்ற அவசியமில்லை, விடுவதை நினைத்தால் பயப்படுகிறார்கள் ஆனால் நீங்கள் விட வில்லை, நீங்கள் காப்பாற்றி வருகின்றீர்கள். ஏதாவது விட்டீர்களா? வெண்ணிற ஆடை அணிந்தீர்களா, பல வண்ண ஆடைகள் அணிவதில் தடையில்லை ஆனால் பள்ளியில் கூட சீருடை என்று ஒன்று உள்ளது. அவ்வளவுதான் வேறு எதற்கும் தடையில்லை. எனவே தம்பதியர்கள் சவால் விட்டு விந்தைகள் செய்து காண்பிக்க முடியும். எனவே அப்படிப்பட்ட நிகழ்ச்சிகளை அமையுங்கள். முதலில் எந்த தம்பதியர்கள் தயாராகின்றார்கள். முதலில் முயற்சி செய்து பாருங்கள், யாராவது அப்படி தொடர்பில் இருப்பவர்கள் இருந்தால் அவர்கள் மூலம் முயற்சி செய்து காண்பியுங்கள் பிறகு ஒருவர் சாந்தமாகி விட்டால் மற்றவரும் சாந்தமாகி விடுவார்கள். பாப்தாதாவிற்கு நன்றாக இருக்கிறது. தம்பதியினர்களின் மாநாடு நன்றாக இருக்கின்றது. நல்லது.

இப்பொழுது வெளிநாட்டைச் சார்ந்த டிரெயினிங் ஆசிரியர்கள் எழுந்திரியுங்கள்: -நல்லது. ஆசிரியர்கள் டிரெயினிங் கிடைப்பது நல்லது என்று நினைக்கின்றீர்களா? யார் இதை அவசியம் என்று நினைக்கின்றீர்களோ, நல்லது என்று நினைக்கின்றீர்களோ அவர்கள் கை உயர்த்துங்கள், நிமித்தமான ஆசிரியர்களுக்கு வாழ்த்துக்கள். ஏனென்றால் முயற்சி அதிகம் செய்துள்ளீர்கள் நேர்முகமாக சேவை இவர்கள் செய்வார்கள். புண்ணியம் என்பது நிமித்தமாக இருக்கின்ற உங்களுக்கு கிடைத்து விடும். இது நன்றாக இருக்கிறது, புதிய புதிய ஆசிரியர்களும் உருவாகிக் கொண்டேயிருக்கிறார்கள் இதுவும் நாடகத்தில் நடிப்பு உள்ளது. அயல் நாட்டில் பாருங்கள் எத்தனை புதியப் புதிய சென்டர்கள் திறந்துக் கொண்டேயிருக்கிறார்கள். மிகவும் மகிழ்ச்சிக்கான விசயம், டிரெயினிங் எடுத்துக் கொண்ட நீங்கள் இனி வர இருக்கின்றவர்களுக்கும் வெகு விரைவாக பறக்க வைப்பதில் நிமித்தமாக இருப்பீர்கள். பாப்தாதா அனைத்து அயல் நாட்டவர்களுக்கும், ஒன்று வாழ்த்துக்களை தெரிவிக்கின்றார் வேலைக்கும் செல்கின்றார்கள். சென்டரையும் பார்த்துக் கொள்கின்றார்கள் அனைவரும் கை தட்டுங்கள். டீச்சராகி சென்டரை நடத்துவது என்பது கூட மிகப் பெரிய பாக்கியம் தான். இது சாதாரண விசயம் அல்ல? ஏனென்றால் டீச்சராவது என்றால் நிகழ்காலத்தில் பாபாவின் ஆசனத்திற்கும் மாலிக்காவது, அதுதான் முரளி சொல்வது, ஆத்மாக்களை புத்துணர்ச்சி செய்விப்பது. பாப்தாதா ஆசிரியர்களை குரு பாயி என்று சொல்கின்றார். ஏனென்றால் முரளி சொல்கின்ற ஆசனத்திற்கு அதிகாரி ஆகியுள்ளீர்கள். நிமித்தமாகியுள்ளீர்கள். லாபமும் உள்ளது சட்டமும் உள்ளது, இரண்டுமே உள்ளது ஆனால் பாப்தாதாவிற்கு குஷி என்னவென்றால் நீங்கள் தன்னுடைய விருப்பத் தோடு நேரம் ஒதுக்கி வந்துள்ளீர்கள் டிரெயினிங் எடுப்பது இது பாப்தாதாவிற்கு மிகவும் பிடித்துள்ளது. இவ்வளவு பேர் டிரெயினிங் எடுத்துள்ளீர்கள் மிகவும் நன்றாக இருக்கிறது. நிமித்தமாக இருக்கின்றீர்கள் மேலும் நிமித்தமானவர்களுக்குப் பலனாக மிகப் பெரிய புண்ணியம் கணக்கில் சேமிப்பாகிறது. நிமித்த பாவனையை விடக்கூடாது. நான் என்பது வரக்கூடாது, நான் என்பது நாகம் (கரு நாகம்) விழுங்கி விடும் நிமித்தமாக இருக்கின்றேன். செய்பவர் செய்யவைக்கின்றார், நடத்துபவர் நடத்திக் கொண்டிருக்கின்றார் மேலும் (கம்பைண்ட்டாக) இணைந்தே இருங்கள். தனியாக பிரிந்து

விடக்கூடாது, தனியாக பிரிந்து விட்டால் மாயைக்கான கதவுகள் திறந்துக் கொள்ளும், பாப்தாதா மகிழ்ச்சி அடைகின்றார். வாழ்த்துக்களையும் வழங்கிக் கொண்டிருக்கின்றார் நல்லது. அயல் நாட்டைச் சார்ந்தவர்கள் ஒவ்வொரு வருடமும் ஏதாவது ஒன்று செய்து கொண்டேயிருங்கள். நல்லது. சேவைக்கான திட்டங்களும் தீட்டிக் கொண்டேயிருக்கின்றீர்கள் ஒருவருக்கொருவர் ஊக்கம் உற்சாகத்தை ஏற்படுத்திக் கொண்டே யிருங்கள் இது மிகப் பெரிய சேவை பாப்தாதா பார்க்கின்றார் டிரெயினிங் கொடுத்த நிமித்த ஆசிரியர்கள் எழுந்திரியுங்கள். இவரும் நன்றாக இருக்கின்றார் (சகோதரர் சார்லே) இந்த சகோதரர் அனைத்திலும் வாய்ப்புகளை எடுத்துக் கொள்கின்றார். இதுவும் நல்லது. பாப்தாதா உங்களுடைய சேவைக்கான பலனைப் பார்த்துக் குஷி அடைகின்றார். அனைவருடைய முகத்திலும் ஊக்கம் உற்சாகம் இருக்கின்றது, இதுவும் மிக நன்றாக இருக்கின்றது.

நல்லது. இப்பொழுது அனைவருக்கும் ஹோலிக்கான பரிசு என்ன தருவது, அது நினைவு உள்ளதா? நினைவு இருக்கிறதுதானே! பாப்தாதாவிற்கு ஒவ்வொரு குழந்தை மீதும் விசேஷமான அன்பு உள்ளது. நிமித்தமானவர்கள் மீது மட்டுமல்ல ஆனால் ஒவ்வொரு குழந்தையும் கோடியில் ஒருவர் தானே. கடைசி நம்பராக இருந்தாலும் கூட கோடியில் ஒருவர்தான் எனவே கோடியில் ஒருவர் என்றால் அவர் மகான் ஆகி விட்டார் அல்லவா ஆனால் எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும் கடைசியிலிருந்தாலும் அவர்கள் மீதும், சதா அவரை முன்னேற்றுவதற்காக ஒருவரை யொருவர் சுவமானின் திருஷ்டியோடு பாருங்கள், ஒவ்வொருவருக்கும் சுவமான் உள்ளது, கடைசி நம்பரில் உள்ளவருக்கும் சுய மரியாதை உள்ளது, கோடியில் ஒருவர் பிரசிடன்டைக் காட்டிலும் உயர்ந்தவர் தானே. தெரிந்து கொண்டிருக்கிறார், மேரா பாபா என்று சொல்கின்றார். எனவே சுய மரியாதையிலி ருங்கள் பிறருக்கும் சம மரியாதையைக் கொடுங்கள் (சுவமான் மற்றும் சம்மான்), ஒற்றுமை, கடைசி நம்பர் குழந்தைக் கூட ஒரு பாபாவின் குழந்தைத்தான். பாபாவை முன்னால் கொண்டுவாருங்கள். அந்த குழந்தையின் தவறை முன்னால் வைக்காதீர்கள். நமது குடும்பத்தைச் சார்ந்தவர். இதில் உற்சாகத்தைக் கொண்டு வாருங்கள், ஊக்கத்தைக் கொண்டு வர வேண்டும், போகட்டும் விடுங்கள், பாப்தாதாவிற்கும் தெரியும் என்னென்ன தவறுகள்

செய்கின்றார்கள் என்று, அது மறைவதில்லை, ஆனால் ஒவ்வொருவரும் தன்னைத்தானே கேளுங்கள் நான் பிரம்மா குமாரி, பிரம்மா குமார் ஆனது ஏன், லட்சியம் என்ன? எந்த லட்சியத்தோடு வந்துள்ளீர்கள். தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக மட்டுமல்ல உணவு நன்றாக கிடைக்கின்றது. குழு நன்றாக இருக்கின்றது, பிராமண வாழ்க்கையில் வந்ததால் உலகீயத் தொந்தரவுகளிலிருந்து தப்பித்து விடலாம்.இந்த லட்சியத்தோடு மட்டும் நீங்கள் வரவில்லை லட்சியம் என்னவோ மிக நன்றாகத்தான் எடுத்து வந்தீர்கள் ஆனால் இப்பொழுது ஆங்காங்கே லட்சியத்திற்கும் லட்சணத்திற்கும் இடையே வேறுபாடு வந்து விட்டது. பாப்தாதாவிற்கு எல்லாமே தெரியும். பெயர் மட்டும் சொல்வது இல்லை, எப்பொழுதாவது அதற்கான சமயமும் வந்து விடும். யார் செய்கிறார்களோ, பாப்தாதாவும் பார்க்கின்றார் பெரும்பாலும் தீயவர் நட்பில் வரும்பொழுது அப்படி ஆகி விடுகிறார்கள். உள்ளமும் வருந்துகின்றது, செய்யக் கூடாதுதான் ஆனால் சங்கத்தினுடைய வர்ணம். பாபாவினுடைய சங்கத்தின் வர்ணம் குறைவாக உள்ளது எனவே அந்த வர்ணம் அதிகமாக படிந்து விடுகின்றது. இருந்தாலும் பாப்தாதா அனைத்துக் குழந்தைகள் மீதும் அன்பு கொடுத்து சொல்கின்றார் தன்னுடைய நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் தடைகள் இல்லாமல் (நிர்விக்னமாக) அமைத்துக் கொள்ளுங்கள். சங்க தோஷத்தில் வந்து விடுகிறீர்கள். அதனால் இப்படி நடந்து விடுகின்றது. சங்க தோஷத்தில் வர வேண்டாம். எல்லைக்குற்பட்ட பிராப்தி களின் கவர்ச்சியில் வந்து விடாதீர்கள் ஏனென்றால் பாப்தாதாவிற்கு இரக்கம் ஏற்படுகின்றது மேரா பாபா, மேரா பாபா என்று சொல்கின்றார்கள் ஆனால் செய்வது என்ன? எனவே இன்று ஹோலி நன்னாளில் இப்படிப்பட்ட விசயங்களை எல்லாம் புத்திசாலியாக மாறி, எரித்து விடுங்கள், இருந்தாலும் டூலேட் என்ற போர்ட் போடுவதற்கு முன்னதாகவே தன்னை மாற்றிக் கொள்ளுங்கள். பாப்தாதா உதவி செய்வார் ஆனால் உண்மையான உள்ளம் உடையவர்களுக்கு மட்டுமே. தூய உள்ளத்தில் இறைவன் குடியிருப்பார், இதை உளமாற செய்து பாருங்கள். உண்மையான உள்ளம் இருந்தது ஆனால் இறைவன் அங்கே இல்லை. இப்படி சொல்லவே முடியாது. ஹோலியின் வர்ணத்தை பூசும்பொழுது தாறுமாறாக பூசி விடுகின்றீர்கள். எனவே இன்று ஹோலி கொண்டாடுங்கள். தவறான வர்ணங்கள் மீது கூட பாபாவின்

வர்ணங்களை பூசி விடுங்கள். நல்லது. இன்று ஹோலி அல்லவா! எனவே பாப்தாதாவும் சொல்லிவிட்டார் இறக்கம் கொள்கிறார். நல்லது. ஓம் சாந்தி.

தாதிகளுடன்: இன்று அட்வான்ஸ் பார்ட்டியில் கேவர் இனிப்பு எமர்ஜ் செய்யப்பட்டது உங்களுக்கும் வழங்கப்பட்டது. தீதி அவர்கள் மிகவும் உற்சாகத்தோடு இருந்தார்கள், தாதியும் கூட அப்படியே இருந்தார்கள். பொறுப்பாக இருந்திருக்கின்றார்களல்லவா எனவே இப்பொழுதும் கூட பொறுப்புகள் நினைவுக்கு வருகின்றது. நல்லது.

நிர்மல் சாந்தா தாதி அவர்களுடன்: தன்னுடைய முகத்தின் மூலமாக பாபாவினுடைய உருவத்தை காண்பித்துக் கொண்டிருக்கின்றீர்கள். உங்களைப் பார்க்கும் பொழுது அனைவருக்கும் பிரம்மாபாபாவின் நினைவு வருகின்றது. நல்லது. தன்னுடைய உடல் நிலையை நன்றாக கவனித்துக் கொண்டிருக்கின்றீர்கள். மிகவும் நல்லது. (பர தாதி அவர்களுக்கு ஹோலி அன்று அலௌகீக பிறந்த நாள்) இன்று பிறந்த நாள். புண்ணியக் கணக்கு அனைத்திலும் சேமிப்பாகி உள்ளது. நல்லது. (பாப்தாதா மலர் மாலை அணிவித்தார் மிகவும் குஷியாக இருந்தார்கள் தாதி) இதுதான் பழையவர்களின் விசேஷம், ஆதி ரத்தினம் அல்லவா பயப்படுவதில்லை, குஷியாக இருக்கின்றார்கள்.

சாந்தா மணி தாதி அவர்களுடன்: ஏதாவது ஒரு சேவை செய்து கொண்டேயிருக்கின்றார்கள். முரளி வாசிப்பதோ அனைவரையும் சந்திப்பதோ ஏதாவது ஒன்று செய்து கொண்டேயிருக்கின்றார்கள். மேலும் செய்து கொண்டே யிருப்பார்கள். இவரும் மூர்த்தி அல்லவா.

சகோதரர் பிரிஜ் மோகன் அவர்களுடன்: டெல்லிக்கான நிகழ்ச்சிகள் நன்றாக அமைத்துள்ளீர்கள் மேலும் நன்றாகவே இருக்கும்.

சகோதரர் ரமேஷ் அவர்களுடன்: ஒருவரையொருவர் சந்திக்கின்றீர்கள் மிக நல்லது, ஏனென்றால் தன்னுடைய முயற்சியின் மீதும் சேவையின் மீதும் கவனமிருக்கின்றது. என்னென்ன கருத்துக்களை உருவாக்குகின்றீர்களோ அது நல்லது. பாப்தாதாவும் குஷி அடைகின்றார்.

முக்கியஸ்தர்கள் குழுவுடன்: நீங்கள் அனைவரும் அன்பானவர்களாகத்தான் இருக்கின்றீர்கள் சகயோகியாகவும் இருக்கின்றீர்கள் பாபாவுடன் சிநேகம் இருக்கின்றது அல்லவா! மேலும் சிநேகி என்பவர் சமயத்திற்கேற்ப சகயோகியாகவும் இருப்பார். இப்பொழுது என்ன ஆக வேண்டும்? சினேகியா, சகயோகியா இப்பொழுது என்ன ஆக வேண்டும்? (குழந்தை ஆக வேண்டும்) நல்ல குழந்தை ஆக வேண்டும். செய்துள்ளீர்கள். குழந்தையாகி விட்டீர்களா ஆக வேண்டுமா? என்ன சொல்வீர்கள்? குழந்தைதானா? அப்படியென்றால் பாபாவிற்கு சமமாக மாற வேண்டும். நல்லது. மனதார மேரா பாபா என்று சொல்கிறீர்கள். இப்பொழுது மெல்ல மெல்லமாக தன்னை இந்த சேவையில் மேலும் தன் பாகத்தை அதிகப்படுத்திக் கொள்ளுங்கள். அவரவருடைய வேலையை செய்யத்தான் வேண்டும் அதுவே சரி, பாபாவைத் தெரிந்து கொண்டீர்கள் இதுவும் சரிதான், இப்பொழுது சேவையில், அது யக்ஞ சேவையாக இருக்கலாம், வெளி மக்களுக்கு செய்யும் சேவையாக இருக்கலாம், இந்த சேவைக்கான பாகத்தை அதிகப்படுத்திக் கொள்ளுங்கள். சிறிது நேரம் அதிகம் தர வேண்டியிருக்கும். ஏனென்றால் உங்களைப் பார்க்கும் பொழுது உங்களுடைய அனுபத்தைக் கேட்பதால் அவர்களுக்கும் ஊக்கம் உருவாகும். பயம் விலகி விடும். எனவே நீங்கள் சேவை செய்யுங்கள் (சகோதரி கனு பிரியா ஆஸ்தா சேனலில் நிகழ்ச்சிகளை தருபவர்) இவருக்கு பாக்கியம் கிடைத்து விட்டது, வீட்டிலிருந்துக் கொண்டே பாக்கியத்தை அடைந்து விட்டார். எத்தனை ஆத்மாக்களுக்கு வழி காண்பிக்கின்றீர்கள். வார்த்தைகள் மூலமாக சேவை செய்கின்றீர்கள். நல்லது.

நல்லது. எதுவாக இருந்தாலும் ஆனால் பாபாவினுடையது. இந்த நினைவில் முன்னேறிக் கொண்டே இருங்கள். மேலும் சோதனை செய்யுங்கள். அப்பொழுது நாளுக்கு நாள் முன்னேறுகின்றீர்களா? அல்லது அங்கேயே இருக்கின்றீர்களா? ஏனென்றால் முன்னேற்றம் வேண்டுமல்லவா ஆகவே நாளுக்கு நாள் என்ன முன்னேற்றம் அடைந்துள்ளது என்ன சேர்ந்துள்ளது. இதனை சோதனை செய்யுங்கள். நல்லது.

✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳
✳✳✳✳✳

# 24.03.2009 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பாப்தாதா மூலமாக கிடைத்துள்ள பொக்கிஷங்களை தன்னுள் சேகரித்து காரியத்தில் பயன்படுத்துங்கள், அனுபவத்தின் உரிமையுடையோர் ஆகுங்கள் (Authority)!

இன்று பாப்தாதா நாலா புறமும் உள்ள அனைத்து பொக்கிஷங்களையும் சேகரித்து, சம்பன்னம் (முழுமை) ஆகக்கூடிய குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். அதோடுமட்டுமல்லாமல் ஒவ்வொரு குழந்தைகளும் எவ்வளவு தூரம் அனைத்து பொக்கிஷங்களையும் சேமிப்பு செய்துள்ளார்கள், அந்த ரிசல்ட்டையும் (முடிவு) பார்த்துக் கொண்டிருக்கிறார். கஜானாக்கள் என்னவோ பாப்தாதா மூலமாக மிக அதிகமாக அழிவில்லாமல் பிராப்தம் ஆகி விட்டது. எல்லாவற்றையும் விட பெரியதிலும் பெரிய கஜானா ஞானம் என்ற செல்வம், இதன் மூலமாக முக்தி மற்றும் ஜீவன் முக்தி பிராப்தம் ஆகி விட்டது. பழைய தேகம் மற்றும் பழைய உலகிலிருந்து முக்தி மற்றும் ஜீவன் முக்தி நிலை மற்றும் முக்தி தாமம் செல்வதற்கான வழியும் அனைத்துக் குழந்தைகளுக்கும் கிடைத்து விட்டது. ஒரு ஞான கஜானா மட்டுமல்ல, யோகம் என்பதும் கஜானா தான். இதன் மூலமாக சர்வ சக்திகளும் பிராப்தம் ஆகிறது. அத்துடன் தாரணை செய்கின்ற கஜானா. இதன் மூலமாக அனைத்துக் குணங்களும் பிராப்தம் ஆகின்றது. அத்துடன் சேவையெனும் கஜானா இதன் மூலமாக ஆசீர்வாதம் என்னும் கஜானா, குஷி எனும் கஜானா பிராப்தம் ஆகிறது. அதோடு மட்டுமல்லாமல் எல்லாவற்றையும் விட மிகப் பெரிய பொக்கிஷமான நிகழ்கால சங்கமயுகத் தின் நேரம், நேரம் என்பது பொக்கிஷம். ஏனென்றால் முழு கல்பத்திலும் இந்த சங்கமயுக நேரம் தான் அமுல்யமான (விலைமதிக்க முடியாத) பொக்கிஷம். இந்த சங்கமயுக நேரத்தில் ஒவ்வொரு

எண்ணமும் ஒவ்வொரு நிமிடமும் மிகவும் மதிப்பு வாய்ந்தது. ஏனென்றால் சங்கயுக நேரம் தான் பாப்தாதா மற்றும் குழந்தைகளின் இனிமையான சந்திப்பை ஏற்படுத்துகிறது. வேறு எந்த யுகத்திலும் பரமாத்மா தந்தை மற்றும் பரமாத்மா குழந்தைகளின் சந்திப்பு நிகழ்வதில்லை. அதோடு சங்கமயுக நேரம் மட்டுமே தான் பாப்தாதா மூலமாக அனைத்து பொக்கிஷங்களையும் பெற்றுத் தருகிறது. பொக்கிஷங்களை சேகரிக்கும் நேரமும் சங்கமயுகம் மட்டுமே தான். வேறு எந்த யுகத்திலும் சேமிப்பு கணக்கை சேகரிப்பதற்கான வங்கி (Bank) கிடையாது. இந்த சங்கமயுகம் ஒன்றில் மட்டுமே தான் எவ்வளவு பொக்கிஷங்களை சேகரிக்க வேண்டுமோ அவ்வளவு சேகரிக்க முடியும். மேலும் இந்த சங்கமயுக நேரத்தின் மகத்துவம் இது தான். இந்த ஒரு பிறவியில் அநேக பிறவிகளுக்கான பொக்கிஷங்களை சேகரிக்க முடியும். எனவே இந்த சிறிய யுகத்தின் மகிமை அதிகமானது. மேலும் பொக்கிஷங்களும் பாப்தாதா மூலமாக அனைத்து குழந்தைகளுக்கும் கிடைக்கிறது. பாபா அனைவருக்கும் தருகின்றார் ஆனால் பொக்கிஷங்களை சேமிப்பு செய்வதில் ஒவ்வொரு குழந்தையும் தன்னுடைய முயற்சியின் அடிப்படையில் செய்கிறார்கள். கொடுக்கின்ற தந்தையும் ஒருவர் தான். ஒரே மாதிரி தான் அனைவருக்கும் தருகின்றார். ஒரே சமயத்தில் தான் தருகின்றார் ஆனால் தாரணை செய்வதில் எதைப் பார்த்தார் என்றால் பாபா கொடுத்தது ஒரே மாதிரி தான் ஆனால் தாரணை செய்வதில் ஒவ்வொரு குழந்தைகளும் அவரவர்களுடைய முயற்சிக்கு ஏற்ப இருக்கின்றது. ஏனென்றால் கஜானாக்களை தாரணை செய்வதற்காக ஒன்று தன்னுடைய முயற்சியால் பலனை அமைக்க முடிகிறது, இன்னொன்று சதா காலமும் தானும் திருப்தியாக இருந்து அனைவரையும் திருப்தி செய்ய வேண்டும் என்பது, திருப்தி என்ற விசேஷ குணத்தின் மூலமாகத்தான் பொக்கிஷங்களை சேகரிக்க முடியும். மேலும் மூன்றாவது சேவையால் தான். ஏனென்றால் சேவையின் மூலமாக அனைத்து ஆத்மாக்களுக்கும் குஷி பிராப்தம் ஆகிறது. எனவே குஷி என்ற பொக்கிஷங்களையும் பிராப்தம் செய்ய முடிகிறது. தன்னுடைய முயற்சி மேலும் அனைவரையும் திருப்தி செய்வதற்கான முயற்சி மேலும் மூன்றாவதாக சேவைக்கான முயற்சி. இந்த மூன்று விதமான பொக்கிஷங்களை சேகரிப்பு செய்ய முடிகிறது. பொக்கிஷங்களை சேமிப்பு செய்வதில் விசேஷமாக தொடர்பு மற்றும் உறவு முறைகளில்

வரும்பொழுது ஒன்று நான் ஒரு நிமித்தமான கருவியாக இருக்கின்றேன் என்ற பாவனையும், பணிவு தன்மையும், தன்னலமில்லாத பாவனையும் ஒவ்வொரு ஆத்மாக்கள் மீதும் சுபபாவனை மற்றும் சுபகாமனா (நல்ல ஆசை மற்றும் நல் விருப்பங்கள்) வைக்க வேண்டியது அவசியமாகும். சேவையில் வரும்போது மற்றும் தொடர்பு மற்றும் உறவு முறைகளில் வரும்போது இந்த அனைத்து புண்ணியக் கணக்கும் மற்றும் ஆசீர்வாதங்களின் சேமிப்பும் மிக அதிகமாக சுலபமாகவே சேமிப்பு செய்ய முடிகிறது.

பாப்தாதா அனைவருடைய கணக்கைப் பார்க்கும்போது என்ன பார்த்தார்? நாலாபுறமும் உள்ள குழந்தைகளிடம் வரிசைக்கிரமத்தையே பார்க்கிறார். பாபா ஒருவர் தான், தருகின்ற சமயமும் ஒன்று தான் ஆனால் சேகரிப்பு செய்வதில் மூன்றுவிதமான குழந்தைகளைப் பார்க்கின்றார். ஒன்று சேமிப்பு செய்த பொக்கிஷங்களை சாப்பிடும் குழந்தைகள், சேமிப்பு செய்தார்கள் அதனை சாப்பிட்டு முடித்தும் விட்டார்கள். இரண்டாவது சாப்பிட்டார்கள். சேமிப்பும் செய்தார்கள் மேலும் சேமிப்பதில் கவனம் கொடுத்து அபிவிருத்தியும் (அதிகம்) செய்தார்கள். பொக்கிஷங்களை அபிவிருத்தி செய்வதற்கான சாதனம் என்ன? அபிவிருத்தி செய்வதற்கான சாதனம் கிடைத்த பொக்கிஷங்களை தக்க சமயத்தில் இடர்கள் வரும்பொழுது அந்த இன்னல்களுக்கு ஏற்ப காரியத்தில் பயன்படுத்துவது. யார் காரியத்தில் பயன்படுத்தி தன்னிலை மூலமாக இன்னல்களை மாற்றுகிறார்களோ அவர்களுக்கு சேமிப்பு ஆகிறது. யார் காரியத்தில் பயன்படுத்துவதில்லையோ அவர்களுக்கு சேமிப்பும் ஆவதில்லை. எனவே ஒவ்வொருவரும் தன்னைத்தானே கேளுங்கள். தக்க சமயத்தில் தனக்காகவும், பிறருக்காகவும் காரியத்தில் பயன்படுத்துகிறேனா? எந்த அளவிற்கு காரியத்தில் பயன்படுத்துவீர்களோ அந்த அளவிற்கு அதிகரித்துக் கொண்டே செல்லும். ஏனென்றால் காரியத்தில் பயன்படுத்தும் பொழுது அனுபவமும் கிடைத்துக் கொண்டேயிருக்கின்றது எனவே அனுபவத்தின் அதாரிட்டியும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. எனவே சோதனை செய்துப் பாருங்கள். தன்னைத்தானே கேளுங்கள். இந்த அனைத்து பொக்கிஷங்களும் சேமிப்பு ஆகியுள்ளதா? மேலும் அதிகரிப்பதற்கான சாதனம் சமயத்தில் காரியத்தில்

பயன்படுத்துகிறேனா? அனுபவத்தின் அதாரிட்டி அதிகமாகிக் கொண்டே செல்கிறதா? ஏனென்றால் அதாரிட்டிகளில் மிக அதிகமானது அனுபவத்தின் அதாரிட்டி. அதாரிட்டித்தான் எல்லாவற்றையும் விட பெரியதாக சொல்லப்படுகிறது. எனவே ஒவ்வொருவரும் தன்னுடைய சேமிட்புக் கணக்கை அதிகப்படுத்துங்கள். சோதனை செய்யுங்கள். ஏனென்றால் இப்பொழுது நேரம் தன்னை சோதித்து இப்போதே கஜானாவை அதிகப்படுத்தியும் கொள்ள முடியும். இப்போது வாய்ப்புள்ளது. இந்த வாய்ப்பும் முடிவடைந்து போகும். பிறகு விரும்பினாலும் கஜானாக்களை அதிகரிக்க முடியாது.

பாப்தாதா பார்க்கின்றார். பொக்கிஷங்கள் கிடைத்துள்ளது. மிகவும் குளிர்ச்சியோடு தன்னுள் அதனை சேமிப்பதற்காகவும், முயற்சிகள் செய்கின்றார்கள் ஆனால் பொக்கிஷங்கள் கிடைக்கிறது, முரளி மூலமாகத்தான் பொக்கிஷங்கள் கிடைக்கிறது. குழந்தைகள் இரண்டு விதமாக இருக்கின்றார்கள். ஒன்று கேட்பவர்கள் மற்றொன்று தன்னுள் சேமித்து வைப்பவர்கள். சில குழந்தைகள் கேட்டு மிகவும் சந்தோஷம் அடைகிறார்கள் ஆனால் கேட்பது மற்றும் சேமிப்பது, இந்த இரண்டிற்கும் அதிகமான வித்தியாசம் உள்ளது. தன்னுள் சேமிப்பவர்கள் அனுபவசாலி ஆகிக் கொண்டே செல்வார்கள். ஏனென்றால் சேர்த்து வைத்தது தக்க சமயத்தில் காரியத்தில் பயன்படுகிறது. பொக்கிஷங்களை அதிகரித்துக் கொண்டேயிருக்கிறார்கள். கேட்டவர்கள் வர்ணனை செய்கிறார்கள், மிக நன்றாக சொன்னார், மிக நல்ல விசயம் பாபா சொன்னார் ஆனால் தன்னுள் சேமிக்காத வரையில் தக்க சமயத்தில் அதனை காரியத்தில் கொண்டு வர முடியாது எனவே நீங்கள் அனைவரும் சோதனை செய்துப் பாருங்கள். சேமிப்பு செய்பவரா? சிறிதளவு குறைவு இருந்தாலும் முழுமையடையாது. ஆடிக் கொண்டே தான் இருக்கும் ஆனால் சேமிப்பு செய்திருந்தால் முழுமையாக நிரம்பியிருக்கும். ஆட்டம் கொள்ளாது. எனவே இன்று பாப்தாதா அனைவருடைய பொக்கிஷங்களையும் சோதனை செய்தார். சொன்னார் அல்லவா? மூன்று விதமான குழந்தைகள் இருக்கிறார்கள், இப்போது தன்னைத்தானே சோதனை செய்யுங்கள். இதில் நான் யார்? பொக்கிஷங்களை அதிகரிப்பது என்றால் தக்க சமயத்தில் காரியத்தில் கொண்டு வருவதாகும். எந்த அளவிற்கு காரியத்தில் கொண்டு

வருவீர்களோ அந்த அளவிற்கு பொக்கிஷங்கள் அதிகமாகிக் கொண்டேயிருக்கும். ஏனென்றால் அனைத்து பொக்கிஷங்ககளையும் அதிகாரியாகி காரியத்தில் பயன்படுத்துகின்றீர்கள். கஜானாக்கள் தானாகவே காரியத்தில் பயன்படாது. எனவே உங்கள் அனைவருக்கும் அனைத்து பொக்கிஷங்களையும் பாபா ஆஸ்தியாக கொடுத்து. விட்டார். அப்படியென்றால் பாபாவுடைய பொக்கிஷத்தை தன்னுடைய பொக்கிஷமாக மாற்றிக் கொண்டீர்கள். இதில் ஒவ்வொரு வரும் தன்மீது கவனம் தர வேண்டும். ஏனென்றால் எந்த அளவிற்கு பொக்கிஷங்களில் முழுமையாக இருப்பீர்களோ, அந்த அளவிற்கு தான் முழுமை நிலையில் உறுதியாக, நிலையாக இருப்பீர்கள்.

பாப்தாதா இதையே விரும்புகின்றார். ஒவ்வொரு குழந்தையும், சம்பண்ணம் (முழுமை) ஆக வேண்டும், குறைவு இருக்க கூடாது. ஏனென்றால் இந்த வாய்ப்பு பாபா மூலமாக அழிவற்ற கணக்கை சேமிப்பு செய்கிறது. இதை இப்போது மட்டுமே செய்ய முடியும். எனவே சொல்லப் படுகிறது இப்பொழுது இல்லையேல் எப்பொழுதும் இல்லை. இது சங்கமயுகத்திற்காக சொல்லப்பட்ட மகிமை. எதிர் காலத்தில் சேமிப்பு செய்ததற்கான பலனை அடைவீர்கள் ஆனால் பிராப்திகள் செய்யும் நேரம் இப்போது மட்டுமே தான். எனவே ஒவ்வொருவரும் தன்னுடைய கணக்கைப் பாருங்கள். ஒருவரிடம் எவ்வளவு பொக்கிஷம் நிரம்பியிருக்குமோ அது அவருடைய கண்கள் மூலமாக, நடத்தை மூலமாக, முகத்தின் மூலமாக தெரிய வருகின்றது. அவரது முகமும், நடத்தையும் மலர்ந்த ரோஜாமலர் போல அப்படியேயிருக்கும். ஒவ்வொரு குழந்தையின் முகமும் எவ்வளவு சிரித்த முகத்துடன் இருக்கின்றது என்பதை பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கிறார். கண்கள் மூலமாக ஆன்மீக தன்மை, முகத்தின் மூலமாக புண்சிரிப்பு மற்றும் செயல் மூலமாக ஒவ்வொரு குணத்தையும் அனைவருக்கும் அனுபவம் செய்விட்டார்கள். எனவே ஒவ்வொருவரும் தன்னைத்தானே சோதனை செய்யுங்கள்.

பாப்தாதாவிற்கு ஒவ்வொரு குழந்தைகள் மீதும் சுபபாவனை இது தான், ஒவ்வொரு குழந்தைகளும் அநேக ஆத்மாக்களை அனைத்து பொக்கிஷங்களாலும் முழுமை பெற செய்ய வேண்டும், இன்றைய உலகில் அனைத்து ஆத்மாக்களும் எங்கிருந்தாவது ஏதாவது ஆத்மீக

சக்தி கிடைக்காதா என்று தான் விரும்புகிறார்கள். அந்த ஆன்மீக சக்தியின் வள்ளல் பிராமண ஆத்மாக்களாகிய நீங்கள் தான். ஏனென்றால் நீங்கள் தான் உலகிலேயே மிக தூய்மையானவர்கள், மிக உயர்ந்தவர்கள். மிக மிக செல்வந்தர்கள், (Holist, Highest and Richest) (ஹோலி) தூய்மைக்கூட அனைத்து ஆத்மாக்களைவிட அதிகமான தூய்மையுடைவர்கள் நீங்கள் தான். உங்களுக்கு விதிபூர்வமாக பூஜை நடப்பது போல வேறு யாருக்கும் நடப்பதில்லை. இந்த கடைசி பிறவியிலும் கூட வேறு எந்த தர்மபிதா, மகான் ஆத்மாக்கள் மற்றும் நிமித்தமாகயிருக்கின்ற எவருக்குமே இல்லாத பூஜை உங்களுக்கு நடைபெறுகிறது. நினைவார்த்தமாக சிலைகள் அமைக்கிறார்கள் ஆனால் விதிபூர்வமான பூஜை நடைபெறுவதில்லை. நீங்கள் தான் உலங்ளி.ே மிகப் பெரிய செல்வந்தர்கள், பிராமண ஆத்மாக்களாகிய உங்களுக்கு இந்த ஒரு கிடைக்கின்ற பொக்கிஷங்கள் 21-ஜென்மம் வரையிலும் வரும் என்று உத்திரவாதம் தர முடியும். ஏனென்றால் பாபா மூலமாக பாபாவின் ஆஸ்தி கிடைத்துள்ளது. எனவே எப்படி நீங்கள் அழிவற்றவர்களோ அதுபோலவே பாபா மூலமாக கிடைத்துள்ள பொக்கிஷங்களும் அழிவற்றதுகி விடுகிறது. எனவே நீங்கள் தான் உலகிலேயே மிகப் பெரிய செல்வந்தர்களும், உலங்வேபே மிகப் பெரிய தூய்மையானவர்களும் ஆவீர்கள்.

தன்னை அனைவரும் அப்படிப்பட்ட விசேஷமான சேவாதாரி என்று உணருகிறீர்களா? உலகில் நிகழ்காலத்திற்கேற்ப அனைத்து ஆத்மாக்களின் தேவை என்ன வென்று தெரியுமவைா. இன்று உலகிற்கு மகிழ்ச்சி, சக்தி மற்றும் அன்பு அவசியமாகின்றது. ஆன்மீக அன்பை விரும்பு கின்றார்கள் ஆனால் பிராமண ஆத்மாக்களாகிய நீங்கள் இப்போது சமயத்திற்கேற்ப வள்ளனாக மாறுங்கள். மனதின் மூலமாக சக்திகளை கொடுங்கள். வார்த்தைகள் மூலமாக ஞானத்தைக் கொடுங்கள். மேலும் செயல்கள் மூலமாக குணங்களை தானமாக வழங்குங்கள். பிரம்மாபாபா இறுதி நேரத்தில் மூன்று வார்த்தைகளை அனைத்து குழந்தைகளுக்கும் அன்பளிப்பாக கொடுத்து சென்றார். நினைவுள்ளதா? இந்த மூன்று வார்த்தைகளையும் நீர்கள் சேவையில் பயன்படுத்தினாலே அதிக ஆத்மாக்களை திருப்தி செய்து விடமுடியும். அந்த மூன்று வார்த்தைகள் நிராகாரி, நீர் அகங்காரி, நிர்விகாரி (சரீரமற்ற நிலை, அகங்கார மற்ற நிலை, விகாரமற்ற நிலை) எனவே

மனதின் மூலமாக நிராகரி நிலை, வார்த்தைகள் மூலமாக நிர் அகங்கரி நிலை, செயல்கள் மூலமாக நிர்விகார நிலை இந்த மூன்று வார்த்தைகளையும் சேவையில் பயன்படுத்துங்கள். இப்போது உலகிற்கு உங்களுடைய சக்தி மூலமாக சிறிதளவு ஆனந்தம், சுகம் மனதிற்கு கிடைக்க வேண்டும். அனைவருமே இன்றைய உலகில் நிராசை அடைந்துள்ளார்கள். நீங்கள் உலகத்தாரின் ஆசைகளை பூர்த்தி செய்யும் நட்சத்திரங்கள் ஆவீர்கள். பாபா அனைத்துக் குழந்தைகளையும் தன்னுடைய ஆசை நட்சத்திரங்களாகப் பார்க்கின்றார். நம்பிக்கை நட்சத்திரங்களாக மட்டுமல்ல, ஆனால் ஆசைகளை பூர்த்தி செய்யக்கூடிய ஆசை நட்சத்திரங்களாகப் பார்க்கின்றார்.

பாப்தாதாவிடம் குழந்தைகளின் அன்பு சதா வந்து கொண்டேயிருக்கின்றது. அனைத்தையும் விட மிக சுலபமான முயற்சி எது. விதவிதமான முயற்சியுள்ளது ஆனால் அனைத்தையும் விட சுலபமான முயற்சி அன்பு. அன்பில் உழைப்பு கூட பிரியமான ரூபத்தில் மாடுகிறது. எனவே பாபாவிற்கு பிரியமானவராக ஆவது என்றால் சகஜ முயற்சி செய்வதாகும். அன்பில் நீங்கள் அனைவரும் தனக்குத்தானே சிநேகி என்று உணர்கின்றீர்களா. அவ்வப்பொழுது அல்ல, சதா சிநேகி. யார் தன்னை சதா அன்புக்கடலில் மூழ்கியவராக உணர்கின்றீர்களோ, அவர்கள் சதா மற்றும் அன்புக்கடலிலேயே மூழ்கியிருக்கின்றீர்களா? மூழ்கி விட்டு எழுந்து விடுபவர் அல்ல. மூழ்கியே கிடப்பது. அன்புக்கடலில் மூழ்கியே இருப்பதாக உணர்கின்றீர்களா? யார் தன்னை அப்படி மூழ்கியே கிடப்பதாக நினைக்கின்றீர்களா கை உயர்த்துங்கள். சதா? சதா என்ற வார்த்தையை கோடிட்டுக்காட்டுங்கள். கை உயர்த்துங்கள். சதா, சதா? கை உயர்த்துங்கள். நல்லது. உயர்த்தினீர்களா? பாப்தாதா கைகளைப் பார்த்து குஷி அடைகின்றார். ஏனென்றால் தைரியம் வைத்துள்ளீர்கள். அப்படி ஏதவாது சிறிது குறைவு ஏற்பட்டாலும் கூட நினைவு வரும் கை உயர்த்தினோம் என்று. ஏனென்றால் பாப்தாதாவிற்கு ஒவ்வொரு குழந்தைகள் மீதும் அதிகமான அன்பு உள்ளது. ஏன்? ஏனென்றால் பாப்தாதாவிற்குத் தெரியும், இந்த ஒவ்வொரு ஆத்மாக்களும் அனேக முறை அன்பானவர்களாக மாறியுள்ளார்கள், இப்பொழுதும் மாறியுள்ளார்கள். ஒவ்வொரு கல்பமும் இதே ஆத்மாக்களே அன்பானவர்களாக மாறுவார்கள். போதையுள்ளதா, நாம் தான் ஒவ்வொரு கல்பத்திலும்

அதிகாரி ஆத்மாக்கள் என்று குஷியுள்ளதா? பாப்தாதா இப்படிப்பட்ட அதிகாரி ஆத்மாக்களைப் பார்த்து மனமார்ந்த ஆசீர்வாதங்களை வழங்கிக் கொண்டிருக்கிறார், சதா களைப்பற்றவராகி பறந்து கொண்டே செல்லுங்கள். ஒருபொழுதும் ஏதாவது இன்னல்கள் வந்தாலும் தன்னிலையில் தடுமாற்றம் அடைந்து விடாதீர்கள். தன்னிலை சுயஸ்திதிக்கு முன்னால் பரஸ்திதி (இன்னல்கள்) ஒன்றுமே செய்ய முடியாது. நல்லது.

முதல் முறையாக வந்திருப்பவர்கள் யார், அவர்கள் கை உயர்த்துங்கள். நிறைய பேர் வந்திருக்கிறீர்கள். பாப்தாதாவிற்கு ஒவ்வொரு குழந்தைகளையும் பார்க்கும்பொழுது பெருமையாக உள்ளது ஆஹா! என்னுடைய குழந்தைகளே! ஆஹா! எப்படி உங்கள் மனதில் பாடல் பாடிக் கொண்டிருக்கிறீர்களோ ஆஹா! பாபா ஆஹா என்று, தன்னில் தானாகவே ஒலித்துக் கொண்டிருக்கிறது. என்னுடைய பாபா ஆஹா அதுபோல பாபாவினுடைய மனதிலும் குழந்தை களைப் பற்றி ஆஹா எனது குழந்தைகள் என்ற பாடல் ஒலித்துக் கொண்டிருக்கிறது. ஏனென்றால் பாபாவிற்கு கூட கல்பத்திற்கு பிறகு குழந்தைகள் நீங்கள் கிடைத்துள்ளீர்கள். மேலும் நீங்கள் ஒவ்வொருவரும் உலகிற்கு முன்னால் மகான். எனவே பாபாவும் ஆஹா, குழந்தைகளே! ஆஹா. என்று பாடுகின்றார். ஆஹா, ஆஹா தானே! ஆஹா, ஆஹா குழந்தைகள் தானே! ஆஹா குழந்தைகளே! கை உயர்த்துங்கள்.

எனவே சதா இதே நினைவில் வையுங்கள். நாம் ஆஹா, ஆஹா குழந்தைகளாக இருக்கின்றோம். முயற்சி செய்யும் குழந்தைகளாகவும் இருக்கலாம், ஆனாலும் ஆஹா, ஆஹா குழந்தைகள் தான். பாபாவினுடைய ஆஹா, ஆஹா. குழந்தைகள் பாபாவுடன் தானே செல்வர்கள். நின்று போகமாட்டார்கள் அல்லவா? பாபாவும் ஒவ்வொரு குழந்தையையும் அன்பெனும் மடியில் வைத்து அழைத்து செல்வேன் என்று தான் சொல்கிறார். எனவே தயாராக இருங்கள். தயார் ஆகி விட்டீர்களா? வழியில் நின்று போக மாட்டீர்களே! உடனே கூடவே வருவீர்களா? ஏனென்றால் வாக்கு கொடுத்துள்ளீர்கள், வாக்கை நிறைவேற்ற வேண்டும். நிறைவேற்றுபவர்கள் தானே?

இப்போது பாப்தாதா விரும்புவதே இது தான். பரிஸ்தா ரூபத்தை தன்னிடம் வெளிப்படுத்த வேண்டும். நடமாடும்பொழுதெல்லாம் பரிஸ்தா ஆடை அணிந்துள்ளவராக அனுபவம் செய்ய வையுங்கள். பாப்தாதா பயிற்சி சொல்லியிருக்கிறார் அல்லவா? ஆடை மாற்றும் பழக்கம் இருக்கிறது தானே? எனவே எப்படி உடல் என்ற ஆடை மாற்றுகிறீர்களோ அப்படியே ஆத்மாவின் சொரூபம் பரிஸ்தா இதை அடிக்கடி அனுபவம் செய்யுங்கள். பரிஸ்தா ஆடை பிடித்துள்ளது. தானே! எப்படி பிரம்மாபாபா அவ்யக்த பரிஸ்தா ரூபத்தில் அமர்ந்துள்ளாரோ அப்படியே பாப்சமான் நீங்கள் நடமாடும்பொழுதெல்லாம் பரிஸ்தா ரூபத்தில் அனுபவம் செய்யுங்கள். ஏனென்றால் பரிஸ்தா ரூபம் இருந்தால் தான் தேவதை ஆக முடியும். எப்படி பாபாவினுடைய மூன்று ரூபம் நினைவிருக்கிறதல்வா? பாபாவை ஆசிரியராக, மற்றும் சத்குருவாக அவ்வாறே தன்னிடமும் மூன்று ரூபத்தை நினைவு செய்யுங்கள். பிராமணரிலிருந்து பரிஸ்தா மேலும் பரிஸ்தாவிலிருந்து தேவதா. இந்த மூன்று ரூபம் உறுதியாக உள்ளதா? சில சமயம் பிராமணன் என்ற ஆடையை அணியுங்கள், சில சமயம் பரிஸ்தா, சில சமயம் தேவதை என்ற ஆடையை அணியுங்கள். இந்த மூன்று ரூபத்திலும் இருந்தால் இயல்பாகவே திரிகாலதரிசி இருக்கையில் அமர்ந்து சாட்சியாகி ஒவ்வொரு செயலையும் செய்து கொண்டேயிருப்பீர்கள். எனவே பாப்தாதா அனைவரிடம் இருந்தும் இதையே எதிர்பார்க்கின்றார். சதா பாபாவுடன் இருங்கள், தனித்து விடாதீர்கள் உடனிருந்தால் தான் கூடவே செல்ல முடியும். இப்பொழுது நீங்கள் அவ்வப்பொழுது மட்டும் இருந்தால் எப்படி கூடவே செல்வீர்கள். சினேகமுடைய ஒருவர் சினேகமுள்ள ஒருவரை ஒருபோதும் மறக்கவே முடியாது. நாள் முழுவதும் இதையே பயிற்சி செய்து கொண்டிருங்கள். அவ்வப்போது பிராமணன், அவ்வபோது பரிஸ்தா, அவ்வப்போது தேவதை. நல்லது.

நாலாபுறமும் உள்ள சதா பொக்கிஷங்களால் நிரம்பியுள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும், சதா தன்னுடைய நடத்தை மற்றும் முகத்தின் மூலமாக சேவை செய்பவர்கள், ஏனென்றால் உங்கள் அனைவருடைய உறுதிமொழியும் நான் உலகை மாற்றுபவன் ஆகி, உலகை மாற்றுவேன், எனவே நடமாடும் பொழுதெல்லாம் கூட சேவாதாரி ஒருவர் சேவையிலேயே நிலைத்திருப்பவர். இப்படிப்பட்ட விஷ்வ

சேவாதாரி, விஷ்வத்தை மாற்றுகின்ற ஒவ்வொருவருக்கும் பாபாவினுடைய பொக்கிஷங்களால் நிரப்பிவிடுகின்ற பாப்தாதாவின் நாலாபுறமும் உள்ள குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகளும், உளமார்ந்த ஆசீர்வாதங்களும் மற்றும் நமஸ்காரமும். நல்லது.

சேவைக்கான வாய்ப்பு -மகாராஷ்டிரா மண்டலம்: (அனைவருமே பிரச்சனையற்றவர்கள் - NO PROBLEM என்ற கிரீடம் அணிந்துள்ளார்கள்.) நன்றாக செய்திருக்கிறார்கள், அனவைரும் தன் தலைமீது கிரீடம் வைத்துள்ளீர்கள். இப்படி கிரீடம் அணிந்துள்ளவர்களுக்கு பாப்தாதாவும் சதா பிரச்சனையில்லாதவர் ஆகுக என்று ஆசீர்வாதங்களும் கொடுக்கின்றார். இதேபோலவே ஒவ்வொருவரும் மனம், சொல், செயல், குழுவில் இருந்தாலும் இப்படியே பிரச்சனையற்றவர்களாக சதா இருங்கள். பிரச்சனை வந்தாலும் ஒரு வினாடியில் மாடவேண்டும். பிரச்சனை ரூபத்தில் வந்தாலும், சம்பன்ன சொரூபத்தில் மாற்டுங்கள். நன்றாக இருக்கிறது. இந்த காட்சி எவ்வளவு நன்றாக இருக்கிறது. பார்க்கின்றீர்களா? எண்ணத்திலும், ஒவ்வொரு சுவாசத்திலும் பிரச்சனைகள் இல்லாதவர்கள். எனவே இந்த கிரீடம் அணிந்தவர்களுக்கு அனைவர் சார்பாகவும் வாழ்த்துக்கள், கைத்தட்டுங்கள். எல்லோரும் பெரிய திரையில் பாருங்கள், எவ்வளவு நன்றாக இருக்கிறது. பாப்தாதா பிரச்சனையில்லை, அதாவது பாபாவைப்போலவே சதா இருப்போம் என்ற எண்ணம் வைத்துள்ள குழந்தைகளுக்கு பாப்தாதா பன்மடங்கு வாழ்த்துகளை வழங்கிக் கொண்டே யிருக்கின்றார். நல்லது. பெயரே மகாராஷ்டிரா. மகாராஷ்டிரா என்றால் மகான் சொரூபத்தின் மூலமாக மகான் சேவை செய்பவர்கள். இப்பொழுது மகாராஷ்டிரா பெரிய நிகழ்ச்சிகள் எதுவும் செய்யவில்லையா? அதிக சமயம் ஆகி விட்டது, ஏதாவது விசேஷமாக கண்டுபிடித்து மகான் சேவை செய்யுங்கள். பாப்தாதாவிற்கு நினைவுள்ளது, மகாராஷ்டிராவில் படவிளக்க கண்காட்சிக்கான ஆரம்பம் செய்வதில் மிக நல்ல பங்குள்ளது. இன்றுவரையிலும் கூட படவிளக்கம் மூலமாக சேவைகள் நடந்து கொண்டேயிருக்கிறது. இந்த சேவையில் முக்கியமாக ரமேஷ் குழந்தை நிமித்தமாக இருந்தார். அன்று நிமித்தமாக இருந்தது இன்று வரையிலும் கூட நினைவார்த்தமாக உள்ளது. இதுபோல ஏதாவது மகாராஷ்டிராவைச்

சார்ந்தவர்கள் இப்போது கண்டுபிடியுங்கள். செய்ய வேண்டும் தானே! ஏதாவது புதியது செய்யுங்கள். எப்படி அனைவருக்கும் செய்துகளை கொடுத்து விட வேண்டும் என்று டில்லியை சார்ந்தவர்கள் தைரியம் வைத்துள்ளார்கள் அல்லவா? பெரிய மைதானத்தில் செய்திகளை கொடுத்து விடவேண்டும். எப்படியாவது செய்தித்தாள் மூலமாகவோ, தொலைக்காட்சி மூலமாகவோ, ஊடகங்கள் (Media) மூலமாகவோ செய்திகளை கொடுத்து விட வேண்டும். புகார் செய்துவிடக்கூடாது. இப்படி ஏதவாது ஒன்று செய்து கொண்டே யிருங்கள். ஏனென்றால் பாவம் ஆத்மாக்கள் இப்பொழுது நினைக்கிறார்கள், ஆன்மீகம் அவசியம் என்று, அமைதி வேண்டும் ஆனால் பாவம் அவர்களுக்கு வழித்தெரியவில்லை. வழிக்கிடைக்க வில்லை. ஊக்கம், உற்சாகம் கொடுப்பவர்கள் யாருமே கிடைக்கவில்லை. எனவே ஒவ்வொரு மண்டலமும் ஏதாவது ஒன்று செய்து கொண்டேயிருக்க வேண்டும். எப்படி மதுபனில் ஏதாவது ஒரு நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருக்கிறதோ அதுபோல ஏதாவது ஒரு நிகழ்ச்சிகள் நடத்திக் கொண்டேயிருக்க வேண்டும். பிராமணர்களுக்கான நிகழ்ச்சியாக இருக்கலாம். செய்தி தரும் நிகழ்ச்சியாக இருக்கலாம், தன்னுடைய சுய முன்னேற்றத்திற்காக புதிய புதிய நிகழ்ச்சிகளாக இருக்கலாம். ஏனென்றால் ஏதாவது புதிய நிகழ்ச்சிகள் நடந்து கொண்டேயிருக்கிறது, பாப்தாதாவும் பார்க்கின்றார். உள்நாடு மற்றும் அயல் நாட்டில் எல்லோருமே ஆர்வத்தோடு செய்கிறார்கள். நல்லது. செய்து கொண்டேயிருங்கள். மேலும் செய்து கொண்டே செல்லுங்கள். நல்லது.

இப்போது ஏதாவது புதிய திட்டம் போடுவீர்கள் தானே? எவ்வளவு நேரத்தில் செய்வீர்கள். தயார் செய்ய எவ்வளவு மாதம் வேண்டும். ஒன்றுக்கூடி கூட்டம் (Meeting) நடத்துங்கள். தேதி முடிவு செய்யுங்கள். ஏனென்றால் டில்லி மற்றும் பம்பாய் இரண்டு இடங்களிலுமே நல்ல சேவாதாரி மகாராதிகள் இருக்கிறார்கள். இப்போது ஒவ்வொரு மண்டத்திலும் பார்க்கும் பொழுது சேவை செய்யும் குழந்தைகள் அதிகரித்துக் கொண்டே செல்கிறார்கள். சேவைக்கான திட்டம் தீட்டுபவர்கள், அதாரிட்டி உடையவர்கள் அதிகம் இருக்கிறார்கள். மண்டலம் சிறியதோ, பெரியதோ ஆனால் சேவை செய்பவர்கள் ஆகி விட்டார்கள். எனவே அதற்கான வேகத்தை அதிகப்படுத்துங்கள். அனைத்து மண்டலங்களும் ஒன்று சேர்ந்து செய்யும் அளவிற்கு

நிகழ்ச்சிகளை உருவாக்குங்கள். அது ஊடகங்கள் மூலமாக ஒளிப்பரப்பாக வேண்டும். இப்படி பல்வேறு இடங்களில் ஒரே விதமான நிகழ்ச்சிகள் நடைபெறுகிறது என்று. இப்படி ஒவ்வொரு மண்டலத்திலும், ஒவ்வொரு இடத்திலும், ஆனால் எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியான நிகழ்ச்சிகள் நடைபெறுகிறது என்று செய்திகள் மூலமாக வெளிவர வேண்டும். அனைத்து இடங்களின் முகவரியும், தலைப்புகளும் இருக்க வேண்டும் இடங்கள் வெவ்வேறாக இருந்தாலும் தலைப்பு ஒன்றாக இருக்க வேண்டும். ஒரே சமயத்தில், ஒரே தலைப்பில் எங்கு சென்றாலும் ஒரே தலைப்பை அவர்கள் பார்க்க வேண்டும். இப்படி செய்ய முடியும் அல்லவா? செய்ய முடியும் தானே? அயல் நாட்டிலும் கூட இதே தேதியில் இதே நிகழ்ச்சி வையுங்கள். அப்பொழுது நாலாபுறமும் ஒரே நிகழ்ச்சி நடைபெறும். (இந்த ஆண்டு சேவைக்கான கருத்து வைக்கப்பட்டுள்ளது. பரமாத்மாவின் வரதானங்களை பிராப்தி செய்வது) இந்த தலைப்பு நன்றாக இருக்கிறது, எதுவாக இருந்தாலும் ஒன்றுகூடி பேசி முடிவெடுங்கள். ஒன்று சேர்ந்து தேதி, தலைப்பு மற்றும் எப்படி விளம்பரம் செய்யலாம் இதைப்பற்றியெல்லாம் கலந்து பேசுங்கள். நீங்கள் எப்படிப்பட்ட தலைப்பு வைத்தாலும் முன்னதாகவே அது பாப்தாதாவிற்கு பிரியமானதாகத்தான் உள்ளது. நன்றாக இருக்கிறது. ஏனென்றால் இப்போது தேவைப்படுகிறது, முதலில் கேட்பவர்கள் ஓடி விலகி சென்றார்கள் இப்போது எல்லோரும் விரும்புகிறார்கள், என்னவென்று கேட்க வேண்டும் என்று ஆர்வம் கொள்கிறார்கள். முக்கியஸ்தர்கள் ஆர்வம் காண்பிக்கிறார்கள். இப்போது ஒரே சப்தம் முழங்க வேண்டும். அதுவே நாலாபுறமும் பரவவேண்டும். நாலாபுறமும் எங்கு சென்றாலும் இதையே கேட்க வேண்டும். நல்லது. நன்றாக இருக்கிறது, நாலாபுறமும் பார்க்கும்பொழுது நன்றாக விருத்தியடைந்து கொண்டிருக்கிறது. பிராமணர்கள் அதிகரித்துக் கொண்டேயிருக்கிறாகள். இப்போது வரிசைக்கிரமாக இருக்கிறார்கள் ஆனால் பாப்தாதா நம்பர்-1 ஆக வேண்டும் என்றே விரும்பு கின்றார். நம்பர்வராக அல்ல, முதல் நம்பரில் வர வேண்டும். மகாராஷ்டிரா ஏதாவது புதிய கண்டுபிடிப்பு செய்து சேவையில் ஒரு புதுமையை உருவாக்கி நாலாபுறமும் முழக்கத்தை ஏற்படுத்துங்கள். நன்றாக இருக்கிறது. பாப்தாதாவிற்கு மிக அதிகமான மகாராதிகளும், சேவாதாரி குழந்தைகளும் தென்படுகின்றார்கள். ஆசிரியர்களும் நல்ல எண்ணிக்கையில் அவரவர் சேவை

நிலையங்களை கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கான வாழ்த்துக்கள். மேலும் பன்மடங்கு பாப்தாதா வாழ்த்துக்களை வழங்கிக் கொண்டிருக்கின்றார்.

**விளையாட்டுத்துறை மற்றும் சமயத் துறை: (Sports Wing & Religious wing)** நல்லது. இவர்கள் கொடியசைத்துக் கொண்டிருக்கிறார்கள். நன்றாக இருக்கிறது. இப்போது விளையாட்டு துறையை சார்ந்தவர்கள் விளையாட்டின் மூலமாகவே செய்தி கிடைக்குமாறு ஏதாவது ஒரு விளையாட்டை கண்டுபிடியுங்கள். எப்படி இந்தியா இப்பொழுதெல்லம் விளையாட்டில் நம்பர்-1 வருகிறதோ அதுபோலவே ஆன்மீக விளையாட்டிலும் கண்டுபிடியுங்கள். அமெரிக்காவிலும் பட்டம் விடுவது மூலமாக சேவை நன்றாக நடைபெற்றது. இதுபற்றி செய்திகளும் வந்தது. அதுபோலவே இப்பொழுது அரசாங்கம் கூட இந்த விதிகள் மூலமாக மக்களுக்கு செய்தி கிடைக்க வேண்டும் என்று விரும்புகிறது. அதுபோலவே நீங்களும் ஒரு விளையாட்டை தயார் செய்யுங்கள். நாலாபுறமும் விளையாட்டு மூலமாக செய்தி கிடைக்கட்டும். புரிந்ததா? இப்படி ஒரு விளையாட்டை தயார் செய்யுங்கள்.

நிகழ்காலத்தில் இந்தியாவில் போக்குவரத்து துறை மிகவும் மோசமாகி விட்டது. தினசரி விபத்துக்கள் நடந்து கொண்டேயிருக்கிறது. விபத்தில்லாமல் தப்பிப்பது எப்படி, இதற்காகவும் ஒரு சேவை தயார் செய்யுங்கள். வாகன ஓட்டுநர்கள் எச்சரிக்கையோடு இருப்பதற்கான வழியும் காட்டுங்கள். வாகன ஓட்டுநர்களுக்கு இதைப்பற்றி கற்றுக் கொடுத்து உடனேயே அவர்கள் மனம் சீதளமடைய வேண்டும். மனம் ஒருமுகமாக வேண்டும். இதற்காக ஒரு விதியை கண்டு பிடியுங்கள். இதற்காக சிறிதளவு விஸ்தாரமாக நாலாபுறமும் சேவை செய்ய வேண்டியிருக்கும். ஏனென்றால் நிகழ்காலத்தில் இது மிகவும் தேவைப்படுகிறது. இது மேலும் அதிகரித்துக் கொண்டே தான் செல்லும். இப்படி அதிகமாகக்கூடிய செயலை மாற்றுவதற்கான நடைமுறை திட்டத்தை (பிராட்டிக்கல் சொரூபத்தை) அரசாங்கத்திற்கு காண்பியுங்கள். இந்த காரியத்தை செய்வதால் எப்படி மாற்றம் ஏற்படுகிறது. இப்போதெல்லாம் நடைமுறையில் பார்க்கத்தான் வரும்புகின்றார்கள். எனவே இப்படி ஒரு குழுவை தயார் செய்யுங்கள்.

வாகனத்தை ஓட்டக்கூடியவர் ஓட்டுநர் இப்படி ஒரு செயல் செய்து காண்பிக்க வேண்டும், அரசாங்கத்திற்கு முன்பாக முன் உதாரணமாக தயராகி காண்பிக்க வேண்டும் அப்பொழுது அனைவருடைய கவனமும் திரும்பும். கோர்ஸ் கொடுக்கின்றீர்கள், நிகழ்ச்சிகளை செய்கின்றீர்கள் ஆனால் இப்படி ஒரு குழுவை தயார் செய்து காட்டுங்கள். விபத்தை ஏற்படுத்துபவர்கள் மாறி காண்பிக்க வேண்டும். நீங்கள் குடிப்பழக்கம் உள்ளவர்களை மாற்றி காட்டுவதுபோல விபத்தை ஏற்படுத்துபவர்களை மாற்றி காண்பிக்க வேண்டும். அப்படி ஒரு குழுவை தயார் செய்து அரசாங்கத்திற்கு முன்பாக கொண்டு வர வேண்டும். இப்போது பாப்தாதா பார்க்கின்றார் கிராம நலத்துறையை சேர்ந்தவர்கள் (Rural Wing) உரம், மருந்துகள் இல்லாமலேயே காய்கறிகளை விளைவிக்கிறார்கள். அதனை அரசாங்கத்திற்கும் முன்மாதிரியாக காண்பிக்கிறார்கள். அபுவில் கூட இந்த பயிற்சி செய்திருந்தால் அரசாங்கத்திற்கு முன்பாக காண்பிக்க வேண்டும் என்று பாப்தாதாவும் சொல்கிறார். அரசாங்கத்திற்கு எங்கெல்லாம் பிரச்சனைகள் உள்ளதோ அங்கெல்லாம் அவர்களுக்கு சகயோகம் கிடைக்க வேண்டும், லாபம் கிடைக்க வேண்டும், இப்படியே ஒவ்வொரு துறையிலும் பிராக்டிக்கல் முன்மாதிரி தயார் செய்யுங்கள். இப்படி நடைபெறுகிறது என்று கேள்விபடுகிறார்கள் ஆனால் பிராக்டிக்கல் முன்மாதிரி குழுவினை தயார் செய்து அரசாங்கத்திற்கு முன்பாக கொண்டு வாருங்கள். ஒவ்வொரு துறையினரும் நன்றாக சேவை செய்கின்றனர். சேவையும் அதிகரித்துள்ளது அனைவரும் மும்முராக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றனர் ஆனால் பாப்தாதா இப்பொழுது ஒவ்வொரு அரசாங்க துறையினருக்கும் முன்மாதிரி காட்ட விரும்புகின்றார். ஒவ்வொரு அமைச்சரவையிலும் ஒரு முன் உதாரணமாக இருக்க வேண்டும். எப்படி இதயத்திற்கான மருத்துவதுறையில் முன்மாதிரி இருக்கிறதோ அது போல. அநேகருக்கு அறுவை சிகிச்சையில்லாமலேயே மருந்து மாத்திரையில்லாமலே இதய நோய் குணமாக்கப்பட்டுள்ளது. இதுபோல ஒவ்வொரு துறையிலும் முன்மாதிரி காண்பிக்க வேண்டும். நல்லது. இதுபோலவே விளையாட்டும் தயார் செய்ய வேண்டும். பாப்தாதாவும் பார்ப்பார்.

பாப்தாதா பார்க்கின்றார் எந்த துறையை சார்ந்தவர்கள் இப்படிப்பட்ட குழுவை தயார் செய்து பாபாவிற்கு முன்னால் ரிப்போர்ட் (செய்தி)

தருகிறார்கள் என்று ஒவ்வொரு அமைச்சரவை யிலும் இருக்க வேண்டும். அப்படி ஒவ்வொரு அமைச்சரவையிலும் முன்மாதிரியாகி விட்டால் தானாகவே ஒருவருக்கு ஒருவர் மூலமாக கவனம் கொடுக்கப்படும். மேலும் அரசாங்கத்திடம் ஒவ்வொரு சேவைக்காகவும் பணம் அதிகம் உள்ளது ஆனால் நடைமுறையில் அது நல்லவிதமாக பயன்படுத்தப்படுவதில்லை. சகயோகம் செய்ய முடியும் ஆனால் அதற்கான முன்மாதிரி வேண்டும். எப்படி கிராமத்தை சார்ந்தவர்கள் அரசாங்கத்திற்கு உதவி செய்து பாதுகாப்பு செய்கிறார்கள், ஒவ்வொரு துறையை சார்ந்தவர்களும் இப்படி செய்து காட்டவேண்டும். இரண்டு நான்கு கிராமங்களை தத்தெடுத்துள்ளீர்கள் அல்லவா? நல்லது.

இரட்டை வெளிநாட்டவர்கள்: இளைஞர் குழுவும் கை உயர்த்துங்கள். நல்லது. அயல் நாட்டவர்கள் மதுபனில் தன்னுடைய மற்றும் தன்னுடன் சேவை செய்பவர்களுக்குமான சுய முன்னேற்றத்திற்கான நிகழ்ச்சிகள் நன்றாக செய்துள்ளீர்கள். அதைப்பற்றிய முடிவுகளையும் பாப்தாதா கேள்விப்பட்டார். அனைவரும் மதுபன் வாயுமண்டலத்தில் புத்துணர்ச்சி அடைந்து செல்கிறீர்கள். ஆசிரியர்களும் நன்றாக முயற்சி செய்கிறார்கள். இரட்டை அயல்நாட்டினர் தானும் பயன் அடைகிறார்கள், பிறரையும் பயனடைய செய்கிறார்கள். இந்த செய்தியை பாப்தாதா கேள்விப்பட்டார். அதைப்பற்றிய முடிவுகளையும் கேள்விப்பட்டார். நன்றாக இருக்கிறது. இப்போது பாப்தாதா இரட்டை அயல் நாட்டவர் மூலமாக இளைஞர்களைப் பற்றியோ, ஆசிரியர்களைப்பற்றியோ, குழந்தைகள் பற்றியோ இதுவரையில் என்ன செய்து வந்தீர்களோ அதை கேட்டார் ஆனால் இப்பொழுது அயல் நாட்டவர் மூலமாக பாரதத்தில் ஒவ்வொரு நகரத்திலிருந்தும் ஒரு முக்கியஸ்தர் களை கொண்ட ஒரு நிகழ்ச்சி நடத்த வேண்டும். அதில் அனைவருமே மிகவும் முக்கியஸ்தர்களாக இருக்க வேண்டும். ஒவ்வொரு தேசத்திலும் யாரேனும் ஒருவர் மிக முக்கிஸ்தராக இருப்பார். எனவே முக்கியமான தேசத்தில் அதிலும் தொடர்பில் இருக்கின்ற முக்கிஸ்தர்களாக இருக்க வேண்டும். பிராமணர்களாக இருக்கக்கூடாது. சில முக்கியஸ்தர்களை நீங்கள் பிராமணர்களாக ஆக்கியுள்ளீர்கள் அதுவும் நல்லது தான். ஒரு புறம் பிராமணர்களுக்காக நடக்கட்டும், ஒரு புறம் முக்கியஸ்தர்களுக்காக நடக்கட்டும். உள் நாடு மற்றும் அயல் நாட்டில் இருப்பவர்களும் தொடர்பில் இருப்பவர்கள்

அனைவருமே பயன் அடைகிறார்கள் என்பது பற்றி ஊடகங்கள் வழியாக செய்தி வர வேண்டும். மற்றபடி சேவை நன்றாக அதிகரித்துக் கொண்டேயிருக்கின்றது. ஒவ்வொரு முறையும் அநேக தேசங்களிலிருந்து பிராமணர்களின் குழு மதுபனை வந்தடைகிறது. இதுவும் பிராமண பரிவாரத்திற்கு ஒரு அழகு சேர்ப்பது தான். இதன் மூலம் தெரிய வருகிறது. உலகில் உள்ள ஆத்மாக்களுக்கு ஆர்வம் உள்ளது. எப்படி இப்பொழுதெல்லாம் நடுத்தர மக்களிடையே செய்தி அதிகமாக பரவிக் கொண்டிருக்கிறது, பிற தர்மத்தை சார்ந்தவர்களாக இருந்தாலும் கூடஆர்வம் நன்றாக வைத்துள்ளார்கள் அதுபோல முக்கியஸ்தர்களின் குழுவையும் ஒன்றாக சேர்த்துக் கொண்டு வந்தால் நன்றாக இருக்கும். சரி தானே! நல்லது.

(டாக்டர் நிர்மலா தீதி அவர்களை பாப்தாதா மேடையில் அழைத்தார்) உள் நாடு மற்றும் அயல்நாடு இந்தியாவிலும் இருபுறமும் கவனம் வைத்து தனது பொறுப்பு ஏற்று நடத்துகிறார்கள். இதற்காக பாப்தாதாவிற்கு அயல் நாட்டு பிராமணர்கள் மீது பெருமை உள்ளது, இவர்கள் உள்நாடு மற்றும் இயல் நாடு இரு பக்கம் பொறுப்பு ஏற்று நடத்தி வருகிறார். பாப்தாதா மகிழ்ச்சி யடைகிறார். நல்லது. இப்போது அயல் நாட்டை சார்ந்தவர்கள் ஒவ்வொரு தேசத்திலும், ஒரே சமயத்தில், ஒரே தலைப்பில் அயல் நாட்டு அனைத்து இடங்களிலும் முக்கியமான நகரங்களில் எல்லாம் பிரம்மா குமாரிகளின் நிகழ்ச்சிகள் அனைத்து தேசங்களிலும் ஒரே சமயத்தில் நடை பெறுகிறது என்பது தெரிய வர வேண்டும். இதற்காகவும் ஒன்று கலந்து நிகழ்ச்சிகளை அமையுங்கள். உள் நாடானாலும், வெளிநாடானலும் சரி. விருப்பம் உள்ளதா. நல்லது. வெளிநாட்டவர்கள் பாப்தாதாவிற்கு ஒரு விசயத்தில் பிரியமுள்ளவராக இருக்கிறார்கள் எந்த விசயத்தில்? பெரும்பான்மை யானவர்களிடம் கலப்படம் இருக்கத்தான் செய்கிறது. ஆனாலும் பெரும்பாலும் தன்னுடைய உள்ளத்தில் உள்ள விசயங்களை அது நியமத்திற்கு விரோதமாக இருந்தாலும் கூட அதை தெளிவாக சொல்லிவிடுகிறார்கள். அதிக நேரம் அதனை உள்ளத்தில் வைத்துக் கொள்வதில்லை. உள்ளத்தில் இருந்து அதை வெளியேற்றி விடுகிறார்கள். எனவே விசயம் எதுவாக இருந்தாலும் அதனை அதிக நேரம் உள்ளத்தில் வைத்திருக்கக்கூடாது. ஏதேனும் பலவீனத்தை அதிக நேரம் உள்ளத்தில் வைத்திருந்தால் அதுவே பிறகு சம்ஸ்காரமாகி

விடுகிறது, இயல்பாகி விடுகிறது. எனவே இந்த சம்ஸ்காரம் (பழக்கம்) நன்றாக இருக்கிறது. பலவீனம் எது வந்தாலும் அதை உடனடியாக சொல்லி விட்டு மாற்றிக் கொள்ளுங்கள். மேலும் செய்வதில் சிலசில குழந்தைகள் மிக நன்றாக செய்து விடுகிறார்கள். தனனுடைய மனோநிலையை தெளிவாக சொல்லிவிடுகிறார்கள். இது மிக நல்ல விசயம் தான். கலப்படம் இருக்கத்தான் செய்கிறது ஆனாலும் பெரும்பான்மையானவர்கள். மீதம் உள்ளவர்கள் முன்னேறிக் கொண்டேயிருக்கிறார்கள், முன்னேற்றம் அடைந்து கொண்டேயிருப்பார்கள். நல்லது. பாப்தாதா மகிழ்ச்சியடைகிறார்.

தாதிமார்களுடன்: நன்றாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இனியும் நன்றாக நடைபெற்றுக் கொண்டேயிருக்கும். ஒருவருக்கொருவர் கலந்து பேசுங்கள். ஒருவருக்கொருவர் சம்ஸ்காரத்தை தெரிந்து கொண்டு அவரிடமிருந்து உதவி பெற்று பறந்து கொண்டேயிருங்கள். ஏனென்றால் ஒவ்வொருவரிடமும் அவரவருக்கே உரிய விசேஷ குணம் உள்ளது. அந்த விசேஷங்கள் மூலமாக அவர்களை பயன்படுத்திக் கொண்டேயிருங்கள். ஒரு விசேஷ தன்மை கூடயில்லாத நிமித்தமானவர் யாருமே இருக்க முடியாது ஆனால் அந்த விசேஷ தன்மையின் அடிப்படையில் ஒருவருக்கொருவர் சகயோகம் கொடுத்து தானும் முன்னேறி குழுவையும் முன்னேற்றிக் கொண்டே செல்லுங்கள். சரி தானே. நன்றாக இருக்கிறது. ஒவ்வொருவருடைய விசேஷம் என்னவென்று தெரியும், மேலும் ஒவ்வொருவரும் அவரவரது விசேஷத்தை சேவையில் பயன்படுத்த வேண்டும். விசேஷ தன்மையில்லாதவர் என்று யாருமே கிடையாது ஆனால் அவருடைய விசேஷத்தை முன்னால் வைத்து அவர் மூலமாகவும் சேவையை செய்ய வைக்க வேண்டும். மற்றப்படி நடந்து கொண்டேதான் இருக்கும் வெற்றி என்பது சதா காலத்திற்கும் இருக்கவே இருக்கிறது. மேலும் ஒவ்வொருக்கும் அவரவருக்குரிய நடிப்பும் நிச்சயக்கப்பட்டிருக்கிறது. வெற்றி என்பதும் இருக்கவே இறாக்கிறது. நீங்கள் நிமித்தமாக இருக்கின்றீர்கள். இப்பொழுது இவ்வளவு பேர் இருக்கின்றீர்கள். ஒவ்வொருவருக்கும் வெற்றி என்பது வரதானமாக கிடைத்துள்ளது. தன்னிடம் உள்ள விசேஷத்தை குழுவின் ரூபத்தில் காரியத்தில் ஈடுபடுத்துங்கள். வெற்றியில் ஒருவருக் கொருவர் சகயோகம் கொடுத்து வாயுமண்டலத்தில் வெற்றியை பரவச்

செய்யுங்கள். நன்றாக இருக்கிறது. பாப்தாதா குஷியடைகின்றார். மகிழ்ச்சியிருக்கின்றது ஆனால் இப்போது குழுவினை உறுதியாக்குங்கள். நீங்கள் சரியாக இருக்கின்றீர்கள், ஆனால் குழுவை இன்னும் சிறிது உறுதியாக்க வேண்டும். அதற்காக ஏதாவது திட்டம் போடுங்கள். இப்பொழுது நேரம் ஒதுக்குங்கள், இது மிகவும் அவசியமானது. எப்படி எல்லோரையும் புத்துணர்ச்சி செய்விப்பது அவசியமோ, அது போலவே இந்த குழுவிற்கும் இது அவசியமாகும். இதற்காக வருகை தர வேண்டிய நிமித்தமானர்கள் அனைவருக்கும் தெரிய வருமாறு அந்த தேதியை குறியுங்கள். அந்த தேதியில் வேறு எந்த நிகழ்ச்சியும் வைக்க கூடாது. அப்போது தான் இது நடைபெறும். மாதத்தில் இரண்டு முறை வையுங்கள், பரவாயில்லை. லட்சியம் வைத்தீர்கள் அல்லவா? சகோதரிகள் ஒன்று சேர்ந்து செய்தாலும் சரி, பெரிய மீட்டிங் செய்தாலும் சரி ஆனால் தேதியை குறித்துக் கொள்ளுங்கள் இந்த நிகழ்ச்சியை இந்த விதியுடன் செய்யுங்கள். கேள்விப்படுகிறீர்கள் அல்லவா. அவரவர் நிகழ்ச்சியை வைத்து விடுவார்கள், பிறகு வருவதில் விடுபட்டுப்போவர்கள். எனவே எல்லோரும் வருகின்ற வகையில் அமையுமாறு நிகழ்ச்சிக்கான தேதியை குறியுங்கள். பிறகு சரியாகி விடும்.

மூன்று முக்கிய சகோதரர்களுடன்: சகோதரரோ, சகோதரியோ நிமித்தமாக இருக்கின்ற நீங்கள் பரிவாரம் தடைகளற்று இருப்பதற்காக சிறிது நேரம் ஒதுக்குங்கள். அமிர்தவேளையில் பாபாவுடன் தனக்காக நேரம் ஒதுக்குகின்றீர்கள். மேலும் சேவைக்காகவும் நேரம் ஒதுக்குகின்றீர்கள். முக்கியமாக பரிவாரத்தின் முன்னேற்றத்திற்காக, மற்றும் யக்ஞத்தின் காரியங்கள் முன்னேறி செல்வதற்காகவும் அரசாங்கத்தின் மூலமாகவும், ஒருவருக்கொருவர் பரிவாரத்திலும் தடைகள் இன்றி இயங்குவதற் காகவும் அமிர்தவேளையில் 10-நிமிடம் ஒவ்வொருவரும் ஒதுக்க வேண்டும். எப்படிப்பட்ட சூழ்நிலையாக இருந்தாலும் அனைவருடைய யோகத்தாலும், அனைவரும் இதற்காக நேரம் ஒதுக்குவதால் சரியாகி விடும். அனைவருடைய சங்கல்பமும் ஒன்றாக இருக்க வேண்டும். அப்போது நடக்கும். நல்லது. பெரிய மனம் வையுங்கள். வந்து கொண்டேயிருக்கும். சிந்திப்பீர்கள் அல்லவா? செய்யலாமா? அல்லது வேண்டாமா? இப்படி சிந்தித்தே நேரத்தை இழக்க வேண்டாம். நிகழ்கால சமயம் நீங்கள் அனைவரும் ஒன்று

சேர்த்து சுப பாவனையுடன் ஒரே எண்ணம் வைத்தால் நடந்தே தீரும் என்றால் நடந்து விடும். இது வரதானமாக உள்ளது. அது நியமப்படியும் இருக்க வேண்டும், பெரிய மனதோடும் இருக்க வேண்டும் இது விதி மட்டும் அல்ல, பெரிய மனதுடன் கூடிய விதியாகும். அனைவருக்கும் ஒரே சங்கல்பம் இருக்க வேண்டும், நடக்க வேண்டும். ஏன்? என்ன? என்று இருக்கக் கூடாது. நடந்தே ஆக வேண்டும். இந்த விதி மூலம் அனைத்தும் சுலபமாகி விடும். பொழுதும் 10-நிமிடம் நிமித்தமான நீங்கள் அனைத்து ஆத்மாக்களும் முக்கியமாக நேரம் நிர்விக்னமாக, பரிவாரம் நிர்விக்னமாக 10-நிமிடம் யோகம் செய்தால் சுலபமாக நடந்து விடும். இப்போது தான் நேரம் உள்ளது. அது சகஜமாகி விடும். நடந்து விடும், நடந்து விடும் இது மட்டுமே பொழுதும்.

டில்லியில் நடைபெறயிருக்கின்ற நிழ்ச்சிகளைப்பற்றிய செய்திகளை சகோதரி ஆஷா அவர்கள் பாப்தாதாவிற்கு சொல்லிக் கொண்டிருக்கின்றார்: தைரியம் நன்றாக வைத்துள்ளீர்கள். பாப்தாதா மகிழ்ச்சியடைகின்றார். நிகழ்ச்சிகள் நடைபெறும் நேரத்தில் டில்லியை சார்ந்த அனைவரும் நாம் மனதால் சகயோகம் செய்ய வேண்டும் என்று ஒவ்வொருவரும் நினைக்க வேண்டும். நாலா பக்கமும் வாயுமண்டலம் பர வேண்டும். சென்டரில் இருந்தாலும் சரி நான் சேவையில் இருக்கின்றேன். அந்த சமயத்தில் தான் எங்கிருந்தாலும் சேவையில் இருப்பதாக உணர வேண்டும். அப்போது நன்றாக நடைபெறும். (அனைவரும் உங்களுடைய ஆசீர்வாத திருஷ்டியிருக்க வேண்டும் என்று சொல்கிறார்கள்) நீங்கள் அனைவரும் கருணை என்ற திருஷ்டி வையுங்கள்.

சகோதரி காயத்திரி அவர்களுடன்: உங்களுக்கு பாப்தாதா மற்றும் அனைவருடைய அன்பு. நினைவுகள் கிடைத்துக் கொண்டேயிருக்கிறது. இவருடைய உள்ளம் இங்கே தான் இருந்தது. உடல் தான் அங்கேயிருந்தது. ஜெர்மனியில் ரிட்ரீட்டிற்கான இடம் அமைக்க வேண்டும். நல்லது. நன்றாக இருக்கிறது. யாருக்காவது காண்பியுங்கள். நடந்தால் நல்லது தான்.

விருந்தினர்களுடன்: நீங்கள் விருந்தினர்களா? அல்லது மகான் ஆகி விட்டீர்களா? விருந்தினர்கள் என்று நினைக்கவில்லைதானே? மகான்

ஆக வேண்டும் தானே? மகான் ஆகியே தீர வேண்டும். இங்கே வருவது சம்மந்தத்தில் வருவது என்றாலே முன்னேறிக் கொண்டேதான் இருப்பீர்கள். ஆசீர்வாதம் இருக்கவே இருக்கிறது. பாருங்கள் நீங்கள் இங்கே வந்துள்ளீர்கள் என்றால் உங்களை இங்கே அனுப்பியது யார்? நாடகம் தான் உங்களை இவ்வளவு தூரம் கொண்டு வந்து சேர்ந்தது. இப்போது இங்குள்ள அனைத்தையும் பார்த்தீர்களா? பார்க்கும்போது உள்ளத்தில் என்ன எழுந்தது? நாமும் சேவை செய்ய வேண்டும். நீங்களும் அனைத்து பரிவாரத்திற்கும் துணையாக இருப்பவர்கள் தானே? விலகியிருப்பவர் அல்ல தானே? சாட்சி அல்ல, சாத்தி. அப்படி என்றால் துணையாக இருப்பவர் என்ன செய்வார்? சகயோகம் (ஒத்துழைப்பு) தருவார். அப்படியானால் நீங்கள் அனைவரும் யார்? சிநேகியாக இருப்பவர் சகயோகம் செய்பவர், அதிர்ஷ்டசாலி. பாப்தாதாவிற்கும் உங்கள் அனைவரையும் பார்க்கும்போது மகிழ்ச்சி ஏற்படுகிறது, என்ன மகிழ்ச்சி தானே! ஏனென்றால் தொலைந்துபோன குழந்தைகள் கிடைத்து விட்டார்கள். இப்போது மறக்கக்கூடாது. இது உங்களுடைய வீடு அல்லவா? உங்களுக்கு தன்னுடைய வீட்டில் வந்திருப்பதாக அனுபவம் ஆகிறதா? அப்படி என்றால் தன்னுடைய வீடு எப்போதாவது மறந்து போகுமா? ஆகையால் மறந்து போகக்கூடாது. வந்துகொண்டேயிருக்க வேண்டும். தனக்கு கிடைத்ததை பிறருக்கு பகிர்ந்தளிக்க காமல் இருக்க முடியாது. சரிதானே. இவர் சேவை செய்து கொண்டிருக்கிறார். நல்லது.

இப்படி உள்ளவர்கள் அவரவர்களுடைய நகரங்களிலேயே அப்படிப்பட்ட ஒரு குழுவை தயார் செய்ய முடியும். அது நடந்தே ஆகும் நிமித்தமாக இருந்தால் மட்டும் பொழுதும். அனைவரும் ஒருவரை விட ஒருவர் அதிர்ஷ்டம் நிறைந்தவர். இங்கே வருவது என்றாலே ஆசீர்வாதம் பெறுவதாகும். என்னவெல்லாம் செய்ய முடியுமோ செய்து கொண்டேயிருங்கள். இடையிடையே சேவை செய்து கொண்டேயிருக்கிறீர்கள் இதுவும் நல்லது. ஒரு நாள் அனைவருக்குமே செய்திகள் சென்றடைந்து விடும். யாரேனும் ஒருவர் நிமித்தமாக இருப்பார். மிக நன்றாக செய்துள்ளீர்கள். வந்து விட்டீர்கள். மிக நல்லது.

**சகோதர, சகோதரிகளுடன் (அரேபியன் மொழியில் இவர் கோர்ஸ் கொடுக்கின்றார்);** மிக நல்லது. பாப்தாதாவினுடைய மனமார்ந்த

ஆசிர்வாதங்கள் கிடைத்துக் கொண்டிருக்கிறது. இவர் கூட சேவைக்கான ஒரு நல் உதாரணமாக விளங்குகிறார். தன்னிடம் உள்ள விசேஷத்தை சேவையில் பயன்படுத்துகிறார். பயன்படுத்திக் கொண்டேயிருங்கள். இது வரதானமாக கிடைத்துள்ளது. நாலா புறமும் செய்தி பரவும் அளவிற்கு அப்படிப்பட்ட ஆத்மாக்களும் தயாராகி விடுவார்கள். மிக நல்லது. (சிறு குழந்தையோடு) இவரும் நினைவு செய்கிறார். பாபாவை நினைக்கிறீர்கள் தானே? இவர் துணையாக இருக்கின்றார். துணை நன்றாக இருக்கிறது, பாபாவின் செய்தி தருவதற்கு தகுதி வாய்ந்த ஆத்மா இவர். நிறைய செய்ய முடியும். இன்னும் அதிகம் செய்ய முடியும். இவரும் துணையாக இருக்கின்றார். மிக நல்லது ஒருவருக்கொருவர் துணைக் கொடுத்து செல்லுங்கள். நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋

## 07.04.2009 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## காரணம் என்ற வார்த்தையிலிருந்து விடுபட்டு நடத்தை மற்றும் முகத்தின் மூலமாக முக்தி (விடுதலை) தருபவராகி முக்தி வள்ளல் ஆகுங்கள், சேவைக்கான ஊக்கம் உற்சாகத்தோடு மட்டுமல்லாமல் சதா எல்லைக்கு அப்பாற்பட்ட வைராக்கிய உணர்வு உடையவர்களாகவும் இருங்கள்!

இன்று பாப்தாதா அகில உலகத்திலும் இருக்கின்ற டபுள் மாலிக்காக (இரண்டு விதமான எஜமானர்) விளங்குகின்ற ஒவ்வொரு குழந்தைகளையும் பார்த்துக் கொண்டிருக்கின்றார். ஒன்று பாபாவினுடைய அனைத்து பொக்கிஷங்களுக்கு எஜமான் மற்றொன்று சுய ராஜ்யத்திற்கு எஜமான். இரண்டு விதமான எஜமான் தன்மையும் ஒவ்வொரு குழந்தைகளுக்கும் பாபா மூலமாக கிடைத்துள்ளது. பாலகனாகவும் இருக்கின்றார்கள். எஜமானாகவும் இருக்கின்றார்கள். எனது பாபா என்ற உடனேயே பாபாவும் எனது குழந்தாய் என்று சொல்கிறார். அப்படியென்றால் பாலகனாகவும், எஜமானாகவும் அனுபவம் ஆகின்றது அல்லவா?

இன்று மிக மிக அதிகமான குழந்தைகள் வந்திருக்கின்றார்கள், இந்த ஆண்டில் இது கடைசி முறை. எனவே இன்று பாப்தாதா ஒவ்வொரு குழந்தைகளின் முயற்சியை சோதனை செய்தார். பாபா என்ன பார்த்திருப்பார் சொல்லுங்கள்? ஒவ்வொருவரும் தன்னைத்தானே கேளுங்கள், எனது முயற்சி என்ன? பாப்தாதா அனைத்து குழந்தை களையும் பார்த்து மகிழ்ச்சியும் அடைகிறார், ஆனால் பாபாவிற்கு ஒரு

விருப்பமும் உள்ளது. சொல்லட்டுமா, அது என்னவென்று! பாபாவின் ஆசையை பூர்த்தி செய்வீர்கள் அல்லவா! ஒரே ஒரு ஆசை இருக்கிறது. சொல்லட்டுமா! கை உயர்த்துங்கள், ஆசையை பூர்த்தி செய்வேன் என்பவர்கள். மிக்க நல்லது. சிறிய ஆசை தான் அது, அந்த ஆசை இன்றோடு ஒரு வார்த்தையை நீங்கள் மாற்றிக் கொள்ள வேண்டும். அது என்ன வார்த்தை? அது தான் உங்களை அடிக்கடி கீழே கொண்டுவரக்கூடிய வார்த்தையாகும் காரணம். இந்த காரணம் என்ற வார்த்தையை மாற்ட்டு நிவாரணம் என்ற வார்த்தையை சதா தாரணை செய்யுங்கள். ஏனென்றால் உங்களுடைய சேவைக் கூட இப்போது என்ன நடந்து கொண்டிருக்கிறது? உலகில் உள்ள அனைத்து ஆத்மாக்களின் இன்னல்களுக்கு காரணம், அதனை நிவாரணம் செய்து பிறகு நிர்வாணதாமத்திற்கு அழைத்து செல்ல வேண்டும். ஏனென்றால் நீங்கள் அனைவரும் முக்தி வழங்கும் வள்ளல் ஆவீர்கள். பிறருக்கு முக்தி வழங்க வேண்டியவர்கள் முதலில் தன்னுடைய காரணங்களுக்கு நிவாரணம் செய்தால் தான் பிறருக்கு முக்தி வழங்க முடியும். நிர்வாண தாமத்திற்கு அனுப்ப முடியும். எனவே இந்த ஒரு வார்த்தையை வித்தியாசம் காண்பது கடினமா? சுலபமா? சிந்தியுங்கள்.

இன்று பாப்தாதா, யாரெல்லாம் இங்கு வந்திருக்கிறார்களோ மற்றும் அவரவர் இடங்களிலிருந்து பார்த்துக் கொண்டிருக்கின்றார்களோ, மேலும் கேட்டுக் கொண்டிருக்கிறார்களோ அவர்கள் அனைவரிடமிருந்தும் இந்த ஒரு வார்த்தையை மாற்ற வேண்டும். என்று விரும்புகிறார். ஏனென்றால் காரணம் கீழே கொண்டு வருகிறது. காரணத்தில் தான் அரை கல்பமாக இருந்தீர்கள். இப்போது நிவாரணம் செய்யும் சமயம். நிவாரணம் மற்றும் நிர்வாண்தாமம், முக்தி, இதை இன்று பாபாவுக்கு தர வேண்டும். தைரியம் உள்ளதா? கடைசிமுறை அல்லவா, எல்லோருமே ஊக்கம் உற்சாகத்தோடு வந்துள்ளீர்கள், பாப்தாதாவும் ஒவ்வொருவருக்கும் வாழ்த்துக்களை வழங்கிக் கொண்டிருக்கின்றார். இங்கே உண்பதற்கும், உறங்குவதற்கும் கூட கஷ்டங்கள் இருக்கிறது. ஆனாலும் அனைவருக்கும் அன்பு உள்ளது, அன்பு என்ற விமானம் தான் அனைவரையும் மதுபன்னிற்கு கொண்டு வந்துள்ளது. பாப்தாதா ஒவ்வொருவரின் அன்பையும் பார்த்து, ஒவ்வொருவருக்கும் பலமடங்கு மனமார்ந்த அன்புகளை தெரிவித்துக் கொள்கின்றார் ஆனால் அன்பில் நீங்கள் என்ன செய்கிறீர்கள்.

ஒருவரிடம் அன்பு இருக்கும்பொழுது, அவருக்கு அன்பிற்கான பரிசு வழங்குவீர்கள் தானே? எனவே இன்று பாப்தாதா பரிசாக இந்த காரணம் என்ற வார்த்தையை பெற விரும்புகின்றார். பாப்தாதாவின் இந்த ஆசையை பூர்த்தி செய்ய வேண்டுமல்லவா! அப்படியென்றால் கை உயர்த்துங்கள். இங்கேயே விட்டு விட்டு செல்ல வேண்டும். இங்கே வாசலைவிட்டு நகரும்பொழுதே காரணம் என்ற வார்த்தையும் அழிந்து போக வேண்டும். தவறுதலாக வந்து விட்டாலும் கூட பாபாவிற்கு கொடுத்த பொருள் அடமானம் அல்லவா? அடமான பொருளை என்ன செய்வார்கள், திரும்பி பெறுவார்களா? அப்படியென்றால் அனைவரும் திடமான எண்ணம் வைத்துள்ளீர்களா? செய்து விட்டீர்களா? செய்து விட்டீர்களா? மீண்டும் ஒருமுறை கை உயர்த்துங்கள். பின்னால் உள்ளவர்கள் கை அசையுங்கள். நல்லது. மிக நல்லது. ஏனென்றால் இப்போது சமயத்திற்கேற்ப உங்களிடம் வரிசை அதிகமாக நிற்க ஆரம்பிக்கும். எதற்கான வரிசை நிற்கும்? முக்தி வழங்கும் வள்ளலே முக்தி வழங்குங்கள். அப்படியென்றால் வழங்கக்கூடிய முக்தி வள்ளல் நீங்கள் முதலில் இந்த வார்த்தையிலிருந்து முக்தி அடைந்தால் தான் பிறருக்கு முக்தி வழங்க முடியும்.

பாப்தாதா இதைத்தான் விரும்புகின்றார், இந்த ஆண்டிற்கான வீட்டுப்பாடமும் இது தான். நான் முக்தி அடைந்து, முக்தி தர வேண்டும். ஏனென்றால் இன்னல்கள் நாளுக்கு நாள் அதிகரிக்கும். எனவே சச்சரவுகளை சமாதான ரூபத்தில் மாற்றுங்கள். முயற்சியிலும் இன்னல்களிலுமே நேரத்தை கழித்து விடாதீர்கள். உங்களுடைய பக்தர்களின் மற்றும் சமயத்தின் கூக்குரல் உங்களின் காதுகளில் விழவில்லையா! எனவே இப்போது சமயத்திற்கேற்ப எதை மாற்றிக் கொள்வது மிக அவசியமாகிறது? ஏனென்றால் இப்பொழுது ஒவ்வொருவரும் அனுபவி மூர்த்தியாக மாறி ஏதாவது ஒரு அனுபவத்தை செய்ய வைக்க வேண்டியது அவசியமாகின்றது. எனவே பாப்தாதாவும் இப்போது விரும்புகின்றார். உங்கள் அனைவருடைய முகத்திலும், நடத்தையிலும், இவர் முக்தி வழங்கும் வள்ளலின் குழந்தை, முக்தி வழங்குபவர் என்பது தெளிவாகத் தென்பட வேண்டும். உங்களுடைய நெற்றியிலிருந்து மின்னுகின்ற நட்சத்திரம் அனுபவம் ஆக வேண்டும். சொல்லில் மட்டும் அல்ல, ஆனால் முகத்தின் மூலமாகவே அனுபவம் ஆக வேண்டும். ஏனென்றால் அனுபவம்

அருகாமையில் அழைத்து வருகின்றது. எனவே இந்த அனுபவத்தை முகம் மற்றும் நடத்தையில் காண்பியுங்கள். எப்படி அயல் சாதனங்கள் அனுபவம் செய்ய வைக்கிறதல்லவா. இப்பொழுது கோடைக்காலத்தில் குளிரையும் அனுபவம் செய்ய வைக்கிறது அல்லவா? அயல் சாதனம் இப்படி அனுபவம் செய்ய வைக்கும் பொழுது உங்களுடைய அமைதி சக்தியும் இப்படிப்பட்ட அனுபவம் செய்ய வைக்க முடியாதா எனவே பாப்தாதா இப்பொழுது குழந்தைகளிடம் இதையே எதிர்பார்க்கின்றார். அனுபவத்தின் நிலையில் நிலைத்திருந்து கண்கள் மூலமாகவும், நெற்றியின் மூலமாகவும் ஏதாவது ஒரு சக்தியை அனுபவம் செய்ய வையுங்கள். கேள்விப்படுகின்ற விஷயங்கள் கேட்கும்போது மட்டும் நன்றாக இருக்கும் ஆனால் பிறகு ஏதாவது இன்னல்கள் வரும்போது மறந்து போகும், ஆனால் அனுபவம் வாழ்நாள் முழுவதும் மறக்காது.

பாப்தாதா ஒரு காரணத்தைப் பார்த்தார். ஒரு ரிசல்ட்டையும் (முடிவு) பார்த்தார், அந்த முடிவைப் பார்த்து மிகமிக வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறார். அது என்ன முடிவு? இன்று வரையிலும் சேவையில் ஊக்கம், உற்சாகம் நன்றாக இருக்கிறது. எனவே பாப்தாதா வாழ்த்துக்களும் தருகின்றார். சேவையை அபிவிருத்தியும் செய்துள்ளீர்கள், அதற்கான திட்டங்களும் நன்றாக அமைத்துள்ளீர்கள், அதற்கான விளைவும் சக்திகேற்ப கிடைத்துள்ளது ஆனால் ஒரு விஷயத்தை அனுபவம் செய்ய வைப்பதில் தனக்குத்தானே கவனம் தர வேண்டியுள்ளது. எப்படி உங்களுடைய சேவையானது பிரபலமாகியுள்ளதோ, மகிழ்ச்சியாகவும் இருக்கின்றீர்கள். நிகழ்காலத்தில் சேவைக்கான ஆர்வமும் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. இப்போது மீதம் இருப்பது அனுபவம் செய்விப்பதற்கான விதி என்ன? அது ஊக்கம், உற்சாகத்தின் கூடவே எந்தளவிற்கு ஊக்கம் இருக்கிறதோ அதே அளவு சமயத்திற்கேற்ப, எல்லைக்பாற்பட்ட வைராக்கிய உணர்வும் இருக்க வேண்டும். முயற்சியில் சிலர் இன்னல் ரூபத்தில் இருக்கிறார்கள், அதற்கான காரணமும் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கிய உணர்வின் குறைவே ஆகும். இப்பொழுது எல்லைக்கப்பாற்பட்ட உணர்வு தேவைப்படுகிறது. இந்த எல்லைக்காப் பாற்பட்ட உணர்வு சதா காலத்திற்கும் இருக்கும். ஒருக்கால் சமயம் வரும்பொழுது நீங்கள் அப்படி மாறினால் சமயமே முதல் நம்பர் பெற்றுவிடும். நீங்கள் இரண்டாவது இடத்தையே அடைவீர்கள்.

ஏனென்றால் சமயம் உங்களுக்கு வைராக்கியத்தை கொடுத்தது. எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியம் சதா காலம் இருக்கிறது. ஒருபுறம் ஊக்கம், உற்சாகம் மற்றும் குஷி இன்னொரு புறம் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியம். எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியம் சதா இல்லாமல் இருப்பதற்கு காரணம் என்ன? பாப்தாதா பார்த்தார், அதற்கான காரணம் தேக அபிமானம். தேகம் என்ற வார்த்தை எல்லா இடங்களிலும் வருகிறது. உதாரணமாக தேக சம்மந்தம், தேகத்திற்கான உபகரணங்கள், தேகத்தின் சம்ஸ்காரம் இப்படி தேகம் என்ற வார்த்தை எல்லாவற்றிலும் வருகிறது. மேலும் விசேஷமாக தேக அபிமானம் எந்த விதத்தில் வருகிறது? ஆத்மா அபிமானத்தில் இருந்து தேக அபிமானத்தில் கொண்டு வருகிறது. அதை இது வரையிலும் பாப்தாதா சோதனை செய்ததில் மூலக்கரணம் பழைய சம்ஸ்காரங்கள் தான் கீழே கொண்டு வருகிறது. சம்ஸ்காரங்களை விலக்கினாலும், ஏதேனும் ஒரு சம்ஸ்காரம் இயற்கையான ரூபத்தில் (நேச்சர்) இப்போது வரையிலும் கூட வேலை செய்து விடுகிறது எப்படி தேக அபிமானம் இயற்கையான இயல்பாகி விட்டதோ அதுபோலவே ஆத்மா அபிமானி நிலை, இயற்கையான இயல்பாக அமையவில்லை. சொல்கிறார்கள், நாங்கள் இதை அழித்து விட்டோம், ஆனால் அடியோடு விதையை எரித்து சாம்பலாக்கவில்லை. எனவே தக்க சமயம் வரும்பொழுது அந்த தேக அபிமானத்தின் சம்ஸ்காரம் வெளிப்பட்டு விடுகிறது. எனவே இப்போது அவசியம் என்னவென்றால் இந்த தேக அபிமானம் என்ற இயல்பு தன்மையை சக்தி வாய்ந்த ஆத்ம அபிமானி நிலையின் சக்தி மூலமாக வம்சம் உள்பட நாசம் செய்ய வேண்டும். ஏனென்றால் குழந்தைகள் சொல்கின்றார்கள். நாங்கள் விரும்பவில்லை ஆனால் அவ்வப்போது வத்து விடுகிறது. ஏன் வருகிறது? அம்சம் அங்கே உள்ளது. எனவே தான் வம்சமாகி வெளிப்படுகிறது. எனவே இப்பொழுது அவசியம் சக்தி சொரூபம் ஆக வேண்டும். அதற்கு ஆதாரம் தன்னைத்தானே சோதனை செய்யுங்கள். எந்த சொரூபத்திலாவது அம்சம் அளவில் கூட பழைய தேக அபிமானத்தின் சம்ஸ்காரம் இருக்கிறதா? அல்லது இல்லையா? அது எப்போது அழிந்துபோகும் என்றால் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கிய உணர்வு இருந்தால் தான். சேவையைப் பார்த்து கேட்டு பாப்தாதாவும் மகிழ்ச்சியடைகிறார் ஆனால் இப்போது பாபாவின் விருப்பம் இது தான். எப்படி சேவைக்கான பொலிவும், ஆர்வமும் உலக மக்களுக்கு தென்படுகின்றதோ,

சேவையை அனுபவம் செய்ய வைக்கின்றீர்களோ, அதுபோலவே எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கிய உணர்வின் பிரபாவம் ஏற்பட வேண்டும். எனென்றால் நிகழ்காலத்தில் சேவை மூலமாக உங்களுடைய பகழ் ஓங்கும். உங்களுக்கு இயற்கையும் சேவகளாக மாறும். உங்களுக்கு அனுபவங்கள் செய்விக்கும். சாதனங்கள் அதிகரிக்கும் ஆனால் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கிய உணர்வின் மூலமாக சாதனம் மற்றும் சாதனை இரண்டும் சமநிலையில் இருக்க வேண்டும். நீங்கள் குடும்பஸ்தர்களுக்கான முன்னுதாரணமாக வாழ்ந்து காண்பிக்கிறீர்கள், அனைத்து காரியங்கள் செய்து கொண்டே கர்மயோகியாக, கமல் (தாமரை) மலருக்குச் சமமாக இருக்கின்றீர்கள். அதேபோல நீங்கள் எல்லோருக்காகவும் சேவை செய்கிறீர்கள், சாதனமும் கிடைக்கிறது. சாதனைகள் மற்றும் சாதனம் இரண்டும் சமநிலையில் இருக்க வேண்டும். எனவே நிகழ்காலத்தில் சேவையோடு மட்டுமல்லாமல் எல்லைக்கப்பாற்பாட்ட வைராக்கிய உணர்வும் சேர்த்துக் கொள்ள வேண்டியது மிக அவசியமாகும். நடமாடும் பொழுதெல்லாம் இவர்கள் விசேஷ ஆத்மாக்கள் என்று உலக மக்கள் அனுபவம் செய்ய வேண்டும். யோகத்தில் அமரும் நேரம் மட்டுமல்ல, சொற்பொழிவாற்றும் பொழுது மட்டுமல்ல, ஆனால் நடமாடும் பொழுதும் கூட உங்களுடைய நெற்றியிலிருந்து அமைதி, சக்தி, குஷியினை அனுபவம் செய்ய வேண்டும். ஏனென்றால் சமயத்திற்கேற்ப சமயம் இப்போது இன்னும் மாறிக் கொண்டேயிருக்கும்.

பாப்தாதாவும் சமயத்திற்கேற்ப சமிக்ஞைகளைக் கொடுத்து விட்டார் ஆனால் இன்று விசேஷமாக பாப்தாதா ஒன்று எல்லைக்கு அப்பாற்பட்ட வைராக்கியத்திற்கான சமிக்ஞை கொடுக்கின்றார், இப்பொழுது தன்னைத்தானே சோதனை செய்து தேகி அபிமானி ஆவதில் தடையாக உள்ள தேக அபிமானம் மற்றும் அனேக விதமான தேக அபிமானத்தின் அனுபவங்கள் இவற்றை மாற்றிக் கொள்ளுங்கள். மற்றொன்று நீண்ட காலத்திற்காகவும் தன்னைப் பற்றி சிந்தியுங்கள். நீண்டகால பயிற்சி தேவை. நீண்ட கால முயற்சி, நீண்டகால பதவி தரும். இப்போது நீங்கள் நீண்ட காலத்திற்கான கவனம் குறைவாக கொடுத்தால் கடைசி காலத்தில் நீண்ட காலத்திற்கான சேமிப்பு செய்ய முடியாது. மிகவும் தாமதம் என்ற பாலகை போடப்பட்டு விடும். எனவே பாப்தாதா இன்று

அடுத்த வருடத்திற்கான வீட்டுப்பாடம் தருகின்றார். இந்த தேக அபிமானம் அனைத்து இன்னல்களுக்கும் காரணமாக அமைகின்றது. இருந்தாலும் குழந்தைகள் ரமணிகரமானவர்கள் அல்லவா, எனவே பாபாவுக்கு கூட ஆறுதல் தருகிறார்கள், பாபா நாங்கள் சமயத்தில் சரியாகி விடுவோம். நீங்கள் கவலைப்பட வேண்டாம், பாப்தாதா சொல்கிறார், உங்களுக்கு நேரம் என்ன, ஆசிரியரா? சமயத்தில் சரியாகி விடுவோம் என்றால் உங்களுக்கு ஆசிரியர் சமயம் தானே! உங்களுடைய படைப்பு தான் சமயம், அது உங்களுக்கு ஆசிரியர் என்றால் இது நன்றாக இருக்கிறதா? எனவே சமயத்தை நீங்கள் அருகாமையில் கொண்டு வர வேண்டும். நீங்கள் சமயத்தை அருகே கொண்டுவரக் கூடியவர்கள். சமயத்திற்காக காத்திருப்பவர்கள் கிடையாது. நேரத்தை நீங்கள் ஆசிரியராக ஆக்காதீர்கள்.

இன்று பாப்தாதா மீண்டும், மீண்டும் இதையே சமிக்ஞையாக கொடுத்துக் கொண்டிருக்கின்றார். தன்னை சோதனை செய்யுங்கள். அடிக்கடி சோதனை செய்யுங்கள் மேலும் மாற்றிக் கொள்ளுங்கள். நீண்ட கால மாற்றம், நீண்ட கால பதவிக்கு அதிகாரியாக மாற்றும். எனவே பாப்தாதா பார்க்கின்றார், இதுவரையிலும் கூட முயற்சியில் ஏற்றத்தாழ்வுகளே இருக்கிறது, ஆனாலும் கடைசி நம்பரில் உள்ள குழந்தைமீதும் பாபாவுக்கு அன்பு இருக்கிறது. எனவே தான் பாபாவின் குழந்தையாகியுள்ளீர்கள், பாபாவை தெரிந்து கொண்டீர்கள், என்னுடைய பாபா என்று சொல்கின்றீர்கள். எனவே நேரத்திடம் விட்டு விடாதீர்கள். சமயம் வராது. சமயத்தின் முழுமை தன்மையையே நாம் தான் கொண்டு வர வேண்டும். பாப்தாதாவின் உலக மாற்றத்திற்கான காரியத்தில் நீங்கள் அனைவருமே துணைவர்கள். தனியாக பாபா காரியம் செய்ய முடியாது. குழந்தைகளோடு தான் செய்கிறார். பாபா என்னவோ முதலில் குழந்தைகள் தான் என்று சொல்கிறார். முதலில், குழந்தைகள். அடுத்த வருடம் வரத்தான் வேண்டும், அப்பொழுது இந்த வீட்டுப்பாடம் செய்வீர்களா? ஆம் என்றால் கை உயர்த்துங்கள். நல்லது. பின்னால் இருப்பவர்களும் கூட கை உயர்த்துகின்றார்கள்.

பாருங்கள் இன்று கூட்டம் அதிகமாகி விட்டது. பாப்தாதாவும் குழந்தைக்கு நாலா புறமும் சுற்றி பார்த்து வருமாறு சமிக்ஞை செய்தார், எங்கெல்லாம் குழந்தைகள் உறங்குகிறார்கள். எப்படி வரிசையில் நின்று

சாப்பிடுகிறார்கள், வரிசை மிக நீளமாக உள்ளது. ஆனாலும் எல்லோர் முகத்திலும் மகிழ்ச்சியிருக்கின்றது. மதுபன்னில் இருக்கிறோம் தானே! ஆனால் இந்த மகிழ்ச்சியை மதுபன்னிலே விட்டு விட்டு சென்று விடக்கூடாது. தன்னோடு எடுத்து செல்ல வேண்டும். பாப்தாதா வதனத்தில் அமர்ந்து கொண்டு உங்கள் அனைவருடைய உறங்கும் நிலை, சாப்பிடுவதற்கான வரிசை நிற்கும் நிலை அனைத்து காட்சிகளையும் பார்த்தார். பாப்தாதாவிற்கு ஒரு சங்கல்பமும் வருகிறது. இப்போதே போர்வைகளும், தலையனைகளும் மழையாக பொழிய வேண்டும் என்று, ஆனால் இதுவும் ஒரு ஆனந்தமான விழா தான். மேலும் இன்னும் நன்றாக பாபா பார்க்கின்றார். எங்கெல்லாம் பார்த்தாரோ, யாரெல்லாம் கிடைத்தார்களோ அனைவருமே பெரும்பாலும் நல்லவிதத்தில் தேர்ச்சியடைந்துள்ளார்கள். கைத்தட்டுங்கள் ஆனால் இந்த வீட்டுப்பாடத்தை மறந்து விடக்கூடாது. இதற்காக கை தட்டவில்லையே. பாப்தாதா மற்றும் விசேஷமாக பிரம்மாபாபா எப்போதுமே குழந்தைகளை மதுபனின் அலங்காரம் என்று சொல்வார்கள். எனவே நீங்கள் அனைவரும் மதுபனிற்கு வந்துள்ளீர்கள், பாப்தாதாவும் சாகார ரூபத்தில் இவ்வளவு பெரிய பரிவாரத்தைப் பார்த்து மகழ்ச்சியடைகின்றார். பொருத்துக் கொள்ள வேண்டியதும் இருந்தது ஆனால் இந்த பொருமை சதா காலத்திற்காகவும் பொருமை சக்தியை அதிகரிக்கிறது. அனைவருக்கும் மகழ்ச்சித்தானே! கடினம் ஒன்றும் இல்லையே? மேலும் பாருங்கள், இவ்வளவு பெரிய பரிவாரத்திலும் தண்ணீர் நன்றாக கிடைத்துக் கொண்டிருக்கிறது, எல்லோருமே தண்ணீரை பயன்படுத்துகிறீர்கள் அல்லவா? சிறிது குறைந்தாலும் கவனம் வைக்க வேண்டியுள்ளது ஆனால் இப்பொழுதெல்லாம் கிராமப்புறங்களில் தண்ணீர் குடிப்பதற்கு கூட கிடைப்பதில்லை. இங்கே உங்களுக்கோ துணி துவைப்பதற்கு கூட தண்ணீர் கிடைக்கின்றது. மேலும் இவ்வளவு பெரிய பரிவாரத்தைப் பார்த்து மகிழ்ச்சியும் அடைகின்றீர்கள். முழு கல்பத்திலும் பாப்தாதாவிற்கு ஒரு பெருமையும் உள்ளது, இவ்வளவு பெரிய பரிவாரம் வேறு யாருக்குமே கிடையாது.

யாரெல்லாம் முதல் முறையாக வந்துள்ளீர்களோ, முதன் முறையாக பாப்தாதாவை சந்திக்க வந்துள்ளீர்களோ, கை உயர்த்துங்கள். பார்த்தீர்களா, பாதி வகுப்பு முதன் முறையாக வந்திருப்பவர்கள் தான்.

பின்னால் இருப்பவர்கள் கை உயர்த்துங்கள். எழுந்து நின்று பாருங்கள். யாரெல்லாம் முதன் முறையாக வந்திருக்கிறீர்களோ, அவர்களுக்காக பாப்தாதா புதிய பிறப்பிற்கான பிறந்த நாளை கொண்டாடுவதற்கான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டிருக்கிறார். உலகத்தில் சொல்வார்கள். லட்சோப லட்ச வாழ்த்துக்கள் என்று. பாபா சொல்கிறார், கோடி கோடி பல கோடி வாழ்த்துக்கள். மேலும் பாப்தாதா இப்பொழுது வருபவர்களுக்கு எப்போதுமே ஒரு வாய்ப்பு தருகிறார். அந்த வாய்ப்பு என்னவென்றால் இப்போது வருபவர்களும் கூட ஒருவேளை தீவிர முயற்சி செய்தால், பாப்தாதா மற்றும் டிராமா அவர்களுக்கு கடைசியாக வந்தாலும் வேகமாக சென்று முதல் நண்பரில் வருவதற்கு வாய்ப்பு தருகிறார். வாய்ப்பு உள்ளது. வாய்பிற்குரியவராக ஆகுங்கள். அதற்காக கவனம் தர வேண்டும். நல்லது. உங்கள் அனைவருக்கும் கூட பரிவாரத்தின் விருத்தி நன்றாக இருக்கிறது தானே! பாருங்கள் மதுபனில் சேவாதாரிகள் ஒவ்வொரு முறையும் மண்டலங்கள் வாரியாக சேவை செய்ய வருகிறார்கள், உதவியாளராக இருக்கின்றார்கள் ஆனால் மதுபன் நிவாசி மதுபனின் அனைவருமே புஜங்கள் தான். தாதியும் சொல்லிக் கொண்டிருந்தார், இவர்கள் அனைவரும் மதுபனின் புஜங்கள் என்று. கீழே இருந்தாலும், மேலே இருந்தாலும் (சாந்திவன், பாண்டவ பவன்) தோட்டத்தில் (பீஸ் பார்க்) இருந்தாலும், மருத்துவமனையில் இருந்தாலும் கீழே (சாந்திவன்) அபு நிவாசியாக இருந்தாலும், மேலே அபு நிவாசியாக இருந்தாலும் அனைவருமே மதுபனின் புஜங்கள் தான். பாப்தாதாவும் பார்க்கின்றார் மதுபனை சார்ந்த அனைவருமே தியாகம் செய்துள்ளார்கள். இங்கே வருவதற்கு பதிலாக அவரவர் இடங்களிலேயே அமர்ந்துள்ளார்கள் ஆனால் பாப்தாதா தூரத்தில் இருப்பதாக பார்க்கவில்லை, பாப்தாதாவின் உள்ளத்தில் உறைந்திருப்பவர்களாக பார்க்கின்றார். இருந்தாலும் களைப்பில்லா சேவாதாரியாகி சேவையில் சகயோகியாகவும் இருக்கின்றார்கள் அல்லவா? எனவே இன்று விசேஷமாக மதுபன்னின் புஜங்களான அவர்கள் அனைவருக்கும் விசேஷமாக அனைத்து மதுபன் வாசிகளுக்கும் பாப்தாதா வாழ்த்துக்களைத் தருகின்றார். வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள். இப்போது அனைவருமே சொல்கிறார்கள் ஒருவருக்கொருவர் இது கடைசி முழுக்கு என்று. பாருங்கள் 40-ஆண்டுகள் கூட பூர்த்தியாகப் போகின்றது. 40-ஆண்டுகளில் சேவைக்கான வாய்ப்புகளை எடுத்துக்

கொண்டவர்கள் எவ்வளவு பாக்கியசாலிகள். சேவை என்றாலே பலன். சேவை செய்வது என்பதல்ல, பலனை அடைவதாகும். பாபாவின் பார்வையில், உள்ளத்தில் ஒவ்வொரு குழந்தைகளுமே உள்ள சிம்மாசனத்தில் உறைந்திருப்பவர்கள் தான். ஒருவர் கூட இப்படி நினைக்காதீர்கள், பாபா நம்மை பார்த்தாரோ இல்லையோ, பாப்தாதா ஒவ்வொரு குழந்தைகளையும், தூர தேசத்தில் இருந்தாலும் கூட உள்ளம் என்ற சிம்மாசனத்தில் அமர்ந்திருப்பதாக பார்க்கின்றார். பின்னால் அமர்ந்திருப்பவரும் கூட பின்னால் இல்லை, பாப்தாதாவின் உள்ளத்தில் இருக்கின்றீர்கள். இவ்வளவு அனேக குழந்தைகள் இருந்தும் கூட பாருங்கள், எவ்வளவு நன்றாக அமைதியிருக்கிறது. ஏன்? அனைவருமே அன்பில் மூழ்கியிருக்கின்றனர். அன்பு என்னும் சக்தி அனைவரையும் கவர்ந்து கொண்டிருக்கிறது, பாப்தாதாவையும், பரிவாரத்தையும், இவ்வளவு பெரிய பரிவாரம், சாந்தி சக்தியில் இருந்து குஷியை கொண்டாடுகிறீர்கள் இதுவே அமைதி சக்தி மற்றும் பரிவாரத்தின் விசேஷ தன்மையாகும். எப்படிப்பட்ட இடம் கிடைத்திருந்தாலும், ஆனாலும் நீங்கள் அமர்ந்திருப்பது எந்த இடத்தில்.! பின்னால் அமர்ந்திருக்கிறீர்கள், பக்கத்தில் அமர்ந்திருக்கிறீர்கள். எதிரில் இல்லை ஆனால் ஒவ்வொருவரும் அன்பு என்ற இருக்கையில் அமர்ந்திருக்கிறீர்கள். மதுபன் நிவாசிகளும் (கரங்கள் உட்பட) ஒவ்வொருவருக்கும் பாப்தாதா பல கோடி மடங்கு அன்புகளை வழங்கிக் கொண்டிருக்கின்றார். இன்று தாதிகளுக்கும் மற்றும் நிமித்தமான துணைவர்களுக்கும் கூட பாப்தாதா சதா களைப்பில்லாமல் சேவை செய்வதற்கான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றார். அதோடு மட்டுமல்லாமல் குழந்தைக்கும், ரதத்திற்கும் கூட பாப்தாதா வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறார். உங்களுடைய தலைப்பாகை வந்து சேர்ந்துள்ளது. பாருங்கள். இது குழந்தையிலிருந்தே கிடைத்த வரதானம், குழந்தைக்கு வதனம் செல்கின்ற வரதானம் குழந்தை வருவத்திலிருந்தே கிடைத்தது, குழந்தையிடம் சரளத்தன்மை மற்றும் பொறுமை என்னும் குணம் இந்த ஒரு விசேஷமான காரணங்களால் இந்த நிமித்தமான நடிப்பு கிடைத்துள்ளது. ஒவ்வொருவருக்கும் அவரவருக்குரிய நல்ல நடிப்பே கிடைத்துள்ளது. பாப்தாதா தாதிகளை பார்த்துக் கொள்கின்றவர்களுக்கு, முன்னி, மோகினி அவர்களுக்கும் கூட முக்கியமாக பெரிய தாதி அவர்களுக்கும் துணையாக இருப்பவர்களுக்கு வாழ்த்துக்களைத்

தெரிவித்துக் கொள்கின்றார். மேலும் இப்பொழுது யார் நிமித்தமாக இருக்கின்றார்களோ அவர்களுக்கும் வாழ்த்துக்கள். மற்றும் ஆங்காங்கே சேவை நிலையில் இருக்கின்ற ஆசிரியர்கள், அந்த ஆசிரியர்களுக்கும் கூட பாப்தாதா வாழ்த்து தெரிவித்துக் கொள்கின்றார். பாப்தாதாவையும் சந்திக்க ஆங்காங்கே இருந்து வந்திருக்கிறீர்கள் இப்போது யாருடைய முறையோ அவர்களும் வந்திருப்பீர்கள் ஆனால் எங்கிருந்து வந்தாலும் அந்த ஆசிரியர்களுக்கும் பாப்தாதா ஒரு விசேஷமான சேவையை நினைவூட்டுகிறார். அது வீட்டுப்பாடம் செய்வதாகும். ஆசிரியர்களுக்கான வீட்டுப்பாடம் சதா ஆசிரியர் ஒருவர் தன்னை பாப்தாதாவின் உண்மையான துணைவியாகி சமீபத்தில் இருக்கும் துணையான தன் மூலமாக பாபாவை பிரத்யட்சம் செய்ய வேண்டிவர்கள், யார் உங்களைப் பார்த்தாலும் இவர்களை இப்படி மாற்றியவர் யார்? இவர்களது தந்தை, ஆசிரியர், சத்குரு யார்! என்று பாபாவை பார்க்க வேண்டும். உங்களைப் பார்க்கக் கூடாது. இதே சுயமரியாதையில் இருங்கள். 6-7 மாதங்கள் கழித்து மீண்டும் பாபா சந்திக்கும்போது, இந்த வீட்டுப்பாடத்தை கேட்பார். ஒவ்வொரு வரும் எத்தனை சதவிகிதம் செய்துள்ளீர்கள்? அதிகமான செய்திகளை கேட்கமாட்டார். இந்த வீட்டுப்பாடம் எத்தனை சதவீதம் செய்துள்ளீர்கள். நீங்கள் தென்படக்கூடாது. பாபா தென்பட வேண்டும். இதில் அணைத்து தாரணைகளும் வந்து விடும். மதுபனை சார்ந்தவர்களுக்கும் பாப்தாதா அன்பு நினைவுகளை கொடுத்துக் கொண்டு தான் இருக்கின்றார் ஆனால் மதுபனை சார்ந்தவர்களோ எல்லா இடங்களில் இருந்தாலும் ஒவ்வொருவருமே விசேஷமான ரத்தினங்கள். பாபாவை பிரத்யட்சம் செய்வதற்கான நிமித்தமானவர்கள். எனவே எல்லா சமயங்களிலும் மதுபனை சார்ந்தவர்கள் இப்படி மனசேவை, செயல் மூலம் சேவை, மற்றும் எல்லோரையும் பாபாவிற்கு சமமாக மாற்றுவதில் உதாரணாக மாறி காண்பிக்க வேண்டும். மதுபனை சார்ந்தவர்கள் பாப் சமான் ஆவதற்கான ஒரு வரைப்படம தன்னை மாற்றிக் காட்ட வேண்டும். காண்பித்திருப்பீர்களா! ஒவ்வொரு வர் வாயிலிருந்தும் ஆஹா பாபாவின் குழந்தைகளே என்று சொல்ல வேண்டும். நீங்கள் அனைவரும் என்ன செய்வீர்கள் நீங்கள் அனைவரும் தன்னை வரிசைக்கிரமமாக இல்லாமல் முதல் நம்பர் வருபவராகி உதாரணமானவராகி காண்பிக்க வேண்டும். வரிசைக்கிரமமாக மாறுவதில் ஆனந்தம் இருக்காது, ஆக வேண்டும் என்றால் முதல்

நம்பர்தான் வந்து காட்ட வேண்டும். வரிசைக்கிரமமாக வருவது என்பது என்ன பெரிய விஷயம் எனவே எவ்லோரும் வெற்றி, முதல் நம்பர் என்ற வகையில் ரிசல்ட் சொல்ல வேண்டும். நல்லது.

அனைத்துப் பக்கங்களிலும் உள்ள பாப்தாதாவினுடைய உள்ள சிம்மாசனத்திற்ய வர்கள் மற்றும் புருவ மத்தியில் ஆசனத்திலிருப்பவர்கள் மேலும் நாளைய ராஜ சிம்மாசனத்தில் இருப்பவர்கள் இப்படிப்பட்ட பாப்தாதாவின் தேடிக் கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளுக்கு பலப்பல மடங்கு பாக்கியசாலி குழந்தைகளுக்கு சதா தன்னுடை கண்கள் மூலமாக ஆன்மீகத் தன்மையை அனுபவம் செய்யவிப்பவர்கள் மற்றும் முகத்தின் மூலமாக அதிர்ஷ்டம் எனும் மகிழ்ச்சியை, சதா மனம் குஷியில் நடனம் ஆடுகின்றவர்கள். எதிரே யார் வந்தாலும் இவர்களைப் போல குஷி வேறு யாரும் எங்குமே கிடையாது என்று சொல்லும் வண்ணம் கற்றுக் கொள்ள வேண்டும் இப்படிப்பட்ட பாபாவின் ஒவ்வொரு குழந்தைகளும் தன் மூலமாக பாபாவையும், வாய் மூலமாக பாபாவின் அறிமுகத்தையும் கொடுக்கின்றீர்கள் ஆனாலும் கண்கள் மூலமாக மற்றும் முகத்தின் மூலமாக பாபாவை சாட்சாத்காரம் செய்விப்பவர்கள், நாலா பக்கங்களிலுள்ள குழந்தைகளுக்கு, யாரெல்லாம் கடிதங்கள், ஈமெயில் அனுப்பினீர்களோ அனைவரது செய்திகளும் பாப்தாதாவை வந்து அடைந்தது. நீங்கள் செய்தீர்கள் அப்பொழுதே பாபாவிடம் வந்து சேர்ந்து விட்டது எதிரே அமர்ந்திருப்பவர்களைக் காட்டிலும் நீங்கள் எல்லோரும் எப்பொழுது செய்தீர்களோ அப்போதே வந்து விட்டது. எனவே மிக மிக மிக வாழ்த்துக்கள். உள்நாடு மற்றும் அயல்நாட்டிலுள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் பாபா மனமாற அன்பிற்கான பதிலைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றார். நாலாபுறமும் உள்ள குழந்தைகளுக்கு பாப்தாதா பன்மடங்கு உளமார்ந்த அரவணைப்பு மற்றும் உளப்பூர்வமான அன்பையும் வழங்கிக் கொண்டிருக்கின்றார் மேலும் அனைவருக்கும் நமஸ்காரத்தையும் தெரிவித்துக் கொள்கின்றார். நல்லது.

இன்று சேவை யாருடைய முறை? ஈஸ்டன் ஜோன், நேபாளம், தமிழ்நாடு (வங்காளம், பீகார், ஒரிசா, அஸாம்): ஆசிரியர்கள் கிரீடம் அணிந்துள்ளார்கள். நல்லது. இந்த மண்டலத்தில் பிற மண்டலங்களும் இணைந்துள்ளது. எனவே நேபாளத்தை சார்ந்தவர்கள் மட்டும் கை

உயர்த்துங்கள். சென்னையை சார்ந்தவர்கள், தமிழ் நாட்டை சார்ந்தவர்கள், நல்லது. இவை எல்லாம் சேர்ந்து தான் ஈஸ்டன் ஜோன் என்று சொல்லப்படுகின்றது அங்கே தான் ஞான சூரியன் உதயமாகின்றார். எனவே ஞான சூரியனின் பிரபாவமுள்ள சக்திசாலியான பூமியாகும். அயல் நாட்டை சார்ந்தவர்கள் சொல்கின்றார்களல்லவா, பாரதத்தில் மட்டும் ஏன் பாபா வர வேண்டும். பாரதத்தின் மகிமை உள்ளதல்லவா! இந்த பாரதத்திலும் கூட கிழக்குப் பகுதியில் தான் ஞான சூரியன் உதயமாகின்றார் எனவே அந்தப் பூமிக்கு மகிமை உள்ளது. எனவே இந்த மண்டலத்தில் பிற மண்டலங்களும் கலந்துள்ளது. நல்லது, பலவிதமான சேவைகளும் செய்து கொண்டிருக்கின்றீர்கள். இப்பொழுது பாப்தாதா ஏதாவது விந்தையான காரியம் பார்க்க விரும்புகிறார் பாப்தாதா முன்பு கூட சொல்லியிருக்கின்றார், ஒவ்வொரு மண்டலத்திலும் விசேஷமாக தன்னுடைய முக்கியஸ்தர்களின் குழுவை தயார் செய்யுங்கள் ஆனால் அவர்கள் அன்புடையவர்களாக. மட்டும், சகயோகியாக மட்டும் இருக்கக்கூடாது. சேவையில் ஒவ்வொரு செயலிலும் துணையாக இருக்க வேண்டும். சகயோகியாக இருந்தால் மட்டும் போதாது துணையாகவும் இருக்க வேண்டும், சகயோகியாகவும் இருக்க வேண்டும் நல்ல மைக்காக இருக்க வேண்டும் இப்படிப்பட்ட ஒரு ரிசல்ட்டை இதுவரையில் ஏதோ ஒரு சில மண்டலங்களில் மட்டும் கொடுத்துள்ளார்கள் ஆனால் அதுவும் கலப்படமான முக்கியஸ்தர்களை உடையதாகும். பிரத்யேகமாக முக்கியஸ்தர்கள் அதாவது வாரிசு தரமானவர்களாக அருகாமையிலிருப்பவர்களாக இருக்க வேண்டும் அவர்கள் நடைமுறையில் வாரிசாக இல்லாமலிருக்கலாம், அர்ப்பணம் (சரண்டர்) ஆகாமலிருக்கலாம் ஆனால் தரமுள்ள வாரிசாக இருக்க வேண்டும். இப்படிப்பட்ட ஒரு குழு பாப்தாதாவிடம் வரவில்லை. இரண்டு நான்கு பெயர் தனித் தனியாக அனுப்பப்பட்டது ஆனால் பெயர் வந்தவுடன் விசேஷமான கமிட்டி மூலமாக அது அனுமதிக்கப்பட்டு பிறகு அந்தக் குழுவினை பாப்தாதா முக்கிய காரியத்திற்காக ஈடுபடுத்துவார். இருப்பினும் விருத்தி நன்கு விஸ்தாரமடைந்துள்ளது. இதற்கு பெயர் வைத்துள்ளார்கள் வங்காளம் மற்றும் பீகார் இப்படியும் டைட்டில் கொடுக்கப்பட்டுள்ளது. பாப்தாதாவிடம் பீகாரில் மழை பொழிந்தது, அதைப் பற்றிய நிழல் படங்களும் வந்தது, செய்திகளும் வந்தது. எப்போதிலிருந்து பீகாரில் இந்த ஆர்பாட்டம் ஆரம்பம் ஆனதோ

அந்த ஏரியாவில் எல்லாம் சென்டரும் திறக்கப்பட்டது. அதற்கான வாழ்த்துக்கள். வங்காளத்தைச் சார்ந்தவர்களும் ஆங்காங்கே அதிகரித்துக் கொண்டே இருக்கிறார்கள் ஆனால் இப்பொழுது என்ன வீட்டுப் பாடம் கொடுக்கப்பட்டதோ அதில் முதல் நம்பரில் வருவீர்களல்லவா! மற்றபடி பாப்தாதா சேவைக்கான சேத்திரத்தில் நாலா பக்கங்களிலும் உள்ளவர்களின் முயற்சி மற்றும் திட்டங்களைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார், மகிழ்ச்சியும் அடைகின்றார். இப்பொழுது தில்லியில் கூட செய்தார்கள். அதுபோலவே ஏதேனும் ஒன்று புதுமையாக செய்து கொண்டே இருங்கள். தடைகளும் வந்தது ஆனால் யோக சக்தி அதனை முடித்து விட்டது. எனவே இவ்வாறாக சிறிய மற்றும் பெரிய நிகழ்ச்சிகளை செய்து கொண்டே இருங்கள். மேலும் பாப்தாதா இந்த ஆண்டிற்காக திட்டம் கொடுத்திருக்கின்றார். அது என்னவென்றால் ஒரே சமயத்தில் ஒரே தலைப்பில் பாரதத்தில் அனைத்து மண்டலங் களிலும் மற்றும் அயல் நாட்டிலும் நடைபெற வேண்டும். இதைப் பற்றிய ரிசல்ட்டும் பாப்தாதாவிடம் வந்துள்ளது சிலருக்கு இதைப் பற்றிய மீட்டிங் மற்றும் திட்டங்கள் அமைப்போம் என்று ஊக்கம், உற்சாகம் உள்ளது. இதுவும் நல்லது எப்படி டில்லியில் ஊடங்களுக்கான (மீடியா) ஆரம்பிக்கப்பட்டது இதுவும் நல்ல ரிசல்ட்டு தான் இப்படி மாணவர்களும் ஆங்காங்கே உருவாகியுள்ளார்கள் இதுவும் நல்ல ரிசல்ட் இதுபோலவே ஒவ்வொருவரும், அவரவருடைய நகரங்களில் மற்றும் மண்டலங்களில் செய்ய முடியும். ஏதேனும் ஒரு நிகழ்ச்சிகளை அமைத்து அந்த சமயத்தில் மீடியா மூலமாக அகில உலகமும் தெரிய வேண்டும். அதற்காக ஏதாவதொரு ஏற்பாட்டைச் செய்யுங்கள். என்னவென்றால், அப்படி வீட்டில் அமர்ந்துக் கொண்டே பார்க்க முடியும் பொழுது அவர்களும் உங்களைப் பற்றி புகார் செய்வது நின்று விடும். எனவே எந்த ஒரு நிகழ்ச்சிகளை செய்யும்பொழுதும் பணம் செலவானாலும் சரி அந்த நிகழ்ச்சிகளை மீடியா மூலமாக அகில உலகத்திலும் எல்லோரும் பார்க்கும் அளவில் ஏற்பாடு செய்யுங்கள் அப்படி செய்வது நல்லது. செய்ய முடியும். நாலா புறங்களிலும் உள்ள செய்தி துறையை சார்ந்தவர்களும் உங்களுடைய நிகழ்ச்சிகளைப் பார்ப்பதின் மூலமாக நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வதன் மூலமாக உங்களுடைய சுப பாவனையை பார்த்து உங்களுக்குத் துணையாகி விடுவார்கள். துணையாக இல்லையென்றாலும், சகயோகியாக வாவது மாறி விடுவார்கள். எனவே சேவை செய்யுங்கள் ஆனால் சேவை

மட்டுமல்லாமல் தன்னுடைய எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கிய உணர்வையும் அவசியம் சோதனை செய்யுங்கள், சம நிலை இருக்க வேண்டும். நல்லது. இந்த மண்டலத்திற்கு வாழ்த்துக்கள் இவர்கள் அனைவரையும் பாருங்கள், எத்தனை பேருக்கு சேவைக்கான வாய்ப்பு கிடைத்துள்ளது. நன்றாக இருக்கிறது அல்லவா! பிடித்திருக்கிறதா? யக்ஞ சேவை மூலம் ஆயிரமடங்கு புண்ணியம் அதிகமாக சேருகிறது. எனவே நீங்கள் அனைவரும் உண்மையான உள்ளத்தோடும் பரந்த மனதோடும் சேவை செய்ததால் உங்களுக்கு ஆயிரமடங்கு புண்ணியத்தின் கணக்கு சேமிப்பாகிறது. நல்லது. கூட்டமும் நன்றாக இருக்கின்றது எண்ணிக்கை அதிகரித்துள்ளது மற்றபடி ஏதேனும் புதியதாக ஒரு செயல் செய்து காட்டுங்கள் நல்லது. அனைவருக்கும், மண்டலத்திலிருந்து வந்துள்ள ஒவ்வொரு பாக்கியவான் ஆத்மாவிற்கும் பாப்தாதாவின் பண்மடங்கு வாழ்த்துக்கள். நல்லது.

**இரட்டை அயல்நாட்டவர் (40-தேசங்களிலிருந்து 300-சகோதர, சகோதரிகள் வந்துள்ளார்கள்):** நீங்கள் அயல் நாட்டவரா? ஆனால் எல்லோரையும் விட மிகப் பெரிய அயல்நாட்டவர் யார்? பாப்தாதா தான் உங்களையெல்லாம் விட மிகப் பெரிய அயல் நாட்டவர் எவ்வளவு தூரத்திலிருந்து வந்திருக்கின்றார். உங்களுடைய ஏரியாவை கணக்குப் போட்டு விடலாம். பாபாவின் ஏரியாவை கணக்குப் போட முடியுமா? கணக்குப் போட முடியாது. நீங்கள் அயல் நாட்டிலிருந்து இந்த தேசத்திற்கு வருவதற்காக எவ்வளவு நேரம் ஆகிறது? ஆனால் பாப்தாதாவிற்கு அங்கிருந்து வர எவ்வளவு நேரமாகிறது? அயல் நாட்டிலும் கூட சேவை மற்றும் சுய முன்னேற்றத்திற்கான அலை வீசிக் கொண்டிருக்கின்றது. பாப்தாதாவும் செய்திகளைக் கேட்டார். மதுபனிற்கு வராதவர்களும் சில காரணங்களால் அவர்களுக்கென்று அவரவர் இடங்களிலேயே பயிற்சிகள் மற்றும் பட்டிக்கான நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றது இதுவும் நல்ல விசயம் தான் மேலும் அவர்களும் கூட மனதின் மூலமாகவே மதுபனை வந்து அடைந்து விட்டதாக அனுபவம் செய்கின்றார்கள். நீங்கள் உடலாலும், மனதாலும் வந்துள்ளீர்கள் அவர்கள் மனதாலேயே மதுபனை வந்து அடைந்து விட்டார்கள். நல்லது, காயத்ரி வந்து விட்டாரா? நல்லது. அனுபவம் நன்றாக ஏற்படுகிறது அங்கில் மற்றும் ஆண்டி அவர்களின் நினைவும் வந்து சேர்ந்தது. பாப்தாதா எப்போதுமே சொல்வார் முதல் வி.ஜ.பி

அயல் நாட்டில் நிமித்தமாக இருந்தவர்கள் அங்கில், ஆண்டி தான் அவர்களுடைய அன்பும் நினைவும் நன்றாக இருக்கின்றது அதுபோன்ற சேவாதாரி. குழந்தைகளுக்கு பாப்தாதாவும் விசேஷமாக ஒளிக்கிரணங்களைத் தருகிறா. பிரம்மாபாபாவும் கூட சாகாரத்தில் இருந்தபொழுது இதுபோன்ற சேவாதாரி குழந்தைகளுக்காக இரவெல்லாம் கண்விழித்து சக்தி தருவது உண்டு. எனவே இப்பொழுதும் கூட பாப்தாதா வதனத்திலிருந்து குழந்தைகளுக்கு, அன்பான குழந்தைகளுக்கு, சேவாதாரி குழந்தைகளுக்கு சக்தி தருகின்றார், ஒளித்தருகின்றார் அந்த ஒளி வந்து சேருகின்றது.

இரட்டை அயல் நாட்டை சார்ந்தவர்கள் இரட்டை தீவிர புருஷார்த்திகள்தானே! அப்படிதானே! இரட்டை தீவிர புருஷார்த்திகளா? அப்படி உள்ளீர்களா? கை உயர்த்துங்கள் நல்லது. பாப்தாதா ஒவ்வொரு குழந்தைகளையும் தீவிர முயற்சியாளர்களாக பார்க்க விரும்புகின்றார். முயற்சியாளர் மட்டுமல்ல தீவிர முயற்சியாளர் (சகோதரர் முரளியும் கூட அதிகமாக நினைவு செய்கிறார்) பாப்தாதாவிற்கு நினைவு வந்து சேருகிறது அவரும் நிமித்தமாக இருக்கிறார் அல்லவா! ரஜனி குழந்தையும் குப்தமான முறையில் லண்டனில் சென்டர் திறப்பதற்காக நிமித்தமாக இருந்தார். மறைமுகமாக முரளி குழந்தைக்கு பாக்கியம் கிடைத்தது. இப்போது குழந்தையாகி விட்டார் அவரும் நினைவு செய்கிறார். இதுபோல நாலாபுறமும் உள்ள உள் நாடு மற்றும் அயல் நாட்டிலும் உள்ள யார் எல்லாம் நினைவு செய்கிறார்களோ அவர்கள் அனைவருடைய பெயர் பட்டியலும் பாப்தாதாவிடம் மிக நீளமாக உள்ளது. மனமாற எனது பாபா (மேரா பாபா) என்ற உடனேயே பாப்தாதாவும் ஆஜராகி விடுகின்றார் இது நன்றாக இருக்கின்றது. நல்லது. (குவைத்திலிருந்து சகோதரி வஜிகா வந்திருக்கின்றார்). உங்களுடைய குழு எங்கே? பாருங்கள், துணையாகவும் ஆக்கிக் கொண்டீர்கள். தேடிக் கண்டெடுக்கப்பட்ட குழந்தையை கொண்டு வந்துள்ளீர்கள். நல்லது. ஒவ்வொரு குழந்தை மீதும் பாபாவிற்கு ஒருவரை விட ஒருவர் அன்பு அதிகமாகவே உள்ளது. பெயர் சொல்ல வேண்டுமென்றால் எத்தனை பெயர் சொல்வது, எல்லோரும் புரிந்து கொள்ளுங்கள், பாபாவின் மனதில் என் பெயர் உள்ளது நன்கு சேவை செய்கிறார்கள். இப்பொழுதெல்லாம் அயல் நாட்டில் மிடில் ஈஸ்ட் சார்ந்தவர்களுக்கான சேவைக்கான முறை அதிகம் உள்ளது அனைத்து

தர்மத்தை சார்ந்தவர்களுக்கும செய்திகளை அனுப்ப வேண்டும் அல்லவா!

இப்பொழுது ஒவ்வொரு மண்டலமும் ஒரு முயற்சி செய்ய வேண்டும் என்ன செய்வது? யாரேனும் ஒரு நாத்திகனை, கடுமையான நாத்திகளை ஆஸ்திக்கு அதிகாரியாக மாற்றிக் கொண்டு வாருங்கள் பிறகு அவர் எல்லோருக்கும் முன்பாக வந்து தன்னுடைய அனுபவத்தை சொல்லட்டும். தான் நாத்திகன் நிலையிலிருந்து ஆஸ்திகனாக எப்படி மாறினேன் என்ற அனுபவத்தை பெரிய சபையின் நடுவே சொல்ல வேண்டும். ஏதோ ஒருவர் இருக்கக்கூடாது மக்கள் மத்தியில் பெயர் எடுபடும் அளவிற்கு அவர் பெரியவராக இருக்க வேண்டும். எப்படி ஒவ்வொரு துறையினருக்காக சேவை செய்கிறீர்களோ அதே போல இந்த சேவை செய்யுங்கள் இதற்காக ஏற்பாடு செய்யுங்கள். இப்படி ஏதேனும் ஒரு தர்மத்தை சார்ந்தவரை அத்தாரிட்டியாக தயார் செய்யுங்கள் அவர் வந்து தன்னுடைய அனுபவம் சொல்ல வேண்டும். பிரம்மா குமார் குமாரிகள் பரமாத்மாவைப் பற்றி சொல்கின்ற அறிமுகம் எந்த வகையில் சரியானது? இதைப் பற்றி அவர் தன் வாய் மூலமாக அத்தாரிட்டியோடு பேச வேண்டும் இன்னும் ஒரு கருத்தும் உள்ளது. கீதையின் பகவான் யார்? அதுவும் ஊர்ஜிதமாகி விடும். எப்போது இது ஊர்ஜிதமாகுமோ அப்போது பகவான் வந்து விட்டார் என சொல்வார்கள் மிக நல்லது. மதுபனில் அலங்காரமாக வந்துள்ளீர்கள் பாப்தாதாவும் பார்த்து மகிழ்ச்சியடைகின்றார் நல்லது.

தாதிகளுடன்: நீங்கள் தூரத்தில் அமர்ந்துள்ளீர்கள், தூரத்தில் அமர்ந்திருந்தாலும் உங்கள் அனைவருக்கும் பாப்தாதா தலைப்பாகை அணிவிக்கின்றார். பின்னால் அமர்ந்திருப்பவர்களுக்கு முதலில் தலை பாகை அணிவிக்கின்றார். அன்பு எதைத்தான் அனுபவம் செய்ய வைக்காது. நல்லது. (டாக்டர் நிர்மலாவுடன்) நன்றாக நடிப்பை நடித்துக் கொண்டிருக்கிறீர்கள் பாப்தாதாவிற்கு சந்தோஷம்.

பர தாதியுடன் (ஈஸ்டன் ஜோனுக்கு நிமித்தமானவர்) நிமித்தமாக இருக்கிறாரல்லவா, நிமித்தமாக இருக்கின்றார். உங்களால் அனைவரும் பாபா என்று நினைவு செய்கின்றார்கள் புதிதாக

வருபவர்கள் கூட உங்களைப் பார்க்கும் பொழுது உங்களைப் பார்க்கவில்லை, பாபாவை பார்க்கின்றனர். இது விசேஷமான வரதானம். நல்லது.

சாந்தா மணி தாதி அவரவரது நடிப்பையும் சமயத்திற்கேற்ப நன்றாக நடிக்கின்றீர்கள் ஆனால் பழையவர்களை எந்த பார்வையில் எல்லோரும் பார்க்கின்றார்கள்? ஆதி காலத்தை சார்ந்தவர்கள் ஆதி காலத்திற்கு மகிமை உள்ளதுதானே! மீதமிருப்பவர் சிலர்தான் ஆனால் ஆதி ரத்தினம் அல்லவா! நல்லது.

சகோதரர் பிரிஜ் மோகனுடன் டில்லியில் நிகழ்ச்சி நன்றாக நடைபெற்றது. ஒரு முறை விதி முறை அமைந்து விட்டால் இனி பின்னால், செய்வதற்காகவும் சுலபமாகவும் இருக்கும். அப்படியே நடைபெறும். இப்போது இவர்கள் என்ன செய்து கொண்டிருக்கின்றார்கள் என்பது அனைவரது கவனத்தில் வந்து விடும்.

டில்லியின் ஆசிரியர்கள் எழுந்து நில்லுங்கள் நல்லது. சேவை செய்தது பிடித்திருக்கிறதா? இதில் அனைவரின் சங்கல்பமும் ஒன்றாக இருந்தது. இனி முன்னேற்றம் நடந்து கொண்டே இருக்கும். என்ன அனுபவம் கிடைத்ததோ அது முன்னேறச் செய்யும் ஆனால் எந்த ஒரு செயலிலும் வெற்றி வேண்டுமென்றால் அதற்கு முதல் அஸ்திவாரமே அனைவருடைய ஒருமித்த கருத்துதான் (ஏக் மத்) எல்லோர் மனதிலும் ஊக்கம், உற்சாகம் இருக்க வேண்டும். சோதனையும் (பேப்பர்) அனுபவியாக மாற்றுகிறது. அதுபோலவே குழுவின் சக்தியும் அனைத்தையும் சுலபமாக்கி விடுகிறது. பாப்தாதா தைரியத்தைப் பார்த்து மகிழ்ச்சியடைகிறார். எங்கு தைரியம் உள்ளதோ அங்கு இயற்கை எனும் துணைவர்களின் உதவியும் எல்லா வகையிலும் கிடைக்கிறது எனவே வாழ்த்துக்கள்.

(இப்பொழுது இதையும் விட பெரிய சபை அமைப்போம் அதில் பாப்தாதாவும் வர வேண்டும்) பாப்தாதாவும் இப்பொழுதும் கூட பார்த்துக் கொண்டிருக்கின்றார். நீங்கள் பார்க்கவில்லை (அஜ்மீரில் கூட நன்றாக நிகழ்ச்சி நடந்தது) நன்றாக தைரியம் வைத்துள்ளீர்கள், தைரியம் வைத்தீர்கள் வெற்றி கிடைத்தது.

சென்னை பற்றிய செய்திகளும் கேட்டேன். என்ன நிகழ்ச்சி நீங்கள் செய்து கொண்டிருக்கின்றீர்களோ அது சிறியதாக இருந்தாலும் ரிசல்ட் நன்றாக இருக்கிறது. (சென்னையை சார்ந்த ஆசிரியர்கள் எழுந்திருங்கள்) நல்லது. பாப்தாதாவும் சேவைப் பற்றிய ரிசல்ட்டையும் கேட்டு தெரிந்து கொண்டார். செலவு குறைவு ரிசல்ட் நன்றாக கிடைத்துள்ளது. ஏனென்றால் அந்த பக்கம் சிவ பூஜை மனமுவந்து செய்கின்றார்கள். எனவே இது சிறிய மேளா தான் (12-ஜோதிர் லிங்க தரிசனம்) ஆனால் ரிசல்ட் நன்றாக இருக்கின்றது. ஒவ்வொரு ஜோனும் இப்படி ஏதாவது ஒன்று செய்து கொண்டிருக்கின்றார்கள் ஒவ்வொரு சமயமும் அவரவர் இடத்தில் செய்கின்றார்கள் ஆனால் அனைத்து மண்டலங்களுக்கும் பாப்தாதா செய்யாதவர்களுக்கும் கூட முன்னதாகவே செய்வதற்கான வாழ்த்துக்களை வழங்கிக் கொண்டிருக்கின்றார். நல்லது.

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 25.10.2009 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சர்வ பொக்கிஷங்களாலும், முழுமைப் பெற்ற தனது முகம் மற்றும் நடத்தை மூலமாக அலௌகீகத் தன்மையை சாட்சாத்காரம் செய்வியுங்கள்!

இன்று அனைத்து பொக்கிஷங்களுக்கும் வள்ளலான தந்தை தன்னுடைய பொக்கிஷங்களுக்கு எல்லாம் அதிகாரியான குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார். ஒவ்வொரு குழந்தையும் அனைத்து பொக்கிஷங்களாலும் முழுமையாகத்தான் இருக்கின்றார்கள். ஏனென்றால் பாபா அனைத்து குழந்தைகளுக்கும் ஒரே மாதிரி தான் ஒரே சமயத்தில் அனைத்து பொக்கிஷங்களையும் கொடுத்துள்ளர். பொக்கிஷங்கள் என்னவோ அதிகமாகத்தான் உள்ளது. எவ்லாவற்றையும் விட முதன்மையான பொக்கிஷம் ஞான செல்வம். இந்த ஞான செல்வத்தால் மிகப் பெரிய செல்வந்தர் ஆகி விட்டீர்கள். மகாதானியாகி பிறருக்கும் வழங்கிக் கொண்டிருக்கின்றீர்கள். இந்த ஞான பொக்கிஷத்தால் விதவிதமான பந்தனங்களில் சிக்குண்டுள்ள ஆத்மாக்களெல்லாம் அந்த அனைத்து விதமான பந்தனங்களிலிருந்தும் விடுபட்டு விட்டார்கள். பந்தன் யுக்திலிருந்து பந்தன் முக்தாகி (விடுபட்டு) விட்டார்கள். அத்துடன் யோகம் அதாவது நினைவு என்னும் பொக்கிஷம் இதன் மூலமாக அனேக விதமான சக்திகள் பிராப்தமாகியுள்ளது. இதுபோலவே தாரணை மூலமாக சர்வ குணங்களின் அனுபவம் என்னும் பொக்கிஷமும் கிடைத்துள்ளது. அதோடு மட்டுமல்லாமல் தாரணை என்னும் சக்தியால் அநேகருடைய அன்பு என்னும் சக்தி அநேகருடைய அன்பு மற்றும் விலகியிருக்கும் தன்மையின் சக்தி என்னும் பொக்கிஷம் கிடைத்துள்ளது. அனைவருடைய அன்பு என்னும் பொக்கிஷத்தையும் அனுபவம் செய்துள்ளீர்கள். அத்துடன் அனைத்து பிராமணர்களின் சம்மந்தத்தால்

அளவிலா குஷி என்னும் பொக்கிஷமும் அனுபவம் ஆகின்றது ஆனால் இது அனைத்து பொக்கிஷங்களையும் விட விசேஷமான அதாவது முக்கியமான பொக்கிஷம் ஒன்று. அது தான் சங்கமத்தின் சமயம் என்ற பொக்கிஷமாகும். எந்த ஆத்மாவிற்கு நேரத்தின் மகத்துவம் இருக்கிறதோ அந்த ஆத்மா சதா அநேக பிராப்திகளுக்கு அதிகாரியாகி விடுகின்றார். ஏனென்றால் சங்கமயுகம் என்னும் நேரம் மிகச் சிறியது தான் ஆனால் இந்த சமயத்தில் கிடைக்கின்ற பிராப்திகள் அதிகம் ஆகும். எல்லாவற்றையும் விட மிக உயர்வானது சங்கம யுகத்தில் கிடைக்கின்ற சிரேஷ்டத்திலும் சிரேஷ்டமான பிராப்தி, அந்த பிராப்தி என்னவென்றால் சுயம், பகவானே தந்தையாகவும், ஆசிரியராகவும், சத்குருவாகவும் கிடைத்துள்ளார். சங்கமயுகம் என்னும் மிக சிறிய பிறம்பில் 2-பிறவிகளுக்கான பிராப்தி கிடைக்கின்றது. அதில் உடல், மனம், பொருள். ஜனனம் (பிறவி) இந்த அனைத்து பிராப்தமும் (பலன்) உள்ளது. அதற்கான உத்தரவாதமும் உள்ளது. 21-பிறவிகளுக்கும் முழுமையாக, அரை குறையாகவோ. முக்கால் பாகமும் கிடையாது ஆனால் 21-பிறவிகளுக்கும் முழுமையாக உறுதியான உத்திராவதம் உள்ளது. எனவே எல்லாவற்றையும் விட அதிகமான மகத்துவம் வாய்ந்தது சங்கமயகத்தின் சமயமே ஆகும். இதில் ஒவ்வொரு வினாடியும் அநேக வருடங்களுக்கு சமமானதாகும். எனவே சொல்லுங்கள். அனைத்து பொக்கிஷங்களாலும் நிரம்பியுள்ளீர்களா? நிரம்பித்தானே இருக்கின்றீர்கள். எனவே பாப்தாதா சதா சமயத்தைப் பற்றி நினைவூட்டிக் கொண்டேயிருக்கின்றார். சில குழந்தைகள் நினைக்கின்றார்கள்: ஒரிரண்டு நிமிடங்களில் ஏதாவது நினைத்து விட்டு இரண்டு நிமிடம் தானே என்று ஆனால் சமயத்தின் மகிமைக்கு ஏற்ப அது இரண்டு நிமிடம் மட்டுமல்ல இரண்டு மாதமும் அல்ல, அது இரண்டு வருடத்திற்கு ஒப்பானதாகும். அவ்வளவு உயர்ந்த மகிமை சங்கம யுகத்தின் சமயத்திற்கு உள்ளது. சர்வ சக்திகளின், சர்வ குணங்களின் பரமாத்மாவின் அன்பின் பிராமண பரிவாரத்தின் அன்பின் மூலமாக கிடைத்துள்ள இந்த அனைத்தும் கல்பத்திலேயே முதல் முதலில் கிடைக்கின்ற ஈஸ்வரிய உரிமையாகும். அனைத்து பிராப்திகளும் இந்த மிகச்சிறிய யுகத்தில் மட்டுமே தான் பிராப்தம் ஆகின்றது. வேறு எந்த யுகத்திலும் இந்த அனைத்து பிராப்திகளும் கிடைக்கவில்லை. ராஜ்ய பாக்கியம் இருக்கும், உங்கள் அனைவருடைய ராஜங்கமும் இருக்கும், சுகம், சாந்தி

எல்லாமேயிருக்கும் ஆனால் பராமாத்மாவின் சந்திப்பு, அதிந்தீரிய சுகம், அனைத்து பிராமண பரிவாரத்தின் சுகம், ஆதி மத்திய அந்திம ஞானம் இந்த அனைத்தும் இந்த சங்கமயுகத்தில் மட்டுமே தான் கிடைக்கின்றது. இது ஒவ்வொரு கல்பமும் கிடைத்துக் கொண்டேயிருக்கும்.

எனவே பாப்தாதா ஒவ்வொரு குழந்தைகளின் முகத்தின் மூலமாகவும், எவ்வளவு பொக்கிஷங்களை சேமித்துள்ளார்கள் என்று பார்க்கின்றார். பொக்கிஷங்கள் என்னவோ கிடைத்து விட்டது ஆனால் ஒவ்வொருவரும் எவ்வளவு சேமிப்புக் கணக்கை அதிகரித்துள்ளார்கள் என்பது ஒவ்வொருவருடைய முகம், நடத்தை மூலமாக தென்படுகிறது. நீங்களும் தன்னைப் பற்றி, தான் எவ்வளவு சேமித்துள்ளோம் என்பதை தெரிந்திருப்பீர்கள் தானே? இப்பொழுது பாப்தாதாவின் விருட்டம் என்னவென்றால் பொக்கிஷங்கள் கிடைத்துள்ளது, ஆனால் இப்போதையை சமயமானது வர்ணனை செய்வதற்காக மட்டுமல்ல, ஆனால் உங்களுடைய முகம் மற்றும் நடத்தை மூலமாக பிரத்யட்சத்தை அனுபவம் செய்விக்க வேண்டும். இந்த ஆத்மாக்கள் எவ்வளவு விசேஷமானவர்கள், தனிப்பட்டவர்களாக இருக்கின்றார்கள், பரமாத்மாவிற்கு பிரியமானவர்கள். ஏனென்றால் இனி போகப்போக சமயத்தின் மாற்றங்கள் ஏற்படுவதால் உங்களுடைய சேவை வர்ணணை செய்வதால் மட்டும் நடைபெறாது. நேரம் மிகவும் கடுமையாக இருப்பதால் அந்த அளவிற்கு நேரம் ஒதுக்கி யாருமே கேட்க மாட்டார்கள் ஆனால் நீங்கள் தன்னுடைய பொக்கிஷங்களால் முழுமைப்பெற்ற முகம் மற்றும் நடத்தையால் தன்னுடைய அலௌகீகத் தன்மையால் வெகு தூரத்தில் இருந்தப்படியே சாட்சாத்காரம் கிடைக்கும். எனவே அதற்கேற்ப தனது முயற்சியை பிரத்யட்சம் செய்யுங்கள். பிரம்மாபாபாவை பார்க்கும் பொழுது எத்தனை பெரிய கூட்டத்தின் நடுவே அவர் இருந்தாலும் அவருடைய பொலிவு நிறைந்த தோற்றமானது எல்லோருக்குமே அனுபவம் செய்வித்தது. அப்படியே இப்பொழுது விசேஷமாக இரட்டை அயல் நாட்டவர்களாகிய உங்களை பாப்தாதா இரட்டை முயற்சியாளர் என்று சொல்கிறார். எனவே பாப்தாதா இன்று நிமித்தமான இரட்டை அயல் நாட்டு குழந்தைகளைப் பார்த்து மிகவும் மகிழ்ச்சியடைகின்றார். முயற்சிக்கான முன்னேற்றமும் மிக நன்றாக உள்ளது. நிமித்தமான

ஆத்மாக்கள் மூலமாக பாலனையும் அனைவருக்கும் மிக நன்றாகவே கிடைத்துக் கொண்டிருக்கின்றது. மேலும் பாப்தாதாவிற்கு ஒரு விசயத்தில் அனைவரையும் பார்க்கும்போது மிக நன்றாக இருக்கின்றது. அதாவது அனைத்து ஆத்மாக்களும் ஒவ்வொரு ஆண்டும் தன்னுடைய குழுவின் சந்திப்பினை மதுபனில் அவசியம் செய்கின்றீர்கள். ஏனென்றால் மதுபனின் வாயுமண்டலத்தின் புத்துணர்ச்சி மிகவும் உதவிகரமாக இருக்கின்றது. ஒரே ஒரு பொறுப்பு சுய மாற்றம், மனதால் செய்யும் சேவை இந்த அனைத்து அனுபவங்களையும் செய்வதற்கான மிக நல்ல வாய்ப்பு கிடைக்கின்றது. எனவே பாப்தாதா இந்த விசயங்களுக்காக வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றார். இப்பொழுது விந்தையான செயல் ஏதாவது அவரவர் இடங்களுக்குச் சென்று செய்ய வேண்டும். விலகியிருக்கும் தன்மையில் சில பாபாவின் அன்பிற்கு பாத்திரமான நிலை இவற்றையெல்லாம் நடைமுறையில் செய்விக்க வேண்டும். இதனால் மதுபனில் கிடைத்த புத்துணர்ச்சி, அங்கும் உங்களுக்கு சகயோகமாக அனுபவம் செய்ய வைத்துக் கொண்டேயிருக்கும். இன்று விசேஷமாக இரட்டை முயற்சியாளரின் சந்திப்பு. பாருங்கள். உங்கள் அனைவர் மீதும் இந்தியாவைச் சார்ந்த குழந்தைகளுக்கு எவ்வளவு அன்பு, எனவே உங்களுக்கே முதல் வாய்ப்பைக் கொடுத்து விட்டார்கள். எனவே முதலில் வாய்ப்பை பெற்ற நீங்கள் அதற்கேற்ப ரிசல்ட்டும் முதல் நம்பர் எடுத்துக் காண்பிக்க வேண்டும். நன்றாக இருக்கின்றது. பாப்தாதா முன்பு கூட சொல்லியிருக்கின்றார் இரட்டை அபல் நாட்டை சார்ந்த குழந்தைகள். இரட்டை முயற்சியாளர், பாபாவின் ஒரு விசேஷமான டைட்டிலை (பட்டம்) பிரத்யட்சம் செய்துள்ளார்கள். அது அயல் நாட்டில் பெரும்பான்மையான இடத்தில் பாபாவின் குழந்தைகளை உருவாக்கி அவர்களையும் அதிர்ஷ்டசாலி யாக்கியுள்ளது. எனவே ஆர்வத்துடன் எல்லா இடங்களிலும் முயற்சி நடைப்பெற்றுக் கொண்டிருக்கின்றது, அதனால் பாபாவினுடைய விஷ்வ கல்யாணகாரியின் செயலும் பிரசித்தமாகிறது. எனவே பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் ஆகா, குழந்தையாய் ஆகா என்று வாழ்த்துக்கள் தெரிவிக்கின்றார்.

இப்பொழுதும் கூட எப்படி பாரதத்தில் ஆங்காங்கே செய்தி தருவதற்கான சேவை நடந்து கொண்டிருக்கின்றதோ அப்படியே அங்கும் கூட ஊக்கம், உற்சாகத்தோடு செய்திகள் தருவதற்கான சேவை

செய்து கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால் நேரத்தை நம்ப முடியாது. பாப்தாதா முன்பு கூட சொல்லியிருக்கிறார் எதிர்பாரவிதமாக எது வேண்டுமாயினும் நடக்கலாம். எனவே செய்திகளைத் தருவதற்கான தன்னுடைய நிகழ்ச்சிகளை அவ்வப்போதே எப்பொழுதோயில்லை, பாப்தாதா சொல்லியிருக்கிறார் உண்மையில் பிராமணர்களின் அகராதியில் எப்பொழுதாவது என்ற வார்த்தை அழகு சேர்க்காது. இப்பொழுதே நினைத்த மாத்திரமே செய்து முடித்து விட வேண்டும். பார்க்கலாம். செய்யலாம். இந்த ஆம் ஆம் என்ற சப்தம் கூடாது. எனவே உங்களுடைய மம்மாவும், இதையே லட்சியமாக கொண்டிருந்தார். இப்போது இல்லையேல் எப்போதும் இல்லை, இதை நினைத்துப் பார்க்க வேண்டும்.

எனவே இரட்டை முயற்சியாளர் குழந்தைகள் இப்பொழுதே செய்வீர்களா, எப்பொழுதாவதா? யாரெல்லாம் இப்பொழுதே செய்து காண்பிப்பீர்களோ கை உயர்த்துங்கள். செய்தே தீர வேண்டும். செய்தே தீர வேண்டும்..செய்யலாம் என்பது கிடையாது. செய்தே ஆக வேண்டும். நினைவில் வையுங்கள் தானாகவே தன்னுடைய சார்ட் எழுதுங்கள். பாப்தாதாவும் முன்பு கூட சொல்லியிருக்கிறார். ஒவ்வொரு இரவும் பாப்தாதாவிற்கு தன்னுடைய முழு நாளைப் பற்றிய நடவடிக்கைகளை சொன்னப்பிறகு தான் தன் புத்தியை காலி செய்த பிறகு தான் தூங்க செல்ல வேண்டும். அப்பொழுது தான் நல்ல தூக்கம் வரும். அது மட்டுமல்ல, தினசரி தன்னுடைய நிலவரங்களை சொல்லிவிடுவதால் அடுத்த நாள் பாபாவிடம் நாம் நம்மைப்பற்றி சொல்லியிருக்கின்றோம் என்ற நினைவு இருக்கும். இந்த நினைவும் சகயோகமாக இருக்கும். தர்மராஜ்புரிக்கு செல்ல வேண்டியிருக்காது. கொடுத்து விட்டீர்கள் அல்லவா? மாற்றியும் கொண்டீர்கள், எனவே தர்மராஜ்புரியிலிருந்து தப்பித்து விடுவீர்கள். இப்பொழுது அடுத்த ஆண்டு, யாரும் பார்க்கவில்லை, ஆனால் இப்போதே லட்சியம் எடுத்துக் கொள்ளுங்கள், வருடத்தை விடுங்கள். குறைந்த பட்சம் எவ்வளவு குறைந்த சமயத்தில் பாபாவின் விருப்பமாகிய பிரத்யட்சத்தை தன்னுடைய முகம் மற்றும் நடத்தையின் மூலமாக மிக விரைவில் நடைமுறையில் செய்து காண்பியுங்கள். தைரியம் உள்ளதா? கை உயர்த்துங்கள். தைரியும் உள்ளதா? தைரியம் இருக்கிறதா? நல்லது. வாழ்த்துக்கள். பாப்தாதாவும் ஒவ்வொரு குழந்தைகளிடமும் நம்பிக்கை மற்றும் தைரியத்துடனான

ஊக்கம், உற்சாகத்தை இப்பவும் பார்த்துக் கொண்டு தான் இருக்கின்றார் ஆனால் போகப்போக விமானத்திலேயே மெல்ல குறைத்துக் கொள்ள வேண்டாம். அதிகரித்துக் கொண்டேயிருங்கள். உறுதியான சங்கல்பம் என்னும் சாவியை பாப்தாதா கொடுத்துள்ளார். அதனை சதா காப்பாற்றி வைத்துக் கொள்ளுங்கள். செய்தே ஆக வேண்டும். இப்பொழுதே - பார்க்கலாம், செய்யலாம் என்பது கிடையாது. அந்த நேரம் எல்லாம் முடிந்து விட்டது. நடந்து விடும், நடந்தே ஆக வேண்டும். நடந்து விடும் என்று இருக்கக்கூடாது. நடந்தே ஆக வேண்டும். இரட்டை முயற்சியாளர் என்று பாப்தாதா கொடுத்த இந்த டைட்டிலை சதா நினைவில் வைக்க வேண்டும்.

மற்றப்படி பாப்தாதா ரிசல்ட் சொல்லி விட்டார். பாப்தாதா கொடுத்த சேவைக்கான திட்டத்தில் பாரதவாசிகளும் குறைந்தவர்கள் அல்ல, அயல் நாட்டை சார்ந்த குழந்தைகளும் சாதாரணம் அல்ல. எல்லோருமே வெகு சிறப்பாகவே செய்துள்ளார்கள். இந்த வரதானத்தை பெரும்பான்மையான இடங்களில் ஊக்கம், உற்சாகத்துடன் செய்துள்ளீர்கள். அதற்கான ரிசல்ட்டும் தனித்தனியே வந்து கொண்டிருக்கின்றது. எனவே பாப்தாதா பாரதவாசி மற்றும் அயல் நாட்டு குழந்தைகள் அனைவருக்குமே பல பல மடங்கு நடைமுறைப்படுத்தியதற்கான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றார்.

இப்பொழுது இந்த ஆண்டில் விசேஷமாக எந்த விசயத்தை நடைமுறையில் செய்யப் போகிறீர்கள். அதை சொல்லி விட்டேன். இப்பொழுது முகத்தின் மூலமாக பொலிவு தென்பட வேண்டும். உங்களை காண்பவருக்கெல்லாம் பிரத்யட்சம் செய்வதில் நிமித்தமாக வேண்டும். பாபாவை பிரத்யட்சம் செய்ய வேண்டும் என்றால் இதனை செய்ய வேண்டும். சரி. பாபாவை பிரத்யட்சம் செய்ய வேண்டும் என்றால். என்ன செய்ய வேண்டும்? சதா கவலையோ குழப்பமோ இல்லாத, சதா புன்சிரித்த முகமாக இருக்க வேண்டும். பாப்தாதா சொல்லியிருக்கிறார் இப்பொழுது இரண்டு சொல்லை நினைவில் வையுங்கள். மாயாவிற்கு வெளியே சென்று விடு என்று சமிஞை காண்பியுங்கள், மேலும் தன்னை ஒரு விருந்தினர் மாளிகையில் இருப்பதாக அனுபவம் செய்யுங்கள். இந்த உலகம் உங்களுடையது

அல்ல. இது விருந்தனர் மாளிகை வீட்டிற்கு சென்றே ஆக வேண்டும். அந்த வீட்டின் சாயல் தான் மனதிலும், புத்தியிலும் தென்பட வேண்டும். அப்பொழுது தானாகவே வீடு வந்து விட்டதாகும். உங்களிடம் ஒரு பாடல் கூட உள்ளது. இப்பொழுது வீடு செல்ல வேண்டும். எனவே இந்த ஒரு ஓசை தான் இருக்க வேண்டும். பாரதவாசிகளாயினும், அயல் நாட்டவராயினும் இப்பொழுது இந்த அனுபவத்தினையே பிரத்யட்சம் செய்து காண்பியுங்கள். மாபெரும் வைராக்கியம் உடையவர் ஆகுங்கள். விருந்தினர் மாளிகையில் மனதை வைக்காதீர்கள். செல்ல வேண்டும். செல்ல வேண்டும் நினைவிருக்கிறது? எனவே மாபெரும் வைராக்கியம், அது உங்களுடைய மனதாலோ. சங்கல்பத்தாலோ ஒருவருக்கொருவர் கூட்டத்தின் நடுவே இருக்கும்போதும் மாயை மூலம் வருகின்ற தடைகள் அனைத்தையும் ஒரேயடியாக அழித்து விடும். இந்த மாயையின் புயலானது உங்களுக்கு பரிசாக மாடும். இப்பொழுது வருகின்ற சிறிய பெரிய சோதனையெல்லாம் சோதனை தாளாகத் தெரியாது ஆனால் ஒரு அனுபவத்தை அதிகரிப்பதற்கான லிப்ட்டாகவே அனுபவம் ஆகும். கிப்ட் மற்றும் லிப்ட் புரிந்ததா?

இப்பொழுது லட்சியம் வையுங்கள். மாபெரும் வைராக்கியம் உடையவர் ஆகி தைரியத்தோடு ஊக்கம், உற்சாகம் என்னும் சிறகுகளுடன் பறந்து கொண்டேயிருங்கள், பறக்க வைத்துக் கொண்டேயிருங்கள். இது பறந்து செல்லும் நேரம். தனது சிறகுகளை பலவீனம் அடைந்து விடாத அளவிற்கு சதா சோதனைச் செய்து கொண்டேயிருங்கள். எனவே பாப்தாதா இரட்டை அயல் நட்டவரின் விஸ்தாரத்தைப் பார்த்து மகிழ்ச்சியடைகின்றார். இப்பொழுது என்ன பார்க்க விரும்புகின்றார். ஒவ்வொரு குழந்தையும் பாபாவுக்கு நிகராக சம்பன்னம் (நிறைவு) மற்றும் சம்பூர்ணம் (முழுமை), சர்வ பொக்கிஷங்களாலும் முழுமைப்பெற்று பாபாவிடமிருந்து கிடைக்கின்ற ஒவ்வொரு ஸ்ரீமத்திலும் சம்பூர்ணம் ஆக வேண்டும். பிடித்துள்ளதா? பிடித்துள்ளது என்றால் கைத்தட்டுங்கள். நல்லது. இந்த கைத்தட்டலை ஒவ்வொரு நாளும் நினைத்துப் பாருங்கள். தனக்குத்தானே மனதில் கை தட்டுங்கள். வெளியில் அல்ல. மனதில் தட்டிக் கொள்ள வேண்டும். இது தான் வீட்டுப்பாடம். நல்லது.

**90-தேசங்களிலிருந்து 2300-சகோதர சகோதரிகள் வந்துள்ளார்கள். (5-கண்டங்களின் சகோதர சகோதரிகளும் தனித்தனியே குழுவாக எழுந்து நின்றார்கள்**: (1) அமெரிக்கா, கனடா, கரிபியன் சகோதர, சகோதரிகள், (2) ஆஸ்திரேலியா, ஆசியா நியூஸ்லாந்த், பிஜி, (3) ஐரோப்பா, யு.கே, மிடில் ஈஸ்ட் (4) ஆப்பிரிக்கா, தென்னாப்பிரிக்கா, மொரிசியஸ், (5) ரஷியா, சி.ஐ.எஸ், பால்டிக் ரீஜன்.

எல்லா இடங்களிலும் முன்னேற்றத்திற்கான சங்கல்பமும் வைத்துள்ளீர்கள். அது குறித்து ஒருவருக்கொருவர் ஆன்மீக உரையாடலும் செய்கின்றீர்கள். பாப்தாதாவிடம் செய்திகள் வந்து கொண்டேயிருக்கின்றது. இப்பொழுது எவரெடிக் குழுவை தயார் செய்யுங்கள். எந்த தேசத்திலிருந்து எத்தனைப் பேர் வந்திருந்தாலும், அந்த தேசத்திற்கு பாப்தாதா பரிசு வழங்குவார். என்ன பரிசு வழங்குவார்? அதை அப்போது பார்த்துக் கொள்ளலாம் ஆனால் பாப்தாதா இரட்டை முயற்சியாளரான குழந்தைகளின் ஒவ்வொரு ஏரியாவைச் சார்ந்த குழுவினருக்கும் சொல்வது இது தான். நீங்கள் எந்த குழுவை சார்ந்தவராக ஆயினும் நம்பர்-1 வர வேண்டும். ஒரு தேசத்தில் ஒவ்வொரு நகரத்திலும் எத்தனையோ சென்டர் இருக்கின்றது. உதாரணமாக அமெரிக்காவின் தொடர்பில் எத்தனை தேசம் உள்ளதோ. அவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து கலந்துரையாடல் செய்து நிகழ்ச்சிகளை அமையுங்கள். இங்கே நாங்கள் அனைவரும் நிர்விக்னமாக இருப்போம். எவரெடியாக இருப்போம். மாயாஜீத்தாக இருப்போம், அன்புடன் சேவையில் சகயோகியாக இருப்போம். இவ்வாறு யார் நம்பர்-1 வந்து காட்டுவீர்களோ அவர்களுக்கு பாப்தாதா பரிசு வழங்குவார். சரிபராவயில்லை. ஒன்று மட்டும் அல்ல மூன்று பேருக்கு தரலாம். ஒன்று, இரண்டு, மூன்று மூன்று நம்பர், உண்மையில் ஒருவருக்குத்தான் கொடுக்கப்படும் ஆனால் இரட்டை முயற்சியாளர் அல்லவா! எனவே உங்களுக்கு மூன்று வாய்ப்புகள் கொடுக்கப்படும். பிடித்துள்ளதா? ஆம் என்றால் கை அசையுங்கள். பிடித்துள்ளதா? சரி இதற்கு எவ்வளவு நேரம் தேவை இதை ஆசிரியர்கள் சொல்லலாமே எவ்வளவு நேரம் வேண்டும் பரிசு பெறுவதற்கு? சொல்லுங்கள். (பிப்ரவரி வரையில்) அனைத்து தேசங்களின் ஆசரியர்களும் கை உயர்த்துங்கள், சரியா? அதற்குள் தயாராகி விடுவீர்களா? பிறகு பாப்தாதா பரிசு தருவார். மிக நல்லது. இதற்கு கைத்தட்டுங்களேன். நல்லது.

பாரதத்திற்கான அந்த நேரமும் வரும். இப்பொழுது உங்களுடைய முறை, ஆகா, தீவிர் புருஷார்த்தி குழந்தைகளே; ஆகா என்று பாப்தாதா குஷி அடைகின்றார். நல்லது. இப்பொழுது என்ன செய்ய வேண்டும்.

நாலாபுறமும் இருக்கின்ற தீவிர புருஷார்த்தி, தைரியத்துடனும் ஊக்கம், உற்சாகத்துடனும் பறந்து கொண்டிருக்கின்றவர்கள், நடந்து செல்பவர் அல்ல. பறந்து செல்பவர்கள். நாலாபுறத்திலும் இருக்கின்ற பாப்சமான் சம்பன்னமாகவும், சம்பூர்ணமாகவும் மாறுகின்ற பாப்தாதாவின் தில் தக்த் நஷின் (மனம் என்னும் சிம்மாசனத்திற்கு அதிகாரி) மற்றும் சதா பாபாவினை கம்பைண்டு ரூபத்தில் (இணைந்த சொரூபம்) அனுபவம் செய்து சகயோகத்தினை பெறுகின்ற தேடித் தேடி கண்டெடுக்கப்பட்ட தன்னுடைய ஒவ்வொரு குழந்தைகளுக்கும், அன்பான குழந்தை களுக்கும் பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் நமஸ்காரமும்.

தாதிகளுடன்: பாபாவுடன் உங்கள் அனைவருடைய சகயோகமும் இருக்கிறதல்லவா? குழந்தைகள் மற்றும் பாபா, இருவரின் சகயோகத்தால் தான் யக்ஞம் நடைபெறுகிறது. நடைபெற்றுக் கொண்டேயிருக்கும். நீங்கள் நிமித்தமாக இருப்பவர்கள் தானே சாகாரத்தில் ஒருவர் சொன்னால் இன்னொருவர் செய்கின்றீர்கள். ஒருவருக்கொருவர் சகயோகியாகி பறந்து கொண்டிருக்கின்றீர்கள். பறப்பவர்களைப் பார்த்து பாபா மகிழ்ச்சி அடைகின்றார். (தாதி ஜானகி அவர்கள் சொல்கிறார்கள் -குல்சார் தாதியின் விந்தயைப் பற்றி அவர் எப்போதுமே கூடவே தான் இருக்கின்றார். நிமித்தமாக உள்ள நீங்கள் அனைவரும் சதா ஒன்றாகவே தென்பட வேண்டும். இதுவே பாப்தாதாவின் சுபமான ஆசையாகும். வேறுபாடு என்பது தென்படக்கூடாது. ஒன்றாகவே தென்பட வேண்டும். ஒருவர் சொல்கிறார். அதை ஒருவர் ஏற்றுக் கொள்கிறார் என்றால் அங்கு நீங்கள் ஒன்று தானே ஒன்றாகி விட்டீர்கள். எனவே தான் யக்ஞமும் நடைபெறுகின்றது. உங்கள் அனைவருடைய ஒற்றுமையால் தான் நடந்து கொண்டிருக்கின்றது. வெளியில் வேண்டுமானால் தெரியாமல் இருக்கலாம், ஆனால் சங்கல்பத்தில், கருத்துக்களால் ஒன்றாக இணைந்திருந்து முன்னேற வேண்டும். முன்னேற்ற வேண்டும். ஏனென்றால் இப்பொழுது உங்கள் அனைவர் மீதும் பார்வை உள்ளது. நல்லது,

**பரதாதியுடன் (நிர்மல் சாந்தா தாதி):** மிக நன்றாக நடித்துக் கொண்டிருக்கின்றீர்கள். உங்கள் முகத்தில் வியாதி தென்படவில்லை. பாப்தாதா குழந்தையைப் பார்த்து மகிழ்ச்சியடைகின்றார். எனவே தான் முகம் பொலிவுடன் காணப்படுகின்றது. முகத்தில் நோயின் அறிகுறியே இல்லை.

**சகோதரர் ரமேஷ் உடன்**: உஷாவின் உடல் நலம் நன்றாக இருக்கிறதா? அவருக்கு நினைவு கொடுங்கள்.

**பிரிஜ்மோகன்**: இந்தியாவிலும் செய்துள்ளீர்கள், அதனுடைய பிரபாவம் நன்றாகவே உள்ளது. அனைவருக்கும் செய்தி கிடைத்துள்ளது. ஆர்வமும் அதிகரித்துள்ளது. நன்றாக செய்துள்ளீர்கள். ஒருவரை பொருவர் கலந்து ஆலோசித்து நன்றாக செய்துள்ளீர்கள். இப்பவும் சிலர் செய்து கொண்டிருக்கிறார்கள். செய்திகள் கிடைக்கிறது நல்லது. தொலை காட்சிகள் மூலமாகவும் நன்றாக செய்துள்ளீர்கள். முயற்சி நன்றாக செய்துள்ளீர்கள்.

**இரட்டை அயல் நாட்டு முக்கிய சகோதரிகளுடன்**: இங்கு அனைவரும் ஒன்று சேர்வது நன்றாக இருக்கிறது அல்லவா. ஃப்ரி மைன்ட், (பாரமற்ற மனம்) அங்கே சென்றால் சேவை மற்றும் மாணவர்களைப் பற்றிய சிந்தனை உள்ளது. இங்கே ஒரே ஒரு வேலை தான். ஒன்றாக இணைந்து செயல்படுகிறீர்கள். இது பாப்தாதாவிற்கு மிகவும் பிடித்திருக்கின்றது. ஒருவரோடு ஒருவர் இணைந்து செல்லும் பொழுது எல்லாமே ஒன்றாகவே நடைபெறுகின்றது. பாப்தாதாவிற்கு மிகவும் பிடித்துள்ளது. (சகோதரி ஜெயந்தியுடன்): நன்றாக இருக்கிறீர்களா? உடல் நன்றாகி விட்டதா? எல்லோரும் நலமா? (சகோதரி மோகினியுடன்): இவருடைய கணக்கும் முடிவடைந்தது. அது எல்லோருக்கும் இருப்பது தான். இப்போது ஒவ்வொருவருக்கும் அவரவருடைய உடலைப் பற்றி (நாடி) தெரிந்து கொண்டீர்கள். ஏன் இப்படி ஆகிறது? என்ன செய்ய வேண்டும்? இதையெல்லாம் பற்றி நாலேஜ் ஃபுல் ஆகி விட்டீர்கள். இது பழைய உடல், ஆத்மா தைரியமானது சேவைக்காக எவரெடியாக உள்ளது. இப்போது சமயத்திற்கேற்ப நீங்கள் அனைவரும் கவனமாக இருக்க வேண்டும். (அழைப்புகள் அநேகம் வந்து கொண்டிருக்கின்றது)

இப்பொழுது ஆர்வம் எல்லோருக்கும் ஆரம்பமாகி விட்டது. இப்பொழுது மற்றவை எல்லாம் அடுத்த முறையில் சொல்கிறேன். இப்போது சேவை எந்த ரூபத்தில் இருக்க வேண்டும் என்று பிறகு சொல்கிறேன்.

அங்கிள் ஆண்டியும் உங்களுக்கு மிக அதிகமான நினைவுகளை கொடுத்து அனுப்பினார்கள். அவர்களுக்கு சொல்லுங்கள் உங்களுக்கு லட்சம் மடங்கு பலபல... மடங்கு அன்பு. நினைவுகள். (பாபா நீங்கள் எங்களுடைய உலகத்தில் பார்க்க வருவீர்களா?) மேலே அமர்ந்து கொண்டே கூட பார்க்கலாமே?

**சகோதரர் நிஷாருடன்**: (ஹைதாராபத்தில் சர்வ இந்தியா நிகழ்ச்சியானது நவம்பர் 7-8'ல் நடைபெறுகின்றது). இதுவும் ஒரு புது விதமான புயல் ஆகி விடும். நன்றாக இருக்கிறது. நிகழ்ச்சி நன்றாக உள்ளது. முதலில் ஒரு உதாரணமாக அமையும். (இந்தியா முழுவதும் 32-நகரங்களில் செய்வதற்கான திட்டம் உள்ளது) நடந்து கொண்டேயிருககும். இப்பொழுது முதன்மையானது நன்றாக நடைபெறும்.

**சாந்தாமணி தாதியுடன்:** ஆனந்த சயனத்தில் படுத்துள்ளீர்கள். ஆனந்த சயனத்தில் பள்ளி கொண்டிருக்கும் விஷ்ணுவைப் போல நீங்களும் ஓய்வில் இருக்கின்றீர்கள். உள்ளே அதிமிதமான வருமானம் கிடைத்துக் கொண்டேயிருக்கின்றது. தன்னுடைய சூட்சுமமான மனதால் சேவை செய்து கொண்டேயிருங்கள்.

**சகோதரர் கார்த்திகேயன் மற்றும் பிற விருந்தினர்களுடன்**: நாடகம் என்ற ஞானக் கருத்தில் உறுதியாகி இருக்கின்றீர்கள் தானே? நடப்பது அனைத்தும் நன்றாகவே நடைபெறுகின்றது. நம்மை பொருத்த வரையில் அந்த ஆத்மாவிற்கான நன்மை, அதற்கான பலன் மிக நன்றாகவே உள்ளது. மிக மிக நன்றாகவே இருக்கிறது. நீங்கள் கவலைப்பட வேண்டாம். கவலையில்லாதவர்களாக இருங்கள். பாபா பார்த்துக் கொண்டிருக்கின்றார். எல்லாம் நன்றாகவே இருக்கின்றது. பாருங்கள் சேவையின் பிரத்யட்ச ரூபம் தென்படுகிறது. மிக நன்றாக செய்துள்ளீர்கள். தைரியத்தைக் காட்டியுள்ளீர்கள் அல்லவா? தைரியத்திற்கான பலன் மிக நன்றாகவே உள்ளது. பாப்தாதாவிடம்

உள்ள தைரியசாலிகளின் பெயரேட்டில் உங்கள் பெயரும் பதிவு செய்யப்பட்டுள்ளது. நல்லது.

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵ ✵✵✵✵✵

# 15.11.2009 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சுய ராஜ்யத்தின் ரிசல்ட்டை (முடிவு) சோதனை செய்து தன்னை மாற்றிக் கொள்க! மேலும் பரந்த ராஜ்யத்தின் அதிகாரி ஆகுக!

இன்று உள்ளத்திற்கு ஒய்வளிக்கும் (திலாராம்) பாபா தனது செல்லமான குழந்தைகளை சந்திக்க வந்துள்ளார். ஏன் செல்லமானவர்கள்? தெரியுமா? நீங்கள் ஒவ்வொருவரும் மூன்று சிம்மாசனங்களுக்கு எஜமானர்கள் ஆவீர்கள்? ஒன்று சுயராஜ்யத்தின் சிம்மாசனம், இரண்டாவது பாப்தாதாவின் உள்ளமெனும் சிம்மாசனம், மூன்றாவது, எதிர்காலத்தின் சிம்மாசனம். மூன்று சிம்மாசனங்களுக்கு அதிகாரிகள் உங்களது எதிர்கால சிம்மாசனத்திற்கும் இங்கேயே பயிற்சி செய்து கொண்டிருக்கிறீர்கள். எதிர்காலத்திற்கான ஏற்பாட்டின் முயற்சியையும் இப்பொழுதே செய்து கொண்டிருக்கிறீர்கள். தற்போதைய முயற்சி (புருஷார்த்தம்) அநேக பிறவிகளுக்கான ராஜாங்க உரிமையைத் தரக்கூடியதாகும். இந்த சமயத்தில் தான் உங்களது ராஜ்ய பாக்கியத்தின் சம்ஸ்காரத்தை தாரணை செய்து கொண்டிருக்கிறீர்கள். ஏனெனில் தற்போதைய முயற்சி எதிர்காலத் தின் ராஜ்ய உரிமையின் அதிகாரி ஆக்குகிறது. ஆக தற்போதைய உங்களது முயற்சி யதார்த்த மாக (சரியாக) இருக்கிறதா என சோதனை செய்யுங்கள். எப்படி எதிர்காலத்தில் ஒரே ராஜ்யம் இருக்குமோ அது போன்றே ஒரே ராஜ்யம் மனதில் இருக்கிறதா என இப்போது சோதனை செய்யுங்கள். புருஷாரத்தத்தில் ஒரே ராஜ்யம் உள்ளதா? அல்லது மாயா ராஜ்யத்தில் தடையை ஏற்படுத்துகிறதா? ஒரே ஒரு ராஜ்யத்திற்கு பதிலாக மாயையின் தாக்கம் ஏற்படவில்லையே? இரண்டு ராஜ்யம் இல்லை தானே? எதிர்காலத்தின் விசேஷமே ஒரு ராஜ்யத்தில் தான் இருக்கிறது. எனவே தற்போதைய பயிற்சி எதிர்காலத்தில் நடக்கிறது. ஆக

இப்பொழுது சுய ராஜ்யம் இருக்கிறதா, அந்த சுய ராஜ்யத்தில் மாயை இடையூறு செய்யவில்லை தானே என்று சோதித்துப் பாருங்கள். இரண்டு ராஜ்யம் இல்லையே? இரண்டு ராஜ்யம் நடைபெற்றுக் கொண்டிருந்தால் ஒரு ராஜ்யத்தின் பழக்கத்தை (சம்ஸ்காரம்) எப்பொழுது நிரட்டப் போகிறீர்கள்? எதிர்காலத்தின் விசேஷமே ஒரே ராஜ்யம்! ஒரே தர்மம் அந்த தர்மம் (மதம்) எது? உங்களுடைய விசேஷ தாரணை எது? முழுமையான தூய்மை! அப்படியென்றால் ஒரே தர்மம் உள்ளதா என சோதியுங்கள். இடையே இன்னொரு தர்மம் அதாவது அபவித்திரம் இடையூறு செய்யவில்லையே? சட்டம், ஒழுங்கு ஒன்றாக இருக்கிறதா அல்லது மாயாவும் இடையே வந்து இடையூறு செய்கிறதா என்று கூடவே சோதித்தும் பாருங்கள். ஒரே ஒரு ராஜ்யம் தடையின்றி நடக்கிறதா? மேலும் ஒரு விசயம், ராஜ்யத்தில் சதா சுகம் மற்றும் சாந்தி இயற்கையாக உள்ளதா? உங்களது ராஜாங்கத்தில் சதா சுகமும் சாந்தியும் உள்ளதா என இப்பொழுது பாருங்கள் இடையூறு ஏதும் இல்லையே? சுய ராஜ்யத்தின் மாயை தனது தடையை ஏற்படுத்தி அசாந்தியைப் பரப்பவில்லையே? சுய ராஜ்யத்தில் ஏதேனும் தீர்வு ஏதேனும் புகழ் பெருமையின் பிரபாவத்தை மாயை ஏற்படுத்தவில்லையே? சதா சுகம், சாந்தி, ஆனந்தம், அன்பு, அதீந்திரிய சுகம் நிரந்தரமாக உள்ளதா? ஏனெனில் எதிர்கால உலகத்தில் அனைத்துப் பிராப்திகளும் உள்ளன. முழுமை நிறைந்திருக்கிறது இதன் காரணமாக திருப்தியும் உள்ளது என்பதை அறிவீர்கள். இப்பொழுது கூட சுய ராஜ்யம் முழுமையாக உள்ளதா நல்லது. அதில் குறைவு இருக்கிறதா? ஏனெனில் தற்போதைய முழு முயற்சியில் குறைவு ஏற்பட்டால் எதிர்கால பரந்த ராஜ்யத்தின் அதிகார உரிமையாளர்களாக எப்படி ஆவீர்கள்? அனைத்திற்கும் ஆதாரம் தற்போதைய முயற்சியில் தான் உள்ளது. தற்போதைய ஏதேனும் குறையானது. எதிர்கால சம்பூரண (முழுமையான) ராஜ்யத்தின் உரிமையாளர்களாக ஆக விடாது, இந்த சுய ராஜ்யத்தின் பல கால பயிற்சியானது எதிர்காலத்தில் அதிகாரிகளாக்குகிறது. ஆக இவ்வாறு தன்னை சோதனை செய்து கொண்டிருக்கிறீர்களா? ஏனெனில் தற்போதைய பல கால முயற்சி ஏற்படவில்லை யென்றால் அதன் பலனும் குறைவாகவே கிடைக்கும். எனவே பாப்தாதா அவ்வப்போது இந்த கவனத்தை ஈர்த்துக் (ஞாபகமூட்டிக்) கொண்டிருக்கிறார்; அதாவது இதற்காக தற்போது தன்னை முழுமையான மற்றும் சம்பூரணமானவர்களாக ஆக்கிக்

கொள்ளுங்கள். புருஷார்த்தம் ஏதோ நடந்துக் கொண்டிருக்கின்றது என்று புருஷார்த்தத்தின் நடு விலே ஏதோ நடக்கு, ஏதோ இருக்கு, இம்மாதிரி கு, கு, கு என்பது வரவில்லை தானே! இது நடந்து போயிற்று.. அதை எல்லாம் செய்து விடலாக... இந்த சம்ஸ்காரம் அழிவில்லா 21-ஜென்மத்தினுடைய அகண்ட ராஜ்யத்தின் அதிகாரி ஆக ஆக்காது.

ஆக பாப்தாதா சதா காலத்திற்கும் எச்சரிக்கை செய்கிறார். ஏதேனும் தடை ஏற்பட்டால் சூறாவளி வருகிறது என்றால் அது நமக்கு அளிக்கப்படும் பரிசாக ஆகி விட வேண்டும் என்று சோதியுங்கள் என்கிறார். ஏதேனும் மாயையினுடைய போர் ஏற்பட்டால், மாயை அனுபவத்தைத் தருகிறது. ஆக அனுபவம் கூட நமக்கு முன்னேறச் செய்யும் ஏணியாக உள்ளது என்று அனுபவம் ஏற்பட வேண்டும். இதற்கு பாபா சதா உங்களது சார்ட்டை நீங்களே சோதித்துப் பாருங்கள் என்கிறார். எவ்வளவு உங்களது சார்ட்டை சோதிப்பீர்களோ அவ்வளவே மாறவும் செய்வீர்கள். ஆக, ஒவ்வொருவரும் உங்களது சார்ட்டை சோதித்து வருகிறீர்களா? யார் தினமும் செய்கிறார்களோ அவர்கள் கை உயர்த்துங்கள். யார் தினமும் செய்கிறார்களோ அவர்கள் மட்டும், அவ்வப்போது செய்பவர்கள் அல்ல! தினமும் சார்ட்டை சோதியுங்கள்; மேலும் மாறுங்கள். ஏனெனில் நேரத்தின் எச்சரிக்கையை பாப்தாதா பலகாலமாக தந்துக் கொண்டுதான் இருக்கிறார். காலத்தைப் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறீர்கள். மனிதர்களின் மனதில் கவலை அதிகரித்துக் கொண்டிருக்கிறது ஆனால் உங்கள் மனதிலோ கவலை இல்லை, பதிலாக பிரபுவினுடைய சிந்தனை நிறைந்துள்ளது. பிரபுவின் சிந்தனை இருப்பதன் காரணமாக நீங்கள் உங்களை நாம் நிமித்தமானவர்கள் நிர்மாணிக்கக் (படைக்க) கூடியவர்கள். ஏனெனில் செய்விப்பவர் பாபா ஆவார் என்று இருக்கிறது. இதன் காரணமாக உங்களுடைய மனதில் கவலை இல்லை, செய்விப்பவர் செய்து கொண்டிருக்கிறார். இந்த உணர்வு சதா உங்களை முன்னேற்றிக் கொண்டிருக்கிறது.

இந்த சங்கமயுகத்தின் ஒவ்வொரு வினாடியும், சங்கல்பமும் சுபமாக நடக்கிறதா? இந்த நேரத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து ஒவ்வொரு வினாடியும், வினாடி அல்ல; ஆனால் ஒரு வினாடியின் மதிப்பு மகத்துவம் இருக்கிறதா? இந்த மாதிரி தற்போது விசேஷமாக

ஒவ்வொருவரும் சோதித்துப் பார்க்க வேண்டும். சங்கல்பம் என்னவோ நடந்தது தான்; ஆனால் இரண்டு மூன்று வினாடிகள் மட்டுமே இருந்தது என்று அவ்வப்போது குழந்தைகள் கூறுகின்றனர் ஆனால் சங்கமயுகத்தின் நேரத்திற்கு மதிப்பு மிக அதிகம் தற்போதைய ஒரு வினாடி ஒரு மணி நேரத்திற்குச் சமம். அவ்வளவு தூரம் இந்த சமயத்திற்கு மதிப்புள்ளதா? ஏனெனில், திடீரென்று எந்த நேரத்திலும் உங்களது இறுதி நேர தேர்வு வரலாம் என பாப்தாதா ஏற்கனவே கூறியுள்ளார் பாப்தாதாவும் (எப்பொழுது வரும் என) தெரிவிக்க மாட்டார். எனவே இந்த சமயத்தின் கவனம் என்பது சம்பூரணம் மற்றும் முழுமை அடைவதில் இருக்க வேண்டும். பாப்தாதா என்னென்ன கஜானா கொடுத்திருக்கின்றாரோ அந்த ஒவ்வொரு கஜானா வையும் சரியான சமயத்தில் காரியத்தில் ஈடுபடுத்த வேண்டும். பொக்கிஷங்களின் எஜமானர்கள் நீங்கள். எந்த சமயத்தில் எந்த பொக்கிஷம் அவசியமோ அச்சமயத்தில் அதனை உபயோகிப்பது என்பதுதான் எஜமானரின் விசேஷமாகும். நீங்கள் உள்ளடக்கிக் கொள்ளும் சக்தியை ஆர்டர் செய்தீர்களானால் அந்த சக்தி செயலில் வருகிறதா? ஏனெனில் சரியான சமயத்தில் தனது கஜானாவை காரியத்தில் கொண்டு வருபவர்களையே எஜமானர்கள் என்று கூற முடியும் ஆகவே அனைவரும் உங்கள் மீது கவனம் செலுத்த வேண்டும். எல்லோரிடமும் குஷி மற்றும் கஜானா நிரந்தரமாக முகம் மற்றும் நடத்தையில் தென்பட வேண்டும். குஷி என்பது அழிவில்லாத தந்தையின் பரிசாகும். அழிவில்லாத தந்தையின் பரிசை அழிவில்லாது வைத்திருங்கள். குஷியைப் பற்றி கூறப்படுவது யாதெனில், குஷிஷியைப் போன்ற சத்துணவு வேறு எதுவும் கிடையாது. குஷியைப் போன்ற வேறு எந்த பொக்கிஷமும் கிடையாது. ஆக, யாரிடம் சதா குஷி இருக்கிறதோ அவர்களது கண்களில், மூகத்தில், நடத்தையில் தானாகவே தென்படும். பாப்தாதாவின் வரதானமாவது -சதா குஷியோடு இருங்கள், குஷியை பிறரோடு பகிர்ந்து கொள்ளுங்கள். ஏனெனில், குஷியை பகிர்ந்து கொள்வதால் அதிகரிக்கிறது. பிற பொக்கிஷங்களை பகிர்ந்து கொள்ளும் பொழுது குறைந்துப் போகிறது ஆனால் குஷியின் பொக்கிஷத்தை எவ்வளவு விநியோகிக்கிறோமோ அவ்வளவு அது அதிகரிக்கும். ஆக குஷியினுடைய கஜானா நிரந்தரமாக உள்ளதா என சோதித்துப் பாருங்கள்.

தற்போது உள் நாட்டு, வெளிநாட்டு அனைத்துக் குழந்தைகளுக்கும் பாப்தாதா ஒரு விசயத்தில் விசேஷமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறார். அது எந்த விசயம்? உள் நாட்டிலும், வெளி நாட்டிலும் அனைவரும் மிகவும் உற்சாகம் ஆர்வத்தோடு அனைத்து ஆத்மாக் களுக்கும் பாப்தாதா வினுடைய செய்தியை கொடுத்தனர். அனைவரும் தங்களது குஷியினால் என்ன நிகழ்ச்சியை (மெகா ப்ரோகிராம்) செய்தீர்களோ அந்த நிகழ்ச்சியில் ஒன்றாக செய்தீர்கள். அதனுடைய பலன் ஆயிரமடங்கு பிராப்தியை செய்தீர்கள். தற்போதைய காலத்தின்படி, சூழ்நிலையானது போகப் போக மிகவும் தீவிரமாக ஆகிக் கொண்டிருக்கும். எனவே, கிராமமானாலும் சரி, எந்த மூலையானாலும் சரி, எமது பாபா வந்திருக்கிறார்; ஆனால் நீக்கள் அச்செய்தியை எங்களுக்குக் கூறவில்லை என்ற புகார் இருந்து விடக்கூடாது. எனவே, அனைவரும் உற்சாகம் ஆர்வத்தோடு செயலில் இறங்கினீர்கள். அனைவரும் ஒற்றுமையாக கூடி ஒன்றாய் இருந்து இம்மாதிரி நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து கொண்டிருங்கள். பாப்தாதாவிற்கு மிகுந்த குஷி; அவரது சங்கல்பமும் இதுவே! பாப்தாதா பார்த்தார், உற்சாகம், ஆர்வம் மற்றும் தைரியத்துடன் அனைவரும் தம் தம் முறையில் காரியத்தில் ஈடுபடுத்தினர் ஆனால் இப்பொழுதோ அனைவரும் மிகவும் நன்றாகச் செய்தீர்கள். இனி மேலும் கூட நேரத்தை கருத்தில் கொண்டு இம்மாதிரி லட்சியம் வையுங்கள். அதாவது, எந்த மூலையும் பாபாவின் செய்தி கிடைக்காமல் இருந்து விடக்கூடாது. இதில் (நிகழ்ச்சிகளால்) தனது புருஷார்த்தம் நன்றாக நடக்கிறது. மேலும் ஆத்மாக்களுக்கான நன்மையும் கிடைக்கிறது. அனைவருக்கும் இந்த நிகழ்ச்சி நன்றாக இருந்தது அல்லவா! ஆக பாப்தாதா அனைத்து குழந்தைகளுக்கும் ஆத்மாக்களின் பொருட்டு இரக்கம் உள்ளவர் களாக ஆகுங்கள் என்று அடிக்கடி கூறிவருகிறார். தற்காலத்தில் துக்கம் அசாந்தியின் காரணமாக அனைவரும் மனதாரக் கூறுகிறார்கள். இரக்கம் காட்டுங்கள். கருணை செய்யுங்கள். ஆக பாபாவின் கூடவே குழந்தைகள் நீங்கள் இருக்கிறீர்கள். பாப்தாதா ஒவ்வொரு குழந்தை களிடமும் அவர்களது இரக்க சிந்தனையின் பாகத்தை பார்க்க விரும்புகிறார். துக்கம் நிறைந்த உலகம் சுகமான உலகமாக மாற வேண்டும் என்பது உங்களது ஆர்வம். ஆக, சுகமான உலகம் வருவதற்காக இந்த துக்கம் அசாந்தியின் உலகம் அழிவதற்காக சூழ்நிலைகள் மாறி வருகின்றன. ஆக இன்றைய நாளில் பாப்தாதாவின்

இந்த செய்தியை நினைவில் கொள்ளுங்கள். அதாவது மனதிலோ, சொல் மூலமோ, முகத்தாலோ மற்றும் நடத்தையாலோ சேவையின் வேகத்தை. அதிகரித்துக் கொண்டே இருங்கள். உங்களது ராஜ்யத்தை அருகாமையில் வரவழையுங்கள்! நல்லது

பாப்தாதாவோடு முதல் முறையாக சந்திக்க வந்திருப்பவர்கள் கை உயர்த்துங்கள். மிக அதிகம் பேர்! கொஞ்சம் எழுந்திருங்கள் பார்க்கலாம்! வாழ்த்துக்கள்! பரவாயில்லை, முடிவிற்கு (விநாசம்) முன்பே வந்து சேர்ந்து விட்டீர்கள். புதிய பிறவியை எடுத்து விட்டீர்கள். அதற்காக அனைவரின் சார்பாக தற்போது புதிதாக வந்துள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும். பாப்தாதா மற்றும் நாலா புறங்களிலுள்ள குழந்தைகளின் வாழ்த்துக்கள். வாழ்த்துக்கள் பிராமண குடும்பத்தைப் பார்த்து மகிழ்ச்சி ஏற்படுகிறது அல்லவா! ஆனால் <u>இப்பொழுது வந்திருப்போருக்கு பாப்தாதா கூறுவதாவது -தற்போது காலம் மிகவும் கடந்து விட்டது; மிகச் சிறிதே பாக்கி உள்ளது. எனவே புருஷார்த்தத்தை தீவிரம் ஆக்குங்கள். தீவிர புருஷார்த்தத்தால் வேகமாக முன்னேறிச் செல்லுங்கள். நடக்க வேண்டாம் பறந்து செல்லுங்கள்!</u> பறக்கும் கலையின் புருஷார்த்தம் செய்தீர்களெனில், காலம் கடந்து வந்த போதிலும் பாபாவினுடைய ஆஸ்தியை முழு உரிமையோடு நீங்கள் எடுக்க முடியும். ஒவ்வொரு விநாடியும் குஷியாக இருக்க வேண்டும்; மேலும் அனைவருக்கும் செய்தியைத் தர வேண்டும். நல்லது.

சேவையினுடைய முறை உத்திர பிரதேசம், பனாரஸ் மற்றும் கிழக்கு நேபாளம்: சேவையின் பொருட்டு வந்திருப்பவர்கள் கை உயர்த்துங்கள். நல்ல வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டீர்கள். உபியில் உங்களது சேவையின் நினைவார்த்தங்கள் நிறைய உள்ளன. பக்தி மார்க்கத்தின் கோவில்களும் அதிகம் உள்ளன, நதிகளும் நிறைய உள்ளன. உ.பி. காரர்கள் நாலா பக்கமும் சேவையை அதிகரித்துக் கொண்டிருக்கிறார்கள். மேலும் அதிகரிப்பார்கள். ஒவ்வொரு மண்டலத்திலும் அந்த மாதிரி ஒரு குழுவை ஏற்படுத்துங்கள்; அந்த குழுவில் அனைத்து பிரிவினரும் இருக்க வேண்டும். உங்களது பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சேவைக்காக ஒவ்வொரு மண்டலமும் தம் தம் பகுதியில் ஒவ்வொரு வர்க்கத்தின் சேவையை செய்து கொண்டிருக்கிறீர்கள்; இன்னும் செய்வீர்கள் ஆனால் ஒவ்வொரு

மண்டலத்திலும் இம்மாதிரி ஒரு குழு சேவைக்காகவே இருக்க வேண்டும். அதில் ஒவ்வொரு வர்க்கத்தைச் சார்ந்தவர்களும் இருக்க வேண்டும். எங்கு நிகழ்ச்சிகள் நடந்தாலும் அங்கு அந்த குழு தம், தம் வர்க்கத்தினருக்கு சிறப்பு அழைப்பிதழ்களை அனுப்ப வேண்டும். எந்த ஒரு பிரிவும் (வர்க்கமும்) எங்களுக்கு செய்தி கிடைக்கவில்லை என்று புகார் சொல்லக் கூடாது. விதவிதமான குழு உண்டாகி, சேவையும் அதிகரிக்க வேண்டும். தனது வர்க்கத்தின் சேவையின் பொழுது கூடவே ஒவ்வொருவரும் தம், தம் அனுபவத்தைக் கூற வேண்டும். அதாவது, இந்த ஞானத்தின் மூலம் என்னென்ன எனக்கு கிடைத்துள்ளது மற்றும் தற்போது என்ன அனுபவம் செய்து கொண்டிருக்கின்றேன். என்று எடுத்துரைக்க வேண்டும். இப்படி ஒவ்வொரு மண்டலத்திலும் இம்மாதி சேவையின் குழு தயாராக வேண்டும். நிகழ்ச்சிகளின் பொழுது அவர்கள் அந்த பிரிவினைச் சார்ந்தவர்கள் பேச நேரமில்லாவிட்டாலும் கூட, அப்படிப்பட்டவர்களை நிகழ்ச்சியில் வரிசையாக உட்கார வைத்து அவர்களின் அறிமுகத்தையும், அனுபவத்தையும் மேடை ஒருங்கிணைப்பாளரே கூறலாம். ஓரிருவரின் அனுபவத்தையும் கூறச் சொல்லலாம். குடும்பத்தில் இருந்து கொண்டே தங்களின் காரியங்களை செய்து கொண்டே எவ்வாறு வாழ்கிறோம். எப்படி மாறினோம் என்று அவர்கள் தங்களது அனுபவத்தை கூறலாம்.

பாப்தாதா ஏற்கனவே கூட கூறியுள்ளார் -இம்மாதிரி விசேஷமான மைக்குகள் இருக்க வேண்டும். அவர்கள் இம்மாதிரி குழு சேவைகளை செய்து வர வேண்டும். உபி. மண்டலம் விஷேமாக பிரம்மாபாபாவின் பாலனையை பெறும் உரிமையப் பெற்றுள்ளது. நல்லது உபியில் பிரம்மாவினுடைய பெயரால் ஞாபகார்த்தம் உள்ளது. அது உபியின் பாக்கியம் ஆகும். ஜெகதம்பா மற்றும் பிரம்மாபாபாவின் பாலனையைப் பெற்றுள்ளது. ஆக பாலனை கிடைத்துள்ள பூமி அது. பாக்கியத்தினுடைய நட்சத்திரம் பிரம்மாபாபா மற்றும் ஜெகதம்பா உ.பி.க்கு வரதானம் தந்துள்ளனர். மிக நல்லது தற்போது நாளுக்கு நாள் பாபா பார்த்துக் கொண்டிருக்கிறார், சேவையின் இடங்கள் மற்றும் உபசேவா நிலையங்கள், கீதா பாடசாலைகள் போன்றவை முன்பை விட அதிகரித்துக் கொண்டிருப்பது நல்லது எனவே பாப்தாதா அதற்காக சிறப்பான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறார். முன்னேறிச் செல்லுங்கள், நம்பரை அதிகரிப்பதிலும், செய்தியைத் தருவதிலும்

நம்பர்-1 ஆகுக! நல்லது பாப்தாதாவிற்கு மகிழ்ச்சி மேலும் முன்னேறிக் கொண்டே செல்லுங்கள், டீச்சர்களுக்கு வாழ்த்துக்கள், விருத்தியை அதிகரித்துக் கொண்டே செல்கிறீர்கள். இதை விட அதிகமாக முன்னேற்றத்தை அடைந்துக் கொண்டே செல்ல வேண்டும். நல்லது.

பெண்கள் துறையின் கூட்டம் நடந்துள்ளது: நல்லது. தாய்மார்கள் பாப்தாதாவினுடைய காரியம் ஆரம்பித்த நாட்களிலிருந்தே தாய்மார்களுடைய நன்மையின் பொருட்டு தாய்மார்களின் தலை மீது (ஞான) கலசத்தை வைத்துள்ளார். பாண்டவர்கள் கூடவே இருக்கிறார்கள். இருந்தும் இந்த விசேஷம் சேவையின் நிமித்தமாக தாய்மார்கள் ஆகி முன்னேறிச் சென்றார்கள். பாப்தாதா தாய்மார்களுக்கு முக்கியத்துவம் கொடுத்ததிலிருந்து இன்றைய அரசாங்கமும் தாய்மார்களுக்கு ஒவ்வொரு காரியத்திலும் உதவி கரமாக இருந்து உதவிகளை அளித்து வருகிறது. ஆக, சங்கமயுகத்தின் பாப்தாதாவின் காரியத்தின் விசேஷம் மற்றும் நவீனம் தாய்மார்களே மேலும் தற்போது தாய்மார்களின் விசேஷம் முன்னேறிச் செல்கிறது. பாப்தாதாவிற்கு முன்னாலே முன்னேறி செல்வது போல இம்மாதிரியே அரசங்கத்திலும், இன்றைய உலகத்திலும் தாய்மார்களின் பக்கம் அனைவருடைய பார்வையும் செல்கிறது. எனவே இந்த நிகழ்ச்சியை வெகு விமரிசையாக செய்யுங்கள். தாய்மார்களை அம்மாதிரி முன்னால் வையுங்கள். அவர்களின் சக்தியை அனைவரும் பார்க்கட்டும். தாய்மார்களின் பாலனை எவ்வளவு மேலானது! தற்போது தாய்மார்கள் குடும்பத்தில் இருந்துக் கொண்டே தங்களது குழந்தைகளை அம்மாதிரி முன் உதாரணமாக ஆக்கிக் காட்டுங்கள். பாப்தாதா யாரையாவது வீடு எப்படி ஆசிரமம் போன்று ஆனது என்று உதாரணமாக சுட்டிக் காட்டும் பொழுது தயாராக இருக்க வேண்டும். குழந்தைகள் எப்படி தங்களுடைய விதி முறைகளில் இருக்கிறார்கள். இம்மாதிரி குழந்தைகள் மாற வேண்டும் என்பது, இதுவும் அரசாங்கத்தினுடைய பிரச்சனை தான். தாய் மார்கள் இம்மாதிரி குழந்தைகளுக்குக் கூட நன்மை செய்ய முடியும் என்று அரசாங்கத்திற்கு புரிய வேண்டும் இம்மாதிரி தாய்மார்கள் நடை முறையில் செய்து காண்பிக்க வேண்டும். தாங்கள் எப்படி மாறினார்களோ குழந்தைகளையும் அம்மாதிரி தயார் செய்ய வேண்டும். அது தாய்மார்கள் இப்படி கூட செய்ய முடியுமா என்று ஆச்சரியம்

அரசாங்கத்திற்கு தெரிய வேண்டும். நல்லது தாய்மார்களுக்கான நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்யும் பொழுது அவர்களுக்கு உற்சாகம் ஏற்படும். அப்பொழுது மற்றவர்களுக்கும் அவர்கள் சேவை செய்வர். வெற்றி என்பது நிச்சயம் உண்டு. நல்லது!

இந்தூர் விடுதியின் குமாரிகளோடு: நல்லது குமாரிகள் தங்களை சக்தியின் ரூபமாக அறிய வேண்டும். நாங்கள் குமாரிகள் அல்ல, சிவ சக்திகள்! இந்த ஒரு மாற்றத்தின் மூலமாக அம்மாதிரி ஆச்சரியத்தை ஏற்படுத்துங்கள். அதாவது சேவையின் பொழுது உங்களுக்கு ஏற்பட்ட மாற்றத்தின் வெளிப்படையான உங்களுடைய முகம், நடத்தை மற்றவர்களுக்கு சாட்சாத்காரமாக வெளிப்படட்டும். எப்படி நீங்கள் மூத்த சகோதரிகளை, தாதிகளையும் பார்க்கிறார்களோ அப்போது அதன் பிரபாவம் பொது மக்களுக்கும். பார்க்கும் பொழுதே ஏற்பட்டு விடுகிறது. அதன் அதிர்வலைகள் உண்டாகின்றன. அப்பலதி நீங்கள் ஒவ்வொரு குமாரியும் உங்களிடம் சக்தியை நிரப்பிக் கொள்ளுங்கள், அதன் பிறகு நீர்ங்கள் எங்கு சென்றாலும், யாருக்கு சேவை செய்தாலும் இவர்கள் சாதாரண குமாரிகள் அல்ல ஆனால் சக்திகள், தேவிகள் என்று அவர்களுக்கு அனுபவம் ஆக வேண்டும். உங்களுடைய முகத்தின் மூலமாக பாபாவின் முகமும் பிரம்மாபாபாவினுடைய பாலனையின் பிரபாவம் உங்கள் முகத்தில் தென்படட்டும். கடைசியில் இந்த சேவையின் பாகம் தான் நிகழ வேண்டும். ஆகவே ஒவ்வொரு குமாரியும் இந்த அளவு சக்தியை நிரப்பிக் கொள்ளுங்கள் மற்றும் நல்லது, நன்றாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. முன்னேறிக் கொண்டும் இருக்கின்றீர்கள் ஆனால் உங்களுடைய முகம் மற்றும் நடத்தையில் அன்பு மற்றும் பற்றற்ற நிலை தென்படட்டும். மற்றபடி நல்லது, பாப்தாதா விசயங்களை கேட்டறிந்து கொண்டிருக்கிறார். ஒவ்வொரு நிலையத்தையும் பராமரிப்பதற்குத் தகுதியுடையவர்களாக ஆகுங்கள். அப்படி ஆன பிறகு எவ்வளவு புது நிலையங்கள் திறக்கப்படும். ஒவ்வொரு குமாரியும் ஒவ்வொரு கிளையை பராமரித்துக் கொண்டிருக்கிறார் என்ற ரிசல்ட்டை பார்ப்பர். இன்றைய நாட்களில் சேவைக்காக டீச்சர்களின் தேவை அதிகம். எனவே இத்தகுதியை அடையுங்கள் ஆனால் எவ்வித் தடையளும் இல்லாத டீச்சர்களாக ஆக வேண்டும். எவ்வளவு பேர் தடையில்லாத டீச்சர்களாகி உற்சாகம் ஆர்வத்தில் பறந்துக் கொண்டிருக்கிறார்கள்

என்பதை எழுதி அனுப்ப வேண்டும். மற்றபடி நல்லது உங்களுடைய வாழ்க்கையை நல்லதாக அமைத்துக் கொண்டிருக்கிறீர்கள் மிகவும் நன்று அனைத்து குமாரிகளுக்கும் ஆசீர்வாதங்களைத் தாருங்கள் உதவி அளியுங்கள் அப்பொழுது எதிர்காலத்தில் இவர்கள் எவ்வித தடைகளும் இல்லாத நம்பர்-1 டீச்சர்களாகி விடுவார்கள். நிறைய இவர்களைப் போன்ற கைகள் தேவைப்படுகின்றது அல்லவா. அதயும் மிக விரைவாக தேவை இல்லையா! தடைகளற்ற, இதை கீழ் கோடிட்டு வைப்யுங்கள் தடைகளற்ற டீச்சர் பிறகு பாப்தாதாவிடம் ரிசல்ட் வந்து சேரும் சரி தானே! இம்மாதிரி தானே உங்களுடைய லட்சியம் உள்ளது நல்லது.

இந்த முறையில் **CAD** (இதய சிகிச்சை பெற்று வருவோர்) குழுவினரும் உள்ளனர்: நல்லது. ஒவ்வொருவரும் உங்களுக்குள் ஆலோசனை செய்து உங்களுடைய சேவையை அதிகரித்துக் கொண்டிருக்கிறீர்கள் உற்சாகம் ஆர்வத்தை அதிகரித்துக் கொண்டிருக்கிறீர்கள். மேலும் உங்களை இதே காரியத்தில் சுறுசுறுப்பாக வைத்துள்ளீர்கள். ஆக அதனுடைய விளைவாக புருஷார்த்தத்தின் பலனும் கிடைக்கின்றது. எவ்வளவு திட்டங்களைத் தீட்டுகிறீர்களோ நடைமுறையில் கொண்டு வருகிறீர்களோ அவற்றிற்கு பாப்தாதா விசேஷமான சகாஷ் (சக்தி) மற்றும் உதவியை அளித்துக் கொண்டிருக்கிறார். நல்லது. முன்னேறிச் செல்லுங்கள்,

காலத்தின் அழைப்பு நிகழ்ச்சியின் விருந்தினர்களுடன்: அதிர்ஷ்டமானவர்கள் நீங்கள் உங்களுடைய பாக்கியம் உங்கள் அனைவரையும் இங்கு கொண்டு வந்துள்ளது. இந்த பாக்கியத்தை மேலும் அதிகரியுங்கள்; அவ்வாறு அதிகரிப்பதற்கான சாதனம் எது? ஒன்று, தொடர்பை நிச்சயமாக வைத்துக் கொள்ள வேண்டும். இரண்டாவது தொடர்பை அடுத்து பிராமண குடும்பத்தினரோடு மற்றும் பய்தாதாவுடன் உறவினை அதிகரித்துக் கொண்டே செல்ல வேண்டும். எவ்வளவு தொடர்பு மற்றும் உறவுகளை வைப்பீர்களோ அவ்வளவு பொக்கிஷம் அளவில்லா கஜானா சேர்ந்துக் கொண்டே போகும். கஜானாக்களின் எழுமானர்கள் ஆகி விடுவீர்கள். எந்த சமயத்தில் எந்த சக்தி வேண்டுமோ, எந்த குணம் வேண்டுமோ அதனை அனுபவம் செய்து கொண்டிருப்பீர்கள். நல்லது. இது போன்ற புரோகிராம் செய்து கொண்டிருப்பது பாபாவிற்கு பிடித்திருக்கிறது. மதுவனத்தில்

இந்தியாவிற்கு வருவது நன்றாக இருக்கிறதா? விருப்பம்தானே? உங்களைப் பார்த்து இந்தியாவில் உங்களது சகோதர சகோதரர்கள் அவர்களும் மகிழ்ச்சி அடைகின்றனர். அனைவரது உள்ளத்திலும் எமது சகோதரன், எமது சகோதரி வந்துள்ளார் என மகிழ்ச்சி ஏற்படுகிறது. நீங்களும் மகிழ்ச்சி அடைகிறீர்கள். இவ்வளவு பெரிய குடும்பத்தை எப்பொழுதாவது கேட்டிருக்கிறீர்களா, பார்த்திருக்கிறீர்களா? எவ்வளவு பெரியது உங்களுடைய குடும்பம் பாருங்கள்! ஒவ்வொரு குழந்தைக்கும் பல கோடி மடங்கு அன்பு நினைவுகள் நல்லது.

**40-நாடுகளிலிருந்து 300-இரட்டை வெளி நாட்டினர்:** சகோதர, சகோதரிகள் வந்துள்ளனர். பாப்தாதாவிற்கு மிக சந்தோஷம்! ஒவ்வொரு வருடத்தில் நிகழும் இந்த சந்திப்பு பாரத தேசத்திலுள்ள சகோதர, சகோதரிகளுக்கும் மிக நன்றாக இருக்கிறது. பாப்தாதாவிற்கோ நன்கு விருப்பம் தான் உங்களுக்குள்ளே சந்தித்து பேசிக் கொண்டு ஒவ்வொரு வருடமும் மேற்கொண்டு செய்யும் சேவைப் பொருட்டும் சுய முன்னேற்றத்திற்கான சார்ட் பற்றியும் ஆலோசித்து உற்சாகம் ஆர்வத்தை வளர்த்து வருகிறீர்கள். இதைப் பார்த்து பாப்தாதா மகிழ்ச்சி அடைகிறார். உங்கள் அனைவருக்கும் கூட இவ்வளவு சகோதர, சகோதரிகள் கிடைக்கின்றனர். உங்களைப் பார்க்கிறார்கள், மகிழ்ச்சியடைகிறார்கள். அப்படியென்றால், உங்களுக்கும் மகிழ்ச்சி தானே! பாப்தாதாவினுடைய அறிவுரைகளை நடைமுறையில் கொண்டு வருவதில் உற்சாகம், ஆர்வத்தோடு ஒருவர் மற்றவருக்கு ஞாபகமூட்டி முன்னேறிச் செல்கிறீர்கள். பிரச்சனைகள் புருஷார்த்தத்தை தொய்வடையச் செய்கின்றன. அதனை பிறருக்கு கூறுவது மூலமாக, தெளிவாக்குவதின் மூலமாக புருஷார்த்தத்தில் வேகம் ஏற்படுகிறது. சகோதர, சகோதரியை சந்திக்கும் பொழுதும், அவர்களது புருஷார்த்தத்தைப் பார்க்கும் பொழுதும் நீங்கள் முன்னேறுகிறீர்கள். எனவே பாப்தாதாவிற்கு இந்த நிகழ்ச்சிகள் மிகவும் பிடிக்கிறது. உங்களுக்கும் பிடிக்கிறது தானே! பாண்டவர்களுக்கு பிடிக்கிறதா? நல்லது! தற்போது பாப்தாதா அனைத்து இரட்டை புருஷார்த்தி குழந்தைகளுக்கும் நம்பர்-1 ஆக மாறி பெறுவதற்கான பரிசை ஜாடையாக கொடுத்துள்ளார். ஒவ்வொரு சென்டரும் மற்றும் அதன் தொடர்பில் உள்ள சென்டர்களும் தடைகளற்று தீவிரமான புருஷார்த்தத்தின் கீழ் நம்பர்-1 ஆக வேண்டும். யார் நம்பர்-1

ஆகின்றனரோ அவர்களுக்கு பாப்தாதா பரிசு வழங்குவார். நீங்கள் ஆகினீர்கள் ஆனால் பிற அனைவரையும் கூடவே அழைத்து செல்ல வேண்டும் அல்லவா! உங்கள் குழுவையும் வலிமையுள்ளதாக்க வேண்டும். ஆக யார் நம்பர்-1 எடுக்கின்றார்கள் என்று பார்ப்போம்! யார் எடுத்தாலும் எவ்வளவு எடுத்தாலும் பாப்தாதாவிற்கு மகிழ்ச்சியே சரி தானே! நாம் பறந்து பிறரையும் பறக்கச் செய்ய வேண்டும் என்று இப்பொழுதிலிருந்தே லட்சியம் வைக்க வேண்டும். நடக்கக் கூடியவர்கள் அல்ல, பறக்கக் கூடியவர்கள். பறக்கும் கலையின் சான்றிதழை பெற வேண்டும். அவ்வப்போது அல்ல எப்பொழுதுமே பறக்கும் கலையை அடைய வேண்டும் அல்லவா! இப்பொழுது ஒவ்வொரு நாளும் ஏதேனும் முன்னேற்றத்தை அடைந்துக் கொண்டே செல்லுங்கள். 4-பாடங்கள் உள்ளன. 4-பாடங்களை ஏதேனும் ஒன்றை (தினமும்) லட்சியமாக வைத்து, நடைமுறையில் கொண்டு வந்து உங்களுடைய சார்ட்டை முன்னேற்றிச் செல்லுங்கள். நல்லது பாப்தாதா பார்த்தார். வெளி நாட்டிலும் பாபா விரும்பக்கூடிய குழந்தைகள் இருக்கின்றன. தங்களது நடைமுறை கணக்கை தினமும் பாபாவிற்கு தருகின்றனர். புருஷார்த்தம் மிக நன்றாக உள்ளது. எனவே இம்மாதிரியான மிக ரகசியமான புருஷார்த்திகளுக்கு அமிர்த வேளையில் தினமும் பாப்தாதா வாழ்த்துக்களை குறிப்பிட்டுத் தருகிறார். எனவே முன்னேறிச் செல்லுங்கள்.

இந்தியாவிற்கு சேவை செய்வோம்! நிகழ்ச்சி ஐதராபாத்தில் நடந்தேறியது: இம்மாதிரி நிகழ்ச்சியும் நடக்கிறது. சேவையின் திட்டத்தைப் பார்த்து உற்சாகம் ஆர்வத்தைப் பார்த்து பாப்தாதா மகிழ்ச்சி அடைகிறார். வெற்றி என்பது ஒவ்வொரு குழந்தையின் பிறப்புரிமை என்னும் வரதானத்தை பாப்தாதா அளிக்கிறார் எனவே வெற்றி என்பது நிச்சயமாக இருக்கும். அனைவரையும் துணையாகக் கொண்டு உதவியாளர்களாக அமைத்து செல்கின்றனர். அவ்வாறே செல்வீர்கள். வாழ்த்துக்கள்! மிகுந்த முயற்சி எடுத்துள்ளீர்கள். ஆர்வம் நன்றாக இருக்கின்றது மேலும் உற்சாகம் ஆர்வம் எங்கே இருக்கிறதோ அங்கு வெற்றி நிச்சயம் உண்டு. ஐதராபாத்காரர்கள் எழுந்திருங்கள்! டீச்சர்கள் எங்கே? முதல் முதலில் இத்திட்டம் ஐதராபாத்திற்கு வாய்ப்பு கிட்டியுள்ளது. பாப்தாதாவிற்கும் மிகவும் நன்றாக இருக்கின்றது/ அதாவது அனைவரும் தம், தம் சக்திக்கேற்றவாறு உதவி

செய்துள்ளனர். சேவையின் பாகத்தை உள்ளார்ந்த அன்போடு செய்துள்ளனர். என்ன செய்தீர்களோ அது நல்லதாகவே செய்துள்ளீர்கள். தைரியத்தை நன்றாக வைத்துள்ளீர்கள். தைரியமானவர்களுக்கு பாபாவின் உதவி இருக்கவே செய்கிறது நல்லது!

இன்று பாப்தாதா கூறியவாறு சுய ராஜ்ய அதிகாரி ஆகி, சுய ராஜ்யத்தின் ரிசல்ட்டை சோதியுங்கள். அவ்வாறு சோதனை செய்யும் பொழுது எந்த வித குறையையும் (பலஹீனம்) பல காலத்திற்காக மாற்றிக் கொள்ள வேண்டும். ஏனெனில் பல காலம் நீண்ட கால அகண்ட ராஜ்யம் நடைபெற வேண்டும். அதற்குத் தேவை பல கால புருஷார்த்தம், பல கால பிராப்தியின் அதிகாரியாக தானாகவே ஆவது. எனவே பல காலம் என்பதை அடியில் கோடிட்டு சோதியுங்கள். மாறியிருக்கிறோமா?

நாலாபுறங்களிலுள்ள பாப்தாதாவின் உள்ளமெனும் சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் பாப்தாதா தினமும் அமிர்த வேளையில் விசேஷ சக்தியை வழங்குகிறார். விசேஷ வரதானத்தையும் வழங்குகிறார். யார் அமிர்தவேளையினுடைய விசேஷ சக்தியையும், வரதானத்தையும் அடைகிறார்களோ அவர்கள் விசேஷ தீவிரமான புருஷார்த்திகள் ஆகிறார்கள். அமிர்தவேளையினுடைய மகத்துவத்தை உணர வேண்டும். அதாவது, பாப்தாதாவின் நிரந்தரமான மன சிம்மாசனத்தில் வீற்றிருக்க வேண்டும். ஆக அநேக குழந்தைகளின் கவனம் இருக்கிறது. மேலும் பாப்தாதா தினமும் அவர்களுக்கு குறிப்பாக சான்றிதழை கொடுக்கிறார் -ஆஹா! என் அருமை குழந்தாய்! ஆஹா!

ஆக, நாலாபுறங்களிலுள்ள தீவிர புருஷார்த்தி ஒவ்வொரு நேரத்திலும் பாப்தாதாவை தனது துணையாக்கிக் கொண்டு இணைந்து இருக்கும் அப்பியாசம் செய்யும் குழந்தைகளுக்கு பாப்தாதா விசேஷமான வரதானங்களை வழங்கிக் கொண்டிருக்கிறார். எப்படி என்றால், சதா பறந்துக் கொண்டே செல்லுங்கள். பிறரையும் பறக்கச் செய்யும் உதவி அளித்து பறக்கச் செய்து கொண்டே இருங்கள். அனைவரும் வெற்றியாளர்களே! மேலும் வெற்றியினுடைய பழமானது பாப்தாதாவின் ஒவ்வொரு ஆசீர்வாதத்தின் மூலம் கிடைக்கிறது ஆக அமரர்களாகி, அனைவருக்கும் அமிர்தத்தைப் பருக செய்யுங்கள்.

நாலாபுறத்திலுள்ள குழந்தைகள் பாப்தாதாவின் முன்னர் இருக்கின்றனர். ஒவ்வொரு குழந்தையிடமும் பாப்தாதாவின் உளமார்ந்த அன்பு இருக்கிறது. ஏனெனில் ஒவ்வொரு குழந்தையிடமும் ஏதேனும் விசேஷம் இருக்கின்றது. அனைத்து விசேஷங்களாலாலும் தன்னை விசேஷ ஆத்மாவாக ஆக்கிக் கொண்டு முன்னேறிச் செல்க. பாப்தாதாவின் ஒவ்வொரு குழந்தைக்கும் பிரத்யேகமான பலகோடி மடங்கு அன்பு நினைவுகள் ஏற்படுவதாக! நல்லது இன்னும் சந்தித்துக் கொண்டே இருப்போம்! நமஸ்தே!

தாதிகளோடு: அனைவருமே நன்கு சுற்றி வந்துள்ளீர்கள். இந்நாட்களில் உலகி அசாந்தி அதிகரித்துக் கொண்டே செல்கிறது நாள் முழுவதும் தொந்தரவுக்குள்ளாகிக் கொண்டிருக்கின்றனர் ஆனால் சாந்தியினுடைய அதிர்வலைகள் சாந்தியை அளிக்கின்றன. எனவே குஷி அடைகின்றனர். எவருக்கேனும் களைப்பு ஏற்படும் சமயத்தில் ஒரு அரை மணி நேரம் ஓய்வுக்காக கிடைத்தது என்று சொன்னால் எவ்வளவு குஷி அடைகிறார்கள். அனைத்து இடங்களிலும் நன்றாக நடத்தினீர்கள். சிறிய இடமாயினு சரி. பெரிய இடமாகினும் சரி, நன்றாகவே செய்தீர்கள். எங்கு உற்சாகமோ அங்கு செலவுக்கான விசயம் ஒன்றுமே இல்லை. எவ்வளவு ஆத்மாக்களுக்கு பாபாவின் செய்தி கிடைத்து விட்டது அல்லவா உங்கள் மீதான புகார் இல்லை அல்லவா? நல்லது. இம்மாதிரி இடை இடையே நிகழ்ச்சிகளை செய்து கொண்டே இருங்கள். ஒவ்வொரு நகரமும் தம், தம் முறை, அளவுப்படி செய்யட்டும். அது சரியே!

நிர்மல் சாந்தா (பரதாதி) தாதிஜியுடன்: இவர் மிகுந்த தைரியசாலி. தைரியம் உள்ள குழந்தைக்கு பாப்தாதாவின் உதவி நிச்சயம் உண்டு!

சகோ.ரமேஷ், சகோ.உஷாவுடன்: என்ன நடக்கிறதோ அதை ஒதுக்கி விட்டு குஷியோடு இருக்கிறீர்கள் இந்த குஷி கவலையற்று முன்னேறச் செய்கிறது. இதுவே மருந்தாகும். (திரிமூர்த்திகளாய் இருக்கிறீர்கள். (ரமேஷ் சகோதரரின் சகோதரி அனிலாவும்) உங்களது செயல் மிகவும் ஆச்சரியமானது, அனைவரையும் மிகவும் உளமாற பராமரித்துக் கொண்டிருக்கிறீர்கள். நன்றாக செய்தீர்கள். சேவையினுடைய பலமும், பழமும் கிடைத்துக் கொண்டிருக்கிறது. எனது கணக்கில் எவ்வளவு

பாக்கியம் நிறைந்துள்ளது என்பதை அறிவீர்களா நல்லது! (ரமேஷ் சகோ.) உடல் நிலை நன்றாக உள்ளது; வேறு ஒன்றும் சிந்திக்க வேண்டாம் மிகுந்து சிந்திப்பதை விட்டு விடுங்கள். பாபாவிடம் கொடுத்து விடுங்கள். லேசாக இருங்கள்! பிறரையும் லேசாக்குங்கள்.

சகோ.உஷாவின் லௌகீக சகோதரியுடன்: இவர்களைப் பார்த்து மிகுந்த குஷியடைகிறீர்கள் இல்லையா? இவர்கள் தங்களது வாழ்க்கையை எவ்வளவு நன்றாக ஆக்கி உள்ளனர். நீங்களும் ஆக்கிக் கொண்டிருக்கிறீர்கள். குஷியாக இருக்கிறீர்கள் இல்லையா? குஷியை ஒருபொழுதும் இழக்க வேண்டாம். குஷியைப் போன்ற சத்துணவு வேறு எதுவும் கிடையாது. குஷியோடு இருக்க வேண்டும் பிறருக்கும் குஷியை கொடுக்க வேண்டும்.

அங்கிள், (ஸ்டீவ் நாராயண் கயானா, (தென்னாப்பிரிக்கா) நாட்டின் முன்னாள் உதவி ஜனாதிபதி) ஆன்டி: இவர்கள் தரப்பிலிருந்து பிரிட்ஜ் மோகன் பாய், சகோ. காயத்திரி (அவர்களின் லௌகீக பெண்) பாபாவிற்கு பூச்செண்டை வழங்கிய பொழுது: மிக நல்ல பூச்செண்டை உருவாக்கி யிருக்கிறீர்கள். அஸ்திவாரம் உறுதியாக உள்ளது. கஷ்டம் ஏதேனும் ஏற்பட்டாலும் அவர் ஆன்மீக போதையில் (மஸ்தி) திளைத்து விடுகிறார். அதன் பிரபாவம் குடும்பம் முழுவதும் ஏற்படுகிறது. நோயாளியின் மன நிலை மிக அற்புதம் என்று டாக்டர் கூட நினைக்கின்றார். எனவே சேவை செய்து கொண்டிருக்கிறார். அவருடைய முகமே சேவை செய்கிறது. அவருக்கு பல கோடி மடங்கு அன்பு நினைவுகள். ஆன்டியும் மிக அமைதியாக ரகசியமாக உள்ளார் (வெளிகாட்டிக் கொள்ளாமல்) முழு குடும்பமும் அதிர்ஷ்டமானது (இவர்களது மகள்) காயத்திரியோடு எதிரிலேயே நிற்கும் இவரது விசேஷம் என்ன தெரியுமா? என்ன நடந்தாலும் சரி, பாபாவை நினைவு செய்து சக்தியை எடுத்துக் கொள்வது அதிக கவனம் கொடுக்காமல் ஒதுக்கி விடுகிறது. பிறரை விடாமல் அவர்களுக்கு பாலனை கொடுத்து விசேஷ ஆத்மாவாக ஆக்குகிறது. குடும்பம் மிக அதிர்ஷ்டமான குடும்பம்!

மூன்று முக்கிய சகோதரர்களுடன்: இப்பொழுது மூவரும் அற்புதத்தைச் செய்யுங்கள்! ஒருவர் கூற மற்றொருவர் தனது கருத்தை பற்றற்றும்

அன்போடும் கூறுகிறார். எல்லோரது பார்வையும் உங்கள் மீது (இந்த மெகா ப்ரோகிராமை மேலும் நடத்தலாமா) இதன் பிறகு இதை மகா என்று சொல்லாதீர்கள்: யாருக்கு எவ்வளவு முடியுமோ அந்தளவு செய்யட்டும் தடையில்லை.

இரட்டை வெளிநாட்டு மூத்த சகோதரிகளுடன்: பாப்தாதா ஒவ்வொரு குழுவையும் அழைத்து புத்துணர்ச்சி அளிக்க வேண்டும். இது மிகவும் நன்றாக இருக்கிறது. ஏனென்றால் அங்கே மிகவும் தூரம் தூரமாய் இருக்கிறார்கள். மிக அருகாமையில் வருவதால் ஒவ்வொருவரின் குணங்களும் தென்படுகின்றன. துரமாய் இருக்கும்பொழுது தெரிவதில்லை. ஒருவர் மற்றொருவரைப் பார்க்கும் பொழுது உற்சாகம் ஏற்படுகின்றது. அபுவில் இந்த நிகழ்ச்சி மிக நன்றாய் இருக்கிறது. ஒருவர் பிறர் மீது உற்சாகத்தை நிரப்பி குழுவின் ஒற்றுமையை உறுதி செய்கிறீர்கள். இது நல்லது எல்லாம் நன்றாக செல்கிறது அல்லவா!

ஒருவர் மற்றவருக்கு உதவி செய்வது இவ்வாறு முன்னேறி செல்கிறீர்கள். நேரத்தை ஒதுக்குகிறீர்கள். உங்களது சொந்த சேவையை விட்டு விட்டு நேரத்தை மனதார தருகிறீர்கள். உங்களது காரியத்தை முடித்தீர்கள். வெற்றி கிடைத்தது, இப்பொழுது நீங்கள் திரும்பி செல்லலாம். அனைவரும் நன்கு உதவி அளித்தீர்கள். வெளிநாட்டிலும் செய்தீர்கள் இந்தியாவிலும் செய்தீர்கள். லண்டன் வாசிகள் குறிப்பாக பாபாவிற்கு அன்பு நினைவுகளை அளித்துள்ளார்கள் அவர்கள் கேட்கிறார்கள் -குழந்தைகள் முட்டாள்கள் என்று முரளியில் கூறப்பட்டுள்ளது, நாங்கள் என்ன முட்டாள்களா பாபா? அவர்களுக்கு சொல்லுங்கள் முட்டாள்கள் அல்ல பாபாவின் மனமெனும் சிம்மாசனத்தில் வீற்றிருப்பவர்கள்.

(டாடா நகரின் செய்தி பாப்தாதாவிற்கு கூறப்பட்டது) இந்த முறை அனைவரும் முழு மனதோடு செய்தீர்கள்; எனவே அதன் முடிவும் மிக நன்றாக உள்ளது. அனைத்து இடங்களிலும் மிக நன்றாகவே நடந்தேறியது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 30.11.2009 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பாபா மற்றும் அனைவருக்கும் பிரியமானவர்களாக சந்துஷ்டமணியாகி பாதக சூழ்நிலைகளின் பிரபாவத்திலிருந்து விடுதலை ஆகுக!

இன்று நான்கு திசைகளிலும் உள்ள திருப்தியான ஆத்மாக்களைப் பார்க்கிறார். திருப்தி மணிகள் நான்கு திசைகளிலும் தங்களுடைய மணியின் ஜொலிப்பைப் பரப்பிக் கொண்டு இருக்கிறார்கள். அனைத்திலும் பெரியதிலும் பெரிய ஸ்திதி திருப்திதான். எப்பொழுதுமே திருப்தியாக இருப்பது அனைவருக்கும் விருப்பமாக இருக்கிறது. எப்பொழுதும் திருப்தியாக யார் இருக்க முடியும் என்றால். எவருக்கு அனைத்து பிராப்திகளும் உள்ளனவோ அவர்கள் தான் சதா திருப்தியாக இருக்க முடியும். பிராப்திகளுக்கு ஆதாரம் திருப்தி, ஆகவே இப்படிப்பட்ட ஆத்மாக்கள் அனைத்து பிராமண ஆத்மாக்களுக்கும் விருப்பமானவர்களாக இருக்கிறார்கள். அனைத்து பிராப்திகளும் அதாவது எப்பொழுதும் திருப்தியாக இருப்பது, திருப்தி ஆத்மாக்களுடைய பிரபாவம் வாயு மண்டலத்தில் கூட ஏற்படுகிறது. மேலும் அனைத்து பிராப்திகளும் பரமாத்மாவின் அன்பளிப்பாகும். பரமாத்மா பாபா மூலம் அனைத்து சக்திகளும், குணங்களும் சர்வ கஜானாக்களும் பிராப்தி அடைந்த ஆத்மாக்கள் சதா திருப்தியாக இருப்பார்கள். திருப்தி ஆத்மாக்களின் ஸ்திதி எப்பொழுதும் முன்னேற்ற முடையதாக இருக்கும். பரஸ்திதியானது திருப்தியான ஆத்மாக்களின் மீது தன்னுடைய தாக்குதலை ஏற்படுத்த முடியாது. ஏனென்றால், எங்கு திருப்தி உள்ளதோ அங்கு சர்வ குணங்களும், சக்திகளும் தானே வருகிறது. திருப்தியான ஆத்மாக்களுக்கு அனைத்தும் வந்து சேர்கிறது. ஒவ்வொருவரும் தங்களைத் தாங்களே கேளுங்கள். நான் எப்பொழுதும் திருப்தி ஆத்மாவாக இருக்கிறேனா? திருப்தியான ஆத்மாக்கள்

எப்பொழுதும் அனைவருக்கும் பாபாவிற்கும் ஸ்திதியில் அருகிலும் சமமாகவும் இருப்பார்கள் ஆனால் இந்த ஸ்திதியில் இருப்பதற்காக மிக சாட்சி பார்வை நிலை அதிகம் தேவை; திரிகால தரிசி நிலை வேண்டும். ஒவ்வொரு கர்மமும் திரிகால தரிசி அதாவது ஒவ்வொரு விசயத்திற்கும் மூன்று காலங்களையும் பகுத்தறிந்து பின்னர் செயல்களைச் செய்யக் கூடியோர். இதற்காக இரண்டு விஷயங்கள் அவசியமாகிறது. அந்த இரண்டு விசயங்கள் தான் சம்பந்தம், சம்பத்தி (சொத்து) சம்பந்தத்தில் அழியாதது சம்பத்தியும் அழியாதது. இவை அனைத்தும் அழியாத பாபாவிடமிருந்து பிராப்தியாக கிடைக்கிறது. எப்பொழுது அழியாத சம்பந்தம், சம்பத்தி பிராப்தி ஆகிறதோ அப்பொழுது ஆத்மாக்கள் சதா திருப்தியாக மற்றும் பாபாவின் அனைத்து ஆத்மாக்களின் மிகவும் பிரியமானவர்களாக ஆகிறார்கள். எந்த வித பரஸ்திதி மாயாவின் ரூபத்தில் வந்தாலும் பயப்படுவதில்லை. அப்படி உணர்கிறார்கள். இது எல்லையில்லாத திரை சேவையில் மிக்கி மவுஸ் நடக்கிறது. குழப்பம் அடைய மாட்டார்கள். மிக்கி மவுஸ் விளையாட்டைக் கண்டு மன மகிழ்ச்சியை அனுபவிக்கின்றார்கள். மாயாவின் விதவிதமான ரூபங்களை விதவிதமான விளையாட்டாக அனுபவம் செய்வார்கள். இப்படிப்பட்ட ஸ்திதியின் அனுபவம் பாபா மூலம் எல்லோருக்கும் பிராப்தி செய்ய வேண்டும். மற்றும் செய்திருக்கிறார்கள். பாப்தாதா பார்க்கிறார் நிர்பயம், ஒரு மன நிலை கொண்ட புத்தியுடையவராகி, எந்த விதமான பரஸ்திதியிலும் ஆட அசைய மாட்டார்கள். அப்படிப்பட்ட வெற்றி ஆத்மாக்களாகிய குழந்தைகளின் மீது சதா பாபாவிற்கு சுப ஆசை உள்ளது. ஒவ்வொரு குழந்தையும் வெற்றியுடையோராகி பாபாவிற்கு தங்களுடைய வெற்றியின் சொரூபத்தை காட்ட வேண்டும். ஆக ஒவ்வொருவரும் தங்களைத் தாங்களே கேளுங்கள் நான் யார்? பாப்தாதா ஏற்கனவே கூறியிருக்கிறார் அவ்வப்போது என்ற வார்த்தையை சமயத்திற்குத் தகுந்தாற்போல் இப்பொழுது பிராமணனுடைய அகராதியில் எடுத்து விடுங்கள். இப்பொழுது பிராமணர்கள் பாபாவிடமிருந்து ஆஸ்தியை சதா காலத்திற்கும் எடுக்க வேண்டும். ஒவ்வொரு பிராபதியும் சதா காலத்திற்காக இருக்க வேண்டும். ஏனென்றால் பாபாவின் உள்ளத்தின் ஆசைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய ஆசையின் தீபங்கள், அவர்களுடைய எண்ணத்தில் கூட அவ்வப்போது என்கிற வார்த்தை வரவே முடியாது ஏன்? ஏனென்றால்

சதா பாபாவின் கூடவே மற்றும் பாபாவின் துணைவன் ஆகி கூடவே இருக்கக் கூடிய மற்றும் விஸ்வ பரிவர்த்தனை காரியம் செய்யக் கூடியவர்கள்.

ஆகவே கூறுங்கள். இந்த சதா கால வரத்தை பாப்தாதா மூலம் பிராப்தி அடைந்து விட்டீர்கள் தானே இதுவோ பிறவி எடுத்த உடனேயே பாப்தாதா ஒவ்வொரு குழந்தைகளுக்கும் சதா இதே வரம் தான் தருகிறார்: சதா யோகி பவ, பவித்ர பவ! அந்த வரங்கள் மூலம் என்ன பிராப்தி அடைந்தாலும் அது சதா காலத்திற்காக ஆகி விடுகிறது. அவ்வப்போது அல்ல. ஆகவே அனைத்து குழந்தைகளும் சதா காலத்திற்கு அதிகாரிகள். ஏனென்றால் பாபாவிற்கு ஒவ்வொரு குழந்தை மீதும் கடைசி குழந்தையாக இருந்தாலும் சரி, பாபாவிற்கு ஒவ்வொரு குழந்தை மேலும் உள்ளத்தினுடைய அன்பு உள்ளது. ஏனென்றால் பெரிய பெரிய ஆட்கள் எல்லாம் தங்களை மிக 'புத்திசாலிகள்' என்று எண்ணிக் கொண்டு இருக்கின்றார்கள். அவர்கள் பாபாவை அறிந்து கொள்ள முடியவில்லை. பாபாவின் கடைசி குழந்தைகளும் கூட பாபாவை அறிந்து விட்டார்கள். பாபாவை மனதார என்னுடைய பாபா என்று கூறுகிறார்கள். ஆகவே, பாபாவிற்கு ஒவ்வொரு குழந்தை மீதும் அழியாத அன்பு இருக்கிறது. ஆகவே ஒவ்வொரு குழந்தைக்கும் பாபாவின் வரதானம் தினம் தினம் பாப்தாதா வரிசைக்கிரமமாக இருந்தாலும் சரி, ஆனால் ஒரே சமயத்தில், ஒரே வரதானத்தை அனைத்து குழந்தைகளுக்கும் ஒன்றாகத் தருகிறார். ஒவ்வொரு நாளும் பாப்தாதா ஒவ்வொரு குழந்தையும் வரிசைக்கிரமமாக இருக்கிறார்கள் ஆனால் என்னுடைய பாபா என்று கூட்டால் வரங்களுக்கு உரிமை உடையோராகி விடுகிறார்கள். ஒவ்வொரு குழந்தைக்கும் எங்கு இருந்தாலும் சரி, இந்தியாவில் இருந்தாலும் சரி அல்லது அயல் நாட்டில் இருந்தாலும் சரி, ஆனால் வரதானம் அனைவருக்கும் ஒரே பாப்தாதாவிடமிருந்துதான் கிடைக்கிறது மேலும் வரதானத்தை அடைந்து குஷியும் அடைகிறார்கள் ஆனால் குஷி அடைவதில் இரண்டு விதமான குழந்தைகள் இருக்கின்றார்கள். ஒரு வித குழந்தைகள் வரதானத்தை அடைந்து மகிழ்ச்சி அடைகிறார்கள் ஆனால் முதல் நம்பரை யார் அடைய முடியும். எவர் வரதானத்தை அடைந்து மகிழ்ச்சி அடைவதில்லை, இது என்னுடைய வரதானம் என்று வர்ணனை செய்வதில்லை ஆனால்

வரதானத்தை பயனுடையதாகச் செய்து வரதானத்தினுடைய பலனை அடைகிறார்கள். விதை உள்ளது; ஆனால் விதையை விதைக்காத வரைக்கும் அதனுடைய பலனை எடுக்கவில்லை எனில், வெறும் குஷி மட்டும் அடைகிறார்கள்; வரத்தினுடைய பலனை அடைவதற்கு, எப்படி எந்த விதையிலிருந்து பழத்தை அடைவதற்கு அதற்கு தண்ணீரும் சூரிய வெளிச்சமும் தேவைப்படுகிறதோ, அப்பொழுது தான் பழம் கிடைக்கும். இங்கு கூட குழந்தைகளுக்கு வரதானத்தினுடைய பழத்தை அடைவதற்கு, (மரம்) விஸ்தாரம் அடைவதற்கு தன்னுடைய மனதில் வரதானத்தின் பலனின் மூலம் விருத்தி அடைய வேண்டும். இங்கு கூட பாபா கூறுகிறார், வரதானத்தினுடைய பழத்தை எடுப்பதற்கு திரும்பத் திரும்ப வரதானத்தை நினைவில் கொண்டு வாருங்கள். ஸ்மிருதி சொரூபத்தில் நிலைத்திடுங்கள். அடிக்கடி ஸ்மிருதியை கொண்டு வர வேண்டும். இதுதான் தண்ணீர் ஊற்றுவது ஆகும். மற்றும் சொரூபத்தில் ஸ்திதியில் நிலைத்திருத்தல், சூரிய வெளிச்சம் தருவதாகும். இது தான் பலன் தரும். இந்த பழத்தின் மூலம் தனக்குள்ளும் சக்தி நிறைந்து, பிறருக்கும் கூட சக்தியினுடைய அனுபவத்தை செய்விக்க முடியும்.

அதனால் பாப்தாதா என்ன விரும்புகிறார். ஒவ்வொரு குழந்தையும் ஏனென்றால் பாப்தாதா கொஞ்ச காலமாக எச்சரிக்கை கொடுத்துக் கொண்டே இருக்கிறார். ஒவ்வொரு குழந்தையினுடையது நேரத்தின் படிப்பினுடைய ரிசல்ட் முடிவு சமயம் திடீரென்று வரலாம். இதற்காக எப்பொழுதும் எவரெடியாக இருத்தல் வேண்டும். கூடவே பாப்தாதா இதையும் சமிக்ஞையாகக் காட்டுகிறார்: இப்பொழுது பறக்கும் கலைக்கான தீவிர முயற்சி செய்ய வேண்டிய சமயம். நடக்கிறோம் என்றிருக்கக் கூடாது பறக்கிறோம். சாதாரண ரீதியில் தங்களுடைய தினச்சரியத்தை செய்தல், அந்த மாதிரி சமயம், முயற்சியெல்லாம் முடிந்து விட்டது. ஆகவே பாப்தாதா சமிக்ஞை கொடுக்கிறார்: ஒவ்வொரு நொடியும் ஒவ்வொரு எண்ணமும் சோதனை செய்யுங்கள் உதாரணமாக, தங்களுடைய தீவிர முயற்சி செய்யாமல் ஒரு மணி நேரம் சாதாரண முயற்சியில் இருந்தால், ஒரு மணி நேரத்தில் திடீரென ஒருவேளை கடைசி பேப்பர் நேரம் வந்து விட்டால், அந்த் மதி சோ கதி அதாவது அந்த ஒரு மணி நேர சாதாரண முயற்சி எவ்வளவு நஷ்டத்தை ஏற்படுத்தி விடும்? ஆகவே பாப்தாதா ஒவ்வொரு குழந்தைக்கும் ஒவ்வொரு எண்ணமும் ஒவ்வொரு நொடியும் சமயத்தின்

மகத்துவத்தைத் தெரிந்து சமயத்திற்குத் தகுந்தாற்போல் சமிக்ஞை தருகிறார். குழப்பமான நேரத்தில் அசையாமல் இருப்பதற்கு தீவிர முயற்சியாளர் தான் செய்ய முடியும் சாதாரண முயற்சியாளர்கள் எவரெடியாவதற்கு தாமதமாக்கிக் கொள்வார். பாப்தாதாவும் கூறியுள்ளார்: ஒரு வினாடியில் பிந்தி அதாவது முற்றுப் புள்ளி தீவிர புருஷார்த்தி ஆகவில்லையெனில், என்னவாகும்? 'அனுபவி'களாக இருக்கிறீர்கள் தான்! புள்ளி வைப்பதற்குப் பதிலாக கேள்விக் குறியாகி விடாதே? புள்ளி வைப்பது எவ்வளவு எளிது மேலும் கேள்விகுறி எவ்வளவு கோணல் மாணலாக இருக்கிறது. புல் ஸ்டாப் என்றால் முற்றுப் புள்ளி, அதில் கமா கூட கிடையாது ஆச்சர்ய குறியம் கிடையாது. என்ன செய்வது என்று யோசிப்பதற்குக் கூட நேரம் கிடைக்காது. எந்த குழந்தையும் இந்த விஷயத்தைக் கூட யோசித்துக் கூட பார்க்க முடியாது. இவ்வளவு முயற்சி செய்து கடைசி தேர்வில் பாஸ் ஆக வேண்டும்.

பாப்தாதா பார்க்கிறார். இப்பொழுது கூட காரணம் இருக்கிறதோ இல்லையோ ஏன்? எப்படி? என்ன? அப்படி சில சில குழந்தைகளின் தினசரி சார்ட்டில் இவை தென்படுகின்றன். பலருடைய சார்ட்டில்) பாப்தாதா, பார்க்கிறார் வீணான எண்ணங்கள், வீணான எண்ணங்களின் அலைகள் சமயத்தை வீணாக எடுத்துக் கொள்கின்றன. மேலும் விணானதின் வேகம் அவ்வளவு அதிகமாக உள்ளது. சாதாரண எண்ணத்தின் ஒரு மணி நேரம் மேலும் வேகமான எண்ணத்திற்கு ஒரு நிமிடத்திற்கு சமம். ஆகவே இன்று இதைத் தான் பாப்தாதா பார்த்தார். எல்லோருக்கும் பிரியமான பாப்தாதாவிற்கு பிரியமான, திருப்தியான ஆத்மாக்கள் யார் யார்? திருப்தியான ஆத்மாக்களுடைய எண்ணத்தில் கூட ஏன்? எதற்கு? எப்படி என்ற வார்த்தைகள் சொப்பனத்தில் கூட வராது. ஏனென்றால் அந்த ஆத்மாவிற்கு மூன்று விசேஷமான விசயங்கள் மூன்று புள்ளிகள், ஆத்மா, பரமாத்மா, மேலும் டிராமா மூன்றும் சமயத்திற்கு தகுந்தாற்போல் காரியத்தில் ஈடுபடுத்த முடியும். ஏனென்றால் அப்படிப்பட்ட நேரத்தில் சக்திகளின் பொக்கிஷம் தேவைப்படுகிறது. மேலும் மாஸ்டர் சர்வ சக்திவான் யார் என்றால், யார் எந்த நேரத்தில் எந்த சக்தியை ஆர்டர் செய்தார்களோ அது வர வேண்டும். உதாரணமாக, சகித்துக் கொள்ளும் சக்தியை அழைத்தால் எதிர்கொள்ளும் சக்தி வரக் கூடாது. அதுவும் தேவைதான் ஆனால்

வேலைக்கு உதவாது. ஆக அனைத்து பொக்கிஷங்களினுடைய சாவி மூன்று புள்ளிகள். நீங்கள் பாபா மற்றும் டிராமா!

ஆக பாப்தாதாவின் ஒரு எண்ணம் இருக்கிறது கூறட்டுமா? செய்ய வேண்டி இருக்கும். யார் செய்வதற்குத் தயாரோ அவர்கள் கை உயர்த்துங்கள் செய்ய வேண்டி இருக்கும் செய்தே ஆக வேண்டும். கை தூக்குகிறீர்கள்! செய்ய வேண்டி இருக்கும். கையை உயர்த்துகிறீர்கள். மனதினுடைய கையைத் தூக்குங்கள் மனதினுடைய கை தான் உறுதியாக இருக்கும். பாப்தாதா சமயத்திற்குத் தகுந்தாற்போல் ஒவ்வொரு குழந்தைகளிடமிருந்தும் இந்த சுப ஆசை வைக்கிறார். அதாவது 15-நாட்களுக்குப் பிறகு பாபாவைச் சந்திக்க வேண்டி இருக்கிறது. இந்த 15-நாட்களில் இந்த விசேஷமான அப்பியாசம் செய்யுங்கள் ஒத்திகைக்காக ஆனால் எப்பொழுதும் இருக்கத் தான் வேண்டும். 15-நாட்களுக்கு ஒத்திகை செய்யுங்கள் மேலும் தம் தம் தொடர்பில் உள்ள சென்டர்களுக்கும் போன் செய்து அவர்களுக்கும் வீட்டுப் பாடம் செய்கிறீர்களா என் நினைவூட்டுங்கள், ஆனால் இந்த 15-நாட்கள் ஒவ்வொருவருக்கும் எண்ணம், சொல் மற்றும் செயலில் குறைந்த அளவு 80-சதவிகிதம் மார்க் வாங்க வேண்டும். இதில் 20-சதவிகிதம் பாபா கிரேஸ் மார்க் கொடுக்கிறார். சம்மதமா? இந்த வேலை (வீட்டுப் பாடம்) கொடுக்கட்டுமா? 15-தினங்கள் மாயாவும் பார்க்கிறது. விசயங்கள் வரும், விசயங்களைப் பார்க்கக் கூடாது தேர்ச்சியுற வேண்டும்; இதைத்தான் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். 15-நாட்கள் பெரிய விசயம் இல்லை. அதனால் பாப்தாதாவிடம் ஒவ்வொருவரும் உண்மையான மனதுடன் சுத்தமான மனதுடன் கனவிலும் கூட எண்ணம் சொல், செயலில் பாஸ் ஆகிக் காட்ட வேண்டும். முடியுமா? முடியுமா? டீச்சர்ஸ் கூறுங்கள் முடியுமா? 15-நாட்கள் ஒன்றும் இல்லை ஆனால் பாப்தாதா, ஒத்திகைக்காக, எண்ணம் கூட வீணாகக் கூடாது போராட்டம் நடக்கக்கூடாது. வெற்றி அடைய வேண்டும். 15-நாட்களுக்கும் முழு வெற்றி கடினமா அல்லது எளிதா? எளிது என்றால் கை உயர்த்துங்கள் எளிது கை உயர்த்துங்கள்! பாப்தாதா 15-நாட்களுடைய முடிவைப் பார்க்க விரும்புகிறார். பின்னர் முன்னேறலாம்: 15-நாட்கள் யார் வேண்டும் என்றாலும் செய்யலாம் தானே? மதுபன்காரர்கள் கை தூக்குங்கள். முன்னராக அமர்ந்துள்ளீர்கள். மிக நல்லவர்கள்!!

வெளி நாட்டினர் இருந்தாலும் சரி உள்நாட்டினர் இருந்தாலும் சரி, அனைவருமே (வீட்டுப்பாடம்) செய்ய வேண்டும். கிராமத்துக்காரர்கள் இருந்தாலும் சரி பட்டிணத்துக்காரர்களாக இருந்தாலும் சரி 15-நாட்களுடைய பதிவேடு வைக்க வேண்டும். ஏன்? என்ன? என்ன செய்வது? விஷயமே அப்படியாயிற்று? 80-சதவிகிதம் வாங்கியே தீர வேண்டும். 20-சதவிகிதம் விடுகிறார். ஏனென்றால் பாப்தாதா பார்க்கிறார் எங்கெங்கெல்லாம் போகப்போக மாயா அலட்சியம் மற்றும் சோம்பேறித்தனம் இவ்வாறிருந்தது... இதனால் தான்... என்ற ராயல் சோம்பேறித்தனம், தீவிர முயற்சிக்கு இடையூறாக வந்து விடுகிறது. ஏனென்றால் இப்பொழுது பாப்தாதா அனைத்து யாரெல்லாம் மாணவர்களாக இருக்கிறார்களோ ஒவ்வொரு மாணவர்களுக்கும் இப்பொழுது முதலில் 15-நாட்களுடைய ஒத்திகையைச் செய்ய வைத்து, சிறிது காலத்திற்குப் பின் அப்பியாசம் செய்ய வைக்க விரும்புகிறார். யார் எல்லாம் கையை உயர்தினார்களோ அவர்கள் எல்லாம் எவரெடியாக இருக்கிறீர்களா? பலகால பயிற்சி வேண்டும். இந்த சிறிய அப்பியாசம் செய்ய வைக்க வேண்டும். நல்லது. இப்பொழுது என்ன செய்ய வேண்டும். நல்லது.

<u>சேவையின் பொறுப்பு பஞ்சாப் மண்டலத்தினுடையது</u>: பஞ்சாப், அங்கு 5-நதிகள் ஓடிப் பாய்கிறது; நதிகளின் பிரபாவம் கூட பெயர் புகழ் உடையதாக இருக்கிறது. ஞான கங்கை கூட பிரசித்தியாக உள்ளது. பஞ்சாப் மிக நல்ல காரியம் செய்கிறது. பஞ்சாப்பினுடைய சிறப்புத் தன்மை பஞ்சாப்பின் குமாரிகள் மிக நல்ல ஒன்றாக சேர்ந்து சேவாதாரிகளாக இருக்கிறார்கள். கை தட்டுங்கள். பஞ்சாப்பில் முதன் முதலில் பயப்படாமல் சந்நியாசிகளினுடைய சம்மேளனத்தில் சொற்பொழிவு நடந்தது. சந்நியாசிகள் கூட மிக நல்ல காரியம் தான் இது என்று மேடையில் இருந்துக் கொண்டே கூறினார்கள். மேலும் பஞ்சாபில் தொடர்பில் உள்ளவர்கள் இங்கு பெரிய சந்நியாசி, மடத்து சாமிகள் இங்கு மதுபனிற்கு பல எண்ணிக்கையில் வந்தார்கள். வந்து கொண்டுதான் இருக்கிறார்கள்; ஆனால் அதிக எண்ணிக்கையில் வந்தார்கள். ஹரித்துவாரிலிருந்தும் வருகிறார்கள். டிராமாவின் படி பஞ்சாபிற்கு சாது, சந்நியாசிகளுக்கு, முனிவர்களுக்கு சேவை செய்ய வாய்ப்பு கிடைத்தது. அதுவும் பயமின்றி செய்ய பஞ்சாபினுடைய

சேவையினுடைய ஸ்தாபனை ஆரம்ப காலத்தில் எப்படி ஆனதோ அப்படியே சகயோகி மற்றும் வாரிச் குவாலிட்டி காரர்கள் நிமித்தமானார்கள். எவ்வளவு தீவிரவாதிகளோ அதுபோல சிங்கம் போன்ற குவாலிட்டி காரர்களும் கிடைத்தார்கள். இப்பொழுது பஞ்சாபிற்கு இந்த சிறப்பு தன்மை உள்ளது. இப்பொழுதும் பஞ்சாபில் அப்படிப்பட்ட பெயர், புகழ் உடைய சிங்கத்தைக் கொண்டு வாருங்கள். அவர்கள் மைக்காகி அவர்களது அனுபவத்தைச் சொல்லட்டும். பெரியவர்களாக இருக்கட்டும்; சிறியவர்கள் அல்ல? அரசாங்கத்தின் வி.ஐ.பி தனிப்பட்டவர்கள்; சந்நியாசிகள். முனிவர்களில் கூட வி.ஐ.பி இருக்கிறார்கள். அப்படி பெரியவர்களை தயார் செய்யுங்கள். அவர்களது அனுபவத்தின் மூலம் பிறரிடமும் உற்சாகத்தைக் கொண்டு வரட்டும் அப்படிப்பட்ட 'மைக்'கைத் தயார் செய்யுங்கள். முடியுமா? இப்பொழுது எல்லோரும் சாது, சந்நியாசிகளுடைய சேவை துவாபரயுகத்திலி ருந்து தானே நடந்துக் கொண்டு வருகிறது, ஆனால் அப்படி குரு தனக்குச் சமமான சிஷியனை ஆக்க முடியவில்லை. இப்படிப்பட்ட முன்னுதாரணம் கிடையாது ஆனால் பாப்தாதா தன்னையும் விட கெட்டிக்கார குழந்தைகளை பாபா தயார் ஆக்கியுள்ளார். அவர்கள்தான் பொது மக்களுக்கு முன்னால் செல்வார்கள் ஆகவே பஞ்சாப் ஒரு புதுமைத் தன்மையைச் செய்து காட்டுங்கள்.

முக்கியஸ்தர்கள் அனைத்து தரப்பிலுமிருந்து வரத்தான் செய்கிறார்கள் ஆனால் அனைவரும் கேட்டு பின் விழிப்படையட்டும். செய்தி கிடைக்கட்டும். அம்மாதிரி நீங்கள் அழைத்து வாருங்கள். இது முடியுமா? பார்க்கலாம், கொஞ்ச நேரம் பிடிக்கத்தான் செய்யும், ஆனால் இப்படி தயார் செய்து காண்பியுங்கள். மற்றபடி விருத்தி ஆகிக் கொண்டு தான் இருக்கிறது. பாருங்கள் இந்த சபையில் கூட பாதி சபை பஞ்சாப் காரர்கள் தான் இருக்கிறார்கள். சேவை விருத்தி ஆகிக் கொண்டு இருக்கிறது அதற்கு வாழ்த்துக்கள் (கும்ப மேளாவிற்கான ஏற்பாடு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது). எது வேண்டும் என்றாலும் செய்யுங்கள்; இந்த வாய்ப்பு நல்லது. ஆகி விடும். நல்லது. சேவையினுடைய வாய்ப்பை எடுக்கக் கூடிய, வரக்கூடிய வாய்ப்பை எடுக்கக் கூடியவர்கள் யாருக்கு சேவையின் முறை இருக்கிறதோ அவர்களுக்கு நல்ல வாய்ப்பு. அனைத்து பஞ்சாப் காரர்களுக்கும் சகோதர, சகோதரிகள், மாதர் குமாரிகள், குமாரர்கள், வயதானவர்கள்

எல்லோருக்கும் பாப்தாதா மேலும் சபையில் இருக்கக் கூடிய அனைவருக்கும் மிக மிக வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்!

மீடியா துறை: எல்லோரும் உட்காருங்கள். உட்காருங்கள். மீடியாத் துறையைச் சேர்ந்தவர் வந்திருக்கிறார்கள். நல்லது. மீடியா துறையினர் சேவை நன்றாக செய்து இருக்கிறார்கள். பாப்தாதா பார்த்தார் பாபாவின் சமிக்ஞைபடி அனைவரும் இந்த தடவை சப்தத்தை பரப்புவதற்கு அறிமுகத்ன் கொடுப்பதற்கு சேவை செய்து இருக்கிறார்கள். எல்லா பிராமணர்களுடைய வாயிலும் பாப்தாதா சொல்லியிருக்கிறார், பாப்தாதா சொல்லியிருக்கிறார் என்று அதை நடைமுறையான ரூபத்தில் கொண்டு வந்தார்கள். இதில் நல்ல முயற்சி செய்திருக்கிறீர்கள். இதில் மீடியா துறையினர்கள் நான்கு திசைகளிலும் எல்லா இடத்திலும் காட்டுவதில் உழைத்தார்கள். நல்ல உற்சாகத்துடன் செய்தார்கள். சிறியவர்களோ பெரியவர்களோ, சிறியவர்கள் கூட குறைவாகச் செய்யவில்லை. பெரிய சின்ன சென்டர் யாராக இருந்தாலும் சரி நிகழ்ச்சிகள் செய்திருக்கிறீர்கள். பாபாவினுடைய செய்தியைக் கூறுவதில் யாரெல்லாம் சேவை செய்தார்களோ, நிமித்தமாக இருந்தீர்களோ, சென்டர்காரர்களாக இருந்தா யாரெல்லாம் நிகழ்ச்சிகளைச் செய்தார்களோ அவர்கள் எல்லாம் எழுந்திருங்கள், பாப்தாதாவிற்கு நன்றாக இருந்தது. டீச்சர்கள் குறைவாக எழுந்திருந்தனர். பாப்தாதா பலகோடி வாழ்த்துக்கள் தருகிற அதாவது அப்படியே இடை இடையே சிறிது காலத்திற்குப் பிறகு பாபாவுடைய அறிமுகதத் தருவதற்கு உற்சாகத்துடன் உல்லாசத்துடன் ஒவ்வொரு இடத்திலும் நிகழ்ச்சிகளை நடத்துங்கள் ஏனென்றால் சமயத்தின் மீது நம்பிகை இல்லை. எல்லோருடைய வாயிலும் வர வேண்டு "எங்களுடைய தந்தை வந்து விட்டார் நாங்கள் அறிந்து கொள்ளவில்லை" ஆனால் பாபா வந்து விட்டார் என்று கூற வேண்டும். உங்களுடைய கடமை எல்லோருக்கும் சப்தத்தின் மூலம் எல்லோருக்கும் கூற வேண்டும். நீங்கள் யார் எல்லாம் உடல், பொருள், தனத்தின் மூலம் சேவை செய்தீர்களோ அவர்களுக்கு பல கோடி மடங்கு சேமிப்பு ஆகி விட்டது. மேலும் சேயை வின் பலனும் கிடைத்து விட்டது. மேலும் எதிர்காலத்தில் இதற்கான பலனும் கிடைத்தது: பழம் கிடைத்தது. எல்லோரும் மிக மிக ருசியோடு செய்தீர்கள். பாபா எல்லோருடைய உல்லாசத்தையும் உற்சாகத்தையும் பார்த்து

பாபாவிடம் அன்பைப் பார்த்து வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறார்! இம்மாதம் ஏதேனும் நிகழ்ச்சிகளை நடத்தி வாருங்கள். சிறிய சிறிய சென்டர்களில் எல்லா ஏற்பாடும் இருக்கிறது அல்லவா? நிகழ்ச்சிகள் செய்வதற்கு ஏற்பாடுகள் தேவை. எல்லோரும் தங்களுடைய உடல், பொருள் மூலம் குஷி குஷியாக தயார் ஆகி விட்டார்கள். யார் எப்படி செய்ய வேண்டும் என நினைக்கவில்லை? 'செய்தே ஆக வேண்டும்' என்றே எண்ணினர். அப்படியே தங்களுக்கு ஒருவர் மற்றவருக்கு ஒத்துழைப்பு செய்து உல்லாசம் உற்சாகத்தைக் கொடுத்து முன்னேறிக் கொண்ட இருந்தீர்கள். வாழ்த்துக்கள் வாழ்த்துக்கள்!!

யார் வரவில்லையோ அவர்களுக்கும் வாழ்த்துக்கள். மீடியா துறையினர்கள் எழுந்து நில்லுங்க நல்லது. இப்பொழுது கவனம் கொடுக்கப்பட்டு விட்டது. மீடியா மூலமாக நிறைய பேர் ரெகுல மாணவர்களாக ஆகி விட்டார்கள். நல்லது. எவர் எவ்வளவு சேவை செய்தார்களோ அதற்குண்டா. (ரவி பாய், ஷிவானி சகோதரி, காணு பிரியா) பலன் சதா குஷி. சேவையினுடைய பலன் குஷி மற்றும் நிர்விக்னம் அவ்வப்போது கிடையாது எப்பொழுதுமே உள்ளது. நல்லபடியாக செய்தீர்கள் இதை அதிகரிக்க வேண்டும். உள்நாடு மற்றும் வெளிநாடு எல்லோருடைய யோசனையை கேட்டுச் செய்யும் பொழுது அதில் வெற்றி நிச்சயம் கிடைக்கும். ஆலோசனை கேட்டு, ராய் பகதூர் ஆகி, ஒருவர் பிறரது கருத்தைக் கேட்க வேண்டும். நடந்தேடும். இப்போது நேரம் என்ன? ஆகவே மீடியா துறையினர் தங்கள் தங்களது பகுதியில் செய்தியைக் கொடுக்கும் சேவையும் செய்யுங்கள். இது மவுண்ட் அபு மூலமாக சேவை (ஆஸ்தா) நீங்களனைவரும் தங்களுடைய பகுதியில் பாபாவினுடைய செய்தியைப் பரப்ப வேண்டும். செய்கிறீர்கள் நல்லது. வாழ்த்துக்கள்.

டிரான்ஸ்போர்ட் துறையினர்: இந்த இரு தரப்பினரின் சேவையும் தற்பொழுது மிக அவசியம். ஏனெனில் நாளுக்கு நாள் விபத்துக்கள் அதிகமாகிக் கொண்டே இருக்கின்றன. இரண்டு பிரிவுகளின் விபத்துக்கள் குறைய வேண்டும். திடீர் மரணம் நிகழக்கூடாது. கூவி கூவி அல்லல்பட்டு, துக்கத்துடன் போகக் கூடாது. இந்த ஒரு முயற்சிக்காக திட்டங்களை தீட்டிக் கொண்டு இருக்கின்றீர்கள் இப்பொழுது கூட செய்தீர்கள்.

பாப்தாதா ஸ்தாபனை செய்தபொழுது குழந்தைகள் படிக்க வந்தனர். அந்த ஆரம்ப காலத்திலிருந்தே இது மரண உலகம் என்று பாபா கூறி வந்தார். சிறு குழந்தைகள் தானே! மரண உலகம் என்றால் என்ன என்று கேட்டனர். ஏனெனில் அம்மாதிரி மரணத்தை அவர்கள் பார்த்ததில்லை ஆனால் தற்போது இச்சமயத்தில் இறப்புகள் நிறைய நடக்கின்றன என்பதை ஒவ்வொருவரும் பார்த்துக் கொண்டு இருக்கின்றனர். அகால மரணம் நடக்காத நாளே இல்லை என்று சொல்லாம். ஆகையினால் இந்த இரு பிரிவினரும் மிக வேகமாக தம் தம் காரியங்களை அதிகரிக்க வேண்டும். அனைவரும் உங்களுக்கு வாழ்த்துக்களைக் கூறுவர் ஏனெனில் உலகினரும் கூட அகால மரணம் நடக்கக் கூடாது என்றே விரும்புகின்றனர். ஆக, மிக நல்லது! உங்களுக்குள் மீட்டிங் வைக்கிறீர்கள். எப்பொழுது இந்த துறையினரின் சேவை ஆரம்பித்ததோ அப்பொழுதிலிருந்து அநேக சென்டர்களில் குழந்தைகளுக்கு சேவை செய்வதற்கான வாய்ப்பு கிடைத்தது ஆனால் ஒரு விசயம் இன்னும் பூர்த்தியாகவில்லை என்ன தெரியுமா? ஒவ்வொரு வர்க்கத்தினரும் அந்தந்த துறையின் மிகவும் பெயர் பெற்ற பேச்சாளரை அழைக்க வேண்டும், அதாவது, மைக் போன்றவர்களை முன் கொண்டு வாருங்கள் ஒரே மேடையில் மூன்று நான்கு வர்க்கத்தைச் சார்ந்த முக்கியஸ்தர்களை அவர்களின் அனுபவத்தை கூறுமாறு செய்யுங்கள். ஒரே குரூப்பாக ஆக்கி அதில் ஒவ்வொரு வர்க்கத்தின் மிகச் சிறப்பானவர்களை அழையுங்கள் எப்படி பிராமண குடும்பத்தில் கூட நல்ல பேச்சாளர்களை ஆங்காங்கு அழைக்கின்றனரோ அது போல, அம்மாதிரி பல துறையைச் சார்ந்த சிறப்புப் பேச்சாளர்கள் அடங்கிய குழுவை ஆங்காங்கு அழைத்துப் பேச வையுங்கள். பேசுவதற்கான வாய்ப்பைத் தாருங்கள். ஒவ்வொரு தரப்பினரும் கமல புஷ்பம் (தாமரை மலர்) போல இருந்து முன்னேற முடியும் என்பதை பார்க்கலாம். நல்லது.

சமூக சேவை, சமூகத்தில் இவர்கள் என்ன மாதிரி சேவை செய்து கொண்டு இருக்கிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரியட்டும். சமூக சேவை என்பது உண்மையில் அனைத்து வர்க்கத்தினருக்குமே செய்யலாம். ஒவ்வொரு வர்க்கத்தினரும் உற்சாகம், ஆர்வத்தோடு ஒற்றுமையாக வருகின்றனர். என்று பாப்தாதா பார்த்துள்ளார். ஒருவர்

மற்றவருக்கு உதவி கூட செய்கின்றனர்; தற்பொழுது சமுதாயத்தில் இந்த செய்தி பரவ வேண்டும். சமூதாயத்தை சீர் திருத்த வேண்டுமென்றால் பிரம்மா குமாரிகளிடம் சென்று பாருங்கள் எப்படி சமூக சேவை நடக்கக் கூடும் என்று ஒவ்வொருவருமே நன்றாகவே செய்கின்றனர். வாய்ப்பையும் எடுத்துக் கொள்கின்றனர். ஆக முன்னேறுங்கள், முன்னேறச் செய்பங்கள். சமுதாயத்தில் இவர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தியைப் பரப்புங்கள் நல்லது.

இரட்டை வெளி நாட்டினர்: இந்த வாய்ப்பை நன்கு எடுத்துள்ளனர். ஒவ்வொரு குரூப்பிலும் இரட்டை வெளி நாட்டினர் வந்து கொண்டே இருக்கின்றனர். மிகவும் புத்திசாலிகள் தமது வாய்ப்பை தனியாகவும் எடுத்துக் கொள்வதோடு ஒவ்வொரு குரூப்பிலும் வேறு வருகின்றனர். பெயர் இரட்டை என்று பெரியதாக உள்ளது அல்லவா! எனவே இரட்டை லாபத்தை எடுத்துக் கொள்கின்றனர். பாரதவாசிகளும் நீங்கள் உங்கள் வாய்ப்பை எடுத்துக் கொள்வதைப் பார்த்து மகிழ்ச்சியடைகின்றனர். இந்த பெரிய நிகழ்ச்சி கூட வெளிநாடுகளில் கூட நன்றாக செய்து உள்ளீர்கள். பெயரில் மட்டும் சிறிது மாற்றம் அவ்வளவுதான். மற்றபடி சேவை மிக நன்றாக நடந்து உள்ளது. வெளி நாடுகளிலும் சேவையினுடைய முடிவை கேட்டுள்ளார் மற்றும் பார்த்தும் உள்ளார். வெளி நாடு என்றாலும் சரி உள் நாடு என்றாலும் சரி பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் சதா எவரெடியாக இருக்க வேண்டும் என்றே விரும்புகின்றார். நல்ல மாணவர்களாக இருக்கக் கூடியவர்கள், பரிட்சை சீக்கிரம் வரட்டும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள். இம்மாதிரியே ஒவ்வொரு குழந்தையும் நாளையே எதுவும் கூட நடக்கலாம் ஆனாலும் தான் எவரெடியாக இருக்க வேண்டும். அனைத்து பாடங்களிலும் அதாவது நான்கு பாடங்களிலும் எவரெடி நேரம் வந்தது பாஸ் வித் ஆனர் ஆனோம் (மதிப்புடன் தேர்ச்சி பெறுதல்) என்று இருக்க வேண்டும். இதுவே அனைத்து குழந்தைகள் மீதும் பாப்தாதாவினுடைய சுப ஆசை ஆகும் இரட்டை வெளி நாட்டினருக்கு பாபா எப்பொழுதுமே -இரட்டை பட்டம் தருகிறார். ஆக மிக நன்றாக இரட்டை வாய்ப்பை எடுத்துக் கொள்பவர்கள். நல்லது.

உலக மத மாநாடு ஆஸ்திரேலியாவில் நடைபெறு உள்ளது. அதில் தாதி ஜான்கிஜி அவர்கள செல்கிறார்: நல்லது. அவர்களுக்கும் சமயத்தின் அறிமுகம் மற்றும் பாபாவின் அறிமுகம் இரண்டையும் சேர்ந்தே தாருங்கள். எங்களது பாபா வந்தார் ஆனால் எங்களுக்குத் தெரியவே இல்லையேல் என்று புகார் கூறி விடக்கூடாது. இம்மாதிரி செய்திகளை கூறுவதில் மிகவும் வல்லவர் நீங்கள் சரி என்று பாபா சொல்லி விடுவார் தான்! ஆனால் அச்சேவையை செய்யக் கூடியவரும் தகுதியானவராகள் இருந்தால் தானே சரி என்பார். நல்லது நீங்கள் சேவைக்காக செல்கிறீர்கள் நல்லது பாப்தாதா கூடவே இருப்பார். துணையாகவும் இருப்பார். துணைவனாகவும் இருப்பார். நல்லது.

முதன் முறையாக வந்திருப்பவர் கை உயர்த்துங்கள்: நல்லது நீங்கள் பாப்தாதாவிற்கு முன்னர். வரும் இந்த நாட்களுக்காக வாழ்த்துக்கள். வாழ்த்துக்கள். பாபாவுடைய பார்வை குழந்தைகள் மீது விழுந்தது. மேலும் குழந்தைகளினுடைய பார்வை பாபாவிடம் ஏற்பட்டது. அதற்கு நல் வாழ்த்துக்கள் நல்லது. கேக் அல்ல, ஆனால் குஷியின் கேக் சாப்பிடுங்கள். நல்லது தாமதமாக வந்திருக்கிறீர்கள். இருப்பினும் மிக வேகமாக சென்று முதல் வரிசையில் வர முடியும். எனவே பாப்தாதாவிடமிருந்து வாழ்த்துக்கள். மேலும் உங்களுடைய சக சகோதர, சகோதரிகளிடமிருந்தும் வாழ்த்துக்கள். வாழ்த்துக்கள். தாமதமாக வந்தவர் கூட வேகமாக சென்று முன் வரிசையில் வர முடியும் என்ற முன் உதாரணமாக அது இருக்கும். நல்லது.

நாலாபுறங்களிலுள்ள பாப்தாதாவின் ஆசைகளை பூர்த்தி செய்யக் கூடிய ஆசைகளின் தீடங்களாகியும் ஏன்? என்ன? என்ற மொழியிலிருந்து அப்பாற்பட்டிருக்கக்கூடிய ஒரே ரசனையில் மூழ்கி இருக்கும். சதா ஒரே ஒரு பாபா வேறு எவருமில்லை, பாபாவிடம் மட்டுமே வாழ்க்கையின் மூன்று முக்கியமான உறவுகள் தந்தை, ஆசிரியர் மற்றும் சத்குரு ஆகியவற்றை அனுபவிக்கக் கூடிய, பாபாவிடமிருந்து ஆஸ்தி, டீச்சரிடமிருந்து படிப்பு, மற்றும் சத்குருவிடமிருந்து வரதானங்களின் ஆஸ்தியை பெறக் கூடிய, பல கோடி மடங்கு பாக்கியமான ஒவ்வொரு குழந்தைக்கும் பாப்தாதாவின் அன்பு நினைவுகளும், நமஸ்காரமும் உரித்தாகுக!

தாதிகளிடம்: அனைவருக்கும் உதவியும் நீங்கள் அனைவரும் செய்தீர்கள் மிக நன்றாக செய்துள்ளீர்கள். யாரும் உட்கார்ந்து எப்படிச் செய்வது என்று யோசிக்கவே தேவையில்லை. செய்தே ஆக வேண்டும் என்றிருந்தது. ஒருவர் மற்றவரிடம் செய்த உதவியின் காரணமாக நிகழ்ச்சிகள் நன்றாகவே நடந்தேறின. செய்தி நன்கு பரவிற்று இன்னும் முன்னேறிச் செல்லுங்கள். ஏனென்றால் ஆஸ்தியை (சக்தியையும், அருளாசிகளையும்) பெற வேண்டும் என்று தானே தலைப்பு இருந்தது. ஆக யோக நிகழ்ச்சிகள் மூலமாக அனுபவம் செய்தனர்.

சந்தோஷ் சகோதரி (சயான், மும்பை): நினைவு கூறினார் அவருக்கு நினைவை கூறுங்கள். மிகவும் அன்பு கலந்த நினைவுகளை பெற்று கொள்வீராக!

தாதி நிர்மல் சாந்தாஜி: தைரியமாக இருப்பதால் பாபாவினுடைய உதவி கிடைத்து கொண்டே இருக்கிறது. நல்லது. கர்ம போகத்தைக் கூட கர்ம யோகமாக மாற்ட்டீர்கள் மிகவும் நன்று.

ரமேஷ் பாய், உஷா மற்றும் அணிலா சகோதரி: மூவரது உடல் நலமும் நன்றாக இருக்கிறதா? இங்கு அனைவரது சக்தியும் கிடைக்கிறது. வாயு மண்டலத்தின் உதவி கிடைக்கிறது. நல்லது! இங்கு நன்றாக இருந்தால் அது நல்லதே! எதுவரை இருக்க முடியுமோ அதுவரை இங்கேயே இருங்கள். நீங்கள் (ரமேஷ்) உங்கள் வேலையை செய்யுங்கள். அவர் (உஷா) அவரது வேலையை செய்யட்டும். இங்கிருந்துக் கொண்டே சென்டருக்கு போன் செய்து குசலம் விசாரித்துக் கொள்ளுங்கள். இவரது வேலை வேறு, உங்களது வேலை வேறு. இவருக்கு ஐம்பது வருடம் விழா கொண்டாடுங்கள். ஐம்பது வருடமாய் தடைகளைக் கடந்து நின்றார். முன்னேறிக் கொண்டே இருந்தார். பின்னால் தங்கி விடவில்லை. அதற்காக நல் வாழ்த்துக்கள். ஒருவர் மற்றவருக்கு உதவி கரமாக இருந்ததோடு சேவையிலும் உதவியாளராய் இருந்தார். இவரும் மகிழ்ச்சியாக இருக்கிறார். பாப்தாதாவிற்கு சாந்தா மாதாவின் நினைவும் இருக்கிறது. அஸ்திவாரமாக இருந்தார். ரகசியமான ரத்தினமாகவும் விளங்கினார்.

பிரிஜ் மோகன் பாய்: நிகழ்ச்சிகளை செய்து கொண்டே இருங்கள், இது முடிந்து போயிற்று அவ்வளவுதான் அப்படியில்லை. தலைப்புகளை சிறிது மாற்றி நிகழ்ச்சிகளை நடத்தி வரலாம்.

முக்கியஸ்தர்கள் பாப்தாதாவை சந்திக்கின்றனர்: யார் தைரியம் வைக்கின்றார்களோ அவர்களை 100-மடங்கு உதவியை பெறுகின்றனர். மேலும் கிடைத்துக் கொண்டே இருக்கும். அந்த உலகீய கடமையையும் செய்யுங்கள். எதுவரை இருக்கிறீர்களோ அதுவரை கடமையை செய்யுங்கள் ஆனால் இரட்டை வேலை, ஒரு வேலை அல்ல. சக்திகளை நிரப்பிக் கொண்டு தொடர்பை முழுவதுமாக வையுங்கள். யாரோடு தொடர்பு வைக்கிறீர்களோ அவ்வளவு உறவு உறுதியாகிக் கொண்டே செல்லும். நேரம் கிடைக்கவில்லை என்றால் டெலிபோன் மூலமாவது உங்கள் வருகையை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். அப்பொழுது நல்ல உறுதியான நம்பர்-1 மாணவர்களாக ஆகி விடுவீர்கள்.

எந்த ஆத்மா சென்றதோ அதுவும் தொடர்பிலேயே சென்றது. குழந்தைகளை ஏதேனும் காரணம் காட்டி சம்பந்தத்தில் கொண்டு வாருங்கள். தினசரி இல்லாவிட்டாலும் கூட விழா நிகழ்ச்சிகளுக்கு அழைத்து வாருங்கள். அவர்களுக்கு சேவை செய்யுங்கள். அவர்களும் நன்றாகவே இருப்பார்கள். இந்த தொடர்பால் துணையும் கிட்டும் எதிர்காலமும் கிடைக்கும். தொடர்பை துண்டித்து விட வேண்டாம். உறுதி தானே! பாப்தாதா இப்பொழுது கூட சக்தியை தந்து கொண்டிருக்கிறார். முன்னேறவும் செய்விப்பார். எந்த கவலையும் வேண்டாம். கவலை இல்லாமல் சேவை செய்யுங்கள். பாப்தாதா கூடவே இருக்கிறார்.

✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳

## 15.12.2009 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பரிவாரத்துடன் அன்பாக இருப்பதற்கு ஞானம் நிறைந்தவராக மாறி தந்தைக்கு சமமாக பார்வையாளன் என்ற நிலையில் இருக்கவும்: பாபா, சுயம், நாடகம் மற்றும் பரிவாரம் இந்த நான்கிலும் நிச்சயபுத்தி உடையவராகி வெற்றியாளர் ஆக வேண்டும்!

இன்று சக்திசாலியான தந்தை தனது சக்திசாலி குழந்தைகளை பார்த்துக் கொண்டிருக்கிறார். ஏனென்றால் ஒவ்வொரு குழந்தையும் சினேகத்தோடு தந்தைக்குச் சமமாக மாறுவதற்கான புருஷார்த்தத்தை மிகுந்த ஈடுபாட்டோடு செய்து கொண்டிருக்கின்றனர். பாப்தாதா குழந்தைகளைப் பார்த்து குஷி அடைகிறார் மேலும் உள்ளத்தில் ஆஹா குழந்தைகளே ஆஹா! என்று குழந்தைகளைப் பற்றி பாடல் பாடிக் கொண்டிருக்கிறார். ஏனென்றால் குழந்தைகள் தந்தையின் தலை கிரீடமாக இருக்கின்றனர். பாருங்கள், குழந்தைகளுக்கு பூஜை இரட்டை ரூபத்தில் நடக்கிறது. தந்தைக்கு பூஜை ஒரு ரூபத்தில் நடக்கிறது. அதனால் குழந்தைகள் தந்தை மூலமாக தந்தையையும் விட முன்னே சென்று விடுகின்றனர் அதனால் பாபா குழந்தை களுடைய புருஷார்த்தத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார். வரிசைக்கிரமம் இருக்கிறது ஆனால் புருஷார்த்தத்தின் லட்சியத்தை அதிகப்படுத்திக் கொண்டே இருக்கிறார்கள். இன்று அமிர்த வேளையில் நாலாபுறமும் உள்ள குழந்தைகளுக்குள் ஞானத்தின் அஸ்திவாரமான ஒரு விஷயத்தைப் பார்த்தார். நிச்சயம் தான் அஸ்திவாரம். நிச்சயபுத்தி விஜயந்தி என்று கூறப்படுகிறது. உங்கள் அனைவருடைய

நிச்சயத்தைப் பார்த்தேன். அனைவருக்கும் வரிசைக்கிரமமாக தந்தை மீது நிச்சயம் இருக்கத்தான் செய்கிறது, அதற்கு அடையாளமாக அனைவரும் தந்தையை அறிந்து கொண்டு தந்தையுடையவராக மாறியுள்ளீர்கள் மேலும் தந்தையை சந்திப்பதற்காக இங்கும் வந்துள்ளீர்கள். தந்தை மீது ஒவ்வொரு குழந்தைக்கும் துண்டிக்கப்படாத நிச்சயம் இருக்கிறது ஆனால் தந்தையின் கூடவே வேறு ஒரு நிச்சயத்தையும் உறுதி செய்ய வேண்டும். அது தன் மீது நிச்சயம். அதன் கூடவே நாடகத்தின் மீது நிச்சயம் மற்றும் பரிவாரத்தின் மீது நிச்சயம். இந்த நான்கு விதமான நிச்சயத்திலும் உறுதியாக இருப்பது என்றால் நிச்சய புத்தி விஜயந்தி ஆவதாகும். இந்த நான்கு நிச்சயத்திலும் உறுதியாக இருக்கின்றேனா? என்று சோதனை செய்யுங்கள். தந்தை பற்றி கூறும்பொழுது அனைவரும். பாபா என்னுடையவர் மற்றும் நான் பாபாவுடையவன் என்று கூறுகின்றனர். தந்தையை என்னுடையவர் என்று கூறி முழுமையாக தந்தை மீது அதிகாரத்தை அடைந்து விட்டனர். சதா தந்தையின் மூலமாக அதிகாரியாக மாறி அனைத்துப் பொக்கிஷங்களிலும் அதிகாரி ஆகி விட்டனர். இதன் கூடவே தன் மீதும் நிச்சயம் அவசியமாக இருக்கிறது, ஏன்? தன்மீது நிச்சயம் இல்லையென்றால் மனமுடைந்து விடுகின்றனர். நான் பாபா மூலம் சுவமானத்தை அடைந்தவன், சுயராஜ்ய அதிகாரி என்பதுதான் தன் மீது நிச்சயம் வைப்பது, கயம் தந்தை எனக்கு எத்தனை சுவமானங்களை வழங்கியுள்ளார். ஒவ்வொரு சுவமானத்தையும் நினைவில் கொண்டு வந்தால் எவ்வளவு போதை ஏறுகிறது. இன்றைய காலத்தில் எவருக்கேனும் ஏதாவது ஒரு டைட்டில் (பட்டம்) கிடைத்தது என்றால் அதை தனது பாக்கியமாக கருது கிறார்கள் ஆனால் குழந்தைகளாகிய உங்களுக்கு ஒவ்வொரு சுவமானமும் யார் வழங்கியுள்ளார்! சுயம் பாப்தாதா ஒவ்வொரு குழந்தையை யும் சுவமானதாரியாக மாற்றியுள்ளார். ஒவ்வொரு கவமானத்தை நினைவு செய்து குஷியில் (மகிழ்ச்சியில்) பறக்கின்றீர்கள். அதனால் நான் பாபா மூலம் சுயராஜ்ய அதிகாரி, கவமான் அதிகாரி, கோடியில் ஒரு ஆத்மா என்று தன் மீதும் அந்தளவிற்கு சதா நிச்சயத்தின் போதை இருக்கட்டும். எப்படி பாபா மீது நிச்சயம் இருக்கிறதோ அதே போல் தன் மீதும் நிச்சயம் அவசியமாகத் தேவை! ஏனென்றால் என் மீது நிக்சயம் இருந்தது என்றால், எங்கு நிச்சயம் இருக்கிறதோ அங்கு ஒவ்வொரு செயலிலும் நிச்சயபுத்தி அதாவது சுவமானதாரி வெற்றியடைகிறார். நிச்சயத்தின் அர்த்தமே

வெற்றிதான். நமக்கு மீது நிச்சயம் இருக்கிறது, அது மிக நல்லது ஆனால் கூடவே நான் யார் என்று கயத்தின் மீது பெருமை அவசியம் தேவை. ஒவ்வொரு கவமானத்தை நினைவு செய்தால் நிச்சயம். மற்றும் பெருமை உங்களுடைய நடவடிக்கை மற்றும் முகத்தில் தென்படும். தென்படுகிறது. மற்றும் தென்பட்டுக் கொண்டே இருக்கும். கூடவே மூன்றாவது விஷயம் நாடகத்தின் மீது நிச்சயம் மிகவும் அவசியம் ஏனென்றால் நாடகத்தில் பிரச்சனைகளும் வருகிறது மேலும் வெற்றியும் கிடைக்கிறது. நாடகத்தின் மீது உறுதியாக நிச்சயம் இருந்தால், நாடகத்தின் நிச்சயத்தில் நிச்சயபுத்தி உடையவர்கள் பிரச்சனைகளை தீர்வு சொரூபமாக மாற்றி விடுகின்றனர். ஏனென்றால் நிச்சயமென்றாலே வெற்றி. எதன் மீது வெற்றியாளர் ஆகின்றனர்? மாற்றம் செய்வது, ஒரு நொடியில் பிரச்சனை மாற்றம் அடைந்து தீர்வு ரூபமாக ஆகி விடுகிறது. குழப்பத்தில் வரமாட்டார்கள், ஆடாமல் அசையாமல் இருப்பார்கள் ஏனென்றால் நாடகத்தின் ஞானத்தினால் ஆடாத அசையாதவராக ஆகி விடுகின்றனர். நான் தான் சென்ற கல்பத்திலும் தீர்வு சொரூபமாக அதாவது வெற்றி ஆத்மாவாக மாறியிருந்தேன். மாறியுள்ளேன் மேலும் கல்பத்திற்கு பின்னரும் நான் தான் மாறுவேன் என்ற நிச்சயம் இருக்கும். ஆக இந்த போதையை நாடகத்தின் மீதான நிச்சயத்தை உறுதி செய்ய வைக்கிறது. பெருமை இருக்கிறது. போதை இருக்கிறது, நான் தான் இருந்தேன். நானே தான் இருக்கின்றேன் மற்றும் நானே தான் மாறுவேன். அதனால் இந்த புருஷார்த்தி (முயற்சி) வாழ்வில் நாடகத்தின் மீது நிச்சயமும் அவசியம் மேலும் கூடவே நான்காவது பரிவாரத்தின் (குடும்பம்) மீது நிச்சயம் ஏனென்றால் தந்தை வந்த உடனேயே பரிவாரத்தை படைத்து விட்டார். எப்படி பாபா மீது நிச்சயம் இருக்கிறதோ அதே போல பரிவாரத்தின் மீதும் நிச்சயம் அவசியம் தேவை. ஏனொன்றால். பரிவாரம் யாருடையது? மேலும் இவ்வளவு பெரிய பரிவாரம் வேறு யாருக்காவது இருக்க முடியுமா! அதனால் பரிவாரத்தின் மீதும் நிச்சயம் மிக அவசியம் ஏனென்றால் இவ்வளவு பெரிய பரிவாரம் உலகத்தில் யாருக்கு உள்ளது? உலகில் சோதனை செய்து பாருங்கள் உங்களைப் போல் பெரிய பரிவாரம் யாருக்காவது இருக்கிறதா? பரிவாரம் என்ற முறை எந்த தெய்வீகத் தந்தையிடமும் (தர்மத் தந்தை) இல்லை. அங்கு சீடர்கள் இருக்கிறார்கள். இங்கு குடும்பம் இருக்கிறது. பரிவாரத்தின் கூடவே சேவையில், சம்பந்தத்தில் இருக்கிறீர்கள். எனக்கு பாபாவிடம்

தான் தொடர்பு, பரிவாரத்திடம் இல்லை என்றால் என்ன ஆயிற்று என்று இருக்கக் கூடாது. பரிவாரத்தின் நிச்சயம் 21-பிறவிகளுக்கு வருகிறது. அறிந்துள்ளீர்கள் தானே! பரிவாரத்துடன் சம்பந்தத்தில் வரும்பொழுது தான் நான் இவ்வளவு பெரிய பரிவாரத்தில் அனைவருடன் நிச்சயபுத்தியுடன் நடந்து கொண்டு இருக்கின்றேனா என்று தெரிய வரும். பரிவாரத்தோடு செல்வதற்காக, பரிவாரத்தில் ஒவ்வொருவருடைய சமஸ்காரம் விதவிதமானதாக இருக்கின்றது மற்றும் இருக்கும் என்ற கவனம் வைக்க வேண்டும். உங்களுடைய நினைவுச் சின்னம் மாலை ஆகும். மாலையில் முதல் நம்பர் எங்கே மற்றும் 108-ஆம் நம்பர் எங்கே. ஏனென்றால் பரிவாரத்தில் வித விதமான சமஸ்காரம் இருக்கிறது அதனால் இவ்வளவு பெரிய பரிவாரத்தில் சமஸ்காரங்களை புரிந்து கொண்டு ஒரு பரிவாரம், ஒரு தந்தை. ஒரு ராஜ்யம் என்று ஒன்றாக ஆகி செல்ல வேண்டும். பரிவாரம் எவ்வளவு பெரியதோ அதே போல ஒருவர் மற்றவர் மீது பெரிய உள்ளம் வைக்க வேண்டும், ஒவ்வொருவர் மீதும் சுப் பாவனை, சுப ஆசையின் நிலையில் நிலைத்திருந்து நடக்க வேண்டும் ஏனென்றால் பரிவாரத்திற்கு இடையில் தான் சமஸ்கார சுபாவம் வருகிறது ஆனால் சிலர் புரிந்து கொள்கின்றனர் பரிவாரத்துடன் என்ன இருக்கிறது, பாபாவிடம் தான் ஆனால் இங்கு தர்மம் மற்றும் ராஜ்யம் இரண்டினுடைய படைப்பு நடக்கிறது, வெறும் தர்மம் மட்டும் அல்ல, பிற அனைத்து தர்மத்தந்தைகள் வந்தார்கள் அவர்களுக்கு வெறும் தர்மம் மட்டும் தான், ராஜ்யம் கிடையாது, இங்கு நீங்கள் அனைவரும் ராஜ்யமும் செய்ய வேண்டும். ஆகவே ராஜ்யத்தில் பரிவாரம் தேவையாக இருக்கிறது. மேலும் 21-பிறவிகளுக்கு வித விதமான ரூபத்தில் பரிவாரத்துடன் தான் இருக்க வேண்டும், பரிவாரத்தை விட்டுப் பிரிந்து எங்கும் செல்ல முடியாது. அதனால் சோதனை செய்யுங்கள், பாபாவிற்குத் தெரியும், எனக்குத் தெரியும் தந்தையுடன் தான் வேலை இருக்கிறது என்று புரிந்து கொள்ளக் கூடாது ஆனால் இந்த நான்கு நிச்சயத்திலும் ஒரு நிச்சயம் குறைவாக இருந்தாலும் குழப்பத்தில் வந்து விடுவீர்கள். தந்தை சகாஷ் (சக்தி) வழங்குபவராக இருக்கிறார் ஆனால் சேவையில் துணைவர்கள் யார்? சாகாரத்தில் பரிவாரம் தான் துணையாக இருக்கிறது. தந்தை பார்த்தார், மூன்று நிச்சயத்தில் அதிக பட்சம் சரியாக இருக்கிறார்கள் ஆனால் பரிவாரத்துடன் துணையை சரியாக வைத்துக் கொள்வது,

சமஸ்காரங்கள் ஒத்துப் போக வைப்பது, ஒவ்வொருவரையும் நன்மையினுடைய பாவனையில் பார்ப்பது மற்றும் அவ்வாறே நடந்து கொள்வது, இதில் பல குழந்தைகள் யதா சக்தியாக (அவரவர் சக்திக்கேற்ப) இருக்கின்றனர். தந்தைப் பார்த்தார் யார் பரிவாரத்தின் நிச்சயத்தில் ஞானம் நிறைந்தவராக மாறி சதா தந்தைக்கு சமமாக பார்வையாளன் என்ற நிலையில் இருந்து துணையில் வருகிறார்களோ, இருக்கிறார்களோ அவர்கள் முதல் நம்பர் அல்லது முதல் நம்பர் டிவிஷனில் (பிரிவு) வருகிறார்கள். பாவ-சுபாவம் பரிவாரத்தில் வருகிறது. சிறு சிறு தவறுகளும் நடக்கிறது, தடை வருகிறது இவை அனைத்தும் பரிவாரத்தின் சம்பந்தத்தில் தான் வருகிறது. அதனால் அனைத்தையும் விட அவசியமானது இந்த பரிவாரத்தின் சம்பந்தத்தில் தேர்ச்சி பெறுவது தான். பரிவாரத்தோடு நடப்பது சம்பந்தங்களை பராமரிப்பதில் ஏதேனும் குறையிருந்தால் அந்தத் தடையானது சிறியதாக இருந்தாலும் அல்லது பெரியதாக இருந்தாலும் தொல்லைப் படுத்துகிறது. இது ஏன். இது எப்படி, என்பது பரிவாரத்தின் தொடர்பில் தான் வருகிறது. அதனால் ஏன் என்பதற்கு பதிலாக. ஏன் என்று கூறாதீர்கள் ஆனால் நாம் ஒன்றாக சேர்ந்து செல்ல வேண்டும், பரிவாரத்தின் அன்பை வளர்க்க வேண்டும் ஏனென்றால் இது தந்தையின் பரிவாரம், பகவானின் பரிவாரம். சாதாரண பரிவாரம் அல்ல. ஆஹா பாபா, ஆஹா நாடகம், ஆஹா நான் மற்றும் ஆஹா பரிவாரம்! என்ற போதை இருக்க வேண்டும். சரியா? சோதனை செய்கிறீர்களா? நான்கிலும் தேர்ச்சிப் பெற்றுள்ளீர்களா? நான்கிலும் உள்ளதா? ஒன்றில் கூட குறைவாக இருக்கக் கூடாது. சோதனை செய்யுங்கள். இப்பொழுதே சோதனை செய்யுங்கள் ஏனென்றால் வெற்றியாளர் ஆவதற்கு இதுதான் சாதனம். பரிவாரத்திற்கு இடையில் தான் சமஸ்காரம் வருகிறது மேலும் அந்த சமஸ்காரங்களை இணைக்க வேண்டும், தன்னையும் மாற்றி கொள்ள வேண்டும் மற்றும் பரிவாரத்தையும் அந்தளவிற்கு உயர்ந்த பார்வையோடு பார்க்க வேண்டும். பாப்தாதா முன்னரே கூறியுள்ளார். அதாவது பாப்தாதா கடைசி குழந்தையையும் மிக பாக்கியவான் என புரிந்துள்ளார், ஏன்? பகவானை அறிந்து கொள்வது, சாதாரண ரூபத்தில் வந்துள்ள தந்தையை அறிந்து கொள்வது, இவ்வளவு பெரிய பெரிய மகாத்மாக்களும் அறிந்து கொள்ள இயலவில்லை ஆனால் பாப்தாதாவின் கடைசி குழந்தை கூட என்னுடைய பாபா என்று கூறுகிறார். உள்ளப் பூர்வமாக என்னுடைய

பாபா என்று கூறுகின்றனர் ஆகவே பாப்தாதா கடைசி குழந்தையினுடைய விசேஷத் தன்மையைப் பார்த்து எப்படி குழந்தைகளுக்கு செல்லமான அன்பு, அன்பு நினைவுகள் வழங்குகிறாரோ அதே போல கடைசியில் வருபவருக்கும் வழங்குகிறார் ஆகவே சோதனை செய்யுங்கள், மூன்றில் சரியாக இருக்கிறீர்களா அல்லது நான்கிலும் சரியாக இருக்கிறீர்களா அல்லது இரண்டில் சரியாக இருக்கிறீர்களா அல்லது ஒன்றில் சரியாக இருக்கிறீர்களா? சோதனை செய்தீர்களா? செய்தீர்களா சோதனை? நான் நான்கிலுமே, நான்கு நிச்சயத்திலும் தந்தை, நீங்கள், நாடகம் மற்றும் பரிவாரம், நான்கு நிச்சயத்திலும் சரியாக இருக்கிறேன் என்பவர்கள் கையை உயர்த்துங்கள். சரியாக இருக்கிறீர் களா? நல்லது சரிதான். சோதனைத் தாள் வழங்கலாமா? கை உயர்த்துங்கள். நல்லது பரிவாரத்தில் தேர்ச்சிப் பெற்றுள்ளீர்களா? பரிவாரத்தின் சம்பந்தத்தில் வர வேண்டும் ஏனென்றால் பரிவாரத்தை விட்டு எங்கும் போகப் போவது கிடையாது, இருந்துதான் ஆக வேண்டும், சம்பந்தத்தை சரியாக வைத்துக் கொள்ள வேண்டும். இதில் தேர்ச்சிப் பெற்றுள்ளீர்களா? எப்பொழுதாவது இது நடக்கவில்லை என்றால் நன்றாக இருக்கும், இதை ஏன் செய்கிறார்கள், இது ஏன் நடக்கிறது என்ற எண்ணங்கள் வருகிறது. முற்றிலும் பரிவாரத்தின் போதை, நான்கிலுமே நிச்சயம் உடையவர்கள் ஒருபோதும் இப்படி அப்படி என்று எண்ணத்தில் கூட கொண்டு வரமாட்டார்கள். இது ஏன் நடக்கிறது என்பது எண்ணத்தில் வந்தாலும் அந்த ஏன் மற்றும் என்ன என்பது என்னை அசைக்கக் கூடாது, மனோநிலையை மாற்றக் கூடாது. இதைத்தான் நான்கிலுமே தேர்ச்சிப் பெறுவது என்று கூறுகிறோம். கை என்னவோ உயர்த்தினீர்கள், பாப்தாதாவை குஷிப்படுத்தினீர்கள் ஆனால் பாப்தாதாவிற்கு இந்த பரிவாரத்தின் விஷயத்தில் அவ்வப்பொழுது விஷயங்களை கேட்க வேண்டி இருக்கிறது. பார்க்க வேண்டி இருக்கிறது. முற்றிலும் பரந்த உள்ளம் உடைய வராக இருந்து, அனைவரையும் சுப் பாவனை, சுப ஆசையினால் சரி செய்ய வேண்டும் ஏனென்றால் பரிவாரமே ஒன்றுதான். ஒரு வழிப்படி நடக்க வேண்டும் மற்றும் நடக்க வைக்க வேண்டும். நடந்தால் மட்டும் போதாது, நடக்க வைக்கவும் வேண்டும் அதனால் பாப்தாதா இந்த விஷயத்தின் மீது கவனம் வழங்குகிறார் அதாவது யாரெல்லாம் குழப்பத்தில் தேர்ச்சி பெறுகிறார்களோ, வீணானது இருப்பதில்லையோ அவர்கள் பிறரையும்

அவ்வாறு மாற்ற வேண்டும். இப்பொழுது அவரவர் சென்டரில் எவ்வளவு பேர் இருக்கிறீர்கள், அதிகத்திலும் அதிகமாக 25-50, இவ்வளவு பேர் இருப்பது கிடையாது ஆனால் பெரிய இடமாக இருக்கும் பட்சத்தில் அதிலும் 50-60 பேர், நல்லது அதிகத்திலும் அதிகமாக 100-பேர் என எடுத்துக் கொள்ளலாம். அவ்வளவு பேர் இல்லை, பாப்தாதா அனைத்து சென்டர்களை சேர்ந்த குழந்தை களை கடைசி குழந்தையையும் தன்னுடைய அன்பிற்குரியவர் எனக் கூறி வழி நடத்தினார் மேலும் அன்பின் அடையாளமாக தினமும் பாப்தாதா என்னவென்று அன்பு நினைவுகள் வழங்குகிறார். இனிமையிலும் இனிமையான என்கிறார், கசப்பானவர்களும் (புளிப்பானவர்களும்) இருக்கின்றனர் எனத் தெரியும் ஆனால் இனிப்பான கசப்பான எனக் கூறி அன்பு நினைவுகள் வழங்கியுள்ளாரா? அவர்களையும் செல்லமான என்று கூறினார், என்னுடைய குழந்தை என்று வெறுமனே கூறவில்லை ஆனால் என்னுடையவர்கள் என்ற உணர்வோடு வழி நடத்தினார் ஏனென்றால், நாடகத்தில், மாலையில் அனைவரும் ஒரே நம்பர் இல்லை. இதுதான் ரிசல்ட் சமஸ்காரங்கள் வித விதமாக இருக்கின்றது. இருக்க வேண்டும். இல்லையென்றால் எல்லோரும் ராஜா ஆகி விடுவார்கள், பிரஜையாக யார் மாறுவது? யார் மீது ராஜ்யம் செய்வீர்கள்? நல்ல பிரஜையும் வேண்டும், இராயல் பிரஜை வேண்டும், ராஜ்யம் அல்லவா, இவ்வாறு ஒவ்வொருவரும் தன்னை சோதனை செய்ய வேண்டும், பரிவாரத்தில் எந்த விசயத்தினாலும் சமஸ்காரம் மோசமானதாக இருக்கலாம் ஆனால் என்னுடைய சமஸ்காரம் என்ன? மோசமானதை பார்த்து என்னுடைய சமஸ்காரமும் மோசமாகி விட்டால் நானும் தானே மோசமாகி விட்டேன். மோசமானது நல்லதையும் மாற்றி விடுகிறது.

தந்தை ஸ்தாபனையின் சமயத்தில் 350-400 பேரை ஒன்றாக கவனித்துக் கொண்டார். இவ்வளவு நபர்கள் கொண்ட பரிவாரம் இப்பொழுது இல்லை. வித விதமான டியூட்டி இருக்கலாம். அது டியூட்டி (வேலை) மேலும் பரிவாரத்தில் டியூட்டி. சாதாரணமான குடும்பம், சாதாரணமாக வேலை. சாதாரண ரீதியில் நாளை கழிப்பது இது அல்ல. விடுபட்ட மற்றும் அன்பான குடும்பம். இதில் டிஸ்டர்ப் (தொந்தரவு) அடைவது மற்றும் இவ்வாறு இவர் செய்ததால் தான் இது நடந்தது என்று சாக்குப்போக்கும் கூறுகின்றனர். இவர் இதை செய்ததால் இது நடந்தது, பாபாவிற்கு (பிரம்மா) முன் என்ன எதிர்ப்பு வரவில்லையா, சிலர்

கைவிட்டும் சென்றனர். அது எதிர்ப்பு இல்லையா. ஆனாலும் பாபா கூறினார். கைவிட்டு சென்றனர் ஆனாலும் டோலி அனுப்புங்கள், அவர்களை அழைப்பதற்கு முயற்சி செய்யுங்கள். சேவை செய்யுங்கள், நினைவு வழங்குங்கள். இவ்வாறு நான்கு நிச்சயத்திலும் தேர்ச்சி பெற வேண்டும். அல்லது மூன்று அல்லது இரண்டிலா? நம்பர்-1 ஆக வேண்டும். அழிவிற்கான ஏற்பாடுகள் நடந்து முடிந்து விட்டாலும் இதற்காக விநாசமும் காத்துக் கொண்டிருக்கிறது. இயற்கையும் பாபாவிடம் வருகிறது. இயற்கையும் இப்பொழுது சுமை மிக அதிகமாகி விட்டது என்று கூறுகிறது. இயற்கை சுமையிலிருந்து விடுபட விரும்புகிறது. மாயாவும் கூறுகிறது, எனது பார்ட் இப்பொழுது நிறைவு பெறுகிறது என நான் அறிந்துள்ளேன் ஆனால் பிராமண பரிவாரத்தில் சில குழந்தைகள் சிறு விசயத்திலும் எனது துணைவர்களாக மாறி விடுகின்றனர். என்னை அமர வைத்து விடுகின்றனர். அதனால், இந்த நான்கு நிச்சயம் சதவிகிதத்தில் இருப்பதால், உங்களது ராஜ்யத்தைக் கொண்டு வருவதில் சமயமும் காத்துக் கொண்டிருக்கிறது. மற்றபடி மாயை மற்றும் இயற்கை இரண்டுமே தயார் தான். இப்பொழுது கட்டளை இடலாமா? கூறுங்கள். குழந்தைகள் எவரெடியாக இல்லையென்றால் மாயா மற்றும் இயற்கைக்கு ஆர்டர் வழங்கலாமா? வழங்கலாமா? கை உயர்த்துங்கள். தயாராக இருக்கிறீர்களா? வெறுமனே கை உயர்த்தாதீர்கள். சோதனைத்தாள் வரும், சோதனைத்தாள் வரும். எவரெடியா?

இப்பொழுது பாப்தாதாவிற்கு ஒவ்வொரு குழந்தையும், எப்படி என்பதை மாற்றி இப்படி என்று கூற வேண்டும் என்பதுதான் ஆசை. எப்படி செய்வது, எப்படி நடக்கும் என்பதில்லை. இப்படி நடக்கும். என்ன செய்வது என்பதில்லை இப்படி செய்வோம். இந்த ஆசையை எப்பொழுது பூர்த்தி செய்வீர்கள்? எவ்வளவு சமயம் வேண்டும்? ஏனென்றால் அனைவரும் தயாராக வேண்டும். நீங்கள் தயார் என்றால், கை உயர்த்தினீர்களோ, அப்பொழுது உங்களுடைய வேலை என்ன? ஒருவர் மற்றவரை தனக்குச் சமமாக மாற்றுவது யாரெல்லாம் கை உயர்த்தினீர் களோ அவர்கள் தனக்கு சமமாக மாற்ற முடியுமா? பரிவாரத்தை தயார் செய்ய முடியுமா? இதில் கை உயர்த்துங்கள். செய்ய முடியுமா? நல்லது எவ்வளவு சமயம் வேண்டும்? எவ்வளவு சமயம் வேண்டும்? ஒரு வருடம். எவ்வளவு வேண்டும்? எவ்வளவு

சமயம் வேண்டும்? டீச்சர்ஸ் கூறுங்கள் எவ்வளவு சமயம் வேண்டும்? பாண்டவர்கள் கூறுங்கள். கை உயர்த்தினீர்கள், எவ்வளவு சமயம் வேண்டும். இது குடும்பம், குடும்பத்தில் ஒத்துழைப்பு தர வேண்டுமல்லவ பரிவாரத்திலிருந்து விடுபட மாட்டீர்கள், விட்டுச் செல்லப் போவது கிடையாது, இங்குதான் இருக்க வேண்டும் அதனால் பரிவாரத்தையும் தயார் செய்ய வேண்டும். வௌக்கத்திலும் நல்ல புத்தி இருந்தபொழுது, (இன்றைய காலத்தில் இல்லை) ஒருவர் மற்றவருக்கு உதவியாளராகி முன்னேற வைத்தனர். கிராமத்தையும் தனது குடும்பம் எனப் புரிந்திருந்தனர். மேலும் இங்கு இருப்பதோ அலௌகீக பரிவாரம். ஏனெனில் பிரச்சனைகள் மற்றும் என்ன மாயை வருகிறதோ அது குடும்பத்தின் விசயத்தில் வருகிறது, சம்பந்தத்தில் வருகிறது. சம்பந்தத்தின் தொடர்பாகத் தான் வீணான எண்ணங்கள் வருகிறது. கை உயர்த்தியவர்கள் கூறுவீர்களா? என்ன கூறுகிறார்கள்? யாராவது கூறுங்கள், மைக் வழங்குங்கள் (இந்த சீசனில் பூர்த்தி செய்வோம்) இவருடன் யார் துணை போகிறீர்களோ அவர்கள் கை உயர்த்துங்கள். இதை போட்டோ எடுங்கள். டீச்சர்ஸ், இந்த சீசனில் ஒருவர் மற்றவருக்கு சகயோகம் வழங்கி, ஒருவர் மற்றவரை முன்னேற்றி மேலும் பாபாவின் ஆசையை பூர்த்தி செய்வீர்கள், சரிதானே? இதில் கை உயர்த்துங்கள். கை உயர்த்தி குஷிப்படுத்தி விட்டீர்கள். நல்லது. ஒரே பலம் ஒரே நம்பிக்கை என்று தந்தை கூறுகிறார். இரண்டு விஷயங்களுமே இருக்கிறது எனும் பொழுது என்ன செய்ய முடியாது. பாபா எவ்வளவு குறைந்த சமயத்தில் ஸ்தாபனையின் பாகத்தை நடித்தார். இப்பொழுது அனைவரும் ஞானம் நிறைந்தவர் ஆகி விட்டீர்கள். டபுள் லைட்டாகவும் ஆகி விட்டீர்கள். இந்த பாடம் சிறிது கவனம் வழங்க வேண்டிய பாடம். குறைந்ததிலும் குறைந்தது ஒரு சென்டராவது நிர்விக்னம் (தடைகளற்ற) ஆக வேண்டும் என்று காரியம் கொடுக்கப்பட்டது, சென்டருக்குப் பின் ஜோன் (மண்டலம்) மாற வேண்டும். ஜோனை விட்டு விடுங்கள், ஒவ்வொரு ஊர், உதாரணமாக தில்லி, அஹமதாபாத், கல்கத்தா, ஏதெனும் ஒரு நகரம், உதாரணமாக ஒரு கல்கத்தா நிர்விக்னம் ஆகட்டும், கல்கத்தா, தில்லிணயச் சேர்ந்தவர்கள் அமர்ந்துள்ளீர்கள் மேலும் இந்த முறை (சேவை) கர்நாடகத்தினுடையது. கர்நாடகத்தின் அனைத்து டீச்சர்களும் அமர்ந்துள்ளார்கள். கர்நாடகத்தின் ஒவ்வொரு சென்டர் மற்றும் சென்டருடைய தொடர்பில் யார் இருக்கிறார்களோ அவர்களும்

ஒன்றாகினால் அந்த ஜோனிற்கு, நகரத்திற்கு பாப்தாதா பரிசு வழங்குவார். நல்ல பரிசு வழங்குவார். யாரேனும் நிமித்தமாக மாறி காண்பியுங்கள். முக்கிய சென்டர் மற்றும் அதனுடைய துணையில் இருக்கும் சென்டர். முழு பரிவாரம் மாறியே ஆக வேண்டும் ஆனால் இப்பொழுது வரை ரிசல்ட் இல்லை. மதுபனை சேர்ந்தவர்கள் கை உயர்த்தினீர்கள், நல்லது. என்ன செய்ய முடியாது ஆனால் செய்ய வேண்டியது இருக்கும். சரிதானே. பிடித்திருக்கிறதா? அனைவருக்கும் பிடித்திருக்கிறதா? ஆனால் பாப்தாதா இந்த சீசனுக்கு முந்தைய சீசனில் மூன்று-நான்கு முறை கூட்டார் ஆனால் யாருடைய ரிசல்ட்டும் இதுவரை வரவில்லை. இந்த விஷயம் கூட திடீரென நடக்கும் என்று புரிந்துள்ளீர்களா என்ன? ஒருவேளை திடீரென நடக்கலாம் ஆனால் பாப்தாதா கூறியுள்ளார் நீண்ட காலத்தினுடைய பயிற்சி வேண்டும் அப்பொழுதுதான் நீண்ட காலத்தின் அதிகாரத்தை அடைவீர்கள்.

இப்பொழுது என்ன செய்ய வேண்டும்? ஈடுபாடு என்ற நெருப்பை பற்ற வையுங்கள். செய்தே தீர வேண்டும். இதில் ஒரு விசயத்தில் அனைவரும் தேர்ச்சி பெற்றுள்ளீர்கள். பாப்தாதா மீது எங்களுக்கு இதயப்பூர்வமான அன்பு இருக்கிறது. 100-சதவிகிதம் இருக்கிறது. என்பவர்கள் கை உயர்த்துங்கள் 100-சதவிகிதம்? உயரமாக கை உயர்த்துங்கள். அன்பின் ரிட்டன் என்னவாக இருக்கிறது? அன்பின் ரிட்டன் சமமாக மாறுவது, சம்பன்னமாக மாறுவது, சம்பூர்ணமாக மாறுவது, அதனால் இப்பொழுது பாப்தாதா ஒரு டிரில் கூறுகிறார், அனைவரும் பாப்தாதா இருவர் மீதும் அன்பு உள்ளது என்று கூறுகிறீர்கள், கை தூக்கினீர்கள், வரிசைகிரமம் இருக்கத்தான் செய்கிறது ஆனால் கை உயர்த்தியதால் பாப்தாதா ஏற்றுக் கொள்கிறார். இருவர் மீதும் அன்பு இருக்கிறது அல்லவா. பிரம்மாபாபாவிடமும் மற்றும் சிவ பாபாவிடமும், இருவர் மீதும் அன்பு உள்ளது தானே. இருவர் மீதும் இருக்கிறதா? கை உயர்த்தினீர்கள். நல்லது இருவர் மீதும் இருக்கிறது. மிக நல்லது. நன்றி. நல்லது, இருவருக்கும் சமமாக மாற விரும்புகிறீர்கள் தானே. கையைத் தூக்க வேண்டாம், தலையை அசையுங்கள். நல்லது. இருவர் மீதும் அன்பு இருக்கிறது என்றால் சிவ பாபா நிராகாரி, சரியா மற்றும் பிரம்மாபாபா பரிஸ்தா. பரிஸ்தா தானே. அதனால் நாளையில் இருந்தல்ல, இன்றில் இருந்தே. இப்பொழுதிலிருந்தே முழு நாளிலும் இரண்டு தந்தை மீதும்

அன்பிருக்கிறது என்றால் சில சமயம் தன்னை நிராகார தந்தைக்கு சமமாக நிராகாரி நிலையில் பயிற்சி செய்யுங்கள், தந்தையை பின்பற்றுங்கள். மேலும் சில சமயங்களில் பரிஸ்தாவாக மாறி, சாகார ரூப பிராமணன் அல்ல, பிராமணனாக இருக்கத்தான் செய்கிறீர்கள். செயல் தாராளமாக செய்யுங்கள் ஆனால் செயல் செய்து கொண்டே பரிஸ்தா நிலையில் இருங்கள் அப்பொழுது செயலின் சுமையினுடைய தாக்கம் ஏற்படாது. பிரம்மாபாபா மீது அன்பு இருக்கிறது என்றால் பிரம்மாபாபா அனைத்து செயல்களையும் செய்தார். நிமித்தமாக மாறினார் ஆனால் பிரம்மாபாபா மீது எவ்வளவு சுமை இருந்தது. உங்கள் மீது இவ்வளவு சுமை கிடையாது. யாரேனும் இருக்கிறீர்களா. பிரம்மாபாபாவை விட யாருக்கேனும் அதிக சுமை இருக்கிறதா, பொறுப்பு இருக்கிறதா? அவர்கள் கையை உயர்த்துங்கள். யாரும் கையை உயர்த்தவில்லை. பிரம்மாபாபா இவ்வளவு பொறுப்புகளை பார்த்துக் கொண்டிருந்தாலும் காரியத்தில் எப்படி இருந்தார். செயலிலும் பரிஸ்தா ரூபத்தில் இருந்தார் இல்லையா. அதனால் நீங்களும் பிரம்மாபாபா மீது அன்பு இருக்கிறது என்றால் சில சமயம் பரிஸ்தா ரூபத்தில் (ஒளி உடலில்) இருங்கள். சில சமயம் நிராகார ஸ்தியில் (உடலற்ற நிலையில்) இருங்கள். இந்தப் பயிற்சியை, பிரம்மாபாபா என்று கூறி பிரம்மாபாபாவிற்கு சமமாக பரிஸ்தாவாக மாறி விடுங்கள் மற்றும் சிவ் நிராகார் பாபா என்று நினைவு செய்து நிராகாரி ஸ்தியில் நிலைத்து விடுங்கள். இது செய்ய முடியும் தானே? இது செய்ய முடியுமா? அல்லது கடினமா? யார் இடையிடையே செய்ய முடியுமோ, அவர்கள் அந்தப் பயிற்சியை, தொடந்து வந்து விடுமளவிற்கு இடையிடையே பயிற்சி செய்ய வேண்டும். உங்களுடைய செயலின் கணக்குக்குத் தக்கவாறு உங்களுடைய தினசரி நடவடிக்கைக்குத் தக்கவாறு உங்களது கணக்கை நிர்ணயம் செய்யுங்கள். குறைந்ததிலும் குறைந்தது முழு நாளில் 12-முறை பரிஸ்தாவாக மாறுங்கள், 12-முறை நிராகார நிலையில் நிலைத்து இருங்கள். இது செய்ய முடியுமா? கை உயர்த்துங்கள். செய்ய முடியுமா? கடினம் இல்லை தானே எளிது தானே. எளிதா? எளிதாக இருந்தால் கையை உயர்த்துங்கள். நல்லது செய்ய வேண்டும். இதை உறுதி செய்யுங்கள். பிறகு இந்த சீசனுக்குள் மாற்றத்தை கொண்டு வர வேண்டும். என்று என்ன லட்சியம் வைக்கின்றீர்களோ, அது முடியும். இந்த டிரில் 24-முறை செய்தீர்கள் என்றால் தொடர்சியாக வந்து விடும், சரிதானே, முடியுமா. கையை

உயர்த்துங்கள். முடியும். பிறகு பாப்தாதாவின் தரப்பில் இருந்து கோடி கோடி கோடி கோடி மடங்கு வாழ்த்துக்கள். வாழ்த்துக்கள் ஆனால் தளர்வாக விட்டு விடக் கூடாது. அனைவரும் நிச்சயம் செய்யுங்கள். நாம் இதில் நம்பர்-1 ஆக வேண்டும். வரிசைக்கிரமம் இருக்கக் கூடாது, நம்பர்-1. ஏனென்றால் பாப்தாதாவிடம் சமயம் அதிகமாக வருகிறது. சுமையை தாங்கிக் கொள்ள முடியவில்லை என்று இயற்கை கூச்சவிடுகிறது மாயாவும் விடைப் பெற்றுச் செல்ல விரும்புகிறது ஆனால் நான் என்ன செய்வது, பிராமணர்கள் ஏதாவது ஒரு செயல், சமஸ்கார வசப்பட்டு செய்து விடுகிறார்கள், மேலும் என்னை அழைத்து விடுகிறார்கள். அதனால் நான் செல்லத்தான் வேண்டி இருக்கிறது என்று கூறுகிறது. அப்பொழுது பாப்தாதா என்ன பதில் கூறுவது. அதனால், எப்படி சமயம் முன்னேறிக் கொண்டே இருக்கிறதோ இப்பொழுது நீங்களும் சேவையில் வித்தியாசத்தைப் பார்த்துக் கொண்டு இருக்கிறீர்கள் தானே. சேவையின் ரிட்டன் இப்பொழுது அனைவரும் விரும்புகிறார்கள். ஏதேனும் நடக்க வேண்டும். ஏதேனும் நடக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். பிரம்மா குமாரிகள் என்ன கூறிக் கொண்டு இருந்தார்களோ அது இப்பொழுது சரியாகத்தான் இருக்கிறது என்று கூறுகிறார்கள். முதலில் விநாகம், விநாசம் என்று கூறாதீர்கள் என்று கூறுவார்கள். இப்பொழுது எப்பொழுது நடக்கும், அந்த தேதியை சொல்லுங்கள் என்று கூறுகிறார்கள். இப்பொழுது கேட்க விரும்புகிறார்கள். முதலில் சாக்கு போக்கு கூறிக் கொண்டிருந்தார்கள், ஆனால் இப்பொழுது வித்தியாசம் ஏற்பட்டு விட்டது. நடைமுறையில் பார்த்துக் கொண்டு இருக்கிறீர்கள் தானே. அதனால் இப்பொழுது பாப்தாதாவிடம் என்ன உறுதிமொழி கொடுத்தீர்களோ அதை காப்பாற்றிக் கொண்டே இருங்கள். சரிதானே. பாப்தாதாவிடம் அனைத்து சமாச்சாரங்களுடைய ரிசல்ட் வந்தது, என்னென்ன நடந்ததோ நன்றாக நடந்தது மேலும் ரிசல்ட்டும் நன்றாக ஊக்கம் உற்சாகத்தோடு கிடைத்தது அதனால் இப்பொழுது லட்சியம் வையுங்கள் நடந்தே ஆக வேண்டும். செய்தே தீர வேண்டும். சமாப்தியை (முடிவு) அருகாமையில் கொண்டு வாருங்கள். நீங்கள் சிறிது ஆட்டம் கண்டாலும் சமாப்தி (முடிவு) தூரப் போய் விடுகிறது. நீங்கள் சமாப்தியை அருகாமையில் கொண்டு வர வேண்டும் ஏனென்றால் ராஜ்யம் செய்பவர்கள் தயாராகவில்லை என்றால் சமயம் என்ன செய்யும்? அதனால் இப்பொழுது அனைத்து சாக்கு போக்கு,

காரணம்- காரணம் என்ற சொல்லையே முடித்து விடுங்கள். நிவாரணத்தை முன்னால் கொண்டு வாருங்கள். ஒரு சிலர் தான் கை உயர்த்தினீர்கள். ஆனாலும் உங்கள் அனைவருக்கும் துக்கமானவர்களுக்கு செய்தியை கொடுத்து முக்தி வழங்க வேண்டும் என்று லட்சியம் இருக்கிறது அல்லவா. அவர்களுக்கு முக்தி வழங்காமல் நீங்கள் முக்தியில் செல்ல முடியாது. அதனால் அவர்களுக்கு முக்தி வழங்குங்கள். ஏனென்றால் பாபா வந்திருப்பதே முழு உலகத்திலுள்ள குழந்தைகளுக்கும் ஆஸ்தி வழங்ககுவதற்காகத் தான். உங்களுக்கு ஜீவன் முக்தியினுடைய ஆஸ்தி வழங்குகிறார் ஆனால் மற்ற அனைவரும் குழந்தைகள் தானே. அவர்களுக்கும் ஆஸ்தி வழங்க வேண்டும். தானே. அவர்களுக்கு ஆஸ்தி முக்தி, உங்களுக்கு ஆஸ்தி ஜீவன் முக்தி. எதுவரைக்கும் முக்தி வழங்கவில்லையோ அதுவரைக்கும் நீங்களும் செல்ல முடியாது. இதற்காக இந்த டிரில் செய்யுங்கள். 24-முறை. இரவு மற்றும் பகல் சேர்ந்து 24-மணி நேரம் உள்ளன மேலும் 24-முறை செய்ய வேண்டும். தூக்கத்தின் சமயத்தில் தாராளமாக தூங்குங்கள். பாப்தாதா தூங்க வேண்டாம் என்று கூறவில்லை. தூங்குங்கள் ஆனால் பகலில் அதிகரியுங்கள். ஏதேனும் விழா நடைபெறும் பொழுது முழு நாளும் காரியம் செய்கிறீர்கள், விழித்திருக்கிறீர்கள் தானே. நல்லது.

**சேவைக்கான வாய்ப்பு கர்நாடக ஜோனுக்குரியது:** நல்லது. முக்கால்வாசி வகுப்பு கர்நாடகாவைச் சேர்ந்தவர்களாக இருக்கிறீர்கள். நல்ல வாய்ப்பை எடுத்திருக்கிறீர்கள். பாப்தாதா கூட இந்த வாய்ப்பு அனைவரும் வருவதற்கான வாய்ப்பு ஆனதால் திருப்தி அடைகின்றார். எவ்வளவு சேவாதாரிகள் வந்தாலும் சேவையையும் செய்கிறார்கள் மற்றும் தன்னுடைய பாக்கியத்தையும் உருவாக்கிக் கொள்கிறார்கள். கர்நாடகம் என்பதே நாடகமாகிறது அல்லவா நாடகத்தில் தன் பங்கை ஏற்று நடிப்பதில் கர்நாடகம் நம்பர்-1 ஆகிறது அல்லவா! நீங்கள் எவ்வளவு பெரிய கர்நாட்டக் (நாடகம் நடிக்கிறீர்கள்) என்கிறீர்கள். எப்பொழுது நாடகம் சப்தம் சொல்கிறீர்களோ அப்போது எல்லைக்கு அப்பாற்பட்ட நாடகம் கூட நினைவுக்கு வருகிறது இல்லையா எனவே இந்த எல்லைக்கு அப்பாற்பட்ட நாடகத்தில் கூட நீங்கள் நம்பர்-1னில் வர வேண்டி உள்ளது. இது பக்கா தானே! வரவே வேண்டும். செய்யவே வேண்டும். எதைச் செய்ய வேண்டி இருந்தாலும் தயாராக

இருக்கிறீர்கள். தயார் தானே? எதைச் செய்ய வேண்டி இருந்தாலும் தயார். கைகளை உயர்த்துங்கள்! பாருங்கள் முக்கால்வாசி வகுப்பு செய்பவர்களாக இருக்கிறீர்கள்! நம்பர்-1 பார்ட் என்றால் தடையற்றவர்களாவது, தடைகள் அற்றவர் ஆக்குவது. தனக்கு மட்டும் தடையற்றவர் ஆவது அல்லாது. கூடவே இருப்பவர்களையும் அவ்வாறு ஆக்க வேண்டும். துணிவு இருக்கிறதா? கர்நாடகாவிற்கு துணிவு இருக்கிறது என்றால் கைகளை உயர்த்துங்கள். இரண்டு இரண்டு கைகளையும் உயர்த்துங்கள். நல்லது. இதை செய்ய எவ்வளவு காலம் பிடிக்கும். எவ்வளவு காலத்தில் பாப்தாதாவிற்கு உங்கள் முடிவினைக் கொடுப்பீர்கள். யார் செய்தாலும் முதலில் வருபவர்கள் அர்ஜீனன் ஆவார்கள். இரண்டு அல்லது மூன்று பாபாவின் வாய்ப்பிற்கு பிறகா? அல்லது ஒரு வாய்ப்பிற்கு பிறகா? இரண்டு மூன்று வாய்ப்பிற்கு பிறகு என்று கூறுபவர்கள் கைகளை உயர்த்துங்கள். நல்லது. யார் சிறப்பு பொறுப்பாளர் ஆகிறார்களோ அவர்கள் இங்கு முன்னால் இருக்கிறார்கள் இல்லையா! நல்லது. யார் சென்டரினுடைய முக்கிய சகோதரிகளாக இருக்கிறார்களோ அவர்கள் கைகளை உயர்த்துங்கள். சென்டரின் முக்கிய சகோதரர், சகோதரி கைகளை மேலே உயர்த்துங்கள். என்ன சிந்திக்கிறீர்கள்? யார் மூன்று நான்கு வாய்ப்புகளுக்கு பிறகு செய்து காட்டுகிறோம் என்று எண்ணுகிறீர்களோ அவர்கள் முக்கியமாக கைகளை உயர்த்துங்கள். முக்கியமானவர்கள் சகோதரர்கள் கூட கைகளை உயர்த்துங்கள். யார் செய்து காட்டுகிறோம் என்கிறீர்களோ அவர்கள். நல்லது. இன்று கர்நாடகாவின் வாய்ப்பு நீங்கள் நிமித்தமாகி செய்து காட்டுங்கள். உறுதி தானே. நீங்களும் உங்கள் தொடர்பில் உள்ள சென்டர்களும் உறுதியா? பாண்டவர்கள் உறுதியா? நல்லது. எது முடியாமல் இருக்கும். தேவையானது மன உறுதி மட்டுமே வேண்டும். இது இல்லையென்றால் இது நடக்குமா அல்லது நடக்காதா? அவ்வாறு இல்லை. கண்டிப்பாக நடக்கும். இது திட நிச்சயம் ஆகும். எங்கு இத்தகைய மன உறுதி இருக்கிறதோ அங்கு வெற்றி கண்டிப்பாக இருக்கும். நீங்கள் அனைவரும் முதலாவது நம்பர் உதாரணமாக ஆனீர்கள் என்றால் இது கூட உங்களின் பாக்கியம் ஆகும். அதற்கு கூட பலன் உண்டு. அதற்கு கூட பலமும் உண்டு நல்லது. கர்நாடகா இந்த அற்புதத்தை செய்து காட்டுவீர்கள். உறுதியா? கர்நாடகாவின் சிறப்பு அம்சம் யார் கர்நாடகாவின் நிமித்த சகோதரியாக ஆனது (தாதி இருதய புஷ்பா) அவர் பழைய சகோதரி. அவர்களுடைய

சிறப்பு அம்சங்கள் என்னவாக இருந்தன. சென்டர்கள் திறப்பதற்கான அவர்களுடைய வழி முறை மிகவும் நன்றாக இருந்தது. எத்தனை சென்டர்கள் திறக்கப்பட்டுள்ளன. எனவே அவர்கள் நிமித்தமான உற்சாகம், உத்வேகம் நிறைந்தவர்களாக இருந்தார்கள். நீங்கள் கூட நிமித்தமாளவர்கள் தான். அவருடைய சிறப்பு தன்மைகளை உங்களிடம் கொண்டு வாருங்கள். சென்டரை மட்டும் திறந்தால் போதாது அலைகள் தடைகளற்ற சென்டர்களாக இருக்க வேண்டும். சரிதானே? விருப்பம் உள்ளதா? நல்லது அற்புதங்களை செய்து காட்டக் கூடியது கர்நாடகா, மற்றவர்களுக்கும் இதை செய்ய வேண்டும். கர்நாடகா மாத்திரம் செய்ய வேண்டும் என்பது அல்ல அவர்கள் துணிவை கொண்டிருக்கிறார்கள். இந்த துணிவிற்கான பலன் மற்றும் சக்தி கிடைக்கும். மற்றபடி நல்லது. கர்நாடகாவில் சேவைகளுக்கான நல்ல முடிவுகள் வெளிப்படையாக தெரிகின்றன. வளர்ச்சி அடைந்து கொண்டே இருக்கிறது. இப்போது ஏதாவது மைக் மற்றும் வாரிசு முன்னால் வரவில்லை ஆனால் தடைகளற்றவர்களாக ஆவது நடைமுறையில் நீங்கள் வெளி காட்டினால் அவர்களும் வெளி வருவார்கள். நல்லது. இதை செய்து காட்டுவர்கள் என்பதில் பாப்தாதாவிற்கு அனைத்து கர்நாடகத்தை சார்ந்தவர்கள் மீது இந்த ஆசை உள்ளது. நல்லது. எதுவானாலும் உறுதிபட்னட முடித்து காட்ட வேண்டும். பாப்தாதாவிற்கு நம்பிக்கை இருக்கிறது. நல்லது.

(தாங்கள் எந்த பயிற்சியை கூறினீர்களோ அதை எவ்வளவு நேரம் பயிற்சி செய்ய வேண்டும்? குறைந்த பட்சம் 10-நிமிடங்கள்)

<u>வியாபாரிகள் பிரிவு மற்றும் கல்வியாளர்களின் பிரிவு</u>: இந்த பிரிவில் யாரெல்லாம் இருக்கிறீர்களோ அவர்களுக்கு சேவைகளை அதிகரிப்பதற்கான விருப்பம் நன்றாகவே இருக்கிறது மற்றும் பாப்தாதா பார்த்தார். ஒவ்வொரு பிரிவிலும் நாங்கள் புதுமையிலும் புதுமையான விஷயத்தை செய்து காட்டுவோம் நிமித்தமாகி காட்டுவோம். என்ற உற்சாகமும், உத்வேகமும் உள்ளன. இந்த இரண்டு பிரிவுகளிலும் யாரெல்லாம் இருக்கிறார்களோ அவர்கள் கூட சேவைகளை நன்றாகவே செய்து கொண்டு இருக்கிறார்கள். கல்வியாளர்கள் கூட தன்னுடைய சேவைகளை அவரவர்களுக்கே உரிய முறைபடி செய்து கொண்டு இருக்கிறார்கள். இப்போது ஒவ்வொரு பிரிவும் தன்னுடைய

பிரிவைச் சார்ந்தவர்களைக் கொண்ட ஒரு குழுவை உருவாக்க வேண்டும். இதுவரை இத்தகைய குழு உருவாக்கப்படவில்லை. இந்த குழுவில் ஒவ்வொரு பிரிவினைச் சார்ந்தவர்களும் இருக்கட்டும். அதாவது வியாபாரிகள் பிரிவில் அந்த குழுவில் அனைத்து பிரிவுகளையும் கொண்ட குழு தனியாக உருவாக்க வேண்டும். எத்தகைய நிகழ்ச்சிகள் இருந்தாலும் ஒவ்வொரு வர்க்கத்தைச் சார்ந்தவர்கள் அவர்களுடைய வார்த்தைகளை கேட்டு பொது மக்களிடம் நாங்கள் கூட செய்ய முடியும் என்று கூறும் அளவிற்கு உற்சாகம் வர வேண்டும். பாப்தாதா வி.ஐ.பி குழு உருவாக்கப்பட்டுள்ளது. வி.ஐ.பி குழுவில் அத்தகைய குழுவை உருவாக்குவதற்கான திட்டம் உள்ளது என்பதை பாப்தாதா அறிக்கையை கேட்டு அறிந்துள்ளார். நல்லது. ஒவ்பொரு பிரிவினைச் சார்ந்தவர்களும் இந்தியா முழுவதிலும் அவரவர்களுடைய சென்டரில் இந்த சேவையை செய்ய வேண்டும். யாரெல்லாம் இவர் கூட அத்தகைய விஜபி தான் என்று நினைக்கிறார்களோ ஒரே இடத்தில் அவரவர்களுடைய தேர்வு செய்யப்பட்ட வி.ஐ.பிகளைக் கொண்டு அனைத்து வர்க்கத்தினரை சார்ந்தவர்களும் மீட்டிங் செய்யுங்கள். இந்த திட்டம் பாப்தாதா கொடுத்திருக்கிறார். அனைவரும் இதே போல் செய்யுங்கள் மற்றும் அவர்களை நிமித்தம் ஆக்குங்கள். மைக்காக மட்டுமின்றி இல்லாது அன்புக்குரியவர்களாகவும், ஒத்துழைப்பாளர்களாகவும் ஆகும்படி அவர்களுக்கு சிறப்பான சேவை செய்யுங்கள். அவர்கள் மைக்காக மட்டும் இருக்கக் கூடாது ஆனால் அன்புக்குரியவர்களாகவும், ஒத்துழைப்பாளர்களாகவும் ஆக வேண்டும். ஏனென்றால் அன்பு மற்றும் ஒத்துழைப்பு மூலமாக அவர்களுக்கு ஆசீர்வாதங்கள் கிடைக்கின்றன அதனால் முயற்சியில் அவர்கள் முன்னேறுவார்கள். பாப்தாதா வந்திருக்கக்கூடிய அனைத்து வர்க்கத்தை சார்ந்தவர்களுக்கும் இதை சொல்லிக் கொண்டிருக்கிறார். இந்த சீசனிலேயே பாப்தாதா ஒவ்வொரு குழுவினுடைய முடிவினையும் பார்க்க விரும்புகிறார். மதுபனுக்கு அவர்கள் வராமல் கூட இருக்கலாம் ஆனால் தன்னுடைய பிரிவினைச் சார்ந்தவர்களை தங்களுடைய தலை நகரங்களில் ஒன்று சேருங்கள். பின்னால் பாப்தாதா இதன் முடிவை பார்த்து விட்டு சீசனின் கடைசியில் அத்தகைய உதவியாளர்களை சந்திப்பார். கேட்டீர்களா இதை செய்ய வேண்டும். (ஆஷா சகோதரி ஓ.ஆர்.சி) ஆஷா கொடுத்துள்ளாரா? நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள் இல்லையா! நல்ல விஷயம் தான். பிரிவினைச்

சார்ந்தவர்கள் தெளிவாகத் தெரிந்து கொள்ள விரும்பினால் இவரிடமிருந்து தெரிந்து கொள்ளுங்கள். பாப்தாதா இதை ஏன் கூறுகிறார் என்றால் நீங்கள் யாரெல்லாம் உறுதியான பிராமணர்களாக இருக்கின்றார்களோ அவர்களுக்கு நேரப்படி சாட்சியாக இருந்து யார்க்க வேண்டும். மனசா சேவை என்பது உங்கள் அனைவரையும் உடன் வைத்துக் கொண்டு சேவை செய்தால் அதிகமாக விரிவடையும். அவர்கள் சேவை செய்யட்டும் நீங்கள் சாட்சியாக இருந்து மனசா சேவை செய்யுங்கள். எப்படி பிரம்மாபாபா சேவைக்கான தகுதி வாய்ந்தவர்களாக ஆக்கினார். தான் சாட்சியாக இருந்து பார்த்தார் அல்லவா! அதைப் போல யார் பெரியவர்களாக இருக்கிறார்களோ யார் சேவைகளை விரிவடையச் செய்பவர்களாக இருக்கிறார்களோ அவர்கள் நேரப்படி சேவையில் மூழ்கி இருக்கிறார்கள் ஆனால் இந்த சேவைக்காக தயார் செய்யப்பட்டவர்கள் செய்யட்டும். அவர்களுடைய வார்த்தைகளில் அனுபவத்தின் கவர்ச்சி இருக்கட்டும். அவர்களுனுடைய பதவியினுடைய கவர்ச்சி இல்லாமல் இருக்கட்டும் ஆனால் அனுபவத்தின் கவர்ச்சி இருக்கட்டும். அந்த பிரபாவம் மிக விரைவில் வெளிவரும். ஏனென்றால் அவர்களுக்கும் நிமித்தமாகக் கூடியவர்களுக்கும் பாப்தாதாவின் அதிகப்படியான உதவி கிடைக்கிறது. யாராக இருந்தாலும் அவர்களுக்கு பாப்தாதாவின் சமயப்படி விசேஷமான வரதானம் கிடைக்கிறது. அதனுடைய முடிவின்படி இது என்ன நடக்கிறது என்று அவர்களாலேயே புரிந்து கொள்ள முடியாத அளவிற்கு நடக்கும். ஏனென்றால் பாப்தாதாவின் அதிகப்படியான உதவி உள்ளது. வரதானம் கூட இருக்கிறது. அவர்கள் பேச மாட்டார்கள் வரதானம் பேசும். எனவே அத்தகைய ஆன்மாக்களை தயார் செய்யுங்கள். பாப்தாதா நேரப்படி அவர்களுக்குக் கூட வரங்களைக் கொடுத்து முன்னேற செய்கிறார். இது அனைத்து பிரிவினர்களுக்கும் பாப்தாதா சொல்லிக் கொண்டிருக்கிறார். நல்லது. செய்து கொண்டுதான் இருக்கிறீர்கள். முன்னேறிக் கொண்டுதான் இருக்கிறீர்கள். பாப்தாதா அனைத்து பிரிவினைச் சேர்ந்தவர்களுக்கும் வாழ்த்துக்களைக் கொடுக்கிறார். மேலும் மூன்று நான்கு வர்க்கத்தைச் சார்ந்தவர்கள் வந்திருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் எழுந்து நில்லுங்கள்.

இளைஞர்கள் மற்றும் அரசியல்வாதிகள், விளையாட்டு வீரர்கள், நிர்வாகத் துறையைச் சார்ந்தவர்கள்: இந்த ஒரு விசயத்தை

அனைவருக்கும் செய்ய வேண்டும் எனவே தான் உங்களை எல்லாம் கூடவே எழுந்திருக்கும்படி கூறப்பட்டது. இந்த பிரிவினர்களுக்கான சேவையில் பாப்தாதா திருப்தியாக உள்ளார் ஆனால் இப்பொழுது நீங்கள் சாட்சி பார்வை உடையவர்கள் ஆகுங்கள். இப்போதைய உங்களுக்கான வேலை மற்ற குழுக்களையும் தயார் செய்ய வேண்டும் ஏனெனில் திடீரென்று உங்கள் அனைவரையும் அதிகமாக தபஸ்யா செய்ய வைக்கும்படி சூழ்நிலைகள் திடீரென்று உருவாகலாம். மனசா சேவை செய்ய வேண்டி இருக்கும் சமயம் தீவிரமாக வந்து கொண்டு இருக்கிறது. மேலும் தீவிரத் தன்மை அதிகரித்துக் கொண்டே இருக்கும். இப்போது மனசா சேவை இவ்வளவு வேகமாக நடக்கவில்லை. நடந்து கொண்டிருக்கிறது. சில சில இடங்களில் மனசா சேவையினுடைய பிரபாவம் இருந்துக் கொண்டு தான் இருக்கிறது என்றாலும் மிக குறைவு மேலும் கடைசி நேரத்தில் மனசா சேவை மாத்திரமே நடக்கும். வாக்கினுடைய சேவை இராது. யாரை நீங்கள் நிமித்தமாக்கு கிறீர்களோ அவர்களுக்குக் கூட இப்பொழுது தான் வாய்ப்புகள் உள்ளன. எப்பொழுது நெருக்கடி நேரம் வருகிறதோ அப்பொழுது அவர்களுக்குக் கூட வாய்ப்புகள் இராது. எனவே இப்போதே அவர்களுக்கு வாய்ப்புகளைக் கொடுங்கள். அப்போது அவர்கள் உங்களுக்கு அருகில் வருவார்கள். வாரிசாகக் கூட ஆக முடியும். ஏனெனில் இப்பொழுது நிலைமைகள் உங்களுடைய ஒவ்வொரு குழுவினுடைய காரியத்திற்கும் உதவி செய்து கொண்டிருக்கின்றன. இப்பொழுது அனைவரும் ஏதாவது ஒன்று நிகழ வேண்டும். நிகழ வேண்டும் என்று உணரு கிறார்கள். பாவம் அவர்களுக்கு இதைப் பற்றி ஒன்றும் தெரியாது ஆனால் ஏதாவது மாற்றம் நிகழ வேண்டும் என்று எண்ணுகிறார்கள். உங்களுக்கு தெரியும் இல்லையா? மாற்றம் ஆகும் வேறு என்ன ஆகும்? இது உங்களுக்குத் தெரியும் அல்லவா! அவர்கள் கவலையில் இருக்கிறார்கள் என்ன ஆகுமோ, என்ன ஆகுமோ என்று உங்களுக்குத் தெரியும் நம்முடைய ராஜ்யம் வந்தே தீரும். சந்தோஷம் தானே! இறுதியில் சென்று கொண்டிருக்கிறது. இறுதிக்குப் பின் ஆரம்பம் வரும். எனவே சேவைகளைச் செய்கின்ற நீங்கள் விரைவாக சிறியவர்களையும் மற்றவர்களையும் முன் நிலைப்படுத்துங்கள். நன்று, நன்று என்று கூறுகிறார்கள். இப்பொழுது அவர்களுக்கு நல்லது ஆக்குவதற்கான சேவையை செய்யுங்கள். நீங்கள் சாட்சி பார்வை உடையவராக இருந்து அவர்களுக்கு சக்திகளைக் கொடுங்கள். நல்லது. விளையாட்டு கூட

வந்திருக்கிறது. இளைஞர் பிரிவின் வெள்ளி விழா. அரசியல்வாதிகள் கூட இந்த திட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள். நல்லது. இது கூட பெயர் எடுத்திருக்கிறது. இதுவும் முக்கியமான பிரிவு ஆகும். வாழ்த்துக்களை பாபா அனைவருக்கும் கொடுத்துக் கொண்டிருக்கிறார். இப்போது வாழ்த்துக்கள் மேலும் கொடுப்பேன் எப்பொழுது குழுக்களை தயார் செய்கிறீர்களோ அப்பொழுது. அவர்களை அபுவிற்கு கொண்டு வர வேண்டும் எனக் கூறிக் கொண்டிருக்கவில்லை. அங்கேயே அவர்களை தயார் செய்யுங்கள். பிறகு பாப்தாதாவிற்கு செய்திகளைக் கூறுங்கள். முடிவுகளைப் பார்ப்போம், பின்னால் மதுபன்னிற்கும் அழைப்போம். யாரெல்லாம் வந்திருக்கிறீர்களோ அவர் களெல்லாம் வரக்கூடியக் காலத்திற்கான திட்டங்களைப் புரிந்து கொண்டிருக்கிறீர்களா? கைகளை உயர்த்துங்கள் புரிந்ததா என்ன செய்ய வேண்டும் என்று? இப்பொழுது விரைவாக செய்து முடியுங்கள். திடீரென்று ஏதும் நிகழலாம். அப்போது உங்களுக்கு சேவை செய்வதற்கான சமயம் கூட கிடைக்காமல் போகலாம். இதைப்போன்ற சூழ்நிலைகள் இடை, இடையே வர முடியும். ஆகையினால் தீவிர முயற்சியாளர்களின் குழு உருவாக்கப்பட்டது அல்லவா! அதைப் போலவே இந்த தீவிர சேவைக்கான குழுவும் உருவாக்கி தயாராக வைத்திருங்கள். நல்லது. பாப்தாதாவின் அனேக, அனேக வாழ்த்துக்களை கொடுத்துக் கொண்டிருக்கிறார்.

இரட்டை வெளிநாட்டவர்கள்: இப்போது இரட்டை வெளிநாட்டினர் என்று கூறாதீர்கள். இரட்டை முயற்சியாளர்கள் என்று கூறுங்கள். சரிதானே! இரட்டை முயற்சியாளர்கள்தானே! இரட்டை முயற்சி செய்யும் குழந்தைகள் தன்னுடைய சேவைக்கான விதவிதமான வகையிலே மதுபனில் வாய்ப்புகளை எடுக்கிறார்கள். இது பாப்தாதாவிற்கு மிகவும் விருப்பம் உள்ளதாக இருக்கிறது. ஏனெனில் ஒன்று கூட்டுறவின் பலம் கிடைக்கிறது. எங்கு எந்த பிரச்சனை இருக்கிறதோ, எங்கு எந்த பிரச்சனை உள்ளது ஓரிருவரின் அனுபவம் வாயிலாக மற்றும் பெரியவர்களின் ஆலோசனையிலி ருந்து வளர்ப்பிலிருந்து எளிதாகி விடுகிறது. வாயு மண்டலத்தினுடைய பலம் கூட கிடைக்கிறது. இதனால் பொறுப்பு குறைகிறது. நேரம் அங்கு குறைவாக கிடைக்கிறது. இங்கு சமயம் அதிகமாக கிடைக்கிறது. ஒரே ஒரு வேலைக்காக. அங்கு விதவிதமான பொறுப்புகள் கிடைக்கின்றன

எனவே சமயத்தைக் கொடுக்க வேண்டி உள்ளது ஆனால் இங்கு ஒரே ஒரு வேலைதான் இருக்கிறது. ஒன்று சேவை அல்லது சுயத்திற்கான நன்மை. மேலும் ஒவ்வொரு நாளும் பாப்தாதா சேவையினுடைய ரூப் ரேகைகள் நல்லவிதமாக அதிகரித்து வருவதை பாப்தாதா பார்க்கிறார். வெளிநாட்டில் உள்ள இளைஞர் களுடைய முடிவுகளையும் பாபா கேட்டறிந்தார். ஒவ்வொருவரும் சேவையில் முன்னேறி வருகின்றனர்.

கொஞ்சம் கொஞ்சமாக இரண்டு விஷயங்கள் அருகே வந்து கொண்டிருக்கின்றன என பாப்தாதா பார்த்தார். ஒன்று கவர்மென்ட் (அரசாங்கம் அல்லது முக்கியமானவர்களுக்கு அருகாமையில் செல்லும் சந்தர்ப்பம் நன்றாக கிடைத்து வருகிறது. கொஞ்சம் கொஞ்சமாக திட்டங்களை உருவாக்கி கவர்மென்ட் வரை தங்கள் தங்களுடைய நாட்டின் கவர்மென்ட் வரை செல்வதற்கான சாதனமாக இது உருவாகி விடும். நல்லது. வெளிநாட்டிலேயும் பிரபலம் ஆக வேண்டும். உள்நாட்டில் கண்டிப்பாக பிரபலம் ஆக வேண்டும். இளைஞர் குரூப்பிற்கான தேதியையும் பாப்தாதா கேட்டறிந்தார். இந்தியாவினுடைய மற்றும் வெளிநாட்டினுடைய செய்திகளையும் கேட்டறிந்தார். இந்தியாவில் கூட இப்பொழுது திட்டங்களை உருவாக்குகிறார்கள் ஆனால் இதற்கு முன்பாக பாரதத்தில் கவர்மென்ட் வரை எடுத்து செல்லும்படி இந்த திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும். ஆரம்பத்தில் இளைஞர் குழு குடியரசு தலைவர், பிரதம மந்திரி ஆகியோர்களிடம் அழைத்து செல்லப்பட்டதை பாப்தாதா பார்த்தார். முதலாவதாக குழு அவர்களிடம் சென்றது. இப்பொழுது அநேக சாதனங்கள் உங்களிடம் இருக்கின்றன. இப்பொழுது உங்களுடைய தொலைக்காட்சியிலேயும் வரும். அவர்களை சந்திக்க வைக்க வேண்டாம். அவர்களுக்குத் தெரிவிக்கும்படி சந்தர்ப்பங்களைப் பெறுங்கள். அடுத்து இளைஞர்களை சந்தித்து அவர்கள் என்னென்ன செய்கிறார்கள் என்பதை குறுகிய காலத்தில் தெரிவியுங்கள். ஒவ்வொரு பிரிவைச் சார்ந்தவர்களுக்கும் இத்தகைய குழு உருவாக்க வேண்டும். இதைப் பற்றி மந்திரி சபை வரை முக்கிய அமைச்சர் பிரதம மந்திரி வரை இதைப்பற்றிய செய்திகள் செல்ல வேண்டும். மற்றபடி நல்லது. வெளிநாட்டிலேயும் கூட வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கிறது என்று பாப்தாதா பார்க்கிறார். இது அடைந்துக் கொண்டுதான் இருக்கும். சென்டரில் கூட சுய முயற்சிக்கான கவனம் செலுத்த வேண்டும். சுய

முயற்சியில் புதுமைகளை அடிக்கோடிட்டு கொண்டு வர வேண்டும். நல்லது. சரிதானே!

உங்கள் அனைவருக்கும் பிடித்திருக்கின்றது அல்லவா! ஒவ்வொரு குழுவிலேயும் வெளிநாட்டவர் இருப்பது நன்றாக இருக்கிறது அல்லவா! ஏனென்றால் நம்முடைய குடும்பத்தில் இது கூட ஒரு புதுமையாகும். வெளிநாட்டினர் கூட விதவிதமாக வருகிறார்கள். இத்தகைய குடும்பம் வேறு யாருக்கும் இருக்காது. ஒரே இடத்தில் எத்தகைய சிறப்பான தேசமும் செல்வது என்பது இருக்காது. இப்போது பாருங்கள்! முஸ்லீம் நாட்டை சேர்ந்தவர்கள் முன்னுக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். அரேபியன் கூட வந்து கொண்டிருக்கிறார்கள். இது ஒரு பலதரப்பினரும் ஒன்று சேர்ந்திருக்கும் ஒரு குடும்பம். இதில் ஒருவர் கூட விட்டு போய் விடக் கூடாது. எல்லா குழந்தைகளிடமும் பாப்தாதாவின் செய்திகளைக் கொடுத்து அவர்களை வாரிசு குழந்தைகளாக மாற்ற வேண்டும். குடும்பத்தை விட்டு சென்றவர்கள் குடும்பத்தில் வந்து சேர வேண்டும். இதை பாப்தாதா பார்த்து சந்தோஷம் அடைகிறார். இந்த சந்தோஷத்தை அதிகரித்துக் கொண்டே செல்லுங்கள். இப்போது உங்களிடம் அழைப்புகள் வந்து கொண்டிருக்கின்றன. பின்னாலும் அழைப்புகள் வரும் ஏன்? கடைசியில் இது தான் மிஞ்சும், இது தான். இது தான், இது தான். இப்போது அனைவரும் தன்னுடையவைகளை விடுத்து தந்தையினுடைய சம்பந்தத்தில் மற்றும் செய்தியை கேட்பதற்கான சந்தர்ப்பம் கண்டிப்பாக கிடைக்கும். அவ்வாறு இல்லையெனில் உங்களுக்கு அனைவரின் குற்றச்சாட்டுக்கள் கிடைக்கும். மனதின் மூலமும் ஆத்மாக்களை கவர்ந்து இழுத்து அவர்களை முன்னுக்குச் செல்ல வைக்க முடியும். உங்களுடைய உறவில் சம்பந்தத்தில் கொண்டு வர முடியும். மனதினுடைய சேவை இப்போது குறைவாக உள்ளது ஆனால் இப்பொழுதிலிருந்தே ஆரம்பித்தீர்கள் என்றால் கடைசியில் எதுவுமே இல்லாதவாறு இறுதியில் அனைவருக்குமே சேவை செய்ய முடியும். எப்பொழு தெல்லாம் உங்களுக்கு நேரம் கிடைக்கிறதோ அப்பொழுது தேவதை ரூபத்தில் எப்படி பிரம்மாபாபா உங்கள் அனைவரையும் மனசா சேவை மூலமாக கவர்ந்து இழுத்தாரோ வீட்டில் இருந்துக் கொண்டே உங்களால் தைரியத்தை பெற முடிந்தது நடக்க முடிந்தது அவ்வாறு நீங்கள் கூட சூட்சும தேவதா ரூபத்தின் மூலமாக மனசா சேவையை

செய்ய முடியும். சூட்சும தேவதை ஆகி இந்த அனுபவத்தைக் கூட அதிகரிக்க செய்ய வேண்டும். ஏனெனில் துக்கத்தின் அலை எவ்வாறு கடலில் திடீரென்று அலைகளின் சீற்றம் அதிகரிக் கின்றதோ வேகமான அலைகள் இடை இடையே வந்து போகின்றன அல்லவா! அதை போல இப்போது நேரம் செல்ல செல்ல இடை இடையே துக்கத்தினுடைய, அசாந்தியினுடைய அலைகள் அதிகரித்துக் கொண்டே இருக்கும். துக்கத்தினுடைய அலைகள் அதிகரிப்பதற்காசு எதாவது காரணம் உருவாகும். எனவே வார்த்தை மூலமாக செய்யும் சேவை தேவைக்காகக் கூட மற்றவர்களை ஏற்பாடு செய்யுங்கள் ஆனால் அடித்தளம் உறுதியாக இருக்க வேண்டும். தன்னுடைய பிரபாவத்தை உருவாக்கக் கூடியதாக இருக்கக் கூடாது. உண்மையான ஞானத்தின் பிரபாவத்தை கொண்டு வருபவர்களாக இருக்க வேண்டும். சில சமயங்களில் பிராமண குழந்தைகள் தன்னுடைய பிரபாவத்தை கொண்டு வருவதைப் போல சேவை செய்கிறார்கள். சேவையில் தந்தையின் பக்கம் கவர்ந்திழுக்கும்படி இருக்க வேண்டுமே தவிர தனிப்பட்டவர்களின் பால் கவர்ந்திழுக்கக் கூடாது. தனிப்பட்டவர்கள் பால் பிரபாவம் ஆனால் அது புண்ணியமாக ஈராது. நல்லது.

நாலாபுறத்திலுள்ள முயற்சியில் முன்னுக்கு செல்லக் கூடியவர்கள் எவ்வாறு 15-நாட்களுக்கான வேலையை பாப்தாதா கொடுத்திருந்தார். அதனுடைய முடிவு எப்படி பாப்தாதா காரியம் கொடுத்தாரோ அப்படியே மனம், சொல், செயல், சமயம், சங்கல்பம் யதார்த்தமாக இருந்தது என்று நினைப்பவர்கள் கைகளை உயர்த்துங்கள். நல்லது. மிகவும் கொஞ்ச பேர் மட்டுமே கைகளை உயர்த்தினார்கள். யார் 15-நாட்களுக்கான காரியத்தில் நல்ல முடிவு கண்டீர்களோ அவர்கள் கைகளை உயர்த்துங்கள். கொஞ்ச பேர் செய்தார்கள். மற்றபடி மற்றவர்களின் முடிவு வந்தது. யார் இங்கு இல்லையோ அவர்களுடைய முடிவும் வந்துள்ளது. அதிகமாக வீணான எண்ணங்களின் முடிவின் மீது அனைவரும் நல்ல கவனம் செலுத்தினீர்கள் ஆனால் முழு பிராமண குடும்பமும் ஒரே விதமான முயற்சியில் சென்றால் அந்த முடிவை அனைவரும் ஒன்று சேர்ந்து இப்பொழுது கொண்டு வர வேண்டும். எல்லா விஷங்களிலேயும் நல்ல முடிவு இருக்க வேண்டும். அதிகப்படியான முடிவில் அனைத்து விஷயங்களிலேயும் ஒரே மாதிரி நல்ல முடிவாக இருக்க வேண்டும் அது இப்பொழுது குறைவாக

உள்ளது. சிலருக்கு சில விஷயங்களில் இப்பொழுது இந்த பயிற்சி மூலமாக அனைவரும் எப்பொழுதும் தன்னுடைய முயற்சியினுடைய வேகத்தை தீவிரப்படுத்த வேண்டும் ஏனெனில் இது அநேக காலங்களுக்கு தேவைப்படுகிறது. பின்னால் செய்துவிடுவோம் என்று இருக்காதீர்கள். ஏனெனில் முயற்சி அநேக காலங்கலோடு தொடர்பு கொண்டது. எனவே அனைவரும் நான் செய்ய வேண்டும் என கவனம் செலுத்துங்கள். யாராவது செய்யட்டும் என்று இருந்து விடாதீர்கள் ஆனால் எனக்கு எவரெடி ஆக்க வேண்டும். ஆகியே தீர வேண்டும் என்று இருங்கள். நல்லது.

நாலா புறங்களிலிருந்து வந்திருக்கக்கூடிய தந்தையினுடைய அன்பானவர்கள் யார் அன்பானவர்களோ அவர்கள் கண்டிப்பாக உதவியாளர்களாகிறார்கள். அன்பினுடைய பிரதி பலிப்பின் பிரத்யட்ச ரூபம் அவர் ஒவ்வொரு காரியத்திலும் உடல், மனம், செல்வம், மக்கள், ஆகியவற்றால் ஒருவருக்கொருவர் உதவியாளர் கண்டிப்பாக ஆவர்கள். அத்தகைய அன்புக்குரிய உதவியாளர்களாக இருக்கும் குழந்தைகளுக்கு எப்பொழுதும் தந்தையின் அன்பில் மூழ்கி இருக்கக்கூடிய குழந்தைகளுக்கு அன்பு மாத்திரம் அல்ல, ஆனால் அன்பில் மூழ்கி இருக்கக் கூடிய குழந்தைகளுக்கு மேலும் எப்பொழுதும் தந்தையினுடைய அனைத்து காரியங்களிலேயும் நேரம் மற்றும் சங்கல்பங்களை கொடுக்கக் கூடியவர்கள் ஏனெனில் சங்கமயுகத்தில் நேரம் மற்றும் சங்கல்பத்திற்கு அதிக மதிப்புள்ளது. ஒரு ஜென்மத்தில் அநேக ஜென்மங்களின் பிராப்தியை அடையக்கூடியவர்கள். அப்படிப்பட்ட தீவிர முயற்சியாளர்கள் ஒவ்வொரு குணம், ஒவ்வொரு சக்திக்கு, ஒவ்வொரு சமயத்தின்படி காரியத்தில் ஈடுபடுத்தக்கூடியவர்கள் அவ்வாறான குண சம்பண்ண, சக்தி சம்பண்ண குழந்தைகளுக்கு மிக மிக பதம், பதம் மடங்கு அன்பு நினைவுகளும் நமஸ்காரங்களும்.

நிர்மலா தீதியுடன்: நல்லபடி சுற்ட்டு வந்திருக்கிறீர்கள் (ஆஸ்திரேலியாவிற்கு சென்றிருந்தார்கள்) நல்லது. இரண்டு விதமான பகுதியை ஏற்று நடித்துக் கொண்டிருக்கிறீர்கள். மிகவும் நல்லது. முடிவு நன்றாக உள்ளது.

தாதி ஜானகிஜியுடன்: இவர்கள் கூட சுற்ட்டு வந்திருக்கிறார்கள். மிகவும் நல்ல விளையாட்டு விளையாட்டு தான்.

சோலார் சிஸ்டம்: நம்மிடம் உள்ள சோலார் சிஸ்டத்தைப் பற்றி அனைத்து பேப்பர்களிலும் வந்துள்ளது. பாப்தாதா சோலார் திட்டம் செய்து கொண்டிருக்கிறோம் அல்லவா! இதைப் பற்றி பாப்தாதா கூறியுள்ளார். மற்ற எல்லா பகுதியிலும் இருளாக இருக்கும். உங்களுடைய இடம் மட்டுமே வெளிச்சத்தில் இருக்கும். இந்த நேரம் வரப் போகிறது. இந்த விளையாட்டை கூட அனைவரும் காண்டார்கள்.

இளைஞர்கள்: (இப்போது கவர்மென்ட் வரை செல்ல இருக்கிறார்கள். அத்தகைய திட்டம் தீட்டப்பட்டுள்ளது) இந்த இளைஞர்கள் நல்லவர்கள் என கவர்மென்ட் உணரும். இது கூட நிறைவேறும்.

பிரிஜ் மோகன் சகோதரரிடம்: சேவா செய்து கொண்டே இருப்பீர்கள். என்ன சமிக்ஞை கிடைத்து வருகின்றதோ அதை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறீர்கள். அதற்கான வாழ்த்துக்கள்.

ரமேஷ் சகோதரர், உஷா சகோதரியிடம்: இருவரும் நன்றாக உள்ளீர்கள் அல்லவா! யார் நிமித்தமான ஆத்மாவாக இருக்கிறார்களோ அவர்களை பார்த்து அனைவருக்கும் உற்சாகம் வருகிறது. இவர்கள் எவ்வாறு செய்கிறார்களோ நாமும் அவ்வாறு செய்ய வேண்டும். நீங்கள் மற்றவர்களுக்கு உற்சாகம், உத்வேகம் கொடுப்பதற்காக நிமித்தமாக இருக்கிறீர்கள். மிகவும் நல்லது செய்துள்ளீர்கள்.

பரதாதியிடம்: மிகவும் நல்ல பார்ட் நடித்துக் கொண்டிருக்கிறீர்கள். விஷ்ணுவைப் போல படுத்துக் கொண்டே பாத்திரத்தை ஏற்று நடித்துக் கொண்டிருக்கிறீர்கள். உங்களைப் பார்த்து அனைவருக்கும் உற்சாகம் வருகிறது. நாமும் இதைப் போன்று நடிக்கலாம் என்று. மிகவும் நன்று.

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

# 31.12.2009 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# புத்தாண்டில் அனைத்து ஆத்மாக்களுக்கும் இறை செய்தியைக் கொடுத்து, பொன்னுலகம் என்னும் பரிசைக் கொடுங்கள், பாப்சமான் ஆவதற்காக ஆத்மா அபிமானியாக இருக்கும் நிலையை இயற்கையான இயல்பாக்கிக் கொள்ளுங்கள்!

இன்று பாப்தாதா ஒவ்வொரு குழந்தைகளையும் அன்பு மற்றும் பாப்தாதாவின் அன்பில மூழ்கியிருக்கும் லவ்லீன் சொரூபத்தில் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒவ்வொரு குழந்தையும் பரமாத்மாவின் அன்பில் மின்னிக் கொண்டிருக்கின்றனர். குழந்தைகள் அனைவரும் அன்பெனும் விமானத்தில் வந்து விட்டீர்கள். புத்தாண்டை கொண்டாடத்தான் வந்திருக்கிறீர்கள் ஆனால் அனைவரது கண்களிலும் என்ன தெரிகிறது? புத்தாண்டு, இது புதிய வருடத்திற்கான ஒரு நிமித்தம் தான் ஆனால் உங்கள் அனைவரது கண்களிலும் என்ன உற்சாகம் உள்ளது? மூன்று வாழ்த்துக்களை கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். ஒன்று தனது புதிய வாழ்விற்கான வாழ்த்து மற்றொன்று புதிய யுகத்திற்கான வாழ்த்து, மூன்றாவது பரிவாரம் மற்றும் தந்தையை சந்திப்பதற்கான வாழ்த்து. தனது கண்களில் என்ன சுற்றிக் கொண்டிருக்கிறது? தனது புதிய யுகம் எதிரில் வருகிறது தானே? உள்ளத்தில் புது யுகம் வந்தே வந்து விட்டது என்ற உற்சாகம் இருக்கிறது. புதிய யுகத்திற்கான பளபளப்பான ஆடை இந்த சங்கமயுகத்தில் இன்றே வெகு விரைவாக இந்த பளபளப்பான ஆடையை இப்போதே அணிந்துக் கொள்ள வேண்டும் என்பது போல

எதிரில் தெளிவாகக் காணப்படுகிறது. அதை எதிரில் பார்த்து பார்த்து மகிழ்ச்சி அடைகின்றீர்கள். விடையும் கொடுக்கின்றீர்கள். வாழ்த்துக்களும் தெரிவிக்கின்றீர்கள். எப்படி பழைய ஆண்டிற்கு விடைக் கொடுத்து அனுப்புகின்றீர்களோ அந்த ஆண்டே மறந்து போகின்றது. புதிய ஆண்டு தான் எதிரில் வருகிறது. அதுபோலவே உங்களுக்கு முன்பாக பழைய ஆண்டிற்கான வாழ்த்துக்கள் அல்ல, ஆனால் புதிய உலகிற்கான வாழ்த்துக்களைத் தருகின்றீர்கள். பழைய உலகிற்காக விடைக் கொடுக்கின்றீர்கள். எனவே இன்று அனைவருக்குமே புது யுகத்திற்கான ஊக்கம் உற்சாகம் உள்ளது. மக்களும் புத்தாண்டிற்கான வாழ்த்துக்களை தருகின்றார்கள். அத்துடன் பரிசும் வழங்குகிறார்கள். எனவே பாப்தாதாவும் குழந்தைகளாகிய உங்களுக்கு பழைய சுபாவ சம்ஸ்காரத்திற்கான விடை கொடுத்து புதிய உலகில் செல்வதற்கான பரிசை வழங்குகின்றார். அந்த புதிய உலகில் பிராப்தியே பிராப்தி தான். சுருங்கச் சொன்னால் அந்த புதிய உலகில் இல்லை என்ற பொருளே இல்லை. அப்படிப்பட்ட பொன்னுலகம் எனும் பரிசை பாப்தாதா குழந்தைகளாகிய உங்கள் ஒவ்வொருவருக்கும் பரிசாக வழங்கி விட்டார். நாம் பொன்னுலகின் அதிகாரியாக ஆகிக் கொண்டே யிருக்கின்றோம் என்ற சந்தோஷம் தானே உங்களுக்கும். இப்படிப்பட்ட ஒரு பரிசை வேறு யாருமே தரமுடியாது. பாபா ஒவ்வொரு குழந்தைகளுக்கும் டைரக்ஷன் கொடுத்திருக்கிறார். அனைத்து ஆத்மாக்களுக்கும் பாபாவினுடைய ஆஸ்தியான பொன்னுலகைப் பற்றிய செய்தியைக் கொடுத்து அவர்களுக்கும் பரிசு வழங்குங்கள். உங்களிடம் என்ன பரிசு உள்ளது. ஒன்று புதிய உலகம் எனும் பரிசைக் கொடுங்கள். மற்றொன்று உங்களிடம் அதிகமான பொக்கிஷங்கள் உள்ளது. குணம் எனும் பொக்கிஷம், சக்திகள் எனும் பொக்கிஷம், சுயமரியாதை எனும் பொக்கிஷம். எத்தனை பொக்கிஷங்கள் உள்ளது. எனவே எல்லோருக்கும் ஏதாவது ஒரு குணம், ஏதாவது ஒரு சக்தியை பரிசாக வழங்குங்கள். அந்தப் பரிசால் அவர்கள் வாழ்க்கையே மாற்றம் அடைந்து பொன்னுலகிற்கான அதிகாரி ஆகி விடவேண்டும். ஏனென்றால் இப்போது பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள், உலகில் நாலாபுறமும் துக்கம், அசாந்தி அதிகமாகிக் கொண்டேயிருக்கின்றது. நாலாபுறமும் பயம் மற்றும் கவலை ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கின்றது. அப்படிப்பட்ட துக்கம் அசாந்தியில் உள்ள ஆத்மாக்களுக்கு குறைந்தபட்சம் செய்தியாவது

கொடுங்கள். இப்பொழுது பாபா வந்துள்ளார். இப்போதிருந்தே அழியாத ஆஸ்திக்கு அதிகாரி ஆகி விடுங்கள். இந்த செய்தியை ஒவ்வொரு ஆத்மாவிற்கும் கொடுத்துக் கொண்டு தான் இருக்கின்றீர்கள், ஆனால் இப்போதும் கூட பாபாவின் சில குழந்தைகள் செய்தி கிடைக்காமல் வஞ்சிக்கப்பட்டிருக்கிறார்கள். இருப்பினும் ஒரு பாபாவின் குழந்தைகள் அல்லவா? எனவே தன்னுடைய சகோதர சகோதரிகளுக்கு இந்த செய்தி எனும் பரிசை அவசியம் வழங்குங்கள். ஒருவரும் இருந்து விடக்கூடாது, சேவை செய்துகொண்டுதான் இருக்கிறீர்கள். குழந்தைகளின் சேவையைப் பார்த்து பாப்தாதா குஷி அடைகிறார் ஆனால் பாபாவின் ஆசை இது தான். எனது ஒரு குழந்தைக்கூட செய்தி கிடைக்காமல் இருந்து விடக்கூடாது, புகார் செய்யக் கூடாது, உங்களுக்கு பொன்னுலகிற்கான பரிசு கிடைத்தது, எங்களுக்கு தெரியவேயில்லையே. எங்களது தந்தை வந்திருக்கிறார், ஆனால் எங்களுக்கு செய்தி கிடைக்க வில்லை. இந்த புதிய ஆண்டில் இதற்கான முயற்சி செய்யுங்கள், உங்களுக்குள் சேர்ந்து திட்டம் தீட்டுங்கள், எந்த மூலையிலும் யாருமே இருந்து விடக்கூடாது. புகார் கிடைக்கக்கூடாது ஆனால் குஷி அடைய வேண்டும். நமது தந்தை வந்து விட்டார் என்ற செய்தியாவது. தெரிந்து கொள்ளட்டுமே. வஞ்சிக்கப்பட்டவர் ஆகக்கூடாது. எனவே இந்த புதிய வருடத்தில் என்ன செய்வீர்கள்? உங்களுக்குள் சந்தித்து திட்டம் தீட்டுங்கள், பாப்தாதாவிற்கு ஒவ்வொரு குழந்தை மீதும் இரக்கம் வருகிறது. எனவே நீங்களும் சகோதர சகோதரிகள் மீது இப்பொழுது விசேஷமான இரக்கம் மனம் உடைய கல்யாணகாரி சொரூபத்தை தாரணை செய்து அனை வருக்கும் செய்தியைத் தர வேண்டும். குறைந்தபட்சம் இப்படி ஒரு புகார் செய்துவிடக்கூடாது.

இன்று குழந்தைகள் அனைவரும் புத்தாண்டை கொண்டாடுவதற்கான ஊக்கம், உற்சாகத்தில் வந்து விட்டீர்கள். பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் பார்த்து என்ன பாடல் பாடுகிறார். தெரியுமல்லவா ஆஹா, என் குழந்தாய் ஆஹா! முதல் முறையாக வந்திருந்தாலும் அவர்களையும் பார்த்து பாப்தாதா சொல்கிறார், நீங்கள் அதிர்ஷ்டசாலிகள், காலம் முடிவதற்கு முன்னதாகவே பாபாவின் குழந்தையாகி விட்டீர்கள். புதிய குழந்தைகளுக்கு பாப்தாதா பலப்பல மடங்கு அதிர்ஷ்டசாலி ஆவதற்கான வாழ்த்துக்களை வழங்கிக்

கொண்டிருக்கின்றார். இப்பொழுது நிகழ்காலத்தில் பாப்தாதா ஒரு விஷயத்தை அனைத்து குழந்தைகளிடமும் பார்க்க விரும்புகிறார். அது என்னத் தெரியுமா? ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் உற்சாகம் இருக்கிறது. நான் பாப்சமான் ஆக வேண்டும் என்ற லட்சியமும் உள்ளது. ஆகவில்லை, கண்டிப்பாக ஆகக் கூடியவர்கள் தான். எப்படி இந்த லட்சியம் உள்ளதோ, அத்துடன் பாப்தாதா லட்சணத்தையும் பார்க்க விரும்புகின்றார். எப்படி சமான் ஆக வேண்டும் என்ற லட்சியம் உள்ளதோ அதுபோலவே சமான் ஆவதற்கான லட்சணமும் இருக்க வேண்டும். இப்பொழுது லட்சியம் மிக உயர்வாக உள்ளது ஆனால் லட்சணத்தில் விசேஷமான கவனம் தர வேண்டும். சமான் எவ்வளவு உயர்ந்த லட்சியமோ அதேபோல லட்சணமும் உயர்வாக இருக்க வேண்டும். இப்பொழுது சில-சில குழந்தைகள் லட்சணத்தை தாரணை செய்ய வேண்டும் என்று தான் விரும்புகின்றார்கள் ஆனால் இடையிடையே இப்படியும் சொல்கிறார்கள், நிறையத்தான் செய்ய விரும்புகின்றேன் ஆனால்.. இந்த ஆனால் என்ற சொல் விடுபட வேண்டும். உங்களது முகமும் நடத்தையும் தூரத்தில் இருந்தபடியே எவ்வளவு பெரிய லட்சியமோ அந்த அளவிற்கு லட்சியத்தை முகத்தின் மூலமாக தென்பட வேண்டும். நடத்தையின் மூலமாகவும் தென்பட வேண்டும். எப்படி முதலில் நீங்கள் தேக அபிமானத்தில் இருந்தீர்கள் ஆனால் தேக அபிமானத்தில் இருந்த பொழுது அந்த தேக அபிமானத்தின் இயல்பு இயற்கையாகவே இருந்தது. எப்பொழுதாவது நான் தேக அபிமானத்தில் வர வேண்டும் என்று முயற்சி செய்தீர்களா? இயற்கையான இயல்பாக தேக அபிமானம் இருந்தது. அரை கல்பம் முயற்சியே செய்யவில்லை. அதுபோலவே இப்பொழுதும் ஆத்ம அபிமானி ஆக இருப்பது இயல்பான இயற்கையாக வேண்டும். தேக அபிமானம் இயல்பான இயற்கையாக இருக்கும்பொழுது நான் தேக அபிமானத்தில் வர வேண்டும். என்று எப்பொழுதாவது நினைத்தீர்களா? இந்த முயற்சி செய்தீர்களா? இப்பொழுதும் தேக அபிமானம் மற்றும் ஆத்ம அபிமானம். எனவே ஆத்மா அபிமானி ஆவதற்காக ஏன் கஷ்டப்படுகிறீர்கள். ஏனென்றால் பாப்தாதாவிடம் செய்தி வருகிறது. அவ்வப்பொழுது தேக அபிமானத்தை விடுவிப்பதற்கான முயற்சி செய்ய வேண்டியுள்ளது. தேக அபிமானம் இயல்பாக இருக்கும்பொழுது ஆத்ம அபிமானத்திற்கான முயற்சி ஏன்? இப்படி குழந்தைகள் கஷ்டப்படுவது பாப்தாதாவிற்கு பிடிக்கவில்லை. இந்த

கஷ்டத்திலிருந்து விடுபட வேண்டும். இயல்பான இயற்கையாக மாற்றிக் கொள்ள வேண்டும். இதைத்தான் லட்சியம் மற்றும் லட்சணம் சமான் என்று சொல்லப்படும். பிறகு பாருங்கள் நீங்களே. பாப்சமான் ஆவது மிகவும் சுலபம் ஆகி விடும். இயல்டாக இருக்கும். பிரம்மாபாபாவைப் பாருங்கள். இவ்வளவு பெரிய பரிவாரத்தின் பொறுப்பில் இருந்த பொழுதும் ஆத்ம அபிமானம் இயல்பான இயற்கையாக இருந்தது. குழந்தைகளின் மீதான பொறுப்பு இருந்தது ஆனால் பிரம்மாபாபாவிற்கு முன்னால் அந்த பொறுப்பு என்னவாக இருந்தது. பொறுப்பு எதுவாக இருந்தாலும் சரி. பெரிய மண்டலத்தையே பொறுப்பு ஏற்று நடத்தினாலும் சரி ஏதாவது அலுவலக ரீதியாக யக்ஞ காரியங்களை பொறுப்பேற்று நடத்தினாலும் சரி ஆனால் அந்த பொறுப்புகள் யாவும் பிரம்மாபாபாவுக்கு முன்பாக என்னவாக இருந்தது. பிரம்மாபாபா சிவபாபாவின் உதவியுடன் நடைமுறையில் செய்து காண்பித்தார் செய்பவர் செய்விப்பவர் செய்து கொண்டு இருக்கிறார். தான் செய்பவராக இருந்து பாப்சமான் விலகியும் அன்பாகவும் இருந்தார். எனவே பாப்சமான் ஆக வேண்டு மென்றால் இதை சோதனை செய்யுங்கள். மனதாலோ, சொல்லாலோ. செயலாலோ டியூட்டி எதுவாக இருந்தாலும் சரி ஆனால் நான் செய்பவன் டிரஸ்டியாக இருக்கின்றேன். செய்விப்பவர் எனுமான் சிவபாபா இருக்கின்றார். இந்த செய்விப்பவர் என்ற பாடம் போகப்போக மறந்து போகிறது. எனவே லட்சியத்தையும் லட்சணத்தையும் இரண்டையும் சமமாக மாற்றுங்கள். இப்பொழுது பழைய வருடத்திற்கு விடை கொடுப்பதுடன் இந்த லட்சியத்தை லட்சணத்தில் கொண்டு வர வேண்டும். புதிய வருடம் என்றால் புதிய விஷயங்கள் தான் இருக்க வேண்டும். என்ன செய்வது மாயை வந்து விடுகிறது. நான் விரும்பவில்லை ஆனால் வந்து விட்டது. இந்த வார்த்தைகள் எண்ணங்கள் யாவும் பழைய வருடத்தின் கூடவே விடைகொடுத்து. அனுப்பி விடுங்கள். ஆண்டிற்கு மட்டும் விடை கொடுத்து அனுப்ப வேண்டாம். பாப்தாதா சொல்லி இருந்தார் மாயாவும் பாப்தாதாவிடம் வருகிறது என்ன சொல்கிறது தெரியுமா? நான் நினைக்கிறேன் எனக்கு போக வேண்டிய நேரம் வந்து விட்டது ஆனால் சில-சில குழந்தைகள் என்னை அழைக்கிறார்கள் அப்பொழுது நான் என்ன செய்வது? எனவே இன்று விடை கொடுத்து அனுப்புவதுன் மாயாவினுடைய விதவிதமான ரூபங்களுக்கும் விடை கொடுத்து அனுப்பி விடுங்கள். தைரியம் உள்ளது? தைரியம் இருக்கிறதா? கை

உயர்த்துங்கள், விடை கொடுத்து அனுப்பவதற்கு தைரியம் உள்ளது? பின்னல் இருப்பவர்களுக்கு கதரியம் உள்ளனர்? தைரியம் உள்ளவர்கள் கை உயர்த்துங்கள். இப்படி தைரியம் உள்ள குழத்தைகளுக்கு, பட்தாதர பலபமைடங்கு வாழ்த்துக்களை தெரிவிக்கிறார். ஏன்? பாப்தாதா ஏன் இந்த விஷயத்தை, வலியுறுத்துகிறார். ஏன் என்றால் நீங்கள் எல்லோரும் பார்த்துக் கொண்டு இருக்கின்றீர்கள், உலகின் நிலவரம் ஆரம்பத்தில் இருந்தே மிக மோசமான நிலையில் மிக தீவிரம் அடைந்து வருகிறது. மேலும் பாப்தாதாவின் இந்த மகாவாக்கியம் சிறிது காலமாக சொல்லிக் கொண்டு இருக்கிறார் எதிர்பாராத விதமாக எதுவாயினும் நடக்கும். எதிர்பாராத விதமாக நடக்கின்ற பொழுது நீண்ட காலத்திற்கான பயிற்சி இல்வையியென்றால் சொல்லுங்கள், அந்த எதிர்பாராத சமயத்தில் பயிற்சிக்கான அவசியம் இருக்குமல்லவா இப்பொழுது கூட பாருங்கள் பாப்தாதா வீட்டுப் பாடம் கொடுத்தார் 10-நிமிடம், மொத்தம் 24-முறை 10-10 நிமிடங்களுக்கான வீட்டுப் பாடம் கொடுத்தார். சில குழத்தைகளுக்கு இது கடினமாக இருக்கிறது. அப்படியென்றால் சிந்தித்துப் பாருங்கள் இந்த 10-நிமிடத்திற்கான பயிற்சியே செய்யவில்லையென்றால் எதிர்பாராத விதமாக ஏதேனும் நடந்தால் அந்த சமயத்தில் என்ன செய்வீர்கள்? பாப்தாதாவிற்கு தெரியும் 24-முறையில் சிலருக்கு நேரம் குறைவாக கிடைக்கிறது ஆனால் பாப்தாதா ஒத்திகை பார்ப்பதற்காக செய்ய வைத்தார். 10-நிமிடத்திற்கு ஒரே நினைவில் எப்பொழுது வேண்டுமோ எப்படி வேண்டுமோ அப்படி செய்ய முடியுமா? பாப்தாதா இப்படி சொல்லவில்லை இப்பொழுதே 17-நிமிடம் செய்யுங்கள் என்று சரி செய்ய முடியவில்லைபா யாரால் முடிகிறதோ அவர்கள் செய்யுங்கள். அப்படி முடியவில்லையா 5-நிமிடம் செய்யுங்கள், 5-நிமிடத்திலிருந்து 7-நிமிடமாக அல்லது 6-நிமிடமாக உங்களால் எவ்வளவு அதிகரிக்க முடியுமோ அவ்வளவு பயிற்சி செய்து பாருங்கள். பாப்தாதாவே சொல்கிறார் இதில் சொன்னபடியே 10-நிமிடம் முழுவதுமாக இருக்க வேண்டுமென்று அவசியமில்லை. சரி 10-நிமிட நேரம் அதிகமாக இருக்கிறதா? அது போகட்டும் விடுங்கள், 8-நிமிடம் செய்யுங்கள், 9-நிமிடம் செய்யுங்கள். எவ்வளவு அதிகமாக செய்ய முடியுமோ அவ்வளவு பழக்கபடுத்திக் கொள்ளுங்கள். ஏனென்றால் நீண்ட காலமான வரதானம் நடைமுறையில் இப்பொழுது செய்ய முடியும். மாறாக இப்பொழுதும் நீண்ட காலத்திற்கான அப்பியாசம்

செய்யவில்லை என்றால் இப்போதைய நீண்ட காலத்தின் முயற்சிக்கான பிராப்தி மற்றும் அரை கல்பத்திற்கான அந்த நீண்ட காலத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது வேறுபாடு வந்து விடும். மாறாக இப்போது எவ்வளவு சமயம் கொடுப்பீர்களோ, எவ்வளவு உங்களால் செய்ய முடியுமோ அவ்வளவு செய்வதற்கு பாப்தாதாவும் அனுமதி தருகிறார். சரி நிமிடத்திற்கு அதிகமாக செய்யுங்கள். 10-நிமிடம் செய்ய முடிய வில்லயைா, 7-நிமிடம் செய்யுங்கள், 8-நிமிடம் செய்யுங்கள். சரி எதுவுமே முடியவில்லையா 5-நிமிடமாவது செய்யுங்கள் இதற்கு டா அனுமதி தருகிறார் ஆனால் அப்படி யாராவது 10-நிமிடம் செய்தால் மிக நல்லது. வரப் போகும் காலத்தில் நீங்கள் தனக்காகவும் உலகிற்காகவும் கிரணங்களைத் தர வேண்டிய காலமும் வரும். எனவே பாப்தாதா அனுமதி தருகிறார் உங்களால் எவ்வளவு அதிகமான நேரம் செய்ய முடியுமோ அந்த அளவிற்கு பயிற்சி செய்யுங்கள். ஏனென்றால் இப்போதைய நீண்ட கால பயிற்சிதான் நாளைய எதிர்காலத்திற்கான ஆதாரமாகும். சரியா? கடினமாக இருக்கிறதா, பரவாயில்லை, இப்பொழுது பரவாயில்லை. பாபா கேள்விப்பட்டார் பாபா நன்றாக செய்து விட்டார். ஏனென்றால் 10-நிமிடம் அமர முடியவில்லை சிந்தனையிலேயே சென்றுவிடுகிறது. அப்பொழுது 5-நிமிடம் கடந்தே விட்டது. எனவே பாப்தாதா சொல்கிறார்: குறைந்தபட்சம் 5-நிமிடத்தை விட குறைவாக செய்யக் கூடாது. அதனை எவ்வளவு அதிகரிக்க முடியுமோ அவ்வளவு அதிகரியுங்கள். சரியா? தெளிவாகி விட்டதா? ஏனென்றால் பாப்தாதா ஒவ்வொரு குழந்தைகளையும் மிக உயர்ந்த சொரூபத்தில் பார்க்கின்றார். அதன் அடையாளமாக. பாப்தாதாவும் ஒவ்வொரு குழந்தைகளுக்கும் எத்தனை சுய மரியாதை கொடுத்து உள்ளார். சுயமரியாதையின் பட்டியல் போட்டுப் பார்த்தால் எவ்வளவு பெரியதாக இருக்கும்?

இன்று பாப்தாதா அமிர்தவேளையில் வலம் வரச் சென்றார். என்ன பார்க்கச் சென்றார். பாப்தாதாவோ சுய மரியாதைகளின் மிகப் பெரிய மாலை கொடுத்திருக்கிறார். அந்த ஒவ்வொரு சுய மரியாதையிலும் நிலைபெற்று அமருங்கள். சரி அப்படி இல்லையா சுய மரியாதை சொல்லிக் கொண்டே செல்லுங்கள். மாலை உருட்டிக் கொண்டே இருங்கள். அப்பொழுது அதிகமான ஆனந்தம் ஏற்படும். சுயமரியாதையின் பட்டியல் வைத்திருக்கிறீர்கள் ஆனால் ஒவ்வொரு

சுய மரியாதையும் எவ்வளவு பெரியது. அதை யார் கொடுத்தது வேர்ல்டு ஆல் மைட்டி அத்தாரிட்டியான பாபாவே (உலகின் சர்வ சக்திவான்) ஒவ்வொரு குழந்தைகளுக்கும் சுயமரியாதைகளின் பட்டியலைக் கொடுத்திருக்கிறார். அதனை பயன்படுத்துங்கள். ஏனென்றால் வேறு யாருக்குமே உங்களை இந்த சுய மரியாதையிலிருந்து குறைப்பதற்கான அத்தாரிட்டியே (உரிமை) கிடையாது. வேறு யாருக்குமே இவ்வளவு சுயமரியாதைகள் அடங்கிய மாலை கிடைக்கவில்லை. எனவே பாப்தாதாவும் பார்க்கின்றார் சத்யுகத்தில் ராஜ பாக்கியம் என்னவோ கிடைத்து விடும் ஆனால் இந்த சுயமரியாதைகளின் மாலை சங்கம யுகத்தின் வரப்பிரசாதமாகும். பாப்தாதா குழந்தைகளை பார்க்கும்பொழுது எல்லாம் ஒவ்வொரு குழந்தைகளின் சுயமரியாதை யின் ஸ்திதியைப் பார்க்கின்றார் -ஆஹா குழந்தாய் ஆஹா! எனவே சுயமரியாதை எனும் அதாரிட்டியில் இருங்கள், நான் யார்! ஒவ்வொரு சமயம் ஒவ்வொரு சுய மரியாதையை தனக்கு முன்னால் வையுங்கள். மேலும் சோதனை செய்யுங்கள் இன்று அமிர்தவேளையில் விசேஷமாக புத்தியில் வைத்த சுயமரியாதையை, அந்த சுயமரியாதை பொக்கிஷம் அல்லவா, இதனை பயன்படுத்தினேனா! ஏனென்றால் கஜானாவை அபிவிருத்தி செய்வதற்கான சாதனம் எந்தளவு கஜானாவை காரியத்தில் ஈடுபடுத்துவீர்களோ அந்தளவு பொக்கிஷம் அதிகரிக்கும். எனவே இன்று பாப்தாதா பார்த்துக் கொண்டிருந்தார். எந்தெந்த குழந்தைகள் சுயமரியாதையில் இருந்தார்கள், யாரிடம் சுயமரியாதையின் நினைவு என்னும் மாலை பெரியதாக இருந்தது. யாருடைய மாலை சிறியதாக இருந்தது. எங்கே சுயமரியாதை இருக்குமோ அங்கு தேக உணர்வு அழிந்து விடுகிறது. எனவே இன்று பாப்தாதா வலம் வரும்பொழுது எப்படி சுயமரியாதை எனும் பொக்கிஷத்தைப் பார்த்தாரோ அப்படியே ஒவ்வொரு சக்தி, ஒவ்வொரு குணங்களையும் நினைவில் கொண்டு வாருங்கள், காரியத்தில் பயன்படுத்துங்கள். அப்பொழுது மாயை வந்து விடுகிறது என்ற பிரச்சினையே இருக்காது. மாயா வரவே முடியாது. மாயா வந்து விடுவது இல்லை, ஆனால் மாயை பாபாவிடம் சொல்கிறது. என்னை வரவேற்கிறார்கள் எனவே நான் செல்கிறேன். நானாகவே போகவில்லை, ஏதேனும் லேசாக நினைத்தாலும் மாயைக்கு வரவேற்பு செய்ததாகும். சக்திகளை விட்டு விட்டால் மாயாவை வரவேற்பு செய்ததாகும். விரும்புவது இல்லை ஆனால் வந்து விடுகிறது. பலவான்

யார்? விரும்பவில்லை ஆனால் வந்து விட்டது, அப்படியென்றால் பலவான் மாயையா அல்லது நீங்களா? எனவே இன்று பழைய வருடம் முடிவடைந்துக் கொண்டிருக்கிறது. புதிய வருடத்திற்கான ஊக்கம்-உற்சாகம் உள்ளது ஏனென்றால் சங்கமயுகத்தின் மகிமை உள்ளது ஒவ்வொரு நாளும் உற்சாகம் நிரம்பிய நாளாகவே இருக்கிறது. அதாவது உற்சவ தினமாகும். ஊக்கம் உற்சாகம் இருப்பதால் ஒவ்வொரு நாளும் உற்சவம் தான். எனவே இதனை உறுதியாக்கிக் கொள்ளுங்கள், தினசரி நடமாடும் பொழுதே தன்னுடைய நடவடிக்கைக்கான சார்ட் பார்க்க வேண்டும். சோதனை செய்யுங்கள். சோதனை செய்தால் தானே மாற்றிக் கொள்வீர்கள். சோதனையே செய்யவில்லையென்றால் எப்படி மாறுவீர்கள்.

இன்று புதிய ஆண்டிற்கான பாப்தாதாவின் விசேஷமான சங்கல்பம் இதுதான், ஒவ்வொரு குழந்தையும் பழைய வருடத்திற்கு விடை கொடுத்ததுப் போலவே, மாயாவிற்கும் விடை கொடுக்க வேண்டும். வீண் எண்ணங்களுக்கு விடை கொடுத்து விடுங்கள். ஏனென்றால் பெரும்பாலும் சோதனை செய்யும் பொழுது வீண் சங்கல்பமே அதிகமாக வருகிறது. பெரும் பான்மையான விகார எண்ணங்கள் குறைந்து உள்ளது. அது குறைந்து தான் இருக்கிறது ஆனால் வீண் எண்ணம் உள்ளது. அதனுடைய பெயர் அடையாளமும் இல்லாமல் அழிந்து போக வேண்டும். ஒவ்வொரு எண்ணமும் சக்திவாய்ந்ததாக இருக்க வேண்டும் வீண் எண்ணமாக இருக்கக் கூடாது. ஏனென்றால் வீண் எண்ணத்தில், அந்த எண்ணம் மட்டும் வீணாவது இல்லை, ஆனால் நேரமும் வீணாகிறது. அதனால் பாப்சமான் ஆவதிலும் கால தாமதம் ஏற்படுகிறது. உங்கள் விருப்பமோ பாப்சமான் ஆக வேண்டும் என்பது தான். அப்படி தான் கை உயர்த்தினீர்கள் ஆனால் பாப்தாதா எப்பொழுதுமே சொல்வதுண்டு மனம் என்ற கையை உயர்த்துங்கள். இந்த கையை மட்டுமே உயர்த்துவது சுலபம் தான். எனவே விடை கொடுத்து அனுப்புவதற்கு தைரியம் உள்ளதா? தைரியம் இருக்கிறதா? கை உயர்த்துங்கள். நல்லது, தைரியம் உள்ளவர்கள் சரி இந்த தைரியத்தை என்றும் நிலையாக வைத்துக் கொள்ளுங்கள். அப்படி தைரியம் இருந்தால் நீங்கள் வைத்துள்ள லட்சியம் கண்டிப்பாக ஈடேறும். ஏனென்றால் பாப்தாதாவும் உடன் இருக்கின்றார். பாப்தாதா விரும்புகிறார் எனது ஒரு குழந்தை கூட பின்னால் இருந்து

விடக்கூடாது. ஒருவருக்கொருவர் கை கொடுத்து செல்ல வேண்டும். சிவபாபா நிராகாரமாக இருக்கின்றார். அவருக்கு கை இல்லை, ஆனால் ஸ்ரீமத் தான் அவருடைய கை ஆகும். ஸ்ரீமத் படி ஒவ்வொரு அடியும் செல்வது என்பது கையோடு கை இணைத்து செல்வது ஆகும். எனவே அனைவருக்கும் புதிய ஆண்டிற்கான, புதிய வாழ்விற்கான மற்றும் புதிய யுகத்திற்கான பன்மடங்கு வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள். நல்லது.

இந்த முறை முதன் முதலாக வந்திருப்பவர்கள் எழுந்து நில்லுங்கள். அதிகம் வந்துள்ளீர்கள் நல்லது. கூட்டத்தில் பாதி புதிய குழந்தைகள் தான். புதிதாக வந்துள்ள குழந்தைகளுக்கு பிராமண பரிவாரம் மற்றும் பாப்தாதா அனைவர் சார்பாகவும் மதுபன் வந்திருப்பவர்களுக்கு வாழ்த்துக்கள் வாழ்த்துக்கள் தெரிவிக்கின்றார். இந்த வாழ்த்துக்களுடன் ஒரு விசயத்தை நினைவில் வையுங்கள். இப்பொழுது சாதாரண முயற்சிக்கான காலம் முடிந்து விட்டது. இப்பொழுது நடக்கும் சமயம் தீவிர முயற்சிக்கான நேரமாகும். எனவே நீங்கள் அனைவரும் லேட்டாக வந்திருக்கின்றீர்கள் ஆனால் பாப்தாதாவின் அன்பிற்கு பாத்திரமானவர்கள். காலம் கடந்து வந்திருக்கின்றீர்கள், (டுலேட்) மிக மிக காலம் கடந்து வரவில்லை. பாப்தாதா மகிழ்ச்சி அடைகிறார். இருப்பினும் நீங்கள் அதிர்ஷ்டத்திற்கான சமயத்திலேயே வந்து விட்டீர்கள். எனவே பாப்தாதாவிற்கு பிரியமானவர்கள் எனவே நடக்கக் கூடாது பறந்து செல்ல வேண்டும். இப்பொழுதும் நடந்து சென்றால் முதல் நம்பரில் வர முடியாது. எனவே பறக்கும் கலையில் செல்ல வேண்டும். நடக்கக் கூடாது பறக்க வேண்டும். பறப்பதால் வேகமாக செல்ல முடியும் அல்லவா எனவே பறக்கும் கலையால் வேகமாக முன்னால் செல்லலாம். இது உங்களுக்கு மார்ஜின் கிடைத்துள்ளது. இதைத் தான் தீவிர முயற்சி என்று சொல்லப்படும். சொல்லுங்கள் என்ன செய்வீர்கள்? பறக்க வேண்டும். பறப்பீர்களா? நல்லது. வேலைக்கு உதவாத விசயங்கள் எதுவந்தாலும் சரி, அப்படி வரக்கூடாது ஆனால் வந்து விட்டது என்றால் ஏன் வருகிறது. சோதனைத் தாள் வர வேண்டும் தானே அப்பொழுது என்ன செய்வீர்கள்? அப்படி ஏதாவது விசயம் வந்தால் பாப்தாதாவிடம் கொடுத்து விடுங்கள். கொடுக்கத் தெரியும் அல்லவா எடுக்கத் தெரியும் ஆனால் கொடுக்கவும் தெரிந்திருக்கும் அல்லவா சிறியவர் ஆகி விடுங்கள். சிறிய குழந்தைகள்

என்ன செய்வார்கள். தனக்குப் பிடிக்காத பொருளை என்ன செய்வார்கள்? அம்மா நீங்களே வைத்துக் கொள்ளுங்கள், அது போலவே நீங்களும் சிறு குழந்தை ஆகி பாபாவிடமே கொடுத்து விடுங்கள். அப்படி கொடுத்த பிறகும் வந்து விட்டது. கண்டிப்பாக வரும், பாப்தாதா பார்க்கின்றார். நீண்ட காலமாக தன்னிடம் வைத்திருந்தீர்கள் அல்லவா, எனவே விட்டாலும் மீண்டும் வரத்தான் செய்கிறது ஆனால் அப்படி வந்து விட்டாலும் கொடுத்து விட்டப் பொருள் பிறகு பயன்படுத்தப்படுமா? கொடுப்பது என்றால் உங்களிடம் வந்திருக்கிறது, அது அடமானப் பொருளாகும். நீங்களோ அதை கொடுத்து விட்டீர்கள் அல்லவா அது உங்களுடைய பொருள் அல்லவே. அடமானப் பொருளை கையாளக் கூடாது. இது என்னுடையது இல்லை அடமானப் பொருள் என்று இருந்தால் உதவி கிடைக்கும். நான் கொடுத்து விட்டேன். இப்படி நினைப்பதால் லாபம் ஆகி விடும். ஏனென்றால் சமயம் குறைவாக உள்ளது. நீங்களும் தீவிர முயற்சி செய்ய வேண்டும். எனவே புதிதாக வந்திருக்கும் குழந்தைகளை பாப்தாதா லக்கி மற்றும் லவ்லி என்றும் சொல்கிறார். ஏனென்றால் வந்து விட்ட அனைவருமே இப்பொழுது (மேரா பாபா) என்னுடைய பாபா என்று சொல்லிவிட்டீர்கள் அல்லவா! மேரா பாபா என்று சொன்னவர்கள் கை உயர்த்துங்கள். வந்த அனைவருமே மேரா பாபா என்று சொல்கிறீர்கள் தானே! மேரா பாபா என்று சொன்ன பிறகு, எனது என்று வேறு என்ன இருக்க முடியும். பாபா தான் என்னுடையவர் அல்லவா எனவே பாபா மீது. அதிகாரம் வைத்து அடமானப் பொருள் எனப்புரிந்து கொண்டு பாபாவிடம் கொடுத்து விடுங்கள். தன்னிடம் வர விடாதீர்கள். நல்லது. இருப்பினும் பாபாவிற்கு ஒரு மகிழ்ச்சிதான், பாபாவை குழந்தைகள் தெரிந்து கொண்டீர்கள். இப்பொழுது இந்த ஒரு விசயத்தில் மட்டும் முழு கவனம் வையுங்கள், பறக்க வேண்டும் நடக்கக் கூடாது. பறக்க வேண்டும். நல்லது. அதிகம் இருக்கின்றீர்கள் நல்லது. பிராமணியர்கள் வகுப்பு ஆசிரியராக இருப்பவர்கள், நீங்களும் தன்னுடைய புதிய சகோதர சகோதரிகள் மீது மன்னிப்பு காண்பிக்க வேண்டும். ஒவ்வொரு வாரமும் அவர்களுடைய நிலவரம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். எந்த பிரச்சினையும் இல்லைதானே, அப்படி இருந்தால் சொல்லுங்கள். அதற்கான நிவாரணம் பெறுங்கள். அப்படியே விட்டு விடக்கூடாது. வந்தார்கள் போனார்கள் என்றிருக்கக் கூடாது. மனதில் எதுவும்

வைத்துக் கொள்ளக் கூடாது. நல்லது. பரிவாரத்தில் அனைவருக்கும் வாழ்த்துக்கள்:

**சேவை முறை குஜராத் ஜோன்: (8,000-நபர்கள் குஜராதி)**: பாப்தாதா முன்பு கூட சொல்லி இருக்கின்றார். குஜராத் என்றாலே முடிந்து போனது இரவு அப்படியென்றால் குஜராத்தில் எப்பொழுதுமே முன்னேறிக் கொண்ட செல்வர்கள் முன்னேறுவதற்கான ஊக்கம் உற்சாகமும் இருக்கிறது. இருக்கத்தான் வேண்டும் ஏனொன்றால் குஜராத்திலும் சரி, மஹாராஷ்டிராவிலும் சரி ஆனால் குஜராத்திலும் சென்டரும், மாணவர்களின் எண்ணிக்கையும் குறைவு இல்லை. குஜராத்தைப் பொறுத்த வரையில் நாலா புறமும் சேவை நடக்கிறது. கீதா பாடசாலைகளும் அதிகமாக உள்ளது. இப்பொழுது மீதம் உள்ள வேலை என்ன? இப்பொழுது குஜராத்தின் ஒவ்வொரு சென்டர் மற்றும் கீதா பாடசாலையின் விஷயத்தை, விடுங்கள். அவரவரது சென்டரில் வாரிசுகளின் பெயர் பட்டியல் எடுக்க வேண்டும். வாரிசு மாணவர்கள் அல்ல. வாரிசுகளின் பெயர் பட்டியல் குஜராத்தில் எல்லோரைக் காட்டிலும் அதிகமாக இருக்க வேண்டும். ஏனென்றால் பாப்தாதா நேரத்தைப் பற்றிய எச்சரிக்கை கொடுத்துக் கொண்டே இருக்கிறார். சமயத்திற்கேற்ப இப்போது புதிய வருடத்தில் இந்த சேவையிலும் கவனம் தர வேண்டும். அனைத்து ஜோனிற்கும் பாபா இதையே சொல்கிறார். ஜோனில் வாரிசு குழந்தைகளின் பட்டியல் இடுங்கள். அப்படி அனைத்து ஜோனில் எடுத்த வாரிசு பட்டியலில் நம்பர்-1 யார்? ஏனென்றால் இப்பொழுது பொன்னுலகிற்கான ராஜாங்கம் தயார் செய்ய வேண்டுமல்லவா? அரியணையில் லட்சுமி, நாராயணன் தான் அமருவார்கள். ஒருவர் தான் அமர முடியும் ஆனால் அங்குள்ள ராஜ அதிகாரி சபையை நாம் இங்கேயே உருவாக்க வேண்டுமல்லவா, ராயல் பிரஜைகளையும் உருவாக்க வேண்டும். சாதாரண பிரஜைகளையும் உருவாக்க வேண்டும். எனவே அப்படிப்பட்ட வாரிசை உருவாக்குங்கள். இப்பொழுதும் தொடர்பில் மிக அருகாண்மையில் இருப்பவர்கள் அங்கேயும் அருகாண்மையில் இருப்பார்கள். அப்படி வாரிசு ஆனவர்களின் அடையாளம் என்னவாக இருக்கும். ஒன்று வாரிசு என்றால் ஒவ்வொரு ஸ்ரீமத்படி நடப்பவர்கள். பாபா சொன்னார் குழந்தை செய்தார். ஒவ்வொரு செயலிலும் மனம், சொல், செயல் மற்றும் சம்பந்தம் தொடர்பிலும் குடும்ப வாழ்க்கையில் இருந்தாலும்,

வெளியில் இருந்து வருகின்ற மாணவர் அல்ல இதை நமது குடும்பம் என்று நினைக்கும் குணமுள்ளவராக இருக்க வேண்டும். குடும்பம் என்பதின் அர்த்தம் என்னபென்றால் ஒருவரை ஒருவர் தெரிந்து கொள்வது, புரிந்து கொண்டு நடப்பது, பரிவாரத்திலும் ரி மேலும் நான்கு விதமான நம்பிக்கை அந்த நான்கிலும் வாரிசாக இருப்பவர்கள் நடைமுறை வாழ்க்கையில் கையாளுபவராக இருக்க வேண்டும். குடும்பத்தின் அனைவருடைய அன்பிற்கும் உரியவர், சிலருக்குப் பிரியமானவர், சிலருக்குப் இல்லை என்று இருக்கக் கூடாது. பரிவாரத்தில் எல்லோருக்கும் பிரியமானவராக இருப்பவர். இப்பொழுது அப்படிப்பட்ட வாரிசு தரமானவர்கள் வேண்டும். பிரஜைகள் வந்து கொண்டே இருப்பார்கள். சாதாரண பிரஜைகள் அவர்கள் ஆனால் இப்பொழுது நெருக்கத்தில் இருக்கும் வாரிசு தரமுள்ளவர்களை உருவாக்குங்கள். ராஜதானியை இங்கே தான் தயார் செய்ய வேண்டுமல்லவா எனவே இதில் எந்த ஜோன் வாரிசு தரத்தில் நம்பர்-1 கூறுகிறார்கள். இதனை இந்த ஆண்டில் சேர்க்க வேண்டும். மேலும் இரண்டாவது வேலை பாபா கொடுத்திருந்தார், பல துறையினருக்கான சேவை ஒன்று வாரிசை உருவாக்குவது, மற்றொன்று சம்பந்தம் தொடர்பில் உள்ளவர்களை மைக்காக மாற்றுவது. ஆகவே மைக் மற்றும் வாரிசு இருவரையும் உருவாக்க வேண்டும். அதற்கான நேரம் இதுதான், சமயம் முடிய முடிய முயற்சிக்கான நேரம் குறைந்து விடும். எனவே குஜராத் அதிசயம் செய்வீர்களா. நல்லது. குஜராத்தில் ஆசிரியர்களும் அதிகமாக இருக்கின்றீர்கள். ஆசிரியர்கள் கை உயர்த்துங்கள். எத்தனை ஆசிரியர் என்று பார்க்கலாம். ஒவ்வொரு சென்டரும் ஒவ்வொரு வாரிசை எடுங்கள். எல்லாமே பழைய சென்டர் தான். பாப்தாதாவின் நேர்முகமான சமிக்ஞையின் ஆதாரத்தில் குஜராத்தின் சேவை! ஆரம்பமாயிற்று. அதாவது பாப்தாதாவின் திருஷ்டியால் குஜராத் உருவனாது, அதுவும் வேலை செய்யும் அல்லவா. உதவியாளர்களும் நன்றாக இருக்கிறார்கள். செய்ய முடியும் செய்பவர்கள் தான், செய்யவும் முடியும். எல்லா சென்டரிலும் நிகழ்ச்சிகள் அதிகம் செய்துள்ளீர்கள். மேலும் நன்றாக செய்கிறீர்கள். நிகழ்ச்சிகள் நன்றாக செய்தீர்கள். இப்பொழுது வாரிசில் நம்பர்-1 செல்லுங்கள். சரியா, செய்வீர்களா? ஆசிரியர்கள் கை உயர்த்துங்கள். இந்த வருடத்திற்குள் எத்தனை ஆசிரியர் இருக்கின்றீர்களோ அத்தனை வாரிசுகளை மதுபனில் அழைத்து வர வேண்டும். அழைத்து

வருவீர்களா? ஆம் இன்று குஜராத்தினுடைய முறைதானே எனவே அவர்களுக்கு சொல்லுகின்றேன் ஆனால் பாப்தாதா அனைத்து ஜோனுக்காகவும் சொல்லிக் கொண்டிருக்கிறார். நம்பர்-1 யார் வருவீர்களோ அவர்களுக்கு பரிசு வழங்கப்படும். அனைத்து ஜோனைச் சார்ந்தவர்களும் அமர்ந்துள்ளீர்கள் அல்லவா. அவர்கள் எல்லோரும் கை உயர்த்துங்கள். வேறு யார் இருக்கின்றீர்கள்? சகோதரர்களும் கை உயர்த்துங்கள், சரியா, உயர்த்தினீர்களா? நல்லது. இப்பொழுது பார்ப்போம், யார் முதல் நம்பரில் வருவீர்கள் என்று, தரமும் பார்க்கப்படும். வாரிசு உருவாக்கி விட்டீர்கள் ஆனரால் அதனுடைய தரம் என்ன? ஏனென்றால் பாப்தாதா இப்பொழுது சமயம் பற்றிய அறிக்கையை அடிக்கடி கொடுத்துக் கொண்டே இருக்கிறார். பிறகு சொல்லக் கூடாது நாங்கள் நிறைய நேரம் இருக்கிறது என்று நினைத்திருந்தோம். ஏனென்றால் தன்னையும் சம்பன்னம் ஆக்க வேண்டும். சேவையிலும் முன்னேற வேண்டும், இரண்டு வேலை உள்ளது. ஒன்று முயற்சி, முயற்சியில் ஒன்று நினைவு மற்றொன்று சேவை இரண்டிலுமே நம்பர்-1 வர வேண்டும். மூன்றாவதாக சுபாவம், சம்ஸ்காரம் இதிலும் மாற்றம் வர வேண்டும். எல்லாமே நன்றாக இருக்கிறது. இப்படி சொல்லக்கூடாது மற்றதைபோல இதுவும் நன்றாகத்தான் இருக்கிறது. இப்படி சொல்லக் கூடாது இது தான் நன்றாக இருக்கிறது. இப்படி சொல்ல வேண்டும் இது தான் மிக மிக நன்றாக இருக்கிறது என்று அர்த்தம். ஏனென்றால் நிலைமைகள் மாறிக் கொண்டே வருகிறது. நீங்கள் விரும்பினாலும் சேவை செய்ய முடியாது. விசயங்கள் வீண் எண்ணங்களை உருவாக்குவதாகவே இருக்கும். எனவே தீவிர முயற்சி, பூமி மீது கால் வைக்காதீர்கள், பறந்து கொண்டேயிருங்கள். பரிஸ்தாக்களின் கால் பூமியில் படுவதாக காண்பிப்பதில்லை. ஸ்தூலமான இந்த கால் கிடையாது ஆனால் ஸ்திதி எனும் கால். குஜராத் பாப்தாதாவின் மதுபன் சகயோகிகள், அதிகமாகவே செய்கின்றீர்கள். அருகே இருக்கின்றீர்கள் அல்லவா? எப்பொழுதாவது எந்த விஷயமானலும் முதலில் உங்களுக்குத்தான் அழைப்பு வருகிறது. போன் வருகிறதா, குஜராத்திலிருந்து இந்தனை பேரை அனுப்பி வையுங்கள். சரி நல்லது. அருகே இருப்பதால் லாபமும் உள்ளது. பிராப்தியும் கிடைக்கிறது. எனவே குஜராத்திலுள்ள தினசரி மாணவர்கள் அனைவருமே பாப்தாதாவினுடைய ஒவ்வொரு ஸ்ரீமத்படி நடப்பதில் உதாரணமாக பார்க்க விரும்புகின்றார். எந்த சென்டருக்குச்

சென்றாலும் அங்குள்ள குழந்தைகள் பாப்தாதாவிற்கு அருகே இருக்கும் ரத்தினமாகத் தென்பட வேண்டும். சரிதானே. மாணவர்கள் என உணருபவர்கள் கை உயர்த்துங்கள். அப்படியிருக்கிறீர்களா? எந்த ஸ்ரீமத்திலும் குறைவு இருக்கக்கூடாது. சரியா? தைரியம் உள்ளவர்களா? நன்றாக தைரியம் இருக்கிறது.

நீதித்துறை, கலைத்துறை மற்றும் காவல்துறை: நல்லது. மூன்று துறையினரும் அவரவரது காரியத்தை நன்றாகவே செய்து கொண்டிருக்கின்றீர்கள். விருத்தியும் செய்கின்றீர்கள். பாப்தாதா பார்க்கின்றார். ஒவ்வொருவருக்கும் ஊக்கம் இருக்கிறது, நாங்கள் செய்ய வேண்டும் என்று, ஆனால் இப்போது பாப்தாதா ஒரு வேலைக் கொடுத்திருக்கின்றார். மைக் தயார் செய்யுங்கள், அவர்கள் சபையில் ஒரு உதாரணமாக தென்பட வேண்டும். இப்பொழுது பிரம்மா குமார் ஆகி விட்டால் மற்ற வேலைகள் செய்ய முடியாது என்று நினைக்கிறார்கள், அவர்களுடைய அனுபவத்தை கேட்டால் நடைமுறையில் பார்ப்பார்கள், இங்கே ஒன்று அல்ல. ஒவ்வொரு துறையிலும் அநேகர் இருக்கின்றனர். இப்படிப்பட்ட அனுபவசாலிகளைப் பார்க்கும் பொழுது மற்றவர்களுக்கும் ஊக்கம் வருகிறது. சகஜமாக இருக்கிறது. நாமும் இவ்வாறு செய்ய முடியும் என்று உணருவார்கள். எனவே துறையில் தினசரி ரெகுலர் மாணவர்களை உருவாக்கும் சேவை நன்றாக செய்ய முடியும். எத்தனைப் பேருக்கு எல்லாம் நீங்கள் சேவை செய்தீர்களோ அதில் தினசரி மாணவர்கள் எத்தனை பேர் இருக்கின்றார்கள். துறையினருக்கான சேவை ஆரம்பித்தது முதல் இன்று வரையில் எத்தனை பேர் தினசரி மாணவர்களாக இருக்கிறார்கள் என்பதை பட்டியல் எடுங்கள், மேலும் அவர்கள் எந்த தரத்தை சர்ந்தவர்கள் என்று பாருங்கள். ஏனென்றால் நீண்ட காலமாகவே துறையினருக்கான சேவை நடந்துக் கொண்டிருக்கிறது. மிக அன்போடு எல்லோரும் செய்கின்றீர்கள். ஏனென்றால் தனித்தனி சேவை செய்வதற்கான வாய்ப்பும் கிடைத்துள்ளது, எனவே இப்பொழுது இந்த ரிசல்ட்டை பார்க்க வேண்டும், தொடர்பில் உள்ளவர்கள் எத்தனை பேர்? தினசரி மாணவர்கள் எத்தனை பேர்? தினசரி மாணவர்களாக இருப்பவரின் சார்ட் நன்றாகவே இருக்கும். இதுபோல ஒவ்வொரு துறையினரைச் சார்ந்தவர்களுக்கும் ரிசல்ட் பாருங்கள். அவ்வப்பொழுது வருபவர்கள் இருக்கிறார்கள். சிலர் நிகழ்ச்சிகளுக்கு மட்டும் வருவார்கள், சிலர்

விழாக்களில் மட்டும் வந்து கலந்து கொள்வார்கள், ஆனால் பாபாவின் குழந்தைகள், எத்தனை பேர் பாபாவின் குழந்தையாகி உள்ளார்கள்? ஏனென்றால் இந்த் காரியம் நடந்து கொண்டு தான் இருக்கிறது. அதற்கேற்ப ரிசல்ட்டும் வர வேண்டும் அல்லவா? நல்லது. நன்றாக இருக்கிறது. இந்த மூன்று துறையினரையும் பாப்தாதா பார்க்கின்றார். எல்லோருமே ஊக்கம் உற்சாகத்துடன் கலந்து ஆலோசித்து காரியம் செய்கின்றீர்கள். இடையிடையே உற்சாகம் ஏற்படுத்தும் வகையில் கடித போக்குவரத்தும் வைத்துள்ளீர்கள். எனவே ரிசல்ட் கண்டிப்பாக நன்றாகத்தான் இருக்கும். ஏனென்றால் ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு ஆண்டும், பாப்தாதாவும் டைரைக்ஷன் கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறார். நல்லது தானே? சேவைக்கான வாய்ப்பை பெறுகின்றீர்கள். எல்லோரும் திருப்தியாக இருக்கின்றீர்களா? மூன்று துறையினருக்குமான தலைவர்கள் கை உயர்த்துங்கள். நல்லது உங்களுடைய துறையில் வருபவர்களை வைத்து மீட்டிங் செய்கிறீர்கள். நிகழ்ச்சிகளை நடத்துகிறீர்கள். ஒருவரை ஒருவர் சந்திக்கவும் செய்கிறீர்கள். எனவே அனைவரும் ஊக்கம் உற்சாகத்தில் இருக்கின்றனர். திட்டம் போடுகிறீர்கள். அதாவது மீட்டிங்கில் நிகழ்ச்சிகளை அமைக்கின்றீர்கள் ஆனால் ஜோனில் எல்லோருக்காகவும் நீங்கள் திட்டம் தீட்டுகிறீர்கள், உங்களுடைய துறையினைச் சார்ந்த நபர்களுக்காக நீங்கள் தன்னுடைய ஏரியாவில் நடைமுறையில் செய்கின்றீர்கள். அதைப்பற்றி செய்தியும் நீங்கள் பெறுகின்றீர்கள். ஏனென்றால் துறையினருக்கான பெரிய அலுவலகம் ஒரு சென்டரில் இருக்கிறது ஆனால் சேவை முழு ஜோனிலும் நடக்க வேண்டும். ஒன்று இரண்டு ஏரியாவில் மட்டுமல்ல, எந்த துறையில் யார் உறுப்பினராக இருப்பாரோ அவர் தன்னுடைய இடத்தில் மட்டும் செய்வார் ஆனால் எந்த சென்டரில் உறுப்பினர் இல்லையோ, நீங்கள் போட்ட திட்டத்தின்படி அங்கேயும் செய்ய வேண்டும். ஏனென்றால் இது உலகத்திற்கான விஷயமாகும் அல்லவா? எனவே இதிலும் கவனம் வையுங்கள். ரிசல்ட்டைக் கேளுங்கள். ஒவ்வொரு சென்டரிலும் நடைமுறையில் செய்தார்களா? அங்கே என்ன கடினம் உள்ளது? அப்படி செய்யவில்லை என்றால் என்ன கடினம் இருக்கிறது? அவர்களுக்கு அந்த துறையை சார்ந்தவர்கள் நிவராணம் தர வேண்டும். இப்பொழுது நிகழ்ச்சிகள் செய்தீர்கள். எல்லோரும் ஒன்றாக செய்யும் பொழுது அதனுடைய பலன் வேறுவிதமாக இருக்கிறது. இதுபோலவே ஒரே

துறையினர் ஒரே நிகழ்ச்சியை அனைத்து இடங்களிலும் செய்தால் அங்கே பெயர் ஓங்கும் அல்லவா? மற்றப்படி பாப்தாதா மகிழ்ச்சியாக இருக்கிறார். முயற்சி செய்கின்றீர்கள். மூன்று துறையினருமே அவரவருக்காக புரிந்து கொள்ளுங்கள். வேலை செய்கிறீர்கள் ஆனால் பரவச் செய்யுங்கள். ஒவ்வொரு இடத்திலிருந்தும் மிகவும் பிரபலமான ஒருவரை உருவாக்குங்கள். அவருக்கு ஊக்கம் தர வேண்டும். சரிதானே. நல்லது.

**60-தேசங்களிலிருந்து 650-இரட்டை அயல்நாட்டு சகோதர சகோதரிதகள் வந்துள்ளனர்:** முதலில் அயல் நாட்டை சார்ந்த இளைஞர்கள் குழுவினர் எழுந்திருங்கள். நல்லது. அயல்நாட்டில் இளைஞர் குழுவினர் சேவை செய்து கொண்டிருக்கின்றனர். இதை பாப்தாதா செய்தியிலும் கேட்டார். பாப்தாதாவிற்கு இது நன்றாக பிடித்திருக்கிறது. அப்படிப்பட்ட விசேஷமான ஒரு இளைஞர் குழுவினை தயார் செய்யுங்கள், ஒரு நாள் டில்லியில் அனைத்து இளைஞர்களும் அல்ல ஆனால் கொஞ்சம் கொஞ்சமாக குழுவாக அமைத்து டில்லியில் பிரதம மந்திரி அல்லது மிகப் பெரிய மந்திரியாக இருப்பவர்களை சந்திக்கச் செல்ல வேண்டும். அவர்கள் பார்த்து நடைமுறையில் தெரிந்து கொள்ள வேண்டும். அயல் நாட்டைச் சார்ந்த இளைஞர்கள் கூட மாறிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். இந்தியர்களும் மாறிக் கொண்டிருக்கின்றார்கள், ஏனென்றால் அரசாங்கத்திற்கு இப்பொழுது இளைஞர்களைப் பற்றித்தான் அதிகமான பிரச்சனை. இப்படிப்பட்ட சமயத்தில் அரசாங்கம். இவர்களை நடைமுறையில் பார்த்தால், உதாரணமாக விளங்குபவர்களை பார்க்கும் பொழுது அவர்களும் புரிந்து கொள்வார்கள், அரசாங்கத்தின் விசேஷமான துறையின் மந்திரி அந்த துறையினைரைச் சார்ந்தவர்களை சென்று சந்திக்க வேண்டும். அப்போது அவர்கள் புரிந்து கொள்வார்கள். இப்படிப்பட்ட துக்கம் அசாந்தியான வாயுமண்டலத்தில் ஒருபுறம் துக்கம் அசாந்தி, இன்னொரு புறம் தமோருண வைப்ரேஷன், இரண்டிற்கும் இடையே இளைஞர்கள் மாற்றத்திற்கான காரியமும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்றால் அவர்களுடைய இயக்கத்தின் பக்கம் கவனம் திரும்பும். ஒவ்வொரு துறையினரைச் சார்ந்தவர்களும் அந்தந்த துறைக்கான முக்கிய மந்திரியாக இருக்கலாம். பிரதம மந்திரியல்ல. அந்த வர்க்கத்திற்கான மந்திரி, குறைந்த பட்சம் அவர்களிடம் சிறிய

சிறிய குழுவாகச் சென்று செய்திகளை வழங்கலாம். அப்போது அரசாங்கத்தின் அனைத்து அமைச்சர்களுக்கும் இவர்கள் அனைத்து துறையைச் சார்ந்வர்களுக்காகவும் சேவை செய்து வருகிறார்கள் என்று தெரிய வரும். நல்லது. பாப்தாதாவும் இளைஞர் குழுவில் மாற்றத்தைப் பார்த்து மகிழ்ச்சியடைகிறார் ஆனால் தன்னைப் பற்றி தானே திருப்தி அடைகின்ற, அப்படிப்பட்ட ஒரு இளைஞர் செல்ல வேண்டும். நடைமுறையில் வாழ்க்கையில் இருக்க வேண்டும். யார் சொன்னாலும், சொல்லாவிட்டாலும் சரி, பாபாவின் நினைவும், இதைக் கையாளுவதில் நான் உதாரணமாக இருக்கிறேன் என்பதில் முதலில் தன்மீது தானாகவே திருப்தியாக இருக்க வேண்டும். மேலும் இளைஞர்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்காக அந்த துறையில் நிமித்தமாக இருப்பவர்களிடம் உதவி பெற வேண்டும். எது எப்படி இருந்தாலும் சரி தன்னுடைய பலவீனத்தை நீக்கியே தீர வேண்டும். அப்படிப்பட்ட இளைஞர் நல்தொரு வைப்ரேஷனை பரப்ப முடியும். சப்தத்தை எழுப்ப முடியும். எந்த அளவிற்கு செய்தி பரவச் செய்யுமோ அந்தளவிற்கு இந்த காரியம் உலகில் நல்லதொரு பிரபாவத்தை ஏற்படுத்தும். எனவே அந்தக் குழுவைச் சார்ந்தவர்கள் நிமித்தமாக இருப்பவர்கள் தன் குழுவினரை மற்றும் தன்னை நல்லமுறையில் காப்பாற்ற வேண்டும். முழுமையாக, உதாரணமாக திகழ வேண்டும். சரிதானே? இளைஞர்கள் அனைவரும் நன்றாக இருக்கிறீர்களா? கை உயர்த்துங்கள். பாப்தாதா உங்கள் அனைவரையும் பார்த்து மிகமிக மகிழ்ச்சியடைகின்றார். இப்படிப்பட்ட உதாரணமானவர்கள் நிறைய காரியம் செய்ய முடியும். செய்வீர்கள். இப்பொழுது நீங்கள் செல்வீர்கள், பிறகு உங்களுக்கு அவர்களே அழைப்பிதழ் தருவார்கள். நல்லது. அபிவிருத்தி அடைகிறீர்கள், முன்னேறிக் கொண்டேயிருக்கின்றீர்கள். முன்னேறிக் கொண்டேயிருங்கள். அனைத்து இளைஞர்கள் மீதும் இந்தியாவைச் சார்ந்தவர்கள் மற்றும் அயல் நாட்டை சார்ந்தவர்கள் அனைவர் மீதும் பாப்தாவினுடைய மிகமிக சுப ஆசை இது தான். தந்தையின் வாழ்த்துக்கள். நல்லது.

இரட்டை அயல் நாட்டு சிறியக் குழந்தைகள்: இது குழந்தைகளின் ஒரே குழு. குழந்தைகள் பாடல் பாடினார்கள் -சின்னஞ்சிறிய மலர்கள் நாங்கள், ஆனால் யாருக்கும் குறைந்தவர் அல்ல நாங்கள். குழந்தைகள்

அனைவருமே மலராகத்தான் இருக்கின்றீர்கள் அல்லவா? நீங்கள் எல்லோரும் பாபாவின் ஸ்ரீமத்படி நடக்கின்றீர்களா? அப்படி நடப்பவர்கள் கை உயர்த்துங்கள். நல்லது. அதிர்ஷ்டசாலி குழந்தைகள். சிறுவயதிலேயே பாபாவை சந்தித்து விட்டீர்கள், மற்றவர்களும் உங்களைப் பார்த்து சந்தோஷம் அடைகிறார்கள். அப்படியும் ஒரு நாள் வரப் போகிறது, பெரிய மனிதர்கள், பெரிய பெரிய தொழிற்சாலைகளில் இருப்பவர்களும் குழந்தைகளாகிய உங்களை அழைப்பார்கள். அப்படிப்பட்ட அதிர்ஷ்டசாலி குழந்தை யார் என்று பார்ப்பதற்காக. எனவே ஒவ்வொரு குழந்தைகளும் தன்னுடைய தாரணையில் உறுதியாக இருக்க வேண்டும். ஒருபொழுதும் எந்த தாரணையும் மறக்கக்கூடாது. ஏனென்றால் பாப்தாதா மற்றும் லௌகீக தாய் தந்தை அனைவருக்கும் குழந்தைகள் நீங்கள். எனவே விந்தை செய்து காண்பிப்பீர்கள் அல்லவா? நீங்கள் அனைவரும் மிக நன்றாக விந்தை செய்து காட்ட வேண்டும். நல்லது.

இரட்டை அயல் நாட்டைச் சார்ந்த அனைத்து சகோதர சகோதரிகளுடன்: நல்லது, சிந்தி குழுவினரும் வந்திருக்கிறார்கள். மிக நல்லது பாபாவிடம் அன்பு உள்ளது. அல்லவா? அதிகமான அன்பு உள்ளது அல்லவா? பாபாவும் நினைவு செய்கிறார். ஏன்? ஏன் நினைவு செய்கிறார்? சிந்தியினத்தில் தான் பாபா வந்துள்ளார் அல்லவா? எனவே எந்த தேசத்தில் வந்துள்ளாரோ, அங்கே பரிசும் இருக்க வேண்டும் அல்லவா? எனவே பாபார சொல்கிறார், சிந்தி குழுவினர் அப்படிப்பட்ட செயல் ஏதாவது செய்து காண்பியுங்கள். அது அநேக சிந்தி ஆத்மாக்களுக்கு சேவை செய்ய நிமித்தமாக இருக்கும்.

பாப்தாதாவிற்கு பிடித்திருக்கிறது. ஒவ்வொரு சீசனிலும் அயல்நாட்டு குழந்தைகள் மதுபனின் அலங்காரம் ஆகின்றார்கள். நன்றாக ஊக்கம் உற்சாகம் இருக்கிறது. 50-தேசங்களிலிருந்து வந்துள்ளார்கள் என்றால் அவ்வளவு சேவை நடந்திருக்கிறது அல்லவா? மேலும் யார் எல்லாம் எந்த தேசத்தில் இருந்தாலும் அங்கே சேவை இல்லாமல் இருக்க முடியாது. சந்திப்பவர்களுக்கு எல்லாம் என்ன சொல்வீர்கள்? வேறு விசயங்களில் செல்லவே மாட்டீர்கள் என்றால் இத்தனை தேசங்களில் சேவை நடைபெறுகிறது அல்லவா? இப்பொழுது பிறருக்கு செய்தி தருவதற்கான நல்ல நல்ல குழுவினரும் தயாராகி உள்ளார்கள்.

விதவிதமான கோர்சும் செய்கின்றீர்கள். பாப்தாதாவும் பார்க்கின்றார். பாரதவாசிகள் சேவையை பரப்பிக் கொண்டிருக்கின்றார்கள் அதுபோலவே அயல் நாட்டினரும் சேவையை விரிவடையச் செய்கின்றீர்கள் என்றால் உலகம் முழுவதிலுமே பாபாவின் செய்தி எல்லோருக்கும கிடைத்து விடும். அயல்நாட்டு குழந்தைகளும் அவரவர் ஏரியாவில் முயற்சி செய்து கொண்டிருக்கின்றீர்கள், செய்தும் உள்ளீர்கள். எனவே அக்கம் பக்கம் எல்லாம் ஏதாவது ஒரு நிகழ்ச்சிகளை வைத்து செய்திடைக் கொடுத்துக் கொண்டேயிருங்கள். சேவையில் விதவிதமான நிகழ்ச்சிகளை அருகே இருப்பதால் லாபமும் உள்ளது. பிராப்தியும் கிடைக்கிறது, செய்து கொண்டிருக்கின்றீர்கள். பாப்தாதாவிற்கு பிடித்திருக்கிறது. சேவை செய்தி கிடைத்துக் கொண்டிருக்கிறது. செய்தியை வழங்கிக் கொண்டேயிருக்கின்றீர்கள். செய்தியை வழங்குபவர்கள் கை உயர்த்துங்கள். சேவை செய்து கொண்டேயிருக்கின்றீர்கள், செய்கின்றீர்கள் அல்லவா! ஏன் பாபா சொல்கிறார் என்னுடைய ஒவ்வொரு குழந்தையும் செய்தியை வழங்குகின்ற செய்தியாளர். செய்தியை வழங்குகின்றீர்கள் தானே. எனவே ஒவ்வொரு குழந்தையும் செய்தி தருபவர் தான். யாரை சந்தித்தாலும் முதலில் என்ன பேசுவீர்கள்? குறைந்தபட்சம் அனுபவமாது கண்டிப்பாக சொல்வீர்கள் அல்லவா? அப்படி என்றால் செய்தியைக் கொடுத்து விட்டீர்கள் அல்லவா? இப்படி செய்வது பாப்தாதாவிற்கும் பிடித்திருக்கிறது. மேலும் அயல் நாட்டு குழந்தைகளை குறிப்பாக ஏன் நினைவு செய்கிறார். அனைத்து குழந்தைகளையும் நினைக்கிறார் ஆனால் அயல் நாட்டுக் குழந்தைகளை குறிப்பாக நினைப்பது ஏன்? பிரம்மா குமாரிகளின் இயக்கம் ஒன்றில் தான் ஒரே இடத்தில் விதவிதமான தர்மத்தைச் சார்ந்தவர்கள், விதவிதமான ஆடை அணிபவர்கள். எல்லோருமே ஒரே ஆடை அணிந்து, ஒரே தர்மத்தவராக அமர்ந்துள்ளீர்கள். இப்போது நீங்கள் எந்த ஆடையில் அமர்ந்துள்ளீர்கள், வெண்ணிற அடையில் அமர்ந்துள்ளீர்கள், தர்மம் என்னவோ முஸ்லீமாக, கிறிஸ்டினாக, பௌத்தனாக இருந்தாலும் எல்லோரும் ஒரே இடத்தில் அமர்ந்துள்ளீர்கள். மேலும் ஒரே குடும்பமாக ஆகி விட்டீர்கள், இந்த ஒரு விசேஷத் தன்மை மிக நன்றாக இருக்கிறது. எல்லோருமே சேவை செய்கிறீர்கள் அல்லவா? இப்போது புதிய வருடம் வந்து கொண்டிருக்கிறது. இந்த புதிய ஆண்டில் லாபத்தை அடைய வேண்டும்.

அவரவர் தொடர்பில் உள்ளவர்களுக்கு எல்லாம் இந்த விசயத்தை சொல்ல வேண்டும், பரிசு தர வேண்டும், எங்களுடைய பரிசு முற்றிலும் வித்தியாசமானது என்று சொல்லுங்கள். தன்னுடைய உற்றார் உறவினர், சொந்த பந்தம் அனைவருக்கும் வாழ்த்து வழங்கச் செல்ல வேண்டும். பரிசும் வழங்க வேண்டும். ஏதாவது ஒரு குணம் அல்லது சக்தி கொடுக்க வேண்டும். அவர்களிடம் நாங்கள் உ ங்களுக்கு வித்தியாசமான ஒரு பரிசு தர வந்திருக்கிறோம் என்று சொல்லுங்கள். இந்தப் பரிசு மூலமாக உங்களுடைய நிகழ்காலம் மற்றும் எதிர்காலம் மிக நன்றாக மாடும். இப்படியெல்லாம் அவர்களுக்கு நல்ல விசயங்களை சொல்ல வேண்டும். ஏனென்றால் இந்த புதிய வருடம் சேவை செய்வதற்கான வய்ப்பு நல்லது. பாப்தாதா அயல் நாட்டு சேவைக் குறித்து மகிழ்ச்சி அடைகிறார். குழுவினரும் நன்றாக செய்கின்றனர். இப்பொழுது இன்னும் முன்னேறிக் கொண்டேயிருங்கள். ஒவ்வொரு காரியத்திலும் மேலும் மேலும் முன்னேறிக் கொண்டேயிருங்கள். நல்லது.

பின்னால் அமர்ந்திருப்பவர்கள் எழுந்திருங்கள், பின்னால் அமர்ந்திருப்பவர்களுக்கு பாப்தாதா வரதானம் தருகிறார். மதுபனின் விழாவிற்கு வந்திருக்கிறீர்கள் அல்லவா? மதுபன் விழாவில் வந்திருக்கின்ற அனைவருக்கும் இடம் கிடைத்துள்ளது. பின்னால் அமர்வதற்கு கூட இடம் கிடைத்துள்ளது. பின்னால் அமர்ந்துள்ளோம் என்று நினைக்காதீர்கள். பின்னால் அமர்ந்துள்ளவர்கள் தான் பாபாவின் உள்ளத்தில் அமர்ந்துள்ளீர்கள். (22000-க்கும் மேலாக வந்துள்ளார்கள் மொத்தம் குழுவினர் 25,000) வெளியிலும் எல்லா இடங்களிலும் அமர்ந்துள்ளார்கள். குளிர்காலத்தைக் கூட பார்க்காமல் வந்திருக்கிறீர்கள். நீங்கள் இடத்தைப் பார்க்கவில்லை, குளிரைப் பார்க்கவில்லை. கூடாரங்களில் கூட தூங்குகிறீர்கள், கூடாரங்களில் கூட தூங்குகிறீர்கள் தானே? பாப்தாதா கூடாரங்களில் உள்ளவர்களை குறிப்பாக பார்க்க வந்திருந்தார். பின்னால் அமர்ந்திருப்பவர்களை பாப்தாதாவினுடைய உள்ளத்தில் வைத்துக் கொள்கின்றார். எனவே பாப்தாதா யாரெல்லாம், எங்கெல்லாம் அமர்ந்திருந்தாலும் சரி அவர்கள் அனைவரையும் தன் கண்களுக்குள் கலந்தவராக பாப்தாதா அன்பு நினைவுகளை வழங்கிக் கொண்டிருக்கின்றார், வாழ்த்துக்களும் தெரிவிக்கின்றார். இப்பொழுது இன்னும் நாளுக்கு நாள் நமது பிராமண

பரிவாரம் அதிகரிக்கத்தான் போகிறது. எனவே பாப்தாதாவும் பரிவாரத்தை பார்த்து மகிழ்ச்சி அடைகின்றார். ஆஹா ஈஸ்வரிய பரமாத்மா பரிவாராமே ஆஹா நல்லது.

இன்று 12-மணி வரை அமர வேண்டும் அல்லவா? உடன் அமர்வதற்கான வாய்ப்பும் கிடைத்துள்ளது.

இப்பொழுது உள்நாடு மற்றும் அயல்நாடு நாலாபுறமும் இருக்கின்ற ஒவ்வொரு குழந்தைகளும் தந்தைக்கு பிரியமானவர்கள், தந்தைக்கு மிக செல்லமான குழந்தைகள். பாபாவால் தேடித் தேடிக் கண்டெடுக்கப்பட்ட குழந்தைகள் அனைவருக்கும் விதாயி மற்றும் பதாயி (பழைய வருடத்திற்கான விடை கொடுத்தலும், புதிய வருடத்திற்கான வாழ்த்துக்களும் மேலும் பாப்தாதாவும் கூறினார். பழைய ஆண்டின் கூடவே பழைய சம்ஸ்காரங்களுக்கும் விடைகொடுத்து விடுபவர்கள், பழைய சுபாவங்களுக்கும் விடை கொடுத்து அனுப்புகின்ற மகாவீர் குழந்தைகள், ஒவ்வொரு அடியிலும் பன்மடங்கு வருமானத்தை செய்கின்றவர்கள், பாப்தாதா தருகின்ற சுயமரியாதையில் இருப்பவர்கள். அந்த சுயமரியாதையில் நிலைத்திருந்து அனுபவம் செய்கின்றவர்கள், ஒவ்வொரு குழந்தைகளையும் பாப்தாதா, இந்த என்னுடைய ஒவ்வொரு குழந்தையும் 2-ஜென்மத்திற்கான ஆஸ்திக்கு அதிகாரி குழந்தைகளாகப் பார்க்கின்றார். முழு கல்பத்திலும் 21-ஜென்மத்திற்கு அதிகாரி ஆவதற்கான ஆஸ்தி குழந்தை களான உங்களுக்கு மட்டுமே கிடைக்கிறது. எனவே இப்படிப்பட்ட சிரேஷ்ட அதிகாரியாக நாலபுறமும் இருக்கின்ற குழந்தைகளுக்கு பாப்தாதா, தந்தை ஆசிரியர் மற்றும் குரு மூன்று ரூபங்களிலும் அன்பு நினைவுகளும் நமஸ்காரமும் வழங்குகின்றார்.

தாதி ருக்மணி அவர்களுடன்: நல்லது. வீரத்தை நன்றாக பார்த்துக் கொள்கிறீர்களா? மனதால் நீங்கள் வாலிபர் தான். மனம் இளைமையாகத்தானே இருக்கிறது. நல்லது ஆனால் சேவையில் துணையாகவே இருந்துக் கொண்டிருக்கின்றீர்கள் அல்லவா? நல்லது.

பரதாதி அவர்களுடன்: நல்லது. இவருக்கு கூட உடலை நன்றாக பாதுகாக்கத் தெரிகிறது. உடனிருந்து பாதுகாப்பு தருபவரும் நன்றாகப் பார்த்துக் கொள்கிறார்.

மூன்று முக்கிய சகோதரர்களுடன்: புதிய ஆண்டில் ஏதாவது புதுமையாக செய்து காண்பிப்பீர்கள் அல்லவா (புத்தாண்டில் புதுமையாக என்ன செய்ய வேண்டும்) ஒன்று பரிவாரத்தில் தன்னுடைய ஸ்திதியில் சக்திசாலியாக மாறுவதற்கான திட்டம் மற்றொன்று சேவையில் புதுப்புதுவிதமாக, இப்போது செய்த விழாக்கள் அது ஒருவிதம் ஆனால் இப்பொழுது வேறுவிதமாக குழு குழுவாக அவர்களது பெரிய குழுவாக சேர்த்து உதாரணமாக நீதித் துறை போன்ற இன்னும் பல துறையினருக்கு முழு ஜோனிலும் ஒன்றாக அந்த ஒரு குழுவினரை சேர்க்க வேண்டும். அது பெரிய இடத்தில் அமைக்க வேண்டும். இப்படி ஒவ்வொரு துறையினருக்கும் தனித்தனியாக, ஆனால் மண்டலம் வாரியாக ஒரே துறையினரை ஒன்றாக சேர்க்க வேண்டும். அவர்களுக்கிடையே நல்ல ஒரு சம்மந்தத்தை இணைக்க வேண்டும். அதன் பிறகு நீங்கள் என்ன செய்ய வேண்டும். சொற்பொழிவை கேட்டு விட்டு சென்று விடக்கூடாது ஆனால் சொற்பொழிவுக்கு பின்பு நீங்கள் அத்தனைப் பேருக்கும் அவர்கள் எத்தனை பேர் இருந்தாலும் சரி, அத்தனை பேரையும் தொடர்பிலே வைத்துக் கொள்ளும் அளவிற்கு அதற்கான ஒரு நிகழ்ச்சியை அமையுங்கள். தொலைபேசி மூலமாகவோ, கடித போக்குவரத்து மூலமாகவோ தொடர்பு வளர்ந்துக் கொண்டேயிருக்க வேண்டும். ஒவ்வொரு நிகழ்ச்சிகளும் பெரிய பெரிய இடங்களில் வைக்க வேண்டும். ஓர் இடத்தில் வழக்கறிஞர்களுக்காக, ஓர் இடத்தில் அரசியல் தலைவர்களுக்காக வையுங்கள். இவ்வாறாக பெரிய பெரிய இடங்களில் குழுவினரை அருகாமையில் கொண்டு வர வேண்டும். அதில் பல தரப்பட்ட துறையினரும் கூட ஒரு குழுவாக இருக்கலாம். இரண்டு வகையிலும் நீங்கள் செய்யலாம். ஒரே துறையினரைச் சாந்த குழுவாக இருந்தால் அனைவரது கவனமும் திரும்பும் கட்டமாக இருக்கும்பொழுது கவனம் சற்று குறைவடையும். இரண்டுமே செய்து பாருங்கள். ஓர் இடத்தில் அதை செய்யுங்கள். ஓர் இடத்தில் இதை செய்யுங்கள், இரண்டினுடைய ரிசல்டைப் பாருங்கள், பிறகு மேலும் நிகழ்ச்சிகளைச் செய்யுங்கள்.

**ஓ.மெக்ஸ் கம்பெனியின் சேர்மன் சகோதரர் ரோக்தாஸ் கோயல் மற்றும் அவரது பரிவாரத்துடன்:** அப்படி கட்டிடங்களின் வேலை வெற்றிகரமாக நடந்துக் கொண்டிருக்கிறதோ அதுபோலவே இந்த சேவைக்கான வேலையிலும் வெற்றிகரமாகச் செய்ய வேண்டும். எங்கு சென்றாலும் அங்கு செய்தியை வழங்குங்கள். செல்லத்தான் வேண்டும். செய்தியை நீங்கள் கொடுக்க முடியும். சென்டரில் உள்ள சகோதரிகள் கோர்ஸ் கொடுப்பார்கள். நீங்கள் செய்தி கொடுங்கள். உங்களுக்கு ஏற்பட்ட அனுபவத்தை நீங்கள் சொல்லுங்கள். நீங்கள் தொடர்பு வைத்துக் கொள்ளுங்கள். மற்றவர்களையும் தொடர்பில் இணைத்து விடுங்கள். நல்லது. எல்லோரும் இணைந்து சேவையின் வாகனமாக செயல்படுங்கள். சென்டருக்கு செல்வீர்கள். முகவரி கொடுங்கள். தொலைபேசி மூலமாக தொடர்பு வைத்துக் கொள்ளுங்கள் பொழுதும், செய்தியாளர் ஆகுங்கள், செய்தியை வழங்குங்கள். எல்லோரும் நலம் தானே. எல்லோரும். நன்றாக சேவை செய்ய முடியும்.

எல்லோரும் நன்றாக இருக்கிறீர்களா? ஊக்கம் உற்சாகத்துடன் இருக்கிறீர்கள், அவர்களுக்கு. செய்தி கொடுத்து ஊக்கத்தை ஏற்படுத்துங்கள். துக்கத்தில் இருக்கின்றார்கள். அவர்களுக்கும் சுகத்திற்கான செய்தி வழங்குங்கள். பாருங்கள், இவர் வயதிலும் பெரியவர், அனுபவசாலியாக இருக்கிறார். எனவே அதிக சேவை செய்ய முடியும்.

**2009-க்கான விடை கொடுத்தலும் 2010'க்கான வாழ்த்துக்களும் -இரவு 12 மணிக்குப் பிறகு!** எல்லோருமே ஹேப்பி நியூ இயர் சொல்கின்றனர், ஆனால் நாம் உங்கள் அனைவருக்காக சதா ஹேப்பி. இன்றைய உலகத்தாரின் கணக்குப்படி ஹேப்பி நியு இயர் கொண்டாடுகின்றனர் ஆனால் சங்கம யுகத்தில் ஒவ்வொரு நாளும் நமக்கு உற்சவம் தான். சதா உற்சாகம் தான். ஏனென்றால் உற்சவம் இருக்கிறது. சங்கம யுகத்திற்கான ஹேப்பி சங்கம யுகம். எனவே உங்கள் அனைவருக்கும் மிக மிக அதிகமான பரிவர்த்தனைக்கான வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள். எப்படி புத்தாண்டோ அப்படியே புதிய சம்ஸ்காரம். பழைய சம்ஸ்காரங்களுக்கு விடை கொடுத்தல் மற்றும் புதிய சம்ஸ்காரங்களுக்கு வரவேற்பு செய்தல். எனவே எப்பொழுதுமே

மகிழ்ச்சியுடன் இருக்கிறீர்கள் மேலும் சதா மகிழ்ச்சியுடன் இருப்பீர்கள் நமக்காகவும் உங்களுக்காகவும் ஒவ்வொரு ஆண்டும் கல்யாணகாரிதான், மேலும் முன்னேறும். முன்னேறிக் கொண்டேயிருக்கும். எனவே சதா ஹேப்பி, ஹேப்பி ஹேப்பி.. (மிக மிக சந்தோஷம்)

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

## பொருளடக்கம்

☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂